

நிறுவனர்

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

122 வருட தொடக்கம்

கும்பகோணம்.

ஸ்தாபிதம் : 1903

# 121வது

# ஆண்டு அறிக்கை

## 2024-2025


**கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்**

பதிவு அலுவலகம் : 23 & 24, Dr. பெசன்ட் ரோடு, கும்பகோணம் - 612 001.

CIN : U65991TN1903PLN001246. Ph : 0435 - 2401548

Website : www.kmbf.co  e-mail : kmbf@kmbf.co


**இந்தியாவில் NDH-4 அங்கீகாரம் பெற்ற முதல் நிதி நிறுவனம்**

KMBF NIDHI LIMITED

# மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியின் அங்கீகார சான்றிதழ் (NDH-4)

सत्यमेव जयते

## GOVERNMENT OF INDIA
### MINISTRY OF CORPORATE AFFAIRS

Registrar of companies, Chennai
Block No. 6, B' Wing, 2nd Floor Shastri Bhawan 26, Chennai, Tamil Nadu, India, 600034

Corporate Identity Number: U65991TN1903PLN001246

**SECTION 406(1) OF THE COMPANIES ACT, 2013**

Certificate pursuant to declaration of Nidhi

Given under my hand at Chennai this Nineteenth day of May Two thousand twenty-two

DS MINISTRY OF CORPORATE AFFAIRS 15

Deepak Persoya

Registrar of Companies
Registrar of companies, Chennai

---

Mailing Address as per record available in Registrar of Companies office:
**KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI**
**145,BIG STREET, KUMBAKONAM, THANJAVUR DISTT, Tamil Nadu, India, 612001**

1903-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட நமது கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிறுவனம் கம்பெனிகள் சட்டம் 1956, பிரிவு 620-A ன்படி "நிதி" என்ற அங்கீகாரத்துடன் செயல்பட்டு வந்தது.

திருத்தப்பட்ட கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 406(1)-ன்படி மத்திய அரசின் அனைத்து சட்ட திட்டங்களையும் முறையாகப் பின்பற்றி **NDH-4** படிவம் சமர்ப்பித்து கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகத்தின் அறிவிப்பின்படி "நிதி" என்ற அங்கீகாரத்தை இந்திய அளவில் பெற்ற முதல் நிதி நிறுவனம் நமது

**"KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI LIMITED"**

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# 120 - வது ஆண்டு பேரவைக் கூட்டம் - 30.09.2024




## தா.பழூர் புதிய கிளை திறப்பு விழா



## காட்டுமன்னார்கோயில் புதிய கிளை திறப்பு விழா



## வல்லம் புதிய கிளை திறப்பு விழா



## சிங்காநல்லூர் புதிய கிளை திறப்பு விழா



## சேத்தியாதோப்பு புதிய கிளை திறப்பு விழா



## ஒட்டன்சத்திரம் புதிய கிளை திறப்பு விழா



## மேட்டுப்பாளையம் புதிய கிளை திறப்பு விழா



## முசிறி புதிய கிளை திறப்பு விழா



## அய்யம்பேட்டை புதிய கிளை திறப்பு விழா



## லால்குடி புதிய கிளை திறப்பு விழா



## கறம்பக்குடி புதிய கிளை திறப்பு விழா



# இயக்குநர் குழு



திரு. **S.கல்யாணசுந்தரம்** M.P.,
தலைவர்



திரு. **S.இராமலிங்கம்** B.A.,Ex.MP.,
துணை தலைவர்



திரு. **PR.P.வேலப்பன்** B.A.,
மேலாண் இயக்குநர்



டாக்டர். **G.அன்பழகன்** MLA.,
இயக்குநர்



திரு. **B.பிரகாசம்** B.Com.,
இயக்குநர்



திரு. **G.துரைராஜ்**
இயக்குநர்



திருமதி **E.அம்பிகா**
இயக்குநர்



திரு. **M.குரு பிரசாந்த்** B.E., Mech.,
இயக்குநர்

## நிர்வாகிகள்

திரு. **S.வெங்கடேசன்**
பொது மேலாளர்

திரு. **S.சண்முகம்**
பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி

திரு. **P.கருணாநிதி**
துணை பொது மேலாளர்

திரு. **K.ஜவஹர்**
உதவி பொது மேலாளர்

திரு. **S.கணேசன்**
உதவி பொது மேலாளர்

திரு. **S.முருகேசன்**
உதவி பொது மேலாளர்

## நிறுவன செயலர்

CS. **S.கண்ணன்**
நிறுவனச் செயலர்
M.No. A4053

## சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள்

M/s.**சண்முகம் & அசோசியேட்ஸ்**
பட்டயக் கணக்காளர்கள்
F.R.No.006655S

M/s.**G.நடேசன் & கோ.,**
பட்டயக் கணக்காளர்கள்
F.R.No.002424S

M/s.**சாஸ்திரி & ஷா**
பட்டயக் கணக்காளர்கள்
F.R.No.003643S

M/s.**G.S.சீனிவாசன் & கோ.,**
பட்டயக் கணக்காளர்கள்
F.R.No.012043S

## செயலக தணிக்கையாளர்

**M/s. R & RJ அசோசியேட்ஸ்**
செயலாக்க முறை தணிக்கையாளர்கள்
F.R.No. PZ019TN074000

## சட்ட ஆலோசகர்கள்

திரு. **K.சக்கரபாணி** B.A., B.L.,
வழக்கறிஞர், கும்பகோணம்.

திரு. **P.R.ஜெயக்குமார்** M.Com., B.L.,
வழக்கறிஞர், கும்பகோணம்.

திரு. **K.அசோகன்** B.A., LLB.,
வழக்கறிஞர், கும்பகோணம்.

திரு. **B.விஜயகுமார்** B.A., B.L.,
வழக்கறிஞர், சுவாமிமலை.

## கூட்டம் நடைபெறும் இடமான ராயா மஹால் செல்லும் வழி



# 121-வது வருடாந்திர பேரவைக் கூட்ட அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 96 மற்றும் பொருந்தக்கூடிய மற்ற விதிகளின்படி, **கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்டின் பங்குதாரர்களின் 121-வது ஆண்டு பொதுக்கூட்டம் (AGM) ராயா மஹால், 73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம் - 612 001-ல் 27 செப்டம்பர், 2025 சனிக்கிழமை காலை 10.35 மணிக்கு** கீழ்க்கண்ட பொருள்களைக் குறித்துத் தீர்மானிக்க நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**சாதாரண அலுவல்கள்**

**1. நிதி அறிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் :**

மார்ச் 31, 2025 அன்று நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதியின் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகளையும், அதன் மேல் இயக்குநரவை மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகளையும், மற்றும் தேவையான இணைப்புகளையும் சேர்த்துப் பெறுதல், பரிசீலித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்.

**2. பங்கு ஈவுத் தொகை அறிவித்தல் :**

மார்ச் 31, 2025 அன்று நிறைவடைந்த நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையை அறிவித்தல்.

**3. சுழற்சி முறையில் ஓய்வு பெறக்கூடிய இயக்குநராக திரு.M.குரு பிரசாந்த்** (DIN:09359770) **அவர்களை மீண்டும் நியமித்தல் :**

சுழற்சி முறையில் ஓய்வு பெறும் திரு.M.குரு பிரசாந்த் (DIN:09359770) அவர்களின் இடத்திற்கு ஒரு இயக்குநரை நியமித்தல். இவர் மீண்டும் தேர்வுபெற தகுதியுடையவர். இவர் மீண்டும் போட்டியிட தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

இயக்குநர் அவையின் உத்தரவுப்படி,
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
CS.**S.கண்ணன்**
M.No. A4053
நிறுவனச் செயலர்

இடம் : கும்பகோணம்
நாள் : 26.08.2025

**உறுப்பினர்களின் கனிவான கவனத்திற்கு**

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (**IEPFA**) மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) ஆகியவை "சாக்ஷம் நிவேஷக்" என்ற 100 நாள் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன, இது 06.11.2025 அன்று முடிவடைகிறது. பங்குதாரர்கள் தங்கள் **KYC** மற்றும் பிற விவரங்களைப் புதுப்பிக்கவும், செலுத்தப்படாத அல்லது கோரப்படாத பங்கு ஈவுத் தொகையை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (IEPF) மாற்றப்படுவதற்கு முன்பு கோரவும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது நடைபெறுகிறது.

இந்த பிரச்சாரத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க, நவம்பர், 6, 2025 க்குள் அல்லது அதற்கு முன் உங்கள் ஆவணங்களைச் சமர்ப்பித்து, உங்கள் கோரப்படாத பங்கு ஈவுத் தொகையைப் பெறுங்கள்.

**குறிப்புகள் :**

a) **பதிலி:**

i. கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்க உரிமையுள்ள ஒரு உறுப்பினர், தனக்குப் பதிலாக கலந்து கொண்டு வாக்களிக்க ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதிலிகளை நியமிக்க உரிமை உண்டு. அத்தகைய பதிலி நிறுவனத்தின் உறுப்பினராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

ii. பதிலிப்படிவங்கள், பயனுள்ளதாக இருக்க பங்குச் சான்றிதழ் எண் உட்பட, முறையாக நிரப்பப்பட்டு ரூ.1 வருவாய் முத்திரை ஒட்டப்பட்டு அதன் மேல் கையொப்பமிட்டு கூட்டம் தொடங்குவதற்கு நாற்பத்தெட்டு (48) மணிநேரங்களுக்கு முன்னதாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iii. ஐம்பதைத் (50) தாண்டாத மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்ட நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனத்தில் மொத்தமாக 10%க்கும் அதிகமாகப் பங்குகள் வைத்திருக்கும் உறுப்பினருக்காக ஒரு பதிலி நியமிக்கப்படலாம். அத்தகைய பதிலி வேறு எந்த நபருக்கோ அல்லது உறுப்பினருக்கோ பதிலியாகச் செயல்படக்கூடாது.

iv. ஒரு பதிலி கூட்டத்தில் கலந்துகொள்ளும் நேரத்தில் தனது அடையாளத்தை நிருபிக்க வேண்டும்.

v. கூட்டத்தில் கலந்துகொள்ளும் கூட்டுதாரர்களின் விஷயத்தில், பெயர்களின் வரிசையில் உயர்ந்த இடத்தில் உள்ள கூட்டுதாரர் மட்டுமே வாக்களிக்கும் உரிமையைப் பெறுவார்.

vi. பதிலிப் படிவம் இந்த ஆண்டறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

b) **புத்தகம் மூடல் :**

நிறுவனங்கள் சட்டம், 2013-இன் பிரிவு 91-ன் படி, கூட்டத்தில் அறிவிக்கப்பட்டால், ஈவுத்தொகையைப் பெறத் தகுதியுள்ள உறுப்பினர்களின் உரிமையை உறுதிப்படுத்த, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்றப் புத்தகம் ஞாயிற்றுக்கிழமை, 2025 செப்டம்பர் 21 முதல், சனிக்கிழமை, 2025 செப்டம்பர் 27 (இரண்டு நாட்களும் உட்பட) வரை மூடப்படும்.

c) **நியமனம் :**

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 72 மற்றும் நிறுவனங்கள் (பங்கு மூலதனம் மற்றும் கடன் பத்திரங்கள்) விதிகள், 2014-ன் விதி 19(1)-ன்படி, உறுப்பினர்கள், பரிந்துரைக்கப்பட்ட படிவம் எண்.SH-13-ஐ முறையாக பூர்த்தி செய்து நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பி Nominee நியமிக்கும் வசதியை பெறலாம்.

d) **பங்கு ஈவுத் தொகை மற்றும் மூலத்தில் கழிக்கப்படும் வரி (TDS) :**

பங்குதாரர்களின் புத்தகங்கள் மூடல் தேதியன்று பதிவேட்டில் பெயர்கள் உள்ள உறுப்பினர்களுக்கு 30 நாட்களுக்குள் ஈவுத் தொகை வருடாந்திர பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டால் வழங்கப்படும்.

TDS: வருமானவரிச் சட்டத்தின் பிரிவு 194-ன்படி, ஈவுத்தொகை ரூ.10000-ஐவிட அதிகமாக இருந்தால், பங்குதாரர்கள் தங்கள் செல்லுபடியாகும் நிரந்தரக்கணக்கு எண்ணை (PAN) பதிவு செய்திருந்தால் பங்கு ஈவுத் தொகையிலிருந்து 10% வரியும், பங்குதாரர்கள் PAN இல்லாதிருந்தால் / அவர்களின் செல்லுபடியாகும் PAN விவரங்களை ஃபோலியோவில் பதிவு செய்யவில்லை என்றால் அல்லது ஆதார் எண்ணை PAN உடன் இணைக்கவில்லை என்றால் 20% வரியும் பிடித்தம் செய்யப்படும்.

மூலத்தில் வரி கழிக்கப்படாததன் பலனைப் பெற, உறுப்பினர்கள் படிவம் 15G-ஐ (60 வயதுக்குக் குறைவானவர்களாக இருந்தால்) / 15H-ஐ (60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்தால்) அல்லது வருமானவரித்துறையால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் விலக்குசான்றிதழ் (TDS Certificate) ஏதேனும் இருந்தால் அதை 27.09.2025-க்குள் நிதியின் பதிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**e) பட்டுவாடா செய்யப்படாத ஈவுத்தொகையை IEPF-க்கு மாற்றுதல் :**

நிறுவனத்தின் பட்டுவாடா செய்யப்படாத ஈவுத்தொகைகளை பட்டுவாடா செய்யப்படாத ஈவுத் தொகைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட 7 (ஏழு) ஆண்டுகளுக்கு பணமாக்கப்படாத அல்லது உரிமை கோரப்படாத ஈவுத் தொகைகள், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 124-ன் கீழ், சட்டத்தின் பிரிவு 125-ன் கீழ் நிறுவப்பட்ட முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு ("IEPF") மாற்றப்படும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில்கொள்ள வேண்டப்படுகிறார்கள். IEPF-க்கு உரிமை கோரப்படாத ஈவுத் தொகைகள் மாற்றப்பட்ட உறுப்பினர்கள் / உரிமைக்கோருபவர்கள், தேவையான கட்டணங்களுடன் IEPF 5 படிவத்தில (www.iepf.gov.in - ல் கிடைக்கும்) IEPF அதிகாரியிடம் விண்ணப்பம் செய்வதன் மூலம் பணத்தைத் திரும்பப் பெற விண்ணப்பிக்கலாம். மார்ச் 31, 2018 அன்று முடிவடைந்த நிதியாண்டிலிருந்து ஈவுத் தொகையைப் பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்கள், அக்டோபர் 20, 2025 அன்று அல்லது அதற்கு முன் தங்கள் உரிமை கோரல்களை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உரிமை கோரப்படாத ஈவுத் தொகைகளின் விவரங்கள் நிறுவனத்தின் வலைத்தளமான www.kmbf.co -ல் காணக் கிடைக்கின்றன.

**f) வங்கிக்கணக்கு விபரங்களைப் புதுப்பித்தல்:**

ஈவுத்தொகையைப் பெறுவதற்காக உறுப்பினர்கள் வங்கிக் கணக்கு எண், வங்கியின் பெயர், கிளை (PIN குறியீட்டைக் கொண்ட இடம்) மற்றும் IFSC ஆகியவற்றை வழங்க / புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**g) பல ஃபோலியோக்களின் ஒருங்கிணைப்பு :**

ஒரே மாதிரியான பெயர்களிலும், ஒன்றுக்கு மேற்பட்ட ஃபோலியோக்களில் ஒரே மாதிரியான பெயர்களின் வரிசையிலும் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், தங்கள் பங்குகளை ஒரே ஃபோலியோவாக ஒருங்கிணைக்க நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**h) முகவரியில் மாற்றம் :**

உறுப்பினர்கள் தங்கள் முகவரிகளில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால், நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**i) ஆய்வு :**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தொடர்புடைய ஆவணங்களும், நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் அனைத்து வேலை நாட்களில், வணிக நேரங்களில் (காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை) மற்றும் கூட்டத்தின் போது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தில் ஆய்வுக்குக் கிடைக்கும்.

**j)** கூட்டத்தில் கலந்துகொள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வருகை சீட்டை, பங்குச்சான்றிதழ் எண்ணை முறையாகப் பூர்த்தி செய்து, கையொப்பமிட்டு நுழைவு வாயிலில் ஒப்படைக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**k)** உறுப்பினர்களின் வசதிக்காக, ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை அடைவதற்கான பாதை வரைபடம் QR Code உடன் இந்த 121-வது ஆண்டு அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

**l)** பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் 23.09.2016 தேதியிட்ட அறிவிக்கை எண்.G.S.R.908(E)-ன் படி, நிதி நிறுவனம் மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதியை வழங்கவேண்டிய அவசியமில்லை.

**m) வாக்கெடுப்புக் கண்காணிப்பாளர்**

வாக்களிப்பு செயல்முறை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடைபெறுவதை ஆய்வு செய்ய இயக்குநரவை சென்னையை சேர்ந்த திருவாளர்கள் R & RJ அசோசியேட்ஸ், செயல்முறை நிறுவன செயலாளர்களை ஆய்வாளராக நியமித்துள்ளது.

**n)** மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் 121-வது ஆண்டு அறிக்கை, கூட்ட அறிவிப்பு, வருகைச் சீட்டு மற்றும் பதிலி படிவத்துடன், நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. ஆண்டு பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையின் நகல் நிறுவனத்தின் வலைதளமான https://www.kmbf.co/annual-report.html-ல் காணக் கிடைக்கிறது.

**o) பசுமை முயற்சி**

மொத்தமாக ரூ.1000 மதிப்புக்கு அதிகமான பங்குகளை வைத்திருக்கும் நமது உறுப்பினர்கள், நிறுவனத்தின் தகவல் தொடர்புகளை மின்னஞ்சல் மூலம் பெறுவதன் மூலம் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான எங்கள் உறுதிப்பாட்டை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்தகைய உறுப்பினர்கள் வருடாந்திர அறிக்கைகளின் நகல்களை மின்னணு முறையில் பெற, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**p)** வருடாந்திர அறிக்கையின் அச்சிடப்பட்ட நகலை பெற விரும்பும் உறுப்பினர்கள் அவர்களின் பங்குச் சான்றிதழ் எண்ணை தெளிவாகக் குறிப்பிட்டு நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு அதாவது annualreport@kmbf.co ஒரு கோரிக்கையை அனுப்ப வேண்டும்.

**q. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் பொருள் 3-க்கான, செயலக தரநிலை-2-ன்படி மறு நியமனம் செய்யப்படும் இயக்குநர் தொடர்பான கூடுதல் தகவல்கள்:**

| | |
|---|---|
| பெயர் | திரு.M.குரு பிரசாந்த் |
| இயக்குநரின் அடையாள எண் | 09359770 |
| பிறந்த தேதி / வயது | 14.02.1998 / 27 வருடங்கள் |
| இயக்குநரவையில் நியமிக்கப்பட்ட தேதி | 08.11.2021 |
| கல்வித் தகுதி | B.E., Mech., |
| 31.03.2025 அன்று வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை | 500 சம உரிமை பங்குகள் |
| குறிப்பிட்ட செயல்பாட்டுப் பகுதிகளில் அவர்களின் நிபுணத்துவத்தின் சுருக்கமான சுய விவரம் மற்றும் தன்மை | வணிகத்தில் பரந்த அனுபவம் |
| தற்போதைய ஊதியம் (2024-25) | ரூ.20.05 இலட்சம் |
| நியமனத்திற்கான முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் | சுழற்சி முறையில் ஓய்வு பெறும் இயக்குநர், இயக்குநர் அமர்வு கட்டணம் மற்றும் நிகர லாபத்தில் 1% பங்கு |
| நிறுவனத்தின் பிற இயக்குநர்கள், மேலாளர் மற்றும் பிற முக்கிய நிர்வாகப்பணியர்களுடனான உறவு | அவர் நிறுவனத்தின் வேறு எந்த இயக்குநர்கள் மற்றும் / அல்லது முக்கிய நிர்வாகப் பணியாளர்களுடனும் தொடர்புடையவர் அல்ல. |
| ஆண்டு முழுவதும் பங்கு பெற்ற இயக்குநரவைக் கூட்டங்களின் எண்ணிக்கை | 2024-25 நிதியாண்டில், அவர் 13 இயக்குநரவைக் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளார். |
| மார்ச் 31, 2025 நிலவரப்படி இயக்குநரவைக் குழுக்களின் இயக்குநர்கள், உறுப்பினர்கள் / தலைமைப் பதவிகள். | இல்லை |

## நிதியின் தலைவர் மடல்

### முன்னேற்றத்திற்கு தேவை மூன்று - உழைப்பு! நம்பிக்கை!! நாநயம்!!!

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (திருக்குறள் 616)

கலைஞர் விளக்கம்:

முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்கு காரணமாக அமையும்.

அன்புடையீர், வணக்கம்.

நமது கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் கடந்த 2005-06 ஆம் ஆண்டில் எங்களது இயக்குநர் அவை முதன் முறையாக நிர்வாக பொறுப்பேற்ற போது அதன் வர்த்தகம் கீழ்கண்டவாறு இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | : | ரூ. **3.15** | கோடிகள் |
| காப்பு | : | ரூ. **6.70** | கோடிகள் |
| வைப்புகள் | : | ரூ. **274.46** | கோடிகள் |
| கடன்கள் | : | ரூ. **237.33** | கோடிகள் |
| இலாபம் | : | ரூ. **3.27** | கோடிகள் |
| பங்கு ஆதாயம் | : | **10%** | |
| கிளைகள் | : | **80** | |

எங்களது இயக்குநர் அவை புதிதாக பொறுப்பேற்ற பிறகு இயக்குநர் அவையும், நிதியின் ஊழியர்களும் ஒருங்கிணைந்து சிறப்பாக செயல்பட்டதன் விளைவாக 2010-11 ஆம் நிதியாண்டில் கீழ்கண்டவாறு அபார வளர்ச்சியைக்கண்டது.

| | | | |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | : | ரூ. **22.58** | கோடிகள் |
| காப்பு | : | ரூ. **30.02** | கோடிகள் |
| வைப்புகள் | : | ரூ. **883.47** | கோடிகள் |
| கடன்கள் | : | ரூ. **978.44** | கோடிகள் |
| இலாபம் | : | ரூ. **24.39** | கோடிகள் |
| பங்கு ஆதாயம் | : | **18%** | |
| கிளைகள் | : | **90** | |

2005-06 ஆம் ஆண்டில் எங்களது இயக்குநர் அவை பொறுப்பேற்ற போது ரூ.511.79 கோடிகளாக இருந்த மொத்த வணிகம் 2010-11 நிதியாண்டில் ரூ.1861.91 கோடிகளாக உயர்ந்ததற்கு **எங்களது நிர்வாக மேலாண்மை, நிதி மேலாண்மை, தொலைநோக்கு வர்த்தக உத்திகள்** ஆகியவையே காரணங்களாக அமைந்தது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்வதோடு,

நிர்வாகத்தில் இருந்து விலகிச் சென்ற நிலையிலும் 2011-12 ஆம் ஆண்டில் ரூ.2624.20 கோடிகளாகவும் 2012-13 ஆம் ஆண்டிலும் ரூ.3201.82 கோடிகளாகவும் வணிக வளர்ச்சி அடைய **எங்களது கடந்த கால நிர்வாக மேலாண்மையே பெரும் அடித்தளம் அமைத்துக்கொடுத்தது** என்பதையும் உள்ளபடியே பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பாக நிதியின் பங்குதாரர்கள் மகிழ்வுறும் வகையில் பங்கு ஈவுத்தொகையை (Dividend) 2005-06 ஆம் ஆண்டில் 10 சதவிகிதமாக இருந்ததை 2010-11 ஆம் ஆண்டில் 18 சதவிகிதமாக உயர்த்தி வழங்கினோம். அது மட்டுமல்லாமல் நாங்கள் நிர்வாகத்தில் இருந்து விலகிச் செல்லும் முன்னர் அப்போதைய வணிக வளர்ச்சியையும், வரும் காலங்களில் அது ஏற்படுத்தும் தாக்கத்தையும் கருத்தில்கொண்டு எதிர்வரும் நிதியாண்டுகளில் **22 சதவிகிதம் பங்கு ஆதாயம்** வழங்குவோம் என உத்திரவாதம் அளித்து, அதை நோக்கிய வர்த்தக பயணத்தை மேற்கொண்டிருந்தோம்.

பின்னர் 2011 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிதியின் வளர்ச்சி குன்றிய காலம் என கூறப்படுவதற்கு அப்போதைய நிர்வாகம் காரணமாக அமைந்தது. இந்நிலையில் மீண்டும் **நமது தலைசிறந்த நிர்வாகம்** அமைந்த பின்னர் நமது நிதியின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் அதன் உயரிய இலக்கினை அடைவதற்கும் **நமது இயக்குநர் குழுவின் வெளிப்படையான நிர்வாகமும்,** அதன் தலைசிறந்த நிர்வாகத்திறமையும் நிதிக்கு மீண்டும் தேவைப்பட்டதால் தற்போதைய இயக்குநர் குழு மீண்டும் தெரிவு செய்யப்பட்டது.

2021 ஆம் ஆண்டு எங்கள் இயக்குநர் குழு பொறுப்பேற்ற போது மொத்த வணிகம் ரூ.5346.65 கோடியாகவும், இலாபம் ரூ.75.15 கோடியாகவும் இருந்தது. ஆனால் எங்கள் நிர்வாகம் மொத்த வணிகத்தை உயர்த்தி 31-03-2025 தேதிப்படி **ரூ.140.35 கோடி இலாபத்தை** ஈட்டியுள்ளது. மேலும் அரசால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச ஈவுத்தொகையான 25% பங்குதாரர்களுக்கு வழங்கியது. நிதியின் கிளைகள் தற்போது **138** ஆக தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தியது ஆகிய வளர்ச்சி பணிகள் இந்தியாவில் எந்த நிதியும் சாதிக்காத மாபெரும் சாதனைகளாக அனைத்து தரப்பினராலும் பாராட்டப்படுகிறது.

மேலும் எங்களது இயக்குநர் அவையில் சிறந்த நிர்வாக மேலாண்மையால் எங்களது நிதி நிறுவனம் இந்தியாவிலேயே முதன்மை நிறுவனமாக இந்திய அரசின் பெருநிறுவன விவகாரத்துறை அமைச்சகத்தால் (MCA) **"NDH-4" அங்கீகாரம்** வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது. 2024 செப்டம்பரில் நடைபெற்ற 120-வது ஆண்டு பொதுக்கூட்டத்தில், 200 கோடி மொத்த லாபத்தையும், 150 கோடி நிகர லாபத்தையும் எங்களின் இலக்குகளாக அடைய திட்டமிட்டு அந்த உயரிய இலக்கை அடைய மிக வேகமாக பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்று அறிவித்ததை எங்கள் நிர்வாகத்தின் மைல்கல்லாக கருதுகிறோம்.

நமது நிதியின் 31-08-2025 தேதியில் வைப்புகள் ரூ.5,173.09 கோடிகளாகவும் கடன்கள் ரூ.5,085.21 கோடிகளாகவும் உயர்ந்துள்ளன. ஆக மொத்தம் **ரூ.10,258.30 கோடிகளை** எட்டி நிதி அதற்கே உரித்தான வரலாற்று சிறப்புமிக்க தனித்த பாதையில் பீடுநடை போடுகிறது. மேலும் நடப்பு நிதியாண்டில் நிதியின் இலாப இலக்காக **ரூ.250 கோடியை** நிர்ணயம் செய்து, அதனை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட லாப உயர்வானது நிதியின் வர்த்தக வருவாய் பெருக்குவதில் மட்டுமே சாராது அது **"சிக்கனம் செய்யும் ஒவ்வொரு காசும் சம்பாத்தியமே" ("Every Paise saved is Every Paise Earned")** என்ற உலகளாவிய நிர்வாக கருத்துருவை தற்போதைய நிர்வாகம் முழுமையாக உணர்ந்துள்ளதால், பல்வேறுபட்ட சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும், நிதிக்கு தேவையானவைகளை கொள்முதல் செய்வதில் வெளிப்படைதன்மையை கடைபிடித்ததாலும், வங்கிகளில் நிதியின் சட்டப்பூர்வ சேமிப்பு நிதியை கையாள்வதன் மூலமும், அன்றாடம் கையிருப்பில் உள்ள உபரி நிதியை கம்பெனி விவகாரத்துறை அமைச்சகத்தால் வழிகாட்டப்பட்ட வங்கிகளில் குறுகிய மற்றும் நீண்ட கால வைப்புகளாக செலுத்தும்போது சந்தையில் அவர்களால் வழங்கப்படும் வட்டியைவிட அதிக வட்டியை சம்பந்தப்பட்ட வங்கியின் உயர்மட்ட நிர்வாகத்துடன் நேரிடையாக பேசி கூடுதலாக பெறப்பட்டதாலும் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதில் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

உலக பொருளாதாரம், சந்தை பொருளாதாரம் ஆகியவற்றில் தொய்வு ஏற்பட்டு அதன் காரணமாக வங்கி மற்றும் நிதித்துறையில் எந்தவிதமாக பாதிப்பு ஏற்பட்டாலும் எங்கள் நிதியில் உள்ள தங்களது வைப்பு நிதிக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாத வகையில் எங்கள் நிதியின் மூலதனமும் அசையா சொத்துக்களும் எங்களது நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்வதோடு அவற்றை நிதியின் ஆண்டறிக்கை மூலம் வெளிப்படை தன்மையுடன் வெளியிட்டுள்ளோம்.

நமது நிதியானது லாப நோக்கத்தை மட்டும் முதன்மையாக கொண்டு செயல்படாமல் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் அவசர நிதி தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் துரிதமாக கடன் வழங்குதல், சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றை மையமாக கொண்டு வர்த்தகம் செய்து அதை பெருமளவு விரிவுபடுத்தியதால் சமுதாயத்திற்கு பலனாக படித்த வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கி சமூக பொருளாதாரத்தை உயர்த்தும் விதத்திலும் நிதி பங்காற்றுகிறது. அதுமட்டுமல்லாமல் நிதி ஈட்டும் லாபத்தில் கம்பெனிகளின் சட்டம் சமுதாய பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள தொகையை பள்ளிக் கல்லூரிகளின் மேம்பாட்டுக்காகவும், அரசு மருத்துவமனைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தி வருகிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கலைஞரின் திருக்குறள் விளக்கம் போல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து விடாமுயற்சியுடன் முயற்சி செய்தால் உயர்வை அடையலாம். இன்று முதல் தமிழகத்தின் எண் திசைகளிலும் எதிர்கால பங்குதாரர்களாகிய பொதுமக்கள் அனைவரிடமும் நேரில் சென்று, நமது நிர்வாகத்தின் மூலம் நிதி அடைந்த சிறப்பான வளர்ச்சிகளாகிய **நிதியின் சொந்த காப்பு நிதி (Reserves and Surplus) ரூ.582.16 கோடிகளும்** மற்றும் **சட்டப்பூர்வ வங்கி வைப்பு நிதி ரூ.478 கோடிகளும்** உள்ளன என்பதனையும் எடுத்துக்கூறி, புதிய பங்குதாரர்களை சேர்ப்பதற்கும், சேமிப்பு கணக்கு, தொடர் வைப்பு நிதி மற்றும் வைப்பு நிதி ஆகியவற்றை பெறுவதற்கும் நிதியின் ஊழியர்கள் அனைவரும் அயராது உழைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் நமது நிதி பல கிளைகளை தொடங்கி பங்குதாரர்களாகிய வைப்பு நிதியாளர்களுக்கும் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் சிறந்த சேவை புரிந்து அவர்களது நன்மதிப்பையும் பெற ஊழியர்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட்டு வருவதற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தொடர்ந்து நல்ல பல கருத்துக்கள் மற்றும் வழிகாட்டுதல்களை எங்களுக்கு எடுத்துரைக்கும் தணிக்கையாளர்கள், சட்டமுறை தணிக்கையாளர்கள், செயலக தணிக்கையாளர்களுக்கும் மற்றும் நிதியின் சட்ட ஆலோசகர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**"நமது நிதி நமது நம்பிக்கை"**

என்றென்றும் நிதியின் வளர்ச்சியில்

இடம் : கும்பகோணம்
நாள் : 26-08-2025

**S.கல்யாணசுந்தரம் MP**
தலைவர்

சொந்த சொத்துகள்
613
கோடிகள்

நம்பிக்கை
1 NUMBER ONE KMBF

**வைப்புகள் - ₹ 4717 கோடி**

- நிதியாண்டு 2020-21 - ₹2738 கோடி
- நிதியாண்டு 2021-22 - ₹3120 கோடி
- நிதியாண்டு 2022-23 - ₹3500 கோடி
- நிதியாண்டு 2023-24 - ₹3811 கோடி
- நிதியாண்டு 2024-25 - ₹4717 கோடி

KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI LIMITED
KMBF
ESTD : 1903
KUMBAKONAM
TRUSTED SERVICE BEYOND 121 YEARS

**கடன்கள் - ₹ 4501 கோடி**

- நிதியாண்டு 2020-21 - ₹2609 கோடி
- நிதியாண்டு 2021-22 - ₹2890 கோடி
- நிதியாண்டு 2022-23 - ₹3199 கோடி
- நிதியாண்டு 2023-24 - ₹3582 கோடி
- நிதியாண்டு 2024-25 - ₹4501 கோடி

**சட்டப்பூர்வ வங்கி வைப்புகள்**
**₹478 கோடி**

- நிதியாண்டு 2020-21 - ₹274 கோடி
- நிதியாண்டு 2021-22 - ₹312 கோடி
- நிதியாண்டு 2022-23 - ₹356 கோடி
- நிதியாண்டு 2023-24 - ₹385 கோடி
- நிதியாண்டு 2024-25 - ₹478 கோடி

**நிதியின் சொந்த இருப்பு நிதி**
**₹582 கோடி**

- நிதியாண்டு 2020-21 - ₹294 கோடி
- நிதியாண்டு 2021-22 - ₹358 கோடி
- நிதியாண்டு 2022-23 - ₹416 கோடி
- நிதியாண்டு 2023-24 - ₹485 கோடி
- நிதியாண்டு 2024-25 - ₹582 கோடி

## மொத்த வணிகம்

# ₹10,258 கோடி

(ஆகஸ்ட் 31, 2025)

- → நிதியாண்டு 2024-25 - ₹ 9,218 கோடி
- → நிதியாண்டு 2023-24 - ₹ 7,393 கோடி
- → நிதியாண்டு 2022-23 - ₹ 6,699 கோடி
- → நிதியாண்டு 2021-22 - ₹ 6,010 கோடி
- → நிதியாண்டு 2020-21 - ₹ 5,347 கோடி

**வணிக வளர்ச்சி**
**2024 - 25 நிதியாண்டில்**

- வைப்புகள் - 24%
- கடன்கள் - 26%
- இலாபம் - 35%
- நிதியின் சொந்த இருப்பு நிதி - 20%
- சட்டப்பூர்வ வங்கி வைப்புகள் - 24%

முன்னேற்றத்திற்கு தேவை மூன்று
உழைப்பு ! நம்பிக்கை !! நாநயம் !!!

சேவை
1
NUMBER
ONE

**இலாபம் ₹140 கோடி**

- நிதியாண்டு 2020-21 - ₹75 கோடி
- நிதியாண்டு 2021-22 - ₹93 கோடி
- நிதியாண்டு 2022-23 - ₹102 கோடி
- நிதியாண்டு 2023-24 - ₹104 கோடி
- நிதியாண்டு 2024-25 - ₹140 கோடி

உறுப்பினர்கள்
12
இலட்சம்

KUMBAKONAM MUTUAL BENEFIT FUND NIDHI LIMITED
122 YEARS
★ KUMBAKONAM ★
Estd : 1903

**வங்கி வைப்பு நிதியிலிருந்து திரட்டப்பட்ட வட்டி - ₹ 42 கோடி**

- நிதியாண்டு 2020-21 - ₹23 கோடி
- நிதியாண்டு 2021-22 - ₹24 கோடி
- நிதியாண்டு 2022-23 - ₹32 கோடி
- நிதியாண்டு 2023-24 - ₹37 கோடி
- நிதியாண்டு 2024-25 - ₹42 கோடி

**உறுப்பினர்கள் - 12.10 இலட்சம்**
ஜீலை 2025

- நிதியாண்டு 2020-21 - 11.18 இலட்சம்
- நிதியாண்டு 2021-22 - 11.35 இலட்சம்
- நிதியாண்டு 2022-23 - 11.55 இலட்சம்
- நிதியாண்டு 2023-24 - 11.73 இலட்சம்
- நிதியாண்டு 2024-25 - 11.98 இலட்சம்

## இந்தியாவில்

# NDH - 4

## அங்கீகாரம் பெற்ற
## முதல் நிதி நிறுவனம்

**தொலை நோக்குத் திட்டம் - 200 கிளைகள்**

தற்போது இயங்கி வரும் **138** கிளைகளுடன் மேலும் **12** புதிய கிளைகள் துவங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் விரைவில் **150** கிளைகளுடன் நமது நிதி மேலும் விரிவடைந்து சிறப்பாக சேவையாற்ற உள்ளது. மேலும் **50** புதிய கிளைகள் திறப்பதற்கு இந்திய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகத்தில் நமது இயக்குநரவை அனுமதி பெற உள்ளது.

**பங்காதாயம் - 25%**

- நிதியாண்டு 2020-21 - 22%
- நிதியாண்டு 2021-22 - 25%
- நிதியாண்டு 2022-23 - 25%
- நிதியாண்டு 2023-24 - 25%
- நிதியாண்டு 2024-25 - 25%

என்றென்றும் நிதியின் வளர்ச்சியில்

**S.கல்யாணசுந்தரம் MP**
தலைவர்
**மற்றும் இயக்குநர்கள்**

**கிளைகள் - 138**
31.08.2025 வரை

- நிதியாண்டு 2020-21 - 113
- நிதியாண்டு 2021-22 - 114
- நிதியாண்டு 2022-23 - 116
- நிதியாண்டு 2023-24 - 120
- நிதியாண்டு 2024-25 - 130

## 31.03.2025 அன்று நிறைவடைந்த நிதி ஆண்டிற்கான இயக்குநரவை அறிக்கை

பெறுநர்
உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,

தங்களது இயக்குநரவை 31.03.2025 அன்றுடன் நிறைவடைந்த நிதியாண்டுக்குரிய தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை அறிக்கைகள் மற்றும் அதன் மீதான தணிக்கையாளர்கள் அறிக்கையுடன் கூடிய உங்களது நிறுவனத்தின் வணிகம் மற்றும் செயல்பாடுகள் அடங்கிய 121-வது ஆண்டறிக்கையை சமர்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

1. **31.03.2025 அன்றுடன் நிறைவடைந்த ஆண்டிற்குரிய நிதிச்செயல்பாடுகளின் சிறப்பு அம்சங்கள், சென்ற ஆண்டு ஒப்பீடுகளுடன் கீழ்கண்டவாறு உள்ளன (Highlights of Financial Results)**

(ரூ. இலட்சங்களில்)

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| மொத்த வருமானம் | 62,055.77 | 48,008.45 |
| மொத்த செலவுகள் | 48,021.06 | 37,639.33 |
| அசாதாரணமான உருப்படிகள், தேய்மானம், மற்றும் வரிக்கு முந்தைய லாபம் | 14,764.94 | 11,077.65 |
| தேய்மானம், மதிப்பிழப்பு மற்றும் குறைபாடு இழப்பு | 730.24 | 708.53 |
| அசாதாரணமான உருப்படிகள் மற்றும் வரிக்குப் பிந்தைய லாபம் | 14,034.71 | 10,369.12 |
| கழிக்க : அசாதாரணமான உருப்படிகள் | - | 131.03 |
| வரிக்கு முந்தைய லாபம் | 14,034.71 | 10,238.09 |
| வரிகள் | 3,576.43 | 2,622.02 |
| வரிக்கு பிந்தைய லாபம் | 10,458.28 | 7,616.07 |
| இதர அனைத்தடக்க வருமானம் (வரி போக நிகரம்) | 66.41 | (190.33) |
| மொத்த இதர அனைத்தடக்க வருமானம் | 10,524.69 | 7,425.74 |
| பங்கு ஈவுத்தொகை விகிதம் | 25% | 25% |
| பங்கு ஈவுத்தொகை | 761.16 | 756.24 |

2. **சம பங்கு மூலதனம் (Equity Share Capital)**

செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் 31.03.2024 தேதியன்று உள்ள ரூ.3,032.63 லட்சத்திலிருந்து ரூ.23.22 லட்சங்கள் உயர்ந்து 31.03.2025 அன்று ரூ.3,055.85 லட்சங்களாக அதிகரித்துள்ளது.

நிதி விதிகள், 2014 மற்றும் பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தால் (MCA) அறிவிக்கப்பட்ட 05.06.2005 தேதியிட்ட அறிவிக்கை எண். GSR 465 (E) படி வருங்கால வைப்பு நிதிதாரர் / கடன்தாரர்களுக்கு மட்டுமே உங்களது நிறுவனம் பங்குகளை ஒதுக்கீடு செய்கிறது. மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் பங்கு வேண்டி விண்ணப்பித்த 24620 நபர்களுக்கு உங்கள் நிறுவனத்தின் சம பங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், மாறுபட்ட வாக்குரிமை உள்ள சம பங்கு, வியர்வை சம பங்கு மற்றும் பணியாளர் பங்கு உரிமைத் திட்டத்தின் கீழ் பங்குகளை வெளியிடவில்லை.

**3. வணிக முன்னேற்றம் (Business Progress)**

வைப்புகள் 31.03.2024 தேதியன்று உள்ள ரூ.3,81,139.55 லட்சங்களிலிருந்து ரூ.90,609.44 லட்சங்கள் உயர்ந்து 31.03.2025 அன்று ரூ.4,71,748.99 லட்சங்களாக உயர்ந்து 23.77% வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது.

கடன்கள், முக்கியமாக நகைக்கடன்கள் 31.03.2024 தேதியன்று உள்ள ரூ.3,58,175.25 லட்சங்களிலிருந்து ரூ.91,955.08 லட்சங்களாக உயர்ந்து 31.03.2025 அன்று ரூ.4,50,130.33 லட்சங்களாக உயர்ந்து 25.67% வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது.

**4. கிளைகள் விரிவாக்கம் (Branches Network)**

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், திறக்கப்பட்ட 10 கிளைகளைச் சேர்த்து 31.03.2025 அன்று 130 கிளைகளாக உள்ளன. இந்த அறிக்கை தேதியன்று 138 கிளைகளாக உயர்ந்துள்ளது. உங்களது நிறுவனம் மேலும் 12 கிளைகளைத் திறக்க பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்திடமிருந்து பெற்ற அனுமதிகளை கையில் வைத்துள்ளது. அவைகள் 31.03.2026-க்குள் செயல்பாட்டுக்கு வந்துவிடும் மற்றும் அந்த தேதியில் கிளைகளின் எண்ணிக்கை 150 ஆக இருக்கும். மேலும், **50 கிளைகள்** திறக்க பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சத்திடமிருந்து அனுமதிபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5. வணிக வாய்ப்புகள் (Business Prospects)**

உங்களது நிறுவனத்தின் முக்கிய வணிகம் நகைக்கடன்கள்.

2024-ல் ரூ.7,10,000 கோடிகள் உள்ள தங்க நகைச் சந்தை, 2028-ல் இரட்டிப்பாக ரூ.14,19,000 கோடிகளாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 5 வருடங்களில் தங்க நகைச் சந்தை 14.85% கூட்டு சராசரி வளர்ச்சி விகிதத்தில் (CAGR) உயர்ந்துள்ளது. ஒரு கிராம் தங்கத்தின் விலை விகிதத்தில் நீடித்த வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளின் அடிப்படையில் தங்க நகைச் சந்தை மேலும் வளர்ச்சியடையும் நிலையில் உள்ளது.

வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFC) போன்ற முறையான சந்தைகளில் தங்க நகைக்கடன்கள் 37% ஆக உள்ளது. ஒழுங்கமைக்கப்படாத சந்தைகளில் அதன் சதவீதம் 63% ஆகும். மேலும் NBFC ன் பங்கு 61% மற்றும் வங்கிகளின் பங்கு 39% ஆகும். எனவே, இவ்வாறு உயரும் போக்கானது உங்களது இயக்குநர்கள் மனத்தில் நகைக்கடன்கள் உயரும் என்ற வகையில் நம்பிக்கையூட்டுகிறது.

**6. பிரிவு 92(3)-ன் கீழ் ஆண்டறிக்கை**

நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 92(3)-ன்படி உங்களது நிறுவனத்தின் 2023-24க்குரிய ஆண்டறிக்கை [Annual Return (MGT-7)] https://kmbf.co/form-mgt-7.html என்ற இணைய முகவரியில் காண கிடைக்கிறது. 2024-25-க்குரிய ஆண்டறிக்கை 121-வது ஆண்டு பொதுக்கூட்டம் முடிந்தபின் உங்களது நிறுவனத்தின் அதே இணைய தள முகவரியில் வெளியிடப்படும்.

**7. இயக்குநர் அவை கூட்டங்களின் எண்ணிக்கைகள் (Number of the Board Meetings)**

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், உங்களது நிறுவனத்தின் இயக்குநரவை கீழ்கண்ட தேதிகளில் 13 இயக்குநர் அவைக் கூட்டங்களை நடத்தியுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 23.04.2024 | 24.05.2024 | 13.06.2024 | 14.07.2024 | 24.08.2024 |
| 30.09.2024 | 27.10.2024 | 23.11.2024 | 28.12.2024 | 30.12.2024 |
| 28.01.2025 | 27.02.2025 | 29.03.2025 | | |

இரண்டு கூட்டங்களிடையே உள்ள இடைவெளி 120 நாட்களைத் தாண்டவில்லை.

ஒவ்வொரு இயக்குநரும் பங்கெடுத்த கூட்டங்களின் எண்ணிக்கை (மொத்த கூட்டங்கள் 13) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இயக்குநர்களின் பெயர் | DIN | பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.S.கல்யாணசுந்தரம் - தலைவர் (சுயாதீன இயக்குநர்) | 00829647 | 13 |
| 2 | திரு.S.இராமலிங்கம் - துணைத்தலைவர் (சுயாதீன இயக்குநர்) | 00829529 | 13 |
| 3 | திரு.PR.P.வேலப்பன் - மேலாண் இயக்குநர் | 01892661 | 12 |
| 4 | திரு.G.அன்பழகன் - சுயாதீன இயக்குநர் | 01469646 | 13 |
| 5 | திரு.B.பிரகாசம் - இயக்குநர் | 00338872 | 12 |
| 6 | திரு.G.துரைராஜ் - இயக்குநர் | 03064193 | 13 |
| 7 | திருமதி.E.அம்பிகா - இயக்குநர் | 09353335 | 13 |
| 8 | திரு.M.குரு பிரசாந்த் - இயக்குநர் | 09359770 | 13 |

கூட்ட நடவடிக்கைகள் முழுவதும் அதற்காக பராமரிக்கப்பட்டு வரும் கூட்ட நடவடிக்கைக்குரிய பதிவேடுகளில் (Minutes Book) பதிவு செய்யப்பட்டுள்ளன.

**8. இயக்குநர்களின் பொறுப்பு அறிக்கை** (Directors' Responsibility Statement)

நிறுவனங்கள் சட்டம், 2013-பிரிவு 134(5)-ன்படி அதனுடன் படிக்கப்பட்ட பிரிவு 134(3) (c) இயக்குநரவை தங்களுடைய சிறந்த அறிவுக்கும் மற்றும் திறமைக்கு எட்டியபடியும் கீழ்க்கண்ட விபரங்களை உறுதிப்படுத்துகிறது.

a) நிதி நிறுவனத்தின் வருடாந்திர நிதி நிலை அறிக்கையை தயார் செய்ய தகுந்த கணக்கியல் தர நிலைகள் ஏதேனும் முக்கியமான மாறுபாடுகள் இருந்தால் அது சம்பந்தமான விளக்கங்களுடன் பின்பற்றப்பட்டுள்ளன.

b) உங்கள் இயக்குநர்கள் நிதி நிறுவனத்திற்கேற்ற கணக்கியல் கொள்கைகளை தேர்வு செய்து அவைகளை தொடர்ச்சியாக பின்பற்றி நியாயமான மற்றும் விவேகமான தீர்வுகளையும் மதிப்பீடுகளையம் செய்து 31, மார்ச், 2025 அன்று நிறைவடைந்த வருடத்திற்கான உங்களது நிறுவன நிலவரங்கள், இலாபம் மற்றும் இழப்பு கணக்கு உண்மையாக மற்றும் நியாயமாக இருக்க வழிவகை செய்கிறார்கள்.

c) நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவுகளின் படி நிதி நிறுவனத்தின் சொத்துக்களை காக்கும் வண்ணமும், மேலும் மோசடிகள் நிகழாவண்ணமும் சரியான மற்றும் போதுமான கணக்கியல் பதிவேடுகளை பராமரிக்க உங்களது இயக்குநர்கள் அக்கறை கொண்டுள்ளார்கள்.

d) நிதி நிறுவனத்தின் வருடாந்திர கணக்குகள் நிறுவனம் தொடர்ந்து செயல்படும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தயார் செய்யப்படுகின்றன.

e) உங்களது இயக்குநர்கள் நிதி நிறுவனத்திற்குப் பொருந்தக்கூடிய சட்டங்களை கடைபிடிக்கும் விதத்தில் சரியான அணுகுமுறைகளை உருவாக்கியுள்ளார்கள். அவைகள், போதுமானதாகவும் சிறந்த முறையிலும் இயங்கிக் கொண்டுள்ளன.

**9. நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 143(12)-ன் படி சட்டமுறை தணிக்கையாளர்கள் எந்த மோசடியையும் அறிவிக்கவில்லை.**

**10. சுயாதீன இயக்குநர்களின் அறிக்கை (Independent Directors)**

மூன்று சுயாதீன இயக்குநர்களில் ஒவ்வொரு இயக்குநரும், 19.04.2025 அன்று நடைபெற்ற, இந்த 2024-25 நிதியாண்டின் முதற்கூட்டத்தில், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 149(7)-ல் கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரத்தின் அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதாக, நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 149(6)-ன் கீழ் அறிக்கை கொடுத்துள்ளனர். மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டிலும் இதே போல் 23.04.2024 சமர்ப்பித்துள்ளனர்.

நிதி நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுக்கு தகுந்தாற்போலும், நிறுவன விதிமுறைகளை பின்பற்றி நடப்பதற்கும் தகுந்த திறமை வாய்ந்த தேவையான அறிவு, நெறிமுறைகளை கொண்ட எந்த சூழ்நிலைகளிலும் சரியான மற்றும் தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய, எவ்வித சவாலான நேரத்திலும் அனைத்தையும் எதிர்கொள்ளக்கூடிய நபர்களை நிறுவனத்தின் சுயாதீன இயக்குநர்களாக பணியமர்த்த நிறுவன நியமன மற்றும் ஊதியக்குழு கருத்தில் கொள்கிறது. இக்குழு மேலும் அவர்களின் கல்வி தகுதி, நேர்மறை எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகள், பணி அமர்த்தப்பட வேண்டிய பணியின் தன்மை, திறமை மற்றும் அனுபவம், வேறு எத்தனை நிறுவனம் மற்றும் குழுக்களில் இயக்குநராக அல்லது உறுப்பினராக உள்ளனர், அவ்வாறு இருப்பின் அதை நிதி நிறுவன விதிமுறைகளுக்கு உட்பட்டு உள்ளனவா ஆகியவற்றையும் நிறுவனத்தின் இயக்குநர்கள் தேர்வு கொள்கைகளையும் கருத்தில்கொள்கிறது. நிறுவன இயக்குநரவை மேற்கண்ட குழுவின் பரிந்துரையை கேட்ட பின்னரே பொருத்தமான முடிவுகளை எடுக்கிறது.

**11. நியமனம் மற்றும் ஊதியக் கொள்கை (Nomination and Remuneration Policy)**

நிதியின் இணையதள முகவரியில் (https://kmbf.co/assets/pdfs/nrc-kmbf.pdf) நியமனம் மற்றும் ஊதியக் கொள்கை காணக்கிடைக்கிறது. அந்தக்குழு நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 178-ன் கீழ் இயக்குநர்/சுயாதீன இயக்குநர்கள் தகுதி, நேர்மறை பண்புகள், அவர்களிடமிருந்து பெறப்பட்ட உறுதிமொழி அறிக்கைகளின்படி மதிப்பீடு செய்துகிறது. பரிந்துரைக்கப்படும் ஊதியம் நிறுவனங்கள் சட்டம், 2013 படி உள்ளது.

**12. சட்டமுறை தணிக்கையாளர்கள் மற்றும் செயல்முறை செயலக தணிக்கையாளர்கள் அவர்களது அறிக்கையில் குறித்துள்ள பாதகமான மறுப்பு அல்லது கருத்தின் மீது இயக்குநரவையின் கருத்துக்கள் மற்றும் விளக்கங்கள் (Boards' Reply to Auditors' Reports)**

**சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கையில் உள்ள கூறு எண். 2 h (iii)-க்கு, உங்களது இயக்குநர்கள் கீழ்க்கண்டவாறு பதிலளிக்கிறார்கள்.**

**தணிக்கையாளர்கள் அறிக்கைக்கு இயக்குநரவையின் பதில் :**

**i. பங்குகளை IEPF-க்கு மாற்றுவது (Transfer of Shares to IEPF)**

முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு பங்குகளை மாற்றுவது தொடர்பாக பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட தொடர்புடைய நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவுகள் மற்றும் விதிகளின் படி நிதியின் சுமார் 7 இலட்சம் உறுப்பினர்களின் பங்குகளை மாற்றுவதற்கு மிக அதிகமான மற்றும் நீண்டகால தொடர் செலவுகள் உள்ளன. நிதிகளின் சபையும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி இதிலிருந்து விலக்கு பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

**ii. முதிர்வடைந்த வைப்புத்தொகைகள் (Overdue Deposits)**

முதிர்வடைந்த வைப்புத்தொகைகள் **ரூ.152.67 இலட்சங்கள்** சம்பந்தமாக வழக்குகள் நிலுவையில் உள்ளதாலும், அவற்றில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் உரிமைக்கோரல்கள் போன்ற காரணங்களாலும் மாற்றப்படாமல் உள்ளன. இவைகளை சரிசெய்தபின் உரிமை கோருபவர்களின் கோரிக்கைகளின் பேரில் சரியான நபர்களுக்கு அந்த தொகைகள் திருப்பி அளிக்கப்படும்.

**iii. தணிக்கைத் தடம் (Audit Trail)**

சுயாதீன தணிக்கையாளர்கள் அறிக்கையில் கூறு எண். 2. h - vi-ல் தணிக்கை தடம் தொடர்பான தணிக்கையாளரின் கருத்துக்கு பதிலளிக்கும் விதமாக, உங்கள் நிறுவனம் அதன் தற்போதைய நிதி சம்பந்தமான தளத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஆண்டு முழுவதும் பராமரிக்கப்படும் நிதி மற்றும் செயல்பாட்டுப் பதிவுகளில் வெளிப்படைத்தன்மை, கண்டறியும் தன்மை மற்றும் பொறுப்புணர்வை வழங்க, தணிக்கைத் தடத்தை (தணிக்கைப் பதிவுகள்) செயல்படுத்துவது முன்னெடுக்கப்படுகிறது. இருப்பினும், மென்பொருளின் விரிவான நோக்கம் மற்றும் பழைய அமைப்பிலிருந்து தடையற்ற மாற்றத்தை உறுதி செய்ய வேண்டியதன் காரணமாக, முழுமையான சோதனை, தரவு மாற்றம் செய்தல் மற்றும் தொடர்புடைய பணியாளர்களின் பயிற்சி ஆகியவற்றிற்கு கூடுதல் நேரம் தேவைப்படுகிறது.

மென்பொருளின் நம்பகத்தன்மை, பாதுகாப்பு மற்றும் அனைத்து தொடர்புடைய தணிக்கை மற்றும் ஒழுங்குமுறை தரநிலைகளுடன் இணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்த இந்த தாமதம் தவிர்க்க முடியாதது. வழக்கமான வணிக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுவதைக் குறைக்க, தாமதம் கவனமாக நிர்வகிக்கப்படுகிறது. புதிய மென்பொருள் முழுமையாக செயல்படும் வரை, முக்கியமான தணிக்கை நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டு, நடைமுறையில் உள்ள மென்பொருளை பயன்படுத்தி கண்காணிக்கப்படுவதை உறுதிசெய்ய இடைக்கால நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. உயர்தரமான தணிக்கைத் தட அமைப்பை உறுதி செய்வதற்கும், அவசரமாகச் செயல்படுத்துவதால் எழக்கூடிய சட்டரீதியான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் தாமதம் தவிர்க்க முடியாததாக உள்ளது. தற்போது அனைத்து கிளைகளிலும் புதிய மென்பொருள் பயன்பாட்டில் உள்ளது.

**செயல்முறை செயலக தணிக்கையாளர்கள் அறிக்கைக்கு (MR-3) உங்களது இயக்குநர்கள் கீழ்க்கண்டவாறு பதிலளிக்கிறார்கள் (Boards' Reply to Secretarial Auditors' Report)**

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 204 மற்றும் அதனுடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (நியமனம் மற்றும் மேலாண் அதிகாரிகளுக்கு கொடுக்கப்படும் ஊதியம்) விதிகள், 2014-ன் விதி 9-ன் படியும், உங்களது நிறுவனம் திருவாளர்கள் R & RJ Associates, செயல்முறை நிறுவன செயலர்கள், சென்னை அவர்களை 31.03.2025 ஆண்டுக்குரிய செயலகத் தணிக்கை நடத்த நியமித்துள்ளது. படிவம் MR-3-ல் செயலகத் தணிக்கை அறிக்கை இந்த இயக்குநரவை அறிக்கையுடன் இணைப்பு-A-ஆக இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தணிக்கையாளர்கள் உங்களது நிறுவனத்தின் உரிமைகோரப்படாத பங்கு மூலதனத்தை IEPF-க்கு மாற்றவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

பதில் : அவ்வாறு மாற்றுவதிலிருந்து விலக்குகோர தங்களது இயக்குநர்கள் உரிய முயற்சிகளை மெற்கொண்டு வருகிறார்கள் என இயக்குநர் குழு தெரிவிக்கிறது. (பத்தி எண்.12-ஐ பார்க்கவும்)

1) சில சூழ்நிலைகளில், நிறுவனத்திற்கு பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி, சட்டப்படியான படிவங்கள், MCA-ல் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டும் மற்றும் தாக்கல் செய்யப்படாமலும் இருந்தன.

பதில் : 30.06.2024-க்குள் தாக்கல் செய்ய வேண்டிய DPT-3 படிவத்தை தவிர நிறுவனம் பொருந்தக்கூடிய நிறுவனங்கள் சட்டம், 2013 உள்பட அனைத்து சட்டங்களின் படி உள்ள அனைத்து சட்டப்பூர்வ படிவங்களையும் தாக்கல் செய்துள்ளது. DPT-3 படிவம் 10.09.2024 அன்று பொருந்தக்கூடிய கூடுதல் கட்டணங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது.

2) மதிப்பாய்வுக்குட்பட்ட காலத்தில் பங்குகள் ஒதுக்கீடு, பங்குகள் ஒதுக்கீட்டு குழுவால் ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. நிறுவனம் பங்குகள் ஒதுக்கீட்டை இயக்குநரவை மூலம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

பதில் : நிறுவனம் பங்குகள் ஒதுக்கீட்டு குழு / பங்குதாரர்கள் உறவுக்குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து பங்குகள் ஒதுக்கீடுகளுக்கும் ஒப்புதல் அளிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

3) நிறுவனம், நிறுவனங்கள் பதிவாளர் முன் 08.11.2021-க்கு முன்னர் பெண் இயக்குநர் நியமனம் செய்யப்படாதது சம்பந்தமாகவும் மற்றும் அதை சரி செய்தது சம்பந்தமாகவும் பிரிவு 149(1)-க்கு இணங்கவும் ஒரு தீர்வு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது என்றும் தீர்வு உத்தரவு நிறுவனத்தால் இன்னும் பெறப்படவில்லை.

பதில் : செயலக தணிக்கையாளர்களின் உண்மை அறிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது.

4) 2023-24-ல் நிறுவனங்கள் பதிவாளர் ஒரு ஆய்வு மற்றும் விசாரணை நடத்தியுள்ளார். அது அவரிடம் நிலுவையிலுள்ளது.

பதில் : நிறுவனம் 18.08.2025 தேதியிட்ட ஆரம்ப கட்ட கண்டுபிடித்தல்கள் அறிக்கையை பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கு பதிலளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

5) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள்படியும் மற்றும் சென்ற ஆண்டு தெரிவிக்கப்பட்டதன் படியும் மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் IP 11/2019 நிலுவையில் உள்ளது. அது தொடர்பாக சென்னை, அசோக் நகர் பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்தில் FIR எண் 151/2019 நிலுவையில் உள்ளது. மெட்ராஸ் உயர்நீதிமன்றம் "The Official Assignee"க்கு ரூ.16.50 கோடிக்கு வங்கி உத்தரவாதம் அளிக்க உத்தரவிட்டிருந்தது. அது நிறைவேற்றப்பட்டுவிட்டது.

பதில் : செயலக தணிக்கையாளர்களின் உண்மை அறிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது.

**13. பிரிவு 186-ன் கீழ் கடன்கள், உத்தரவாதங்கள் அல்லது முதலீடுகள் (Loans, Guarantees or Investments under section 186)**

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் உங்களது நிறுவனம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முதலீடு செய்யவோ, கடன் கொடுக்கவோ, உத்தரவாதம் அளிக்கவோ அல்லது பத்திரங்களை வாங்கவோ இல்லை. எனவே, பிரிவு 186-ன் கீழ் இணக்கமாக நடக்க வேண்டிய மற்றும் அறிக்கை அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**14. பிரிவு 188 (1)-ன் கீழ் தொடர்புடைய நபர்களுடன் உள்ள ஏற்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள்: [Arrangements and Contracts with related parties under section 188(1)]**

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் உங்களது நிறுவனம், தொடர்புடைய நபர்களுடன் எந்த ஒப்பந்தமோ, ஏற்பாடுகளோ, பரிவர்த்தனைகளோ நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 188(1)-ன் படி செய்யவில்லை. எனவே, பிரிவு 188(1)-ன் கீழ் இணக்கமாக நடக்க வேண்டிய மற்றும் அறிக்கை அளிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**15. நிறுவனத்தின் நடப்பு நிலைமை: (State of Company's Affairs)**

உங்களது நிறுவனத்தின் முக்கியமான வணிகம் சிக்கனத்தை வளர்த்து சேமிப்புப் பழக்கங்களை பரப்பி, நீண்டகால மற்றும் குறுகிய கால நிரந்தர மற்றும் மாதாந்திர வைப்புக்களை உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே பெறுதல் மற்றும் பிணையத்தின் மீது மட்டுமே உறுப்பினர்களுக்கு மட்டுமே கடன் கொடுத்தல். உங்களது நிறுவனம் மிகக்குறைந்த அளவில், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு பெட்டக வசதியை வழங்குகிறது. மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் மற்றும் அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் உங்களது நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூ. இலட்சங்களில்)

| விபரங்கள் | 31.03.2023 | 31.03.2024 | 31.03.2025 |
|---|---|---|---|
| வைப்புகள் | 3,50,046.03 | 3,81,139.55 | 4,71,748.99 |
| உயர்வு சதவிகிதத்தில் | 12.20% | 8.88% | 23.77% |
| கடன்கள் | 3,19,884.78 | 3,58,175.25 | 4,50,130.33 |
| உயர்வு சதவிகிதத்தில் | 10.69% | 11.97% | 25.67% |
| மொத்த லாபம் | 10,184.31 | 10,369.12 | 14,034.71 |
| உயர்வு சதவிகிதத்தில் | 9.18% | 1.81% | 35.35% |
| வரிக்கு பிந்தைய நிகர லாபம் | 6,624.22 | 7,616.07 | 10,458.28 |
| கிளைகளின் எண்ணிக்கை | 116 | 120 | 130 |
| காப்பும் உபரியும் | 41,636.94 | 48,500.89 | 58,215.81 |
| பங்கு ஈவுத் தொகை சதவிகிதம் | 25% | 25% | 25% |
| பங்கு ஈவுத் தொகை | 752.12 | 756.24 | 761.16 |
| சொந்த நிகர நிதி விகிதம், நிதி விதிகள் 2014-ன் விதி 14-ன்படி | 1:7.45 | 1:7.40 | 1:9.17 |
| வில்லங்கப்படுத்தப்படக் கூடாத வங்கி வைப்புத் தொகைகள் (நிதி விதிகள், 2014-ன் விதி 14-ன்படி) | 35,585.00 | 38,500.00 | 47,800.00 |

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், வணிகத்தின் தன்மையில் மற்றும் நிலைமையில் மாறுதல்கள் இல்லை.

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், உங்களது நிறுவனத்தின் நிகழ்ச்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய கையகப்படுத்துதல், கட்டமைப்புகளில் மாறுதல், இணைப்புக்கள், மூலதன விலக்கல் மற்றும் பல்வகைப்படுத்துதல் இல்லை.

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் உங்களது நிறுவனத்திலிருந்து கூட்டு முயற்சிகள், துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள் விலகவில்லை அல்லது உங்களது நிறுவனத்துடன் வரவில்லை.

உங்களது நிறுவனம் துணை நிறுவனங்கள், தோழமை நிறுவனங்கள் மற்றும் கூட்டு நிறுவனங்கள் அல்லது வைத்திருக்கும் நிறுவனங்களை வைத்திருக்கவில்லை. அது வேறு பெரு நிறுவனத்திற்கு துணை நிறுவனமாக இல்லை.

உங்களது நிறுவனம் நிதி என்ற ஒரே ஒரு பிரிவில் அதாவது வைப்புகளை பெறுதல் மற்றும் கடன் கொடுத்தலில் மட்டும் செயல்படுகிறது. எனவே பிரிவுகள் வாரியாக அறிக்கை அளிக்க வேண்டிய நிலை எழவில்லை.

16. **காப்புக்கள் மற்றும் உபரிகள் :** (Reserves and Surplus)

ஒவ்வொரு ஆண்டும், உங்களது நிறுவனம் பொதுக் காப்பு நிதிகளை வலுப்படுத்திக்கொண்டே இருக்கிறது. உங்களது இயக்குநரவை 2024-25-ம் ஆண்டில் காப்பு நிதிக்கு ரூ. 9,714.93 இலட்சங்களை மாற்றம் செய்து 31.03.2024-ல் உள்ள ரூ. 48,500.89 இலட்சங்களிலிருந்து 31.03.2025-ல் ரூ. 58,215.82 இலட்சங்களுக்கு உயர்த்தியுள்ளது.

17. **பங்கு ஈவுத்தொகை:** (Dividend)

உங்கள் இயக்குநர்கள், மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கு, பதிவேடுகள் மூடல் தேதியன்று உறுப்பினர்கள் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள பங்குதாரர்களுக்கு, ஆண்டுக்கு 25% (கால அடிப்படையிலான, விகிதாச்சார அடிப்படையில்) பங்கு ஈவுத் தொகையை பரிந்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். இதற்கு ரூ.761.16 இலட்சம் ஆகும்.

18. **நிதியாண்டின் இறுதி தேதிக்குப் பிறகு நிதி நிலையைப் பாதிக்கும் பொருட்படுத்தத்தக்க மாற்றங்கள் மற்றும் பொறுப்புக்கள் (Material Changes and Commitments Subsequent to the Financial Statements)**

மார்ச் 31, 2025-க்கு பிறகு அறிக்கை வெளியிடப்பட்ட தேதி வரை உங்கள் நிறுவனத்தின் நிதி நிலையைப் பாதிக்கும் எந்தவொரு பொருட்படுத்தத்தக்க மாற்றங்கள் மற்றும் பொருப்புகள் இல்லை.

19. **ஆற்றல் சேமிப்பு, தொழில் நுட்பங்களை உபயோகப்படுத்துதல் மற்றும் அந்நிய செலாவணி வருவாய் மற்றும் வெளியேற்றம் : (Conservation of Energy, Technology Absorption and Foreign Exchange Earnings and Outgo)**

உங்களது நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளின் தன்மையைக் கருத்தில்கொண்டு ஆற்றல் சேமிப்பு, தொழில் நுட்பங்களை உபயோகப்படுத்துதல் மற்றும் அந்நிய செலாவணி வருவாய் மற்றும் வெளியேற்றம், நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 134(3)(m)-ன் கீழ் தேவைப்படும் அறிக்கை மற்றும் அதனுடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகள், 2014-ன்விதி 8(3) உங்கள் நிறுவனத்திற்குப் பொருந்தாது.

20. **இடர் மேலாண்மை: (Risk Management)**

உங்கள் நிறுவனத்தின் வணிகத்தின் தன்மையுடன் தொடர்புடைய பல இடர்களுக்கு நடுவில் கடன் இடர், பணத்திற்கு மாற்றும் தன்மை இடர், வட்டி வீத இடர் மற்றும் செயல்பாட்டு இடர்கள் மற்றும் போட்டி இடர், நிலையற்ற தன்மை இடர் ஆகியவைகள் அடங்கும். உங்கள் இயக்குநர்கள் அவ்வப்போது சந்தித்து, கவனமாக இருந்து, இடர் மேலாண்மை, சொத்து பொறுப்பு மேலாண்மை தொடர்பான சிக்கல்களை கண்காணித்து, விவாதித்து, உகந்த பலன்களை அடைய முறையாக வணிகத்தைத் திறம்பட நிர்வகிக்கிறார்கள்.

உங்கள் நிறுவனம் கீழ்க்கண்ட மூன்று தூண்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விரிவான இடர் மேலாண்மை நடைமுறையைக் கொண்டுள்ளது.

- வணிக இடர் மதிப்பீடு
- செயல்பாட்டுக் கட்டுப்பாடுகள் மதிப்பீடு
- கொள்கை இணக்க செயல்முறைகள்.

உங்கள் இயக்குநரவையின் கருத்துப்படி, நிறுவனத்தின் இருப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்த இடர் கூறுகளும் இல்லை.

சாத்தியமான இடர்களை அல்லது இடர்களின் விளைவுகளைத் தணிக்க / தடுக்க, அனைத்து நகைகளையம் ஒவ்வொரு மாதமும் மறு மதிப்பீடு செய்தல், நகைகள், பணம் மற்றும் சொத்துக்களுக்கான போதுமான காப்பீட்டுகள் மற்றும் தகுதி வாய்ந்த பட்டயக் கணக்காளர்களால் எல்லா கிளைகளிலும் காலாண்டு தணிக்கைகள் போன்ற முறையான அமைப்புகள் உள்ளதை உறுதி செய்கிறது.

**21. பெருநிறுவன சமூக பொறுப்பு (CSR) முயற்சிகள் (Corporate Social Responsibility Initiatives)**

உங்கள் நிறுவனத்தின் CSR முன்னெடுப்புகளின் முயற்சிகளின் தன்மை, வறுமை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளைத் தடுத்தல், முன்தடுப்பு சுகாதாரப் பராமரிப்பு உட்பட்ட சுகாதாரப் பராமரிப்பை ஊக்குவித்தல், சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள், சுத்தமயமாக்குதலை ஊக்குவித்தல், கிராமப்புறங்களில் விளையாட்டுகளை ஊக்குவித்தல், கல்வியை ஊக்குவித்தல், வகுப்பறைகளைப் புதுப்பித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 135-ன் படி 2024-25 நிதியாண்டில் CSR-ன் கீழ் இத்தகைய முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட பங்களிப்புகள், சட்டப்பூர்வ வரையறையான ரூ.189.92 இலட்சங்களுக்கு எதிராக ரூ191.94 இலட்சங்கள் ஆகும். அதாவது, வரையரைக்கு அதிகமாக ரூ.2.02 இலட்சங்களாக உள்ளது. 2023-24 நிதியாண்டில், CSR செலவு ரூ.179.56 இலட்சங்களாக உள்ளது.

நிறுவனங்கள் சட்டம், 2013 கீழ் தேவைப்படும் CSR நடவடிக்கைகள் குறித்த அறிக்கை இணைப்பு II - ல் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இது இந்த அறிக்கையின் ஒரு பகுதியாகும். நிறுவனத்தின் CSR கொள்கையின் நகல் இணைய இணைப்புகளில் https://kmbf.co/assets/pdfs/csr-activities-2022-23.pdf காண்பிக்கப்பட்டுள்ளது.

**22. இயக்குநரவை அதன் சொந்த, குழுக்கள் மற்றும் இயக்குநர்களின் செயல் திறனின் முறையான வருடாந்திர மதிப்பீடு:** (Formal Annual Evaluation of Board, Committees and Directors)

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவுகளின்படி, இயக்குநரவை, இயக்குநரவை துணைக் குழுக்கள், தலைவர், சுயாதீனமற்ற மற்றும் சுயாதீன இயக்குநர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான முறையான வருடாந்திர மதிப்பீட்டு செயல்முறை, இயக்குநரவை நியமனம் மற்றும் ஊதியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இயக்குநரவை நிர்வாகம், அமைப்பு, திறன்கள், வழிகாட்டுதல் போன்ற பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு நடத்தப்படுகிறது. நியமனம் மற்றும் ஊதியக்குழு அவ்வப்போது தேவைக்கேற்ப செயல்திறன் மதிப்பீட்டு அளவுகோல்களை மதிப்பாய்வு செய்கிறது. இயக்குநரவை அதன் சொந்த செயல்திறன், சுயாதீன இயக்குநர்கள் (மதிப்பீடு செய்யப்படும் இயக்குநரைத் தவிர) உட்பட அனைத்து தனிப்பட்ட இயக்குநர்கள் மற்றும் அதன் குழுக்கள் மற்றும் நிறுவனத்தின் வருடாந்திர மதிப்பீட்டை மேற்கொள்கிறது.

சுயாதீன இயக்குநர்கள் தங்கள் தனிக் கூட்டத்தில் இயக்குநரவை, தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மற்றும் இயக்குநரவை மற்றும் நிர்வாகத்திற்கு இடையேயான தகவல் ஓட்டம் சரியான நேரத்தில் இருப்பதையும் மேற்கொள்கிறார்கள்.

தலைவரின் மதிப்பீட்டைப் பொறுத்தவரை, தலைமைத்துவ திறன்கள் மற்றும் இயக்குநரவை நிலை பணி உறவுகள் போன்ற கூடுதல் அளவுகோல்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வணிக நடத்தை, வங்கியின் ஒட்டுமொத்த செயல்திறன், மூலோபாய திட்டமிடல், இணக்கம் மற்றும் நிர்வாகப் பகுதிகள் போன்ற கூடுதல் அளவுகோல்களின் அடிப்படையில் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி மதிப்பீடு செய்யப்பட்டார்.

மதிப்பீட்டு செயல்முறையை மேற்கொள்ளும் போது, மதிப்பீடு செய்யப்படும் இயக்குநர் பங்கேற்கவில்லை.

மேற்கூறியபடி நடத்தப்பட்ட அனைத்து மதிப்பீடுகளின் அறிக்கைகளும் இயக்குநரவை முன் வைக்கப்பட்டு, இயக்குநரவை, இயக்குநரவை குழுக்கள் மற்றும் தனிப்பட்ட இயக்குநர்களின் ஒட்டுமொத்த செயல்திறன் 2024-25 நிதியாண்டில் திருப்திகரமாக இருப்பதாக அனைத்து இயக்குநர்களும் ஒப்புக்கொண்டனர்.

**23. இயக்குநர்கள் மற்றும் முக்கிய நிர்வாக அதிகாரிகள் பற்றிய விவரங்கள் (Directors and Key Managerial Personnel)**

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் எந்த இயக்குநரும்/சுயாதீன இயக்குநரும் நியமிக்கப்படவில்லை அல்லது விலகவில்லை. தற்போதைய இயக்குநரவை பின்வரும் இயக்குநர்களுடன் செயல்படுகிறது.

| வ. எண் | இயக்குநர்களின் பெயர் | DIN |
|---|---|---|
| 1. | திரு.S.கல்யாணசுந்தரம் - தலைவர் (சுயாதீன இயக்குநர்) | 00829647 |
| 2. | திரு.S.இராமலிங்கம் - துணைத்தலைவர் (சுயாதீன இயக்குநர்) | 00829529 |
| 3. | திரு.PR.P.வேலப்பன் - மேலாண் இயக்குநர் | 01892661 |
| 4. | திரு.G.அன்பழகன் - சுயாதீன இயக்குநர் | 01469646 |
| 5. | திரு.B.பிரகாசம் - இயக்குநர் | 00338872 |
| 6. | திரு.G.துரைராஜ் - இயக்குநர் | 03064193 |
| 7. | திருமதி.E.அம்பிகா - இயக்குநர் | 09353335 |
| 8. | திரு.M.குரு பிரசாந்த் - இயக்குநர் | 09359770 |

உங்கள் நிறுவனத்தின் அமைப்பு விதிகளின் பிரிவு 68-ன் படி, அடுத்த 121-வது ஆண்டு பொதுக் கூட்டத்தில் திரு.M.குரு பிரசாந்த் (DIN: 09359770) ஓய்வு பெறுகிறார். மேலும், அவர் மறு நியமனத்திற்கு தகுதியுடையவராக இருப்பதால் மறு நியமனத்திற்கு தன் விருப்பத்தை தெரிவிக்கிறார்.

**இயக்குநர்களின் குழுக்கள் (Committee of Directors)**

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவுகள் 177 மற்றும் 178-ன் கீழ் உடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (இயக்குநரவைக் கூட்டங்கள் மற்றும் அதன் அதிகாரங்கள்) விதிகள், 2014-ன் படி இயக்குநர்களின் சட்டப்பூர்வ குழுக்கள் மற்றும் ஒவ்வொரு குழுவின் உறுப்பினர்களின் விவரங்கள் மற்றும் நடைபெற்ற குழு கூட்டங்களின் எண்ணிக்கைகள் ஆகியவை பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | இயக்குநர்களின் பெயர் (திரு./திருமதி.) | தணிக்கை குழு | நியமனம் மற்றும் ஊதிய குழு | பங்குதாரர்கள் உறவு குழு | கம்பெனிகள் சமுதாய பொறுப்பு குழு |
|---|---|---|---|---|---|
| 1 | S.கல்யாணசுந்தரம் | தலைவர் | உறுப்பினர் | தலைவர் | தலைவர் |
| 2 | S.இராமலிங்கம் | உறுப்பினர் | குழு தலைவர் | உறுப்பினர் | உறுப்பினர் |
| 3 | PR.P.வேலப்பன் | உறுப்பினர் | xxx | உறுப்பினர் | உறுப்பினர் |
| 4 | G.அன்பழகன் | உறுப்பினர் | உறுப்பினர் | xxx | உறுப்பினர் |
| 5 | B.பிரகாசம் | உறுப்பினர் | உறுப்பினர் | உறுப்பினர் | xxx |
| 6 | G.துரைராஜ் | xxx | xxx | xxx | xxx |
| 7 | E.அம்பிகா | xxx | xxx | xxx | xxx |
| 8 | M.குரு பிரசாந்த் | xxx | xxx | உறுப்பினர் | உறுப்பினர் |
| | கூட்ட எண்ணிக்கை | 3 | 4 | 12 | 2 |

மேலும், மற்ற நான்கு இயக்குநர் குழுக்கள் அதாவது வைப்பு நிதி குழு, நகைக்கடன் குழு, அடமானக்கடன் குழு, சட்ட ஆலோசனைக்குழு இயங்கி வருகின்றன.

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் திரு.S.சண்முகம், பொது மேலாளர், ஏப்ரல் 23, 2024 முதல் பொது மேலாளர் மற்றும் தலைமை நிதி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

திருமதி. ஸ்வீட்டி ஜுன்ஜுன்வாலா (ICSI உறுப்பினர் எண் A43318) ஏப்ரல் 23, 2024 முதல் நிறுவனச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அவர், மே 6, 2024 அன்றிலிருந்து பணியிலிருந்து விலகினார். பின்னர் திரு.S.கண்ணன் (ICSI உறுப்பினர் எண் A4053) ஜுலை 19, 2024 முதல் நிறுவனச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

**24. நிதி நிறுவனத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்புத் தொகைகள்: (Deposits Accepted by the Nidhi)**

உங்களது நிறுவனம் நிதி நிறுவனம் என்பதால், நிதி விதிகள் 2014-ன்படி ஆளுமை செய்யப்படுகின்றன. நிறுவனங்கள் (வைப்புத் தொகைகளைப் பெற்றுக்கொள்ளுதல்) விதிகள், 2014-ன் விதி 2(1)(c)(xiv)-ன் படி, நிதி நிறுவனத்தின் வைப்புத்தொகைகள் வைப்புத் தொகைகளின் வரையறையின் கீழ் வராது. எனவே, நிறுவனங்கள் சட்டம், 2013 இன் அத்தியாயம் V இன் கீழ் வைப்புத் தொகைகளின் விதிகள் உங்கள் நிதிக்கு பொருந்தாது.

உங்களது நிறுவனம் நிதி விதிகள், 2014-ன் ஆளுமைக்குட்பட்டது. எனவே, உங்களது நிறுவனம், அந்த நிதி விதிகள் வைப்புத் தொகைகள் பெற்றுக்கொள்கின்றன.

உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே பெறப்பட்ட வைப்புகள் : **ரூ.4,71,748.99 இலட்சங்கள்** நிலுவையில் உள்ளது.

ஆண்டு இறுதியன்று பட்டுவாடா செய்யப்படாத மற்றும் உரிமை கோரப்படாத வைப்புகள் : **ரூ.152.67 இலட்சங்கள்.**

அசலைத் திருப்பி கொடுப்பதில் அல்லது வட்டியைக் கொடுப்பதில் தவறல் : ஏதுமில்லை.

இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புகளின் 31.03.2025 அன்று நிலுவை **ரூ.150.81 இலட்சங்கள்.** (பார்க்க : குறிப்பு 37)

**25. ஒழுங்குமுறை அதிகாரிகள், தீர்ப்பாயங்கள் அல்லது நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மற்றும் பொருட்படுத்தத்தக்க உத்தரவுகள்:**

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், நிறுவனத்தின் எதிர்கால செயல்பாடுகள் மற்றும் நடப்பு நிலையை பாதிக்கும் குறிப்பிடத்தக்க மற்றும் பொருட்படுத்தத்தக்க உத்தரவுகள் எதுவும் எந்தவொரு ஒழுங்குமுறை அதிகாரிகள், தீர்ப்பாயங்கள் அல்லது நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்படவில்லை.

**26. உள் நிதி கட்டுப்பாடு அமைப்புகள் மற்றும் அவைகளின் போதுமான தன்மை: (Internal Financial Controls and their adequacy)**

உங்கள் நிறுவனம் அதன் செயல்பாடுகளின் அளவு மற்றும் தன்மைக்கு ஏற்ப போதுமான உள் நிதி கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. அனைத்து முக்கிய அம்சங்களிலும், நிதி அறிக்கையிடலில் போதுமான உள் கட்டுப்பாட்டு அமைப்புகளைக் கொண்டுள்ளது. மேலும் இந்தக் கட்டுப்பாடுகள் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால், (ICAI) வெளியிடப்பட்ட நிதி அறிக்கையிடல் மீதான உள் நிதிக் கட்டுப்பாடுகளின் தணிக்கைக்கான வழிகாட்டுதல் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள் கட்டுப்பாட்டின் அத்தியாவசிய கூறுகளைக் கணக்கில் கொள்ளும் முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. நிதி அறிக்கையிடல் மீதான இத்தகைய உள் நிதிக் கட்டுப்பாடுகள் நிதியாண்டின் இறுதியில் திறம்பட செயல்பட்டு வந்தன.

இந்த உள் நிதிக்கட்டுபாடு மற்றும் இடர் மேலாண்மையை கையாள்வதால் நமது நிதி நிறுவனத்தின் வணிக நடவடிக்கை பொதுப்படையாகவும் அனைவராலும் எளிதில் அறியப்படும் வகையிலும் இருக்கின்றது. இத்தகைய உள் நிதிகட்டுப்பாட்டினால் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் மதிப்பு பாதுகாக்கப்படுகிறது. இதனால் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளில் ஏற்படும் மோசடி / தவறுகள் தடுக்கப்பட்டு அல்லது கண்டுபிடிக்கப்பட்டு கணக்கு தொடர்பான ஆவணங்கள் சரியான முறையில் பின்பற்றப்பட்டு நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் குறித்த நேரத்தில் நம்பிக்கைக்குரிய வகையில் சரியாக மற்றும் முழுமையாக தயார் செய்யப்படுகின்றன. உள்கட்டுப்பாடுகளை சிறந்த முறைகளில் செயல்படுத்தும் வகையில் உங்களது நிறுவனத்தின் தணிக்கைப்பிரிவு அவ்வப்போது முன்னேற்றங்களை பரிந்துரை செய்கிறது. மேலும், உள்துறை தணிக்கையை வலுப்படுத்த தணிக்கைத்துறையில் தகுதி பெற்ற பட்டயக் கணக்காளர்களை கொண்டு உள்துறை தணிக்கைகள் நடத்தப்படுகின்றன. தணிக்கைக்குழு சரியான நேரங்களில் கூடி தணிக்கைக்குறிப்புகளை பரிசீலனை செய்வதுடன் உள்துறை தணிக்கையின் போதுமான அளவு செயல்திறனை முடிவு செய்கிறது.

**27. அடக்கவிலைப் பதிவுகளைப் பராமரித்தல் : (Maintenance of Cost Records)**

நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 148(1)-ன் கீழ் உங்கள் நிறுவனத்திற்கான எந்த அடக்கவிலைப் பதிவுகளையும் பராமரிக்க வேண்டும் என்பது மத்திய அரசால் குறிப்பிடப்படவில்லை.

**28. பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தலைத் தடுத்தல் (Prevention of Sexual Harassment at Work Places)**

பாலியல் துன்புறுத்தல் தொடர்பாகப் பெறப்படும் புகார்களைத் தீர்க்க உங்கள் நிறுவனம் ஒரு உள் குழுவை முறையாக அமைத்துள்ளதன் மூலம் அது தொடர்பான கூறுகளுக்கு இணங்க நடந்துள்ளது. மேலும், பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம்,

2013-ன் தேவைகளுக்கு ஏற்ப, பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான ஒரு கொள்கையை அது கொண்டுள்ளது. அனைத்து ஊழியர்களும் (நிரந்தர, ஒப்பந்த, தற்காலிக, பயிற்சி பெறுபவர்கள்) இந்தக் கொள்கையின் கீழ் உள்ளனர். நிதியாண்டில் எந்தப் புகாரும் பெறப்படவில்லை. மார்ச் 31, 2025 எதுவும் தீர்க்கப்படாமல் நிலுவையில் இல்லை. மேலும் 90 நாட்கள் கடந்த எந்தப் புகாரும் நிலுவையாய் இல்லை. மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் ஒரு கூட்டம் நடந்துள்ளது.

### 29. நொடிப்பு மற்றும் திவால் நிலை குறியீடு, 2016 (Insolvency and Bankruptcy Code, 2016)

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், நொடிப்பு மற்றும் திவால் நிலை குறியீடு, 2016-ன் கீழ் எந்த விண்ணப்பமும் செய்யப்படவில்லை அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மார்ச் 31, 2025 அன்று எதுவும் நிலுவையில் இல்லை.

### 30. வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் மற்றும் அதற்கான தீர்வு (Loans from bank or financial institutions and settlement thereof)

மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், உங்கள் நிறுவனம், எந்த வங்கி / நிதி நிறுவனங்களிடமிருந்தும், எந்த கடனையும் பெறவில்லை. ஒரு முறை தீர்வு மற்றும் / அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு எதுவும் இல்லை.

### 31. ஊதி அழைத்து உட்குறை உரைப்போர் கொள்கை மற்றும் விழிப்புணர்வு வெளிப்படுத்தல் இயங்கமைவு (Whistle Blower Policy / Vigil Mechanism)

உங்கள் நிறுவனம் அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் நெறிமுறை நடத்தைகளை ஊக்குவிக்கிறது உங்கள் நிறுவனம் விழிப்புணர்வு வெளிப்படுத்தல் இயங்கமைவு மற்றும் ஊதி அழைத்து உட்குறை உரைப்போர் (இடித்துரைப்பாளர்கள்) கொள்கையைக் கொண்டுள்ளது. இதன் கீழ், ஊழியர்கள் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றும் நடத்தை விதிகள் மீறல்களைப் புகாரளிக்க சுதந்திரமாக உள்ளனர். இந்தக் கொள்கை நிறுவனத்தின் சட்டவிரோத அல்லது நெறிமுறையற்ற நடத்தையைப் புகாரளிக்க உதவுகிறது. இந்தக் கொள்கை இணைய இணைப்பில் https://www.kmbf.co/whistle-blower-policy.html. கொடுக்கப்பட்டுள்ளது. மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் எந்தவித புகாரும் வரவில்லை. மேலும், எந்தப் புகாரும் நிலுவையில் இல்லை.

### 32. கூட்டங்கள் தொடர்பான செயலக தர நிலைகள் (Secretarial Standards on meetings)

உங்கள் நிறுவனம், இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனத்தால் (ICSI) வெளியிடப்பட்ட இயக்குநரவை கூட்டங்கள் மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டம் தொடர்பான செயலக தரநிலைகள் 1 மற்றும் 2-ஐ முறையாகப் பின்பற்றியுள்ளது.

### 33. மேலாண் பணியாளர்களுக்கான ஊதியம் (Remuneration of Managerial Personnel)

நிறுவனங்கள் (நியமனம் மற்றும் மேலாண்மை பணியாளர்கள் ஊதியக்குழு) விதிகள் 2014 விதி 5 (2)-ன்படி உங்களது நிதி நிறுவனத்தில் எந்த ஒரு பணியாளர்களும் தங்களுக்கு விதிக்கப்பட்ட ஊதிய வரன்முறைக்கு அதிகமாக ஊதியம் பெறவில்லை. மேற்படி விதிகளின் விதி 5 (3)-ன்படி உங்களது நிதி நிறுவனத்தில் ஊழியருக்கு 31 மார்ச், 2025 வரை வழங்கப்பட்ட ஊதிய விபரங்கள் கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | ஊழியரின் பெயர் மற்றும் பணி எண் திரு. | பதவி | ஊதியம் * (லட்சங்களில்) | பணியில் சேர்ந்த தேதி பணியின் தன்மை | கல்வி தகுதி & அனுபவம் | வயது | முந்தைய பணியின் விபரம் மற்றும் பதவி | வைத்துள்ள பங்குகள் சதவீதம் | இயக்குநர் களுடனான தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | S.வெங்கடேசன் 649 | பொது மேலாளர் | 21.60 | 17.08.1994 நிரந்தரம் | B.Sc., 31 வருடம் | 54 | இல்லை | 0.005% | இல்லை |
| 2 | S.சண்முகம் 592 | பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி | 21.52 | 02.02.1994 நிரந்தரம் | M.Com., M.B.A., 31 வருடம் | 54 | இல்லை | 0.005% | இல்லை |
| 3 | P.கருணாநிதி 546 | துணை பொது மேலாளர் | 19.96 | 01.06.1993 நிரந்தரம் | B.Com., 32 வருடம் | 56 | இல்லை | 0.005% | இல்லை |
| 4 | V.கணேசன் 654 | மேலாளர் (கணினி) | 19.47 | 03.11.1994 நிரந்தரம் | M.Sc., 30 வருடம் | 55 | இல்லை | 0.000% | இல்லை |
| 5 | V.ஸ்ரீதர் 198 | கிளை மேலாளர் | 18.32 | 10.10.1988 நிரந்தரம் | B.Com., 36 வருடம் | 58 | இல்லை | 0.008% | இல்லை |
| 6 | G.சுதர்சன் 409 | முதுநிலை மேலாளர் | 17.64 | 22.06.1992 நிரந்தரம் | B.Com., 33 வருடம் | 56 | இல்லை | 0.005% | இல்லை |
| 7 | K.வெங்கடரமணன் 202 | கிளை மேலாளர் | 17.15 | 17.10.1988 நிரந்தரம் | B.A., 36 வருடம் | 58 | இல்லை | 0.008% | இல்லை |
| 8 | R.சுந்தர் 240 | கிளை மேலாளர் | 17.15 | 18.10.1989 நிரந்தரம் | B.Com., 36 வருடம் | 58 | இல்லை | 0.007% | இல்லை |
| 9 | D.செந்தில்குமார் 263 | கிளை மேலாளர் | 17.02 | 05.10.1988 நிரந்தரம் | B.Com., 36 வருடம் | 58 | இல்லை | 0.006% | இல்லை |
| 10 | S.முருகேசன் 323 | உதவி பொது மேலாளர் | 16.75 | 02.05.1991 நிரந்தரம் | B.A., 34 வருடம் | 57 | இல்லை | 0.005% | இல்லை |

* மேற்கூறிய ஊதிய விபரங்கள், வருமானவரிச்சட்டம் 1961-ன்படி சம்பளம் மற்றும் இதர பலன்களை உள்ளடக்கியதாகும்.

**34. வளர்ச்சிப் பாதை: (Growth Path)**

உங்களது நிறுவனத்தின் இந்த ஆண்டு அறிக்கை மற்றும் முந்தைய ஆண்டறிக்கைகளையும் மேலோட்டமாக பார்த்தால் உங்கள் நிறுவன வணிகத்தின் ஒவ்வொரு முக்கிய அம்சத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தெளிவாக தெரியும். முன்னேற்றம் நியாயமாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருப்பதால் ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை உருவாக்குகிறது.

**35. நன்றி:** (Acknowledgements)

இந்த நேரத்தில், உங்களது நிறுவனம் இந்த அளவிலான செயல்திறனை அடைவதற்கு முக்கிய பங்காற்றிய அனைவருக்கும் அதாவது பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம், பிராந்திய இயக்குநர், நிறுவனப் பதிவாளர், சென்னை, வருமான வரித் துறை, சரக்கு மற்றும் சேவை வரித் துறை, தமிழ்நாடு அரசு, வங்கியாளர்கள், நிதிகளின் வர்த்தக சபை, காப்பீட்டு நிறுவனங்கள் நன்றி தெரிவிக்க உங்கள் இயக்குநரவை இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறது. தங்கள் நிறுவனத்தின் அனைத்து முயற்சிகளிலும், அவர்களின் தடையற்ற ஆதரவு மற்றும் ஊக்கத்திற்காக, பங்குதாரர்கள், அதாவது வைப்புதாரர்கள் மற்றும் கடன்தாரர்களுக்கு இயக்குநரவை முழு மனதுடன் நன்றி தெரிவிக்கிறது மற்றும் பாராட்டுகிறது.

கடைசியாக ஆனால் முக்கியமாக, வணிகத்தின் அனைத்து நிலைகளிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய உங்கள் நிறுவனத்தின் ஒவ்வொரு ஊழியருக்கும் இயக்குநரவை முழு மனதுடன் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்-ன்
இயக்குநரவைக்காகவும் மற்றும் அதன் சார்பாகவும்,
**S.கல்யாணசுந்தரம்** MP
(DIN : 00829647)
**தலைவர்**

இடம் : கும்பகோணம்
நாள் : 26-08-2025

**இயக்குநர் அவை அறிக்கையின் இணைப்பு: A**

**செயலக தணிக்கை அறிக்கை - படிவம் எண். MR – 3**

**நிறைவடைந்த ஆண்டு 31, மார்ச் 2025**

[நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 204 (1) மற்றும் நிறுவனங்கள் (நியமனம் மற்றும் நிர்வாகப் பணியாளர் ஊதியம்) விதிகள், 2014-ன் விதி எண் 9-ன்படி]

பெறுநர்
உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001.

நாங்கள் பொருத்தமான சட்ட விதிமுறைகளுக்கு இசைந்து நடத்தல் மற்றும் நல்ல நிறுவன ஆளுமைகளைக் கடைபிடித்தல் போன்றவற்றில் **"கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்"** (இதன் பிறகு நிதி என்று அழைக்கப்படும்) செயலக தணிக்கையை மேற்கொண்டோம்.

நிறுவன நடவடிக்கைகள் / சட்ட விதிமுறைகளுக்கு இணங்கியிருத்தல் ஆகியவற்றை மதிப்பீடு செய்து, அவைகளின்மேல் எங்களது கருத்துக்களை தெரிவித்தல் போன்றவற்றிற்கு எங்களுக்கு ஒரு நியாயமான அடிப்படை வழங்கும் என்ற முறையில் செயலகத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

செயலகத் தணிக்கை ஆய்வின்போது நிதி நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டுவரும் புத்தகங்கள், குறிப்புகள், நிகழ்ச்சிப் பதிவேடுகள், படிவங்கள், ஆவணங்கள் மற்றும் இதர பதிவுகள் ஆகியவற்றை சரிபார்த்ததன் அடிப்படையிலும், மற்றும் நிதி அதன் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையிலும், நாங்கள் அளிக்கும் அறிக்கை:

நிதியாண்டு 31, மார்ச், 2025 அன்று நிறைவடைந்த தணிக்கைக் காலத்தில், நிதி, சட்டப்படியான விதிமுறைகளின் கீழ் பட்டியலிடப்பட்ட கூறுகளை கடைபிடித்தது. மேலும், நிதியானது சரியான இயக்குநரவை செயல்பாடுகள் மற்றும் சட்டரீதியானவைகளை கடைபிடிக்கும் நெறிமுறைகள், கீழே கொடுக்கப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் அறிக்கைக்குட்பட்டு நடைமுறையில் உள்ளன.

நிறைவடைந்த நிதியாண்டான 31, மார்ச், 2025-ல் கீழ்க்கண்ட சட்டங்களின்படி நிதியால் பராமரிக்கப்பட்டு வரும் நிதியின் புத்தகங்கள், குறிப்புகள், நிகழ்ச்சி பதிவேடுகள், படிவங்கள், ஆவணங்கள் மற்றும் இதர பதிவுகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தோம்.

1. நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்) மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள்
2. நிதி விதிகள், 2014

இதைத் தவிர, வேறு குறிப்பிட்ட சட்டங்கள் நிதி நிறுவனத்திற்கு பொருந்தாது. மேலும், நிதியின் தணிக்கைக் காலத்தில், இந்திய நிறுவன செயலாளர்கள் நிறுவனம் (ICSI) வெளியிட்டுள்ள செயலக தர நிலைகளுக்கு இணைங்கியிருத்தலையும் பரிசீலனை செய்தோம். மதிப்பாய்வுக்குட்பட்ட காலத்தில் நிதி மேற்கூறப்பட்ட சட்டம், விதிகள் போன்றவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கடைபிடித்துள்ளது.

இந்தத் தணிக்கையில் நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 124(6) அதனுடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் IEPF (கணக்கியல், தணிக்கையியல் பங்குகள் மாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) விதிகள் 2016-ன்படி நிதியின் உரிமை கோரப்படாத பங்குகளை, IEPF-க்கு மாற்றம் செய்வது தொடர்பாக நிறுவனத்தின் நிர்வாகம் அளித்த தகவல் என்னவென்றால் அவ்வாறு மாற்றம் செய்வதிலிருந்து, விலக்குகோரி KMBF நிதி மற்றும் நிதிகளின் வர்த்தக சபை பெருநிறுவன விவகாரங்கள்துறை அமைச்சகத்திடம் அனுமதி கோரியுள்ளனர். இந்த கோரிக்கையானது இன்னும் அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது. இதனால், நிதியானது மேற்கூறிய சட்ட விதிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

மேலும், நிதியின் இயக்குநரவை குழுவானது முற்றிலும் சரியான முறையில், தகுதி வாய்ந்த நிர்வாக இயக்குநர்கள், நிர்வாக இயக்குநர் அல்லாத இயக்குநர்கள், பெண் இயக்குநர் மற்றும் சுயாதீன இயக்குநர்கள் ஆகியோர்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது என சான்றளிக்கிறோம். நிறுவனங்கள் சட்டம், 149(1) இரண்டாவது நிபந்தனையின்படியும் நிறுவனங்கள் (இயக்குநர்கள் நியமனம் மற்றும் தகுதி), விதிகள் 2014-ன் விதி 3-ன் படியும் கடந்த 08.11.2021 முதல் பெண் இயக்குநர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதால் பெண் இயக்குநர் இயக்குநரவையில் நியமிக்கப்பட வேண்டும் என்ற விதியும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் இயக்குநரவைக் கூட்டங்களுக்கு, கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்கள், விரிவான நிகழ்ச்சி குறிப்புகள் முறையாக குறைந்தபட்சம் கூட்டங்களுக்கு ஏழு நாட்களுக்கு முன்பாக அனைத்து இயக்குநர்களுக்கும், போதுமான அறிவிப்புகள் அனுப்பப்படுகின்றன. மேலும் நிகழ்ச்சி நிரல் சம்மந்தமாக தேவைப்படும் விபரங்களையும், தெளிவுரைகளையும் அதன் மூலம் பொருள் பொதிந்த பங்கேற்பு முறையும், கூட்டம் நடைபெறும் முன்னேயே பெறும் வழிமுறையும் நடைமுறையில் உள்ளது. எல்லா முடிவுகளும் இயக்குநரவையில் ஒருமித்த ஒப்புதலுடனேயே நிறைவேற்றப்படுகின்றன. மதிப்பாய்வுக்குட்பட்ட காலத்தில் ஏதாவது உறுப்பினர் சம்மதியாமை வாக்கு அளித்தார் என்ற நிகழ்வு இல்லை.

பணியாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம், பணியாளர் மாநில காப்பீடு சட்டம், இதர பணியாளர் நலச் சட்டங்கள் மற்றும் இதர மாநிலச் சட்டங்கள் போன்ற பொருந்தக்கூடிய பொதுவான சட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொதுவான சட்டங்களுக்கு இணங்க செயல்படுகிறது என்பதை உறுதிப்படுத்த நிதியால் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் செயல் போன்றவற்றை பரிசீலனை செய்தோம்.

மேலும், நிதியின் அளவு மற்றும் செயல்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை கண்காணிக்கவும் அவை கடைபிடிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும் போதுமான வழிமுறைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளன என்பதை அறிவிக்கிறோம்.

மேலும் நடப்பு செயலகத் தணிக்கை காலத்தில், கீழ்கண்ட செயல்பாடுகள் நடைபெறவில்லை என அறிக்கை அளிக்கின்றோம்.

I. பொது / உரிமை / முன்னுரிமை பங்குகள் / கடனீட்டு பத்திரங்கள் / பணியாளர் பங்குகள் வெளியீடு

II. பங்குகள் மீட்பு / பங்குகளை திரும்ப பெறுதல்,

III. நிறுவனங்களை இணைத்தல் / ஒருங்கிணைத்தல் / மாற்றியமைத்தல் போன்றவைகள்,

IV. வெளிநாட்டு தொழில்நுட்ப கூட்டுப்பணிகள்.

இருப்பினும் நாங்கள் அளிக்கும் அறிக்கையானது.

1) சில சூழ்நிலைகளில், நிறுவனத்திற்கு பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி, சட்டப்படியான படிவங்கள், MCA-ல் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டும் மற்றும் தாக்கல் செய்யப்படாமலும் இருந்தன.

2) மதிப்பாய்வுக்குட்பட்ட காலத்தில் பங்குகள் ஒதுக்கீடு, பங்குகள் ஒதுக்கீட்டு குழுவால் ஒப்புதல் கொடுக்கப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. நிறுவனம் பங்குகள் ஒதுக்கீட்டை இயக்குநரவை மூலம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

3) நிறுவனம், நிறுவனங்கள் பதிவாளர் முன் 08.11.2021-க்கு முன்னர் பெண் இயக்குநர் நியமனம் செய்யப்படாதது சம்பந்தமாகவும் மற்றும் அதை சரி செய்தது சம்பந்தமாகவும் பிரிவு 149(1)-க்கு இணங்கவும் ஒரு தீர்வு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது என்றும் தீர்வு உத்தரவு நிறுவனத்தால் இன்னும் பெறப்படவில்லை.

4) 2023-24-ல் நிறுவனங்கள் பதிவாளர் ஒரு ஆய்வு மற்றும் விசாரணை நடத்தியுள்ளார். அது அவரிடம் நிலுவையிலுள்ளது.

5) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள்படியும் மற்றும் சென்ற ஆண்டு தெரிவிக்கப்பட்டதன் படியும் மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் IP 11/2019 நிலுவையில் உள்ளது. அது தொடர்பாக சென்னை, அசோக் நகர் பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்தில் FIR எண் 151/2019 நிலுவையில் உள்ளது. மெட்ராஸ் உயர்நீதிமன்றம் "The Official Assignee"க்கு ரூ.16.50 கோடிக்கு வங்கி உத்தரவாதம் அளிக்க உத்தரவிட்டிருந்தது. அது நிறைவேற்றப்பட்டுவிட்டது.

**R&RJ** அசோசியேட்டிற்காக

நிறுவன செயலாளர்

CS.**K.R.**ஜெகநாதன்
பங்குதாரர்
Membership No.39636
Certificate of Practice No. 14698
UDIN : A039636G001105514
(F.R No. PZ019TN074000)

CS.**S.**ராஜபாண்டியன்
பங்குதாரர்
Membership No.44502
Certificate of Practice No. 20953
UDIN : A044502G001105914

இடம் : கும்பகோணம்
நாள் : 26-08-2025

**இணைப்பு: A**

பெறுநர்
உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001.

சமதேதியிட்ட எங்களது அறிக்கை, இந்த துணை சான்றுரையும் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்.

1) செயலக பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டியது நிறுவனத்தின் நிர்வாகத்தின் பொறுப்பாகும். செயலக பதிவேடுகளை நாங்கள் தணிக்கை செய்ததன் அடிப்படையில், அவைகளைப் பற்றி கருத்து தெரிவிப்பதே எங்களது பொறுப்பாகும்.

2) செயலகப் பதிவேடுகளின் உள்ளடக்கங்கள் சரியான முறையில் உள்ளன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள நாங்கள் உரிய நடைமுறைகளையும், செயல்முறைகளையும் பின்பற்றினோம். செயலக பதிவேடுகளில் சரியான உண்மைகள்தான் பிரதிபலிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்ய சரிபார்ப்புகள் சோதனை மேற்கொள்ளப்பட்டன. நியாயமான அடிப்படையிலும் எங்களது கருத்துக்களைத் தெரிவிக்க நிறுவனம் மேற்கொண்ட செயல்முறைகளும், நடைமுறைகளும் ஏதுவாக இருந்தன என நம்புகிறோம்.

3) நிதியின் நிதிப் பதிவேடுகள் மற்றும் கணக்கு புத்தகங்கள் இவைகளின் சரியான நிலை மற்றும் பொருத்தமான நிலைகளை நாங்கள் சரிபார்க்கவில்லை.

4) தேவைப்படும் இடங்களில் சட்டங்கள், விதிகள், ஒழுங்கு முறைகள் ஆகியவற்றிற்கு இணங்குதல் மற்றும் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் நிர்வாகத்தின் விளக்கம் பெற்றுள்ளோம்.

5) பெரு நிறுவன மற்றும் மற்ற பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் தரநிலைகள் ஆகியவற்றிற்கு இணங்கி நடத்தல் என்பது நிர்வாகத்தின் பொறுப்பாகும். எங்களது பரிசீலனை சோதனை அடிப்படையில் நடைமுறைகளை சரிபார்த்தல் என்ற வரையரைக்குள் கட்டுப்படுத்தப்பட்டது.

6) இந்த செயலக தணிக்கை அறிக்கை நிறுவனத்தின் எதிர்கால நடைமுறை சாத்தியத் தன்மைகளையோ அல்லது செயல்திறன்மிக்க வகையில் நிர்வாகம் செயல்பாடுகளை நடத்தி வந்தது என்பதை உறுதிப்படுத்தும் அறிக்கை கிடையாது.

**R&RJ** அசோசியேட்டிற்காக

நிறுவன செயலாளர்

CS.**K.R.**ஜெகநாதன்
பங்குதாரர்
Membership No.39636
Certificate of Practice No. 14698
UDIN : A039636G001105514
(F.R No. PZ019TN074000)

CS.**S.**ராஜபாண்டியன்
பங்குதாரர்
Membership No.44502
Certificate of Practice No. 20953
UDIN : A044502G001105914

இடம் : கும்பகோணம்
நாள் : 26-08-2025

**இணைப்பு: II**

**இயக்குநர் அவை அறிக்கை**

**நிதியாண்டு 2024-25 ஆண்டிற்கான பெரு நிறுவன சமூக பொறுப்பு நடவடிக்கைகள் குறித்த வருடாந்திர அறிக்கை**

**1. பெரு நிறுவன சமூக பொறுப்புணர்வு குறித்த விளக்க உரை**

நிதி நிறுவனத்தின் பெரு நிறுவன சமூக பொறுப்பு கொள்கை என்பது சமூகத்தில் நடைமுறையில் உள்ள விதியாகும். இதனால் சமூகத்தின் பொருளாதார உயர்நிலை, சுற்றுச்சூழல் நிலை தன்மையை சாதித்தல் போன்றவையோடு, சமூகத்தில் உள்ள குடிமகன் பொறுப்புள்ள மனிதனாக கருதப்படுகிறான். அதற்கு இணங்க நிதியாண்டு 2024-25-ல் நிதி நிறுவனம் பெருமளவு விலங்குகள் நல வாரியம், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம், கல்வி நிலை உயர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்களின் முன்னேற்றம், நாட்டின் உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் நீர்நிலை ஆதாரங்களை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. நிறுவனச்சட்டம் 2013 அட்டவணை-VII-ன்படி நிறுவனத்தின் சமூக பொறுப்பு நடவடிக்கைகள் குறித்த திட்டங்கள் மற்றும் திட்ட அமைப்புகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த விபரங்கள் நிதியின் வலைதள இணைப்புகளான https://kmbf.co/csr-policy.html, https://kmbf.co/assets/pdfs/csr-activities-2022-23.pdf-களில் வெளியிடப்பட்டுள்ளன.

**2. நிறுவன சமூக பொறுப்புணர்வு குழுவின் அமைப்புகள்**

| வ. எண் | இயக்குநர்களின் பெயர் | பதவி / பதவியின் தன்மை 01-04-2024 முதல் 31-03-2025 வரை | DIN | CSR குழுவின் கூட்ட எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | 01-04-2024 முதல் 31-03-2025 வரை நடைபெற்ற கூட்டங்கள் | பங்கேற்பு |
| 1 | திரு.S.கல்யாணசுந்தரம் | தலைவர் | 00829647 | 2 | 2 |
| 2 | திரு.S.இராமலிங்கம் | துணை தலைவர் | 00829529 | 2 | 2 |
| 3 | திரு.PR.P.வேலப்பன் | மேலாண் இயக்குநர் | 01892661 | 2 | 2 |
| 4 | திரு.G.அன்பழகன் | இயக்குநர் | 01469646 | 2 | 2 |
| 5 | திரு.M.குரு பிரசாந்த் | இயக்குநர் | 09359770 | 2 | 2 |

| | | |
|---|---|---|
| 3 | பெரு நிறுவன சமூக பொறுப்புக் கொள்கைக் குழு பற்றிய விபரங்கள், அதன் கொள்கைகள், அதன் செயல்பாடுகள் இயக்குநரவையால் அனுமதிக்கப்பட்ட சமூக பொறுப்பு செயல் திட்டங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ள நிறுவன வலைதள முகவரி | https://kmbf.co/csr-policy.html https://kmbf.co/assets/pdfs/csr-activities-2022-23.pdf |
| 4 | நிறுவனங்கள் (பெரு நிறுவன சமூக பொறுப்பு கொள்கைகள்) விதிகள், 2014 பிரிவு 8-ன்படி கூறப்பட்டுள்ள விதிமுறைகள் நிறுவன சமூக பொறுப்பு நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா | பொருந்தாது |
| 5 | நிறுவனங்கள் (பெரு நிறுவன சமூக பொறுப்பு கொள்கைகள்) விதிகள் 2014 விதி 7 உட்பிரிவு 3-ன்படி நிதி ஆண்டுகளில் தீர்க்கப்படாத அல்லது கொடுக்கப்பட வேண்டிய சமூக பொறுப்பு திட்டங்களுக்கான தொகை உள்ளனவா | இல்லை |
| 6 | பிரிவு 135 (5)-ன்படி நிதி நிறுவனத்தின் நிகர லாபம் | ரூ. 9495.85 லட்சம் |
| 7 | a) பிரிவு 135 (5)-ன்படி நிதி நிறுவனத்தின் நிகர லாபத்திலிருந்து 2% | ரூ. 189.92 லட்சம் |
| | b) முந்தைய நிதி ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட சமூக பொறுப்பு திட்டங்களில் ஏதேனும் உபரி உள்ளதா | இல்லை |

| | | |
|---|---|---|
| | c) முந்தைய நிதி ஆண்டுகளின் சமூக பொறுப்பு திட்டங்களில் கொடுபட வேண்டிய நிலுவைத்தொகை ஏதேனும் உள்ளதா | இல்லை |
| | d) நடப்பு நிதியாண்டின் சமூக பொறுப்பு கொள்கை திட்டங்களுக்கான மொத்த தொகை (7a+7b-7c) | ரூ.189.92 லட்சம் |
| 8 | பெரு நிறுவன சமூக பொறுப்பு கொள்கைக்காக செலவு செய்யப்பட்ட தொகை விவரங்கள் | |
| | a) இந்த திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட தொகை | ரூ.191.94 லட்சம் |
| | b) எதிர்கால சமூக நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் விபரம் | இல்லை |

c. நடப்பு நிதியாண்டில் செலவு செய்யப்பட்ட எதிர்கால சமூக நடவடிக்கைகள் அல்லாத தொகையின் விபரங்கள்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | அடையாளம் காணப்பட்ட CSR திட்டங்கள் அல்லது செயல்பாடுகள் | அட்டவணை VII-ல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளிலிருந்து | உள்ளூர் ஆம்/ இல்லை | திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட இடங்கள் | திட்டங்களுக் காக செலவு செய்யப்பட்ட தொகைகள் ரூ. | நேரடியாக நடைமுறைப் படுத்தப்பட்டதா ஆம்/இல்லை | செயல்படுத்தும் முகமைகள் மூலம் செயல்படுத்தப் பட்டதா |
| 1 | உள்ளூர் நிர்வாகம் | வறுமை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 9,51,687 | ஆம் | இல்லை |
| 2 | உள்ளூர் நிர்வாகம் | சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஊக்குவித்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 27,48,000 | ஆம் | இல்லை |
| 3 | உள்ளூர் நிர்வாகம் | கல்வி தகுதியை / சுகாதாரத்தை ஊக்குவித்தல் | ஆம் | தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை தமிழ்நாடு | 19,90,000 | ஆம் | இல்லை |
| 4 | உள்ளூர் நிர்வாகம் | பின்தங்கிய பகுதிகளில் விளையாட்டு தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 21,10,000 | ஆம் | இல்லை |
| 5 | உள்ளூர் நிர்வாகம் | கல்வி சேவையை ஊக்குவித்தல் / வகுப்பறைகளை புனரமைத்தல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 19,89,000 | ஆம் | இல்லை |
| 6 | உள்ளூர் நிர்வாகம் | சுகாதாரத்தை மேம்படுத்துதல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | 34,86,336 | ஆம் | இல்லை |
| 7 | உள்ளூர் நிர்வாகம் | சுகாதாரமான குடிநீர் வழங்குவதை உருவாக்குதல் | ஆம் | தஞ்சாவூர் தமிழ்நாடு | - | ஆம் | இல்லை |
| 8 | உள்ளூர் நிர்வாகம் | கல்வியை ஊக்குவித்தல் வழங்குவதை உருவாக்குதல் | ஆம் | திண்டுக்கல் தமிழ்நாடு | 59,19,214 | ஆம் | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| | (d) இந்த திட்டத்தில் நிர்வாக செலவுகளுக்காக செலவு செய்யப்பட்ட தொகை | | - |
| | (e) தாக்க மதிப்பீட்டிற்காக செலவிடப்பட்ட தொகை, பொருத்தமாயிருந்தால் | | - |
| | (f) இந்த நிதியாண்டில் செலவு செய்யப்பட்ட மொத்த தொகை (8b+8c+8d+8e) | | ரூ.191.94 லட்சம் |
| | (g) எதிரிடலுக்கான(Set off) கூடுதல் தொகை ஏதேனும் இருந்தால் | | |
| வ.எண் | விபரங்கள் | தொகை | |
| i. | பிரிவு 135 (5)-ன்படி நிதி நிறுவனத்தின் நிகர லாபத்திலிருந்து 2% | ரூ.189.92 லட்சம் | |
| ii. | நடப்பு நிதியாண்டில் செலவு செய்யப்பட்ட மொத்த தொகை | ரூ.191.94 லட்சம் | |
| iii. | நடப்பு நிதியாண்டில் கூடுதலாக செலவு செய்யப்பட்ட தொகை (ii-iii) | ரூ.2.02 லட்சம் | |

| | வ.எண் | விபரங்கள் | தொகை | |
|---|---|---|---|---|
| | iv. | முந்தைய நிதி ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சமூக பொறுப்பு கொள்கை திட்டங்கள் செயல்பாடுகளின் மூலம் கூடுதல் தொகை ஏதேனும் உள்ளதா | ரூ.9.44 லட்சம் | |
| | v. | எதிர்வரும் நிதியாண்டின் சமூகபொறுப்பு கொள்கை திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை | ரூ.11.46 லட்சம் | |

| | | |
|---|---|---|
| 9 | (a) முந்தைய மூன்று நிதியாண்டுகளில் சமூக பொறுப்பு கொள்கைத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் செலவழிக்கப்படாத தொகையின் விபரங்கள் | இல்லை |
| | (b) நடப்பு நிதியாண்டில் முந்தைய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட சமூக பொறுப்புக் கொள்கைத் திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட தொகையின் விபரங்கள். சொத்து உருவாக்கப்பட்டிருந்தால் அல்லது கையகப்படுத்தியிருந்தால் | இல்லை |
| 10 | சொத்து உருவாக்கப்பட்டிருந்தால் அல்லது கையகப்படுத்தியிருந்தால் சமூக பொறுப்பு கொள்கைத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மூலதன சொத்துக்கள் உருவாக்கப்பட்டது அல்லது வாங்கப்பட்டனவா. நடப்பு நிதியாண்டில் CSR மூலம் உருவாக்கப்பட்ட அல்லது கையகப்படுத்தப்பட்ட சொத்து பற்றிய விபரங்கள் | பொருந்தாது |

ஒ-ம். xxxxxxx
**PR.P.வேலப்பன்**
(DIN : 01892661)
மேலாண் இயக்குநர்

ஒ-ம். xxxxxxx
**S.கல்யாணசுந்தரம்** MP
(DIN : 00829647)
தலைவர்
பெரு நிறுவன சமுதாய பொறுப்புக் குழு

இடம் : கும்பகோணம்
நாள் : 26.08.2025

# தணிக்கையாளர் சான்றிதழ்

அனுப்புநர்

சண்முகம் & அஸோசியேட்ஸ்
G.நடேசன் & கோ
சாஸ்த்ரி & ஷா
G.S.ஸ்ரீனிவாசன் & கோ
பட்டய கணக்காளர்கள்

பெறுநர்

உறுப்பினர்கள்,
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
கும்பகோணம்.

இதனால் நாங்கள் சான்றளிப்பது என்னவென்றால், கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட், கும்பகோணம் ("நிறுவனம்") நிறுவனத்தின் 31.03.2025 அன்று நிறைவடைந்த நிதியாண்டிற்கான கணக்குகளை நாங்கள் தணிக்கை செய்தோம். மற்றும் இந்த நிறுவனம் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் 31.03.2014 தேதியிட்ட அறிவிக்கை எண் G.S.R. 258(E) மற்றும் இதை தொடர்ந்து வரும் அறிவிக்கைகளைப் பின்பற்றி நடந்து வருகிறது மற்றும் அவைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகளில், எந்தவித பொருட்படுத்தத்தக்க விதி மீறல்களும் இல்லை. இந்த நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கேற்ப சரியான கணக்கேடுகளை பராமரித்துள்ளது.

நிறுவனம் நடப்பு நிதியாண்டில் 31.03.2014 தேதியிட்ட அறிவிக்கை எண்.G.S.R. 258(E), அவ்வப்போது அறிவிக்கும் மாற்றங்களின்படி வைப்புத் தொகைகளின் வளர்ச்சிக்கேற்ற நிகர சொந்த நிதி விகிதத்தை திருப்திகரமான வகையில் எட்டியுள்ளது.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்
FRN : 006655S
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQE4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீனிவாசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.012043S
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 26-08-2025

# சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கை

பெறுநர்

உறுப்பினர்கள்
கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்,
கும்பகோணம்.

**கருத்துரை**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 31.03.2025-ம் தேதியுடன் நிறைவடைந்த நிதியாண்டிற்கான கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் ("நிறுவனம்") நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள், இருப்பு நிலைக் குறிப்பு, இலாபம் மற்றும் நட்ட அறிக்கை, இதர (அனைத்தடக்க வருவாயையும் உள்ளடக்கி) மற்றும் பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் அப்போது முடிந்த அந்த ஆண்டின் பணப்புழக்க அறிக்கை, பொருட்படுத்தத்தக்க கணக்கியல் கோட்பாடுகளின் சுருக்கங்கள் மற்றும் மற்ற விளக்கங்கள் அடங்கிய தகவல்கள் இவைகள் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கைகளின் மீதான குறிப்புகள், ஆகியவற்றினை நாங்கள் தணிக்கை செய்தோம்.

எங்களின் கருத்துரைப்படியும், நாங்கள் நன்கு அறிந்த தகவல்களின் படியும், அளிக்கப்பட்ட விளக்கங்கள் படியும் மேற்கூறிய நிதிநிலை அறிக்கைகள், நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டத்தின்படி தேவைப்படும் முறையில் தேவையான தகவல்களைத் தருகின்றன. மற்றும் அவைகள் சட்டப் பிரிவு 133 மற்றும் அத்துடன் படிக்கப்பட்ட அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகளின்) விதிகள், 2015-ன் (Ind AS)-படி பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகளோடு ஒத்துப்போகும் மற்றும் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளுக்கு இணங்க 31.03.2025-ம் தேதியன்று உள்ள நிகழ்வுகளின் நிலை, மற்றும் இலாபம் மற்றும் மொத்த அனைத்தடக்க வருவாய், பங்கு மூலதனத்தில் மாற்றங்கள், பணப் புழக்கம் ஆகியவற்றின் உண்மையான மற்றும் நியாயமான நிலையை காண்பிக்கின்றன.

**எங்களது கருத்துரைக்கான அடிப்படை**

சட்டப்பிரிவு 143(10)-ன் கீழ் குறிப்பிடப்பட்ட தணிக்கையியல் தரவிதிகள் (SAs) அடிப்படையிலேயே எங்களது தணிக்கையை மேற்கொண்டோம். எங்களது அறிக்கையில் அந்த தரவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள எங்களது பொறுப்புக்கள், "நிதிநிலை அறிக்கைகள் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புக்கள்" என்ற பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் (ICAI) வெளியிட்டுள்ள மரபு நெறிபாடுகளின் படியும் அத்துடன் கூடிய நிதிநிலை அறிக்கைகளின் மீதான எங்களது தணிக்கைக்குத் தொடர்புடைய சட்டம் மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் படியும், நாங்கள் நிறுவனத்திற்கு எந்த வகையிலும் தொடர்பில்லாதவர்கள். மேலும், நாங்கள் இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் கூறியுள்ள நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றி இத்தணிக்கையை மேற்கொண்டுள்ளோம். நாங்கள் பெற்ற தணிக்கைக்கான முறையான சான்றுகள் நிதிநிலை அறிக்கைகளின் மீது எங்களது தணிக்கைக் கருத்துரை தெரிவிக்க போதுமானது மற்றும் பொருத்தமானது என்று நம்புகிறோம்.

**முக்கியமான தணிக்கை விடயங்கள்:**

முக்கியமான தணிக்கை விடயங்கள் என்பது எங்களுடைய தொழில் சார்ந்த மதிப்பீட்டில் எங்களது நிதிநிலை அறிக்கைகள் தணிக்கையில் அதிமுக்கியமான விடயங்கள் ஆகும்.

நிதிநிலை அறிக்கைகளை முழுமையாக தணிக்கை செய்வது தொடர்பாக மூன்று விடயங்கள் கையாளப்பட்டன. அவைகளின் மீது எங்களது கருத்தைத் தெரிவிக்கும்போது, இந்த விடயங்களின் மீது தனியான கருத்தைத் தெரிவிப்பதில்லை. கீழே விவரிக்கப்பட்டுள்ள விடயங்களை நாங்கள் முக்கியமான தணிக்கை விடயங்களாக எங்களது அறிக்கையில் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளோம்.

| முக்கிய தணிக்கை பொருள்கள் | எங்களது தணிக்கை, முக்கிய தணிக்கை பொருள்களை எவ்வாறு கையாண்டது. |
|---|---|
| **இருப்பு, மதிப்பீடு மற்றும் நகைக் கடன்களுக்கு எதிராக அடமானம் வைக்கப்பட்ட தங்கத்தை மீட்டெடுக்கும் திறன்**<br>நிறுவனத்தின் முக்கியமான தொழில் என்பது தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் கொடுத்தல் ஆகும்.<br>அறிக்கை தேதியன்று இந்தக் கடன்கள் நிறுவனத்தின் மொத்த சொத்துக்களில் முக்கியமான பகுதியாக இருக்கின்றன.<br>தணிக்கை தொடர்பான உள்ளார்ந்த இடர் கீழ்கண்டவைகளிலிருந்து எழுகிறது.<br>➢ பல கிளைகளில் உள்ள தங்கத்தின் இருப்பையும் அவைகளுடைய நிலையையும் உறுதி செய்யத்தேவை<br>➢ தங்கத்தின் விலைகளில் உள்ள சாத்தியமான நிலையற்றதன்மை பாதுகாப்பின் போதுமான நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் மற்றும் கடன் இழப்புக்கு ஒதுக்கீடு தேவைப்படலாம்.<br>ஒரே கடன்தாரர் பல கிளைகளில் / அடையாளங்களில் பல கடன்கள் பெறுவதால் மறு அடகு வைப்பதில் உள்ள இடர் | பொருத்தமான, நிதிநிலை அறிக்கைக்கு இணங்க எங்களது தணிக்கை நடவடிக்கைகளை பலவற்றிற்கு நடுவில், கீழ்க்கண்டவைகளை உள்ளடக்கியது.<br>பொருந்தக்கூடிய நிதி அறிக்கையின் கட்டுப்பாடுகளுக்கு இணங்க நடத்தல் உட்பட கடன்கள் மற்றும் பிணையங்களின் அளவீடு செய்வதற்கான நிறுவனத்தின் கணக்கியல் கொள்கைகளை புரிந்து கொள்ளுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>பிணைக்குட்பட்ட தங்கத்தைப் பெறுதல், மதிப்பீடு செய்தல், பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் அவ்வப்போது சரிபார்த்தல் தொடர்பான முக்கிய உள் கட்டுப்பாட்டு சம்பந்தமான வடிவமைப்பு மற்றும் செயல்படுத்துதல்.<br>அங்கொன்றும், இங்கொன்றுமாக நகைப்பைகளின் எண்ணிக்கை மற்றும் எடைகளை உள்ளடக்கிய உள் தணிக்கை அறிக்கைகளை மதிப்பாய்வு மற்றும் சுயாதீன மதிப்பீட்டாளர்கள் மறு மதிப்பீடுகளின் செயல்பாட்டு திறன்களை மதிப்பீடு செய்தல்.<br>இந்த வருடத்தில் 130 கிளைகளுக்கும் சென்று நேரடியாக ஆய்வு செய்தல் மற்றும் சிறு எண்ணிக்கைகளில் எடை பார்த்தல் மற்றும் எண்ணிக்கை சரி பார்த்தல். |
| கடனுக்கு மதிப்பீடு (LTV) விகிதம், ஒரு கடன்தாரருக்கு அதிகபட்சமாக ரூ.15 இலட்சங்களாக உயர்வரம்பு, வலுவான உள்கட்டுப்பாட்டு சூழல் நடுத்தரமான கடன் வழங்கல் கொள்கைகள், போன்றவைகளின் மூலம் நிர்வாகம் இவ்வகை இடர்களைக் குறைக்கிறது.<br>அவ்வப்போது அங்கொன்றும், இங்கொன்றுமாக தேர்ந்தெடுக்கும் நகைப்பைகளை உள் தணிக்கை சரிபார்த்தல்கள், மறு மதிப்பீடு செய்ய கிளைகளுக்குச் செல்லுதல். ஒரே நிரந்தர கணக்கு எண் அல்லது தொடர்பு விபரங்களுக்கு பல கணக்குகள் உள்ளதா என்று தகவல் மதிப்பீடு செய்தல்.<br>கனிசமான நகைக்கடன்கள், விலை நிரந்தரமற்ற தன்மை அதிக எண்ணிக்கையிலாக உள்ள கிளைகளில் கட்டுப்பாடுகளின் மேல் உள்ள நம்பகத்தன்மை இவைகளைக் கொண்டு, நாங்கள் இந்தப் பொருளை முக்கிய தணிக்கை விடயமாக அடையாளம் கண்டோம். | LTV கொள்கையையும், ஒரு கடன்தாரருக்கு ரூ.15 இலட்சங்களுக்கு அதிகபட்ச கடன் வரம்பு இவைகளின் பத்திரங்கள், மதிப்பீடு அறிக்கைகளை சிறு அளவுகளில் பரிசோதித்தல்.<br>விலைகுறைந்தால் ஏற்படும் உணர்திறன் பகுப்பாய்வு மற்றும் அதைத் தொடர்ந்து ஒதுக்கீடு செய்யும் முடிவுகள் உட்பட்ட விலைகளின் போக்கை நிர்வாகம் பகுப்பாய்வு செய்ததை மதிப்பாய்வு செய்தல்<br>அதே நிரந்தரக் கணக்கு எண், அலைபேசி எண் அல்லது அடையாளங்காட்டும் மற்ற காரணிகளைக் கண்டுபிடித்து உறுப்பினர்கள் தகவல்களை பகுப்பாய்வு செய்து, மறு அடகு வைக்கும் இடர்களின் சாத்தியங்களை அடையாளம் காணுதல்.<br>நிதிநிலை அறிக்கைகளில் நகைக்கடன்கள், பிணைகளில் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு செய்தல் போன்றவற்றின் வெளியிடுதல்களின் போதுமான அளவில் உள்ளதா என்று மதிப்பாய்வு செய்தல். |

| முக்கிய தணிக்கை பொருள்கள் | எங்களது தணிக்கை, முக்கிய தணிக்கை பொருள்களை எவ்வாறு கையாண்டது. |
|---|---|
| **மென்பொருள் மாற்றும் இடைநிலை சூழ்நிலைகளில் தகவல் தொழில்நுட்பம் (IT) கட்டுப்பாடுகள்**<br><br>நிறுவனத்தின் நிதி நிலைக்கணக்குகள் மற்றும் அறிக்கை அளிக்கும் முறை தானியங்கி அமைப்பு முறையையும் அதன் தொடர்பான தொழில் நுட்பக் கட்டுப்பாடுகளையம் பெரிதும் சார்ந்துள்ளது. தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு சூழ்நிலைகளில் ஏதேனும் குறைபாடுகள் நிதிநிலை அறிக்கைகளில் தவறான கூற்றைத் தெரிவிக்கும் இடருக்கு விளைவாக நேரிடும் பயனுள்ள கட்டுப்பாடுகள், அங்கீகார மற்ற அல்லது துல்லியமற்ற அமைப்பு மாறுதல்களால் எழும் மோசடி அல்லது பிழையைத் தவிர்க்க முக்கிய பங்கு வகிக்கிறது.<br><br>இந்த வருடத்தில் நிறுவனம் தற்போது நடைமுறையில் உள்ள மென்பொருளை படிப்படியாகக் குறைத்து புதிய மென்பொருள் அமைப்பை அதன் கிளைகளில் நடைமுறைப்படுத்துதலை ஆரம்பித்துள்ளது. புதிய அறிமுகம் முழுவதும் முடியும் வரை தற்போது பரிவர்த்தனைகள் மற்றும் தொடர்புடைய வேலைகள் எல்லாம் பழைய மற்றும் புதிய மென்பொருள்களிலும் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு உள்ள இலாப நட்டம் செயல்படுத்துதலை ஒத்திசைவு செய்தல் மற்றும் கட்டுப்பாடுகளை கண்காணித்தல் உள்ள இடர்களை கூட்டலாம் மற்றும் நிதிநிலை அறிக்கைகளில் பிழைகள் அல்லது முரன்கள் உண்டாவதற்கான இடர்களை அதிகரிக்கும்.<br><br>எனவே, வலுவான பொதுவான தகவல் கட்டுப்பாடுகள் மற்றும் செயல்படுத்துதல் கட்டுப்பாடுகள் செயல்படுத்தலில் உள்ள மாற்றங்கள் மற்றும் அதற்குரிய தகவல் எல்லாம் சரியாக அங்கீகரிக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன மற்றும் இரண்டு அமைப்புகளின் ஒத்திசைவுகளும் துல்லியமாகவும் முழுமையாகவும் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமானவைகளாகும். எனவே இது முக்கிய தணிக்கை பொருளாக தீர்மாணிக்கப்பட்டது. | ➢ பழைய மென்பொருளிலிருந்து புதிய மென்பொருளுக்கு மாற்றப்படுவதாலும் மற்றும் எல்லாக்கிளைகளிலும் அவைகளுடைய கிளை செயல்பாடுகளிலும், எங்களது நடைமுறைகள் இரண்டு சூழல்களிலும் உள்ள பொருத்தமான மற்றும் செயல்திறன் கட்டுப்பாடுகள் மற்றும் துல்லியம் மற்றும் முழுமையான தகவல் மீது எங்களது நடைமுறைகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியவை.<br><br>➢ புதிய மற்றும் பழைய இரண்டு அமைப்புகளில் உள்ள அணுகல் மேலாண்மை, மாற்றுதல்கள் மேலாண்மை, கடமைகளைப் பிரித்தல், கடவுச் சொல் கொள்கைகள் மற்றும் கணினிக் கட்டமைப்புக் கட்டுபாடுகளை உள்ளடக்கிய வடிவமைப்பு. நடைமுறைப்படுத்துதல் மற்றும் செயல்பாட்டு செயல்திறன் அமைப்புகளை மதிப்பீடு செய்தல்.<br><br>➢ தானியங்கி கணக்கீடுகள், வட்டி கணக்கீடுதல்கள், முதிர்வுத் தேதி தீர்மானித்தல் மற்றும் மென்பொருள் மாற்றம் செய்யும் காலத்தில் அங்கீகரித்தல், சேகரித்தல் மற்றும் இரண்டு அமைப்புகளிலும் உள்ள தகவல் பரிமாற்றங்களின் ஒத்திசைவுகள் ஆகியவற்றிற்கு முக்கியம் கொடுத்து முக்கிய நிதிக் கணக்கீடுகள் பராமரித்தல் மற்றும் அறிக்கை நடைமுறைகளை சோதனை செய்தல்.<br><br>➢ நெறிமுறைகளை இரண்டு அமைப்புகளில் வரிசைப்படுத்துதல் அங்கீகரித்தல் சோதனை செய்தல் மற்றும் சீராய்வு செய்தல், தேர்ந்தெடுத்த சில கணக்குகளுக்கு, இரண்டு அமைப்புகளிலும் வட்டி கணக்கீடுகளையும் முதிர்வு தேதிகளையும் சரிபார்த்து, அவைகளை துல்லியத் தன்மைக்கும் மற்றும் தொடர்ச்சிக்கும் ஒத்து நோக்குதல்.<br><br>➢ முதன்மைத் தரவுகள், புதுப்பிப்புகள் மீதான செயல்முறை மற்றும் கட்டுப்பாடுகளை மதிப்பிடுதல், பொருத்தமான அங்கீகாரம் மற்றும் சரியான தன்மையை உறுதி செய்தல்.<br><br>➢ தரவு இடம்பெயர்வு மற்றும் இணையான இருக்கைகளின் முழுமை மற்றும் துல்லியத்தை உறுதிப்படுத்த அமைப்பு கடை முகங்கள் மற்றும் ஒத்திசைவு கட்டுப்பாடுகளைச் சோதித்தல்.<br><br>➢ பரிவர்த்தனைகளின் மாதிரியை பரஸ்பர சரிபார்ப்பதன் மூலம் முக்கிய நிதி அறிக்கையிடலுக்குப் பயன்படுத்தப்படும் அமைப்பு உருவாக்கிய அறிக்கைளின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதி செய்தல்.<br><br>➢ பரிவர்த்தனைத் தகவல்கள் மற்றும் நிலுவைகளில் ஏதாவது பிழைகள் உள்ளனவா என்று அறிய பழைய மற்றும் புதிய அமைப்புகளையும் ஒத்திசைவு செய்து அவைகளை சரிசெய்தல். |

| முக்கிய தணிக்கை விபரங்கள் | எங்களது தணிக்கையில் முக்கிய விபரங்களாக கருதப்பட்ட காரணம் |
|---|---|
| | ➢ குறிப்பாக நிதி விதிகள் மற்றும் நிர்வாகத்தினர் கூறிய நிபந்தனைகளை இரண்டு அமைப்புகளிலும் தானியங்கி முறையில் செயல்படுவதை சோதனை செய்து பார்க்க.<br>➢ எந்த ஒரு நேரத்திலும் சேமிப்புக் கணக்கிற்கு கொடுக்கப்படும் வட்டிக்கான அதிகபட்ச நிலுவைத் தொகை ரூ.1 லட்சத்தை தாண்டக்கூடாது.<br>➢ ஒரு உறுப்பினருக்கு வழங்கப்படும் கடன் வரம்பு ரூ.15 லட்சங்களை மீறலாகாது.<br>➢ இந்த சோதனைகளில் கணினி கட்டமைப்புகளை மதிப்பாய்வு செய்தல் சோதனைப் பரிவர்த்தனைகள் செய்தல் மற்றும் விதி விலக்கு அறிக்கைகளை மதிப்பிடுதல் மற்றும் கிளைகள் மேலாண்மை மதிப்பாய்விற்காகத் தடுக்கப்பட்டுள்ளன அல்லது கொடியிடப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த ஆகியவைகள் அடங்கும்.<br>➢ இந்த நடைமுறைகள் உயரிய இடர்களான ஒத்திகையாமை, கட்டுப்பாட்டு இடைவெளிகள் அல்லது அமைப்புக்கு மாறும் சமயத்தில் இணங்காதிருத்தலை சரிசெய்தது மற்றும் இரண்டு அமைப்புகளும் சட்டபூர்வமாக மற்றும் நிர்வாக பரிந்துரைத்து நியதிகளின்படி செயல்படுகின்ற என்பதை உறுதிப்படுத்துகின்றன. |

## நிதி நிலை அறிக்கைகள் மற்றும் அவற்றின் மேல் தணிக்கையாளர்களின் அறிக்கையைத் தவிர இதர தகவல்கள்

இதர தகவல்களுக்கு நிறுவனத்தின் இயக்குநரவை பொறுப்பாகும். இதர தகவல்கள், நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் உள்ள தகவல்களை உள்ளடக்கியதாகும். ஆனால், நிதி நிலை அறிக்கைகள் மற்றும் அவற்றின் மீதான தணிக்கையாளர் அறிக்கைகளை உள்ளடக்கியிருக்காது. அந்த இதர தகவல்கள் இந்த தணிக்கையாளர்கள் அறிக்கை தேதிக்குப் பின்னரே எங்களுக்கு கிடைக்கச் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனித்து நிற்கும் நிதி நிலை அறிக்கைகளின் மீதான எங்களது கருத்து அந்த இதர தகவல்களை உள்ளடக்காது மற்றும் நாங்கள் அவைகளின் மீது எந்த வடிவிலான உறுதியையோ, முடிவையோ வெளிப்படுத்தவில்லை.

தனித்து நிற்கும் நிதி நிலை அறிக்கைகளின் எங்களது தணிக்கை சம்பந்தமாக அவற்றைப் படிப்பதே மற்றும் அவ்வாறு செய்யும்போது அந்த இதர தகவல்கள் அந்த தனித்து நிற்கும் நிதிநிலை அறிக்கையோடு, வேறு விதமாக பொருட்படுத்தத்தக்க தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் உள்ளதா அல்லது தணிக்கையில் அல்லது வேறு வகையில் நாங்கள் பெற்ற புரிதல் பொருட்படுத்தத்தக்க வகையில் தவறாக கூறப்பட்டுள்ளதா என்பதை கருத்தில் கொள்வதும் எங்களது பொறுப்பு ஆகும்.

நாங்கள் செய்த வேலையின் அடிப்படையில், இதர தகவல்களில் பொருட்படுத்தத்தக்க தவறான கூற்று இருந்தால், அந்த உண்மையை நாங்கள் அறிவிக்க வேண்டும். இது சம்பந்தமாக அறிவிக்க எங்களிடம் எதுமில்லை.

**நிர்வாகம் மற்றும் நிதிநிலை அறிக்கைகளின் ஆளுமைக்குப் பொறுப்பானவர்களின் பொறுப்புக்கள்**

நிதிநிலை மற்றும் இதர அனைத்தடக்க வருவாய், சம பங்குகளில் மாற்றங்கள், நிறுவனத்தின் பணப்புழக்கங்கள் உள்ளிட்ட நிதிச்செயல்பாடுகள் இவைகளை உள்ளடக்கிய நிதிச் செயல்பாடுகள் சட்டப்பிரிவு 133 அத்துடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதி, 2015-ல் குறிப்பிட்டுள்ள தரவிதிகள் படியும் இந்தியாவில் பொதுவாக ஒத்துக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க நிதிநிலை அறிக்கைகள் உண்மையான மற்றும் நியாயமான தோற்றத்தைக் காண்பிக்கும் சட்டப்பிரிவு 134(5)-ல் கூறிய கூறுகள் அடங்கிய வகையில் தயார் செய்வதற்கு நிறுவனத்தின் இயக்குநரவை பொறுப்பானவர்கள்.

இந்த பொறுப்பு சட்டத்தின் கூறுகளுக்கு ஏற்ப, போதுமான கணக்கு பதிவேடுகளை பராமரித்தல், நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் இதர முறைகேடுகளைத் தடுப்பது மற்றும் கண்டுபிடிப்பது, பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் பயன்படுத்துதல், நியாயமான மற்றும் விவேகமான மதிப்பீடுகள் மற்றும் உத்தேச மதிப்பீடுகளைச் செய்தல், கணக்குப் பதிவேடுகளில் துல்லியம் மற்றும் முழுமையையும் உறுதி செய்வதற்காக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற போதுமான உள் நிதிகட்டுப்பாடுகளை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல், உண்மையான மற்றும் நியாயமான தோற்றத்தை காண்பிக்கும், மோசடியினாலோ அல்லது பிழையினாலோ பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் இல்லாத நிலையைக் காட்டும் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்குத் தொடர்புடையவை போன்றவைகளையும் உள்ளடக்கியது ஆகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயார் செய்வதில் நிதி தொடர்ந்து செயல்படும் நிறுவனமாகத் தொடரும் நிர்வாகத்தின் திறன்களை தொடர்ந்து செயல்படும் என்பதற்கான பொருத்தமான கூறுகளை வெளிப்படுத்தி மதிப்பீடு செய்வது நிர்வாகத்தின் பொறுப்பு ஆகும். மற்றும் தொடர்ந்து செயல்படும் நிலைக்கான கணக்குகளைப் பயன்படுத்துதல், போன்றவை நிர்வாகம் நிறுவனத்தை கலைத்தல் அல்லது செயல்பாடுகளை நிறுத்துதல் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு மாற்று வழி இல்லாத வரை, நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி சம்பந்தமாக அறிக்கை அளிக்கும் நடைமுறையை மேற்பார்வை செய்வதற்கும் இயக்குநரவை பொறுப்பாகும்.

**நிதிநிலை அறிக்கைகளைத் தயார் செய்வதில் தணிக்கையாளர்களின் பொறுப்புக்கள்**

முழுவதுமான நிதிநிலை அறிக்கைகளில் பொருட்படுத்தக்கூடிய மோசடியாலோ / பிழையாலோ ஏற்பட்ட இடர்கள் இல்லாமல் இருக்கிறதா என்பதைப் பற்றி நியாயமான உறுதியைப் பெறுவது மற்றும் எங்களது கருத்துரை அடங்கிய அறிக்கையை வழங்குவது எங்களின் நோக்கங்கள் ஆகும். நியாயமான உறுதி என்பது ஒரு உயர்ந்த நிலை உறுதியாகும். ஆனால், அது SAs-க்கு இணங்க நடத்தப்பட்ட தணிக்கை ஒரு பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்று இருந்தால் அதை எப்போதுமே கண்டுபிடிக்கும் என்று உறுதி கூறமுடியாது. தவறான கூற்றுக்கள் மோசடி அல்லது பிழையினால் எழலாம். அவைகள் தனியாகவோ அல்லது மொத்தமாகவோ, இந்த நிதி நிலை அறிக்கைகளின் அடிப்படையில், உபயோகப்படுத்துவர் எடுக்கும் பொருளாதார முடிவுகளில் தாக்கம் ஏற்படுத்துவதாக நியாயமாக எதிர்பார்க்கப்பட்டால், அவைகள் பொருட்படுத்தத் தக்கவைகளாகக் கருதப்படும்.

Ind AS-க்கு இணங்கிய எங்களது தணிக்கையின் ஒரு பகுதியாக நாங்கள் தொழில் சார்ந்த மதிப்பீடுகளும் மற்றும் எங்களது தணிக்கை முழுவதும் தொழில் சார்ந்த சந்தேகத்தை பராமரிக்கிறோம்.

➢ மோசடி, பிழை, கட்டமைப்பு இவற்றில் ஏதேனும் ஒன்றினால் நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படும் பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுக்களின் இடர்களை அடையாளங்கண்டு அவைகளுக்கு பதிலளிக்கத்தக்க வகையில் தணிக்கை நடைமுறைகளைக் கட்டமைத்து செயல்படுத்தி எங்களது கருத்தை தெரிவிக்க போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை ஆதாரத்தைப் பெறுகிறோம்.

தாக்கத்தை உண்டாக்கக்கூடிய மோசடியிலிருந்து விளையும் ஒரு கூற்றை கண்டுபிடிக்காமலிருப்பதால் உண்டாகும் இடர் பிழையால் விளையும் இடரை விட அதிகமானது. ஏனெனில், மோசடி என்பது திரித்துக் கூறுதல் கூட்டுச்சதி, கையெழுத்து மாறாட்டம் போன்ற வேண்டுமென்றே தவிர்ப்பது, தவறாக எடுத்துக்கூறுவது அல்லது உள் கட்டுப்பாடுகளைப் புறக்கணித்தல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

➢ சூழ்நிலைகளுக்கு பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க நாங்கள் தணிக்கைக்கு தொடர்புடைய உள் நிதிக் கட்டுப்பாடுகளை புரிந்து கொள்கிறோம். சட்டப்பிரிவு 143(3)(i)-ன்படி, நிறுவனத்தில் போதுமான உள் நிதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் உள்ளனவா மற்றும் அந்தக் கட்டுப்பாடுகளின் செயல்பாட்டுத்திறன் பற்றியும் எங்களது கருத்துரையைத் தெரிவிக்க நாங்கள் பொறுப்பானவர்கள்.

➢ பயன்படுத்தப்பட்ட, பொருட்படுத்தக்கூடிய கணக்குக் கொள்கைகளின் பொருத்தம் மற்றும் கணக்கு மதிப்பீடுகளின் நியாயங்கள் மற்றும் தொடர்பான இயக்குனர் அவையின் வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை தர மதிப்பீடு செய்கிறோம்.

➢ நிறுவனம் தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையிலான நிறுவனத்தின் கணக்கியல் அடிப்படைகளில் பொருத்தமான தன்மையை நாங்கள் முடிவு செய்கிறோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்களின் அடிப்படையில் நிறுவனம் தொடர்ந்து இயங்கும் திறனில் முக்கியமான சந்தேகத்தை உண்டாக்கக்கூடிய பொருட்படுத்தக்கூடிய நிச்சயமற்ற தன்மை உடைய நிகழ்ச்சிகள் அல்லது நிபந்தனைகள் நிலவுகிறதா என்று நாங்கள் முடிவு செய்கிறோம். நாங்கள் பொருட்படுத்தத்தக்க நிச்சயமற்ற நிலைமை நிலவுகிறது என்று முடிவு செய்தல். எங்களது தணிக்கை அறிக்கையில் நிதி நிலை அறிக்கைகளில் தொடர்புடைய வெளிக்கொணர்வுகளாக கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது ஏதாவது வெளிக்கொணர்வுகள் போதுமானதாக இல்லை என்றால் எங்களது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். எங்களது முடிவுகள், தணிக்கை அறிக்கைத் தேதியன்று வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரங்கள் அடிப்படையானவை. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் நிறுவனத்தை தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற நிலையிலிருந்து தொடர முடியாமல் போகலாம்.

➢ நாங்கள் வெளிப்படுத்துதல்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதி நிலை அறிக்கைகள், அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை நியாயமான சமர்ப்பித்தலை நிதி நிலை அறிக்கைகள் பிரதிபலிக்கின்றனவா என்றவற்றையும் மதிப்பீடு செய்கிறோம்.

நிதி நிலை அறிக்கைகளில் தவறான கூற்றுகளின் பொருட்படுத்தக்கூடிய தன்மை என்பது தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ நியாயமான அறிவார்ந்த நிதி நிலை அறிக்கைகளைப் பயன்படுத்துவோரின் பொருளாதார முடிவுகளில் ஆதிக்கம் செலுத்தலாம் என்ற நிகழ்தகவை உண்டாக்கும் அளவைப் பொருத்தது ஆகும்.

நாங்கள் எண்ணிக்கைகள் மற்றும் தரம் சார்ந்த காரணிகளை

i) தணிக்கை வேலையின் வரையரைகளைத் திட்டமிடும் போதும் மற்றும் எங்களது வேலையின் முடிவுகளை மதிப்பீடு செய்யும்போதும் மற்றும்

ii) நிதி நிலை அறிக்கைகளில் அடையாளம் காணப்பட்ட தவறான கூற்றுகளின் விளைவுகளை மதிப்பீடு செய்யும்போதும்

கருத்தில் கொள்கிறோம்.

பல விடயங்களுக்கு நடுவில் திட்டமிடப்பட்ட வரையறை, தணிக்கைக்கான நேரம் மற்றும் எங்களது தணிக்கையின்போது அடையாளம் காணப்பட்ட உள் கட்டுப்பாடுகளில் நாங்கள் அடையாளம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட முக்கியமான தணிக்கை முடிவுகளை நாங்கள் உள்கட்டுப்பாட்டுகளுக்கு பொறுப்பானவர்களோடு தகவல் பரிமாற்றம் செய்கிறோம்.

சுதந்திரமான செயல்பாடுகள் சம்பந்தமாக நெறிமுறைத் தேவைகளுக்கு இணங்க நடந்திருக்கிறோம் என்ற ஒரு கூற்றை உள்கட்டுப்பாட்டுகளுக்கு பொறுப்பானவர்களுக்கு வழங்குகிறோம் மற்றும் எங்களது சுதந்திரமான செயல்பாடுகளின் நியாயமான உறவு மற்றும் இதர விடயங்கள் மற்றும் பொருத்தமான இடங்களில், தொடர்பான பாதுகாப்பு கட்டுப்பாடுகளுக்கு பொறுப்பானவர்களோடு தொடர்பு கொண்ட விடயங்களிலிருந்து நாங்கள் அந்த விடயங்கள் 31.03.2025 நிதி ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்ய குறிப்பிடத்தக்க விடயங்கள் என்று முடிவு செய்கிறோம். அதனாலேயே, அவைகள் முக்கிய தணிக்கை விடயங்கள் ஆகும். சட்டம் அல்லது ஒழுங்கு முறைகள் அந்த விடயங்களை பொது வெளியில் வெளிப்படுத்துவதை தடுக்கவில்லை என்றால் அல்லது மிகவும் அரிதான சூழ்நிலைகளில் ஒரு விஷயம் எங்களது அறிக்கையில் அவ்வாறு தெரிவிப்பதனால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகள், அவ்வாறு பொது வெளியில் தெரிவிப்பதால் உண்டாகும் பொது நல பலன்களைவிட கூடுதலாக இருப்பதாக எதிர்பார்க்கப்படும்போது நாங்கள் அந்த விடயங்களை எங்களது அறிக்கையில் தெரிவிக்கக்கூடாது என்று தீர்மானிக்கும்போது நாங்கள் அந்த விடயங்களை எங்களது அறிக்கையில் விவரிக்கிறோம்.

**இதர சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் மீதான அறிக்கை**

1. இந்திய மத்திய அரசு, சட்டத்தின் பிரிவு 143, துணைப்பிரிவு (11)-ன் படி, வெளியிட்ட நிறுவனங்கள் (தணிக்கையாளர்கள் அறிக்கைகள்) உத்தரவு, 2020 (இதன் பிறகு, "உத்தரவு")-ன் படியும் நாங்கள் பொருத்தமானது எனக் கருதி நிறுவனத்தின் புத்தகங்கள் மற்றும் பதிவுகளை அவ்வாறு சோதனை செய்வதின் அடிப்படையிலும் மற்றும் எங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கு ஏற்ப, நாங்கள், இந்த அறிக்கையின் "இணைப்பு A"-வில், உத்தரவின் பத்திகள் 3 மற்றும் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் மீது பொருந்தக்கூடிய அளவிற்கு ஒரு கூற்றை அளிக்கிறோம்.

2. சட்டப்பிரிவு 143 (3)-ன்படி எங்களது தணிக்கை அடிப்படையில், நாங்கள் கீழ்கண்டவாறு அறிக்கை அளிக்கிறோம்.

a) நாங்கள் நன்கு அறிந்த வரையிலும், நம்பிக்கைக்கு எட்டிய வரையிலும், எங்களது தணிக்கை நோக்கங்களுக்காக நாங்கள் அவசியம் என்று கருதும் அனைத்துத் தகவல்கள் மற்றும் விளக்கங்களைக் கோரிப் பெற்றோம்.

b) எங்களது கருத்துப்படி, சட்டப்படி தேவையான அந்தப் புத்தகங்களை நாங்கள் பரிசோதனை செய்த வகையில் சரியான கணக்குப் பதிவேடுகள் நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள் 2014-ன் விதி 11(g)-ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பத்தி [h.(vi)]-ல் அறிக்கை அளிக்க குறிப்பிட்ட விடயங்களைத் தவிர நிர்வாகத்தால் பராமரிக்கப்படுகின்றன.

c) இந்த அறிக்கையில் கையாளப்பட்ட அனைத்தடக்க வருமானம், சம பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பணப்புழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் உள்ளடக்கிய இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்ட அறிக்கை ஆகியவை கணக்குப் புத்தகங்களுடன் ஒத்துப்போகின்றன.

d) எங்களது கருத்தின்படி, மேற்கூறிய நிதி நிலை அறிக்கைகள் சட்ட பிரிவு 133 அதனுடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலை) விதிகள் 2015-ல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் தரநிலை (Ind AS)-க்கு இணங்க உள்ளன.

e) இயக்குநரவை பதிவு செய்த இயக்குநர்களிடமிருந்து எழுத்துப் பூர்வமாகப் பெறப்பட்ட கடிதங்கள்படி மார்ச் 31, 2025 நிலவரப்படி இயக்குநராக நியமிக்கப்பட எந்த ஒரு இயக்குநரும் பிரிவு 164(2) படி தகுதி இல்லாமல் இல்லை.

f) நிறுவனத்தின் நிதி அறிவிப்பு செய்யப்பட வேண்டிய உள் தணிக்கைக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் அந்த கட்டுப்பாடுகளின் செயல்திறன் பற்றி இணைப்பு-B-ஐப் பார்க்கவும். எங்களது அறிக்கை நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் சம்மந்தப்பட்ட நிதி நிலைக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறன் பற்றி மாற்றப்படாத கருத்தை தெரிவிக்கிறது.

g) எங்களின் கருத்துப்படியும், மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின் படியும் நடப்பாண்டில் நிறுவனத்தில் இயக்குநர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் சட்டப்பிரிவு 197-க்கு இணங்க இருக்கிறது. (பார்க்க : குறிப்பு-37).

h) கணக்குகளின் பராமரிப்பு மற்றும் அதனுடன் தொடர்பான மாற்றங்கள் மேற்கண்ட பத்தி (b)-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள் 2014 விதி 11(g)-ன் படி தெரியப்படுத்த வேண்டியவை கீழே பத்தி [h.(vi)]-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

i. நிதி நிலை அறிக்கைகளில் தீர்க்கப்படாத வழக்குகளால் நிதியின் நிதி நிலையில் ஏற்படும் தாக்கங்களை நிறுவனம் வெளிக்காண்பித்துள்ளது. பார்க்க : நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு 18.

ii. நிறுவனம், முன்கூட்டியே எதிர்பார்க்கக் கூடிய, பொருட்படுத்தத்தக்க இழப்புகளை ஏற்படுத்தக்கூடிய வழித்தோன்றல் ஒப்பந்தம் உட்பட, நீண்டகால ஒப்பந்தங்கள் எதையும் வைத்திருக்கவில்லை.

iii. இந்த ஆண்டில், கீழே குறிப்பிட்டுள்ள தொகைகளைத் தவிர, முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு தொகைகள் மாற்றம் செய்வதில் எவ்வித கால தாமதமும் ஏற்படுத்தவில்லை.

| | |
|---|---|
| பங்குகள் | ரூ.163.39 இலட்சங்கள் |
| காலங்கடந்த வைப்புத்தொகை | ரூ.152.67 இலட்சங்கள் |

iv) a) நிர்வாகத்தினர் கடன் வாங்கிய நிதியிலிருந்தோ அல்லது பங்கு ப்ரீமியத்தொகையிலிருந்தோ அல்லது மற்ற ஆதாரங்கள் அல்லது வகையான நிதியிலிருந்தோ எந்த நபர் / நபர்கள் அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் உள்பட எந்த நிறுவனத்தின் இடையீட்டாளர்கள் ஆகியோர்க்கு அல்லது ஆகியவற்றில் எந்த நிதியும் முன்பணமாகக் / கடனாகக் கொடுக்கப்படவோ அல்லது முதலீடு செய்யப்பட்டலோ இல்லை எழுத்து மூலமாக பதியப்பட்டோ அல்லது வேறு முறையிலோ உள்ள புரிதல்படி அந்த இடையீட்டாளர்கள் நேராகவோ அல்லது மறைமுகமாகவோ நிறுவனத்தால் அல்லது நிறுவனத்திற்காக எவராலும் எந்த முறையிலாவது அடையாளப்படுத்தப்பட்ட இதர நபர்கள் அல்லது நிறுவனங்கள் ("இறுதிப் பயனாளிகள்") - கடன் கொடுக்கவோ அல்லது முதலீடு செய்யவோ அல்லது இறுதிப்பயனாளிகள் சார்பாக உத்திரவாதம் அல்லது ஈடு கொடுத்தல் போன்றவைகளை செய்வோம் என்ற புரிதலின்படி எவ்வித நடவடிக்கையும் நடைபெறவில்லை என்று நிர்வாகம் எடுத்துக்கூறியுள்ளது.

b) நிறுவனம் அளிக்கும் ஒப்புதலின்படி, நிறுவனத்தின் நம்பிக்கை மற்றும் கவனத்திற்கு உட்பட்டும், நிறுவனமானது முன் கூட்டியோ பிற நிறுவனங்களிடமிருந்து அல்லது இதர தனிப்பட்ட நபர்களிடமிருந்து அல்லது இதர தொழிலகங்களிடமிருந்து அல்லது அந்நிய நிறுவனங்களிடமிருந்து (நிதி உதவி அளிப்பவர்கள்) உடன்படிக்கையாகவோ அல்லது எழுத்து பூர்வமாக அல்லது இதர வழிகளிலோ நேரடியாகவோ அல்லது இடைத்தரகர்கள் மூலம் அல்லது வேறு நபர்கள் மூலமாகவோ, எந்த ஒரு தொகையையும் நிறுவனம் பெறவில்லை.

c) எங்களது தணிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் சூழ்நிலைகளுக்கேற்ப நியாயமானது மற்றும் பொருத்தமானது என்று நாங்கள் கருதிய மேற்கூறிய உட்கூறுகள் (a) மற்றும் (b)-ல் ஏதாவது பொருட்படுத்தத்தக்க தவறான கூற்றுகள் என்று நாங்கள் நம்பக்கூடிய எதையும் காணவில்லை.

v. a) நிறுவனம் மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் பட்டுவாடா செய்த கடைசி பங்கு ஈவுத் தொகை நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 123-ன்படி முந்தைய ஆண்டில் அறிவித்திருக்கும் அதே பங்கு ஈவுத் தொகை.

b) இயக்குநரவை அறிக்கையில் கண்டுள்ள குறிப்பு எண் 17-ன்படி, நிறுவனத்தின் இயக்குநரவை எதிர்வரும் வருடாந்திர பேரவைக் கூட்டத்தில் உறுப்பினர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டு இறுதி பங்கு ஈவுத் தொகையை முன்மொழிந்துள்ளார்கள். இந்த முன்மொழியப்பட்ட பங்கு ஈவுத்தொகையானது பங்கு ஈவுத்தொகையை அறிவிக்கும் சம்பந்தமாக பொருந்தும் வரை சட்டப்பிரிவு 123-ஐ ஒத்திருக்கும்.

vi. நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகள் 2014 பிரிவு 3(1)-ன் படி மென்பொருள்கள் மூலம் கணக்கு பதிவுகளை பராமரிக்கும் போது, 01.04.2023-லிருந்து அது தணிக்கைத் தடங்களை (திருத்த பதிவு) பதிவு செய்யக்கூடிய வசதியைப் பெற்றிருக்க வேண்டும். பரிட்சார்த்த முறையில் சரிபார்ப்பது உட்பட்ட எங்களது சோதனையின்போது நிறுவனமானது தணிக்கை தடங்களை (திருத்தப் பதிவு) ஆண்டு முழுவதும் பதிவு செய்யக்கூடிய வசதியைக் கொண்டிருக்கவில்லை. எனவே எங்களால் அறிக்கை அளிக்கப்பட வேண்டிய இதர அம்சங்கள் குறித்து கருத்து தெரிவிக்க இயலவில்லை.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்
FRN : 006655S
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQE4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீனிவாசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.012043S
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 26.08.2025

## சுயாதீன தணிக்கையாளர்கள் அறிக்கையின் இணைப்பு - A

சம தேதியிட்ட எங்களது அறிக்கையின் பத்தி 1-ல் "இதர சட்டம் மற்றும் ஒழுங்கு முறை தேவைகள்" என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை.

நிறுவனங்கள் சட்டம், பிரிவு 143(11) அடிப்படையில், இந்திய மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள நிறுவனங்கள் (தணிக்கையாளரின் அறிக்கை) உத்தரவு, 2020, (இதன் பிறகு "உத்தரவு"), எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி உத்தரவின் பத்திகள் 3 மற்றும் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக பொருந்தக்கூடிய அளவிற்கு நாங்கள் அறிக்கை அளிக்கிறோம்.

i) a) நிறுவனம் நிலம்/கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (PPE) மற்றும் அருவச் சொத்துக்களின் எண்ணிக்கைகள் மற்றும் அமைவிடங்கள் உட்பட்ட விபரங்கள் அடங்கிய பதிவேடுகளைப் பராமரித்துள்ளது.

b) நிறுவனத்தில் அதனுடைய நிலம்/கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை (PPE) அடிக்கடி நேரிடையாக சரிபார்க்கும் செயல்பாட்டுத் திட்டம் உள்ளது. அதன்படி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அவைகள் சரிபார்க்கப்படுகின்றன. எங்களது கருத்தின்படி நிறுவனத்தின் அளவு மற்றும் அதன் சொத்துக்களின் தன்மையைப் பொருத்து நேரிடையாக சரிபார்க்கும் கால இடைவெளி நியாயமானதாக இருக்கிறது. எங்களது கருத்துப்படி மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள்படி அத்தகைய சரிபார்த்தலின்போது பொருட்படுத்தக்கூடிய வேறுபாடுகள் எதுவும் தென்படவில்லை.

c) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின் படியும் மற்றும் நாங்கள் மேற்கொண்ட நிறுவன பதிவேடுகளின் ஆய்வின்படியும் நிறுவனத்தின் அசையா சொத்துக்களின் சொத்துரிமை ஆவணங்கள், (நிறுவனம் குத்தகைக்கு எடுத்தவராக உள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை ஒப்பந்தகளின் முறையாக குத்தகை எடுத்தவர்களின் பேரில் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்கள் தவிர) குத்தகை ஒப்பந்தங்கள் நிதி நிலை அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டபடி நிறுவனத்தின் பெயரிலேயே உள்ளன.

d) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படியும் நாங்கள் மேற்கொண்ட நிறுவன பதிவேடுகளின் ஆய்வின் படியும் நிறுவனம் தனது சொத்துக்களை (குத்தகைப் பத்திரங்கள் செய்யப்பட சொத்துக்கள் தவிர) மறுமதிப்பீடு செய்யவில்லை.

e) i. எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படியும் நாங்கள் மேற்கொண்ட நிறுவனப் பதிவேடுகளின் ஆய்வின்படியும், இரவல் பெயரில் பரிவர்த்தனைகள் (தடை) சட்டம் 1988-ன் படியும் அதன் கீழ் உள்ள விதிகளின்படியும் நிறுவனத்திற்கு எதிராக இரவல் பெயரில் (பினாமி) சொத்துக்கள் வைத்திருந்ததாக எந்த ஒரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

ii. நிறுவனமானது வைப்பு நிதிகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கடன்களை வழங்குதல் என்ற வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. நிறுவனத்தின் சரக்குகளின் இருப்பு என்ற நிலை இல்லை. எனவே, உத்தரவின் உட்கூறுகள் பத்தி 3 (ii) (a) மற்றும் (b) இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

iii. இந்த நிறுவனம் எந்த கடனையும், பிணையுடனோ, அல்லது பிணையில்லாமலோ நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 189-ன்படி பராமரிக்கப்படும் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கோ அல்லது இதர நபர்களுக்கோ வழங்கவில்லை. இதன் காரணமாக, உத்தரவின் உட்கூறுகள் iii (a), iii (b), iii (c), iii (d), iii (e), மற்றும் iii (f)-ன் கூறுகள் இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

iv. இந்த நிறுவனம் நிதி நிறுவனம் என்பதால் 05.06.2015 தேதியிட்ட அறிக்கை எண் G.S.R 465 (E)-ன்படி பிரிவு 185 இந்நிறுவனத்திற்கு பொருந்தாது. எங்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களின்படி, நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 186-ல் கூறப்பட்டுள்ளவாறு அத்தகைய கடன்களும், முதலீடுகளும், உத்திரவாதங்களும் பிணை கொடுத்தலும் இல்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (iv)-ன் கூறுகள் இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

v. இந்த நிறுவனம் ஒரு நிதி நிறுவனம் என்பதால் அது உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே வைப்பு நிதிகளைப் பெறுகிறது. இதனால், சட்டத்தின் 73 முதல் 76 வரை உள்ள பிரிவுகள் இந்நிறுவனத்திற்கு பொருந்தாது. எனவே, உத்தரவின் பத்தி 3 (v) இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

vi. எங்களது கருத்துப்படியும், எங்களுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களின் படியும் நிறுவனங்கள் சட்டம் 2013-ன், பிரிவு 148 உட்பிரிவு (1)-ன் கீழ் அடக்கவிலை பதிவேடுகளை பராமரிக்க வேண்டும் என்பது மத்திய அரசால் குறிப்பிடப்படவில்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (vi)-ல் கூறப்பட்ட கூறுகள் இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

vii. a. எங்களது கருத்துப்படியும் மற்றும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள்படியும் வருங்கால வைப்பு நிதி, ஊழியர்களின் மாநிலக்காப்பீடு, வருமான வரி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மற்ற பொருட்படுத்தக்கூடிய சட்டபடியான நிலுவைத் தொகைகள் உள்ளடக்கிய விவாதத்திற்குட்படாத, சட்டரீதியான நிலுவைத் தொகைகள் இந்த ஆண்டில் தக்க அதிகாரிகளிடம் முறையாக செலுத்தப்பட்டுள்ளன. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி 31, மார்ச், 2025 அன்று கொடுக்கப்பட வேண்டிய கெடு தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கடந்த சட்டப்படியான தொகைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

b. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின் படியும் மற்றும் நிறுவனத்தின் பதிவேடுகளை நாங்கள் ஆய்வு செய்ததின் அடிப்படையிலும் 31.03.2025 அன்று சச்சரவு காரணமாக செலுத்தப்படாமலிருக்கும் சட்டப்படியான நிலுவைகள் ஏதுமில்லை.

viii. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் வருமானவரி சட்டம், 1961-ன் கீழ் நடத்திய வரி மதிப்பீடுகளின் போது இந்த வருடத்தில் வரவாக ஒப்புவிக்கப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட தொகையை பதிவு செய்யாமலுள்ள எந்தவிதமான பரிவர்த்தனைகளும் இல்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (viii)-ன் படி அறிவிக்கப்பட வேண்டியது இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

ix. a. எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படியும் மற்றும் எங்களது தணிக்கை நடைமுறைகளின் அடிப்படையிலும், நிறுவனம் இந்த ஆண்டில் எந்த கடன்தாரருக்கும் அசலைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டியை செலுத்துதலில் தவறல் இல்லை.

b. எடுத்துரைக்கப்பட்ட தகவல்களின்படி, நிறுவனம் வேண்டுமென்றே கடனை திரும்பி அளிக்கத் தவறியவர் என்று எந்த வங்கியாலோ அல்லது நிதி நிறுவனத்தாலோ அல்லது கடன் கொடுத்தவரலோ அறிவிக்கப்படவில்லை.

c. எங்களது கருத்துக்களின்படியும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும், மதிப்பீட்டுக்குரிய காலத்தில் எந்த காலக்கெடு கடன்களும் பெறவில்லை.

d. எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படியும் மற்றும் ஒட்டுமொத்தமாக நிறுவனத்தின் இருப்பு நிலைக் குறிப்பை பரிசீலனை செய்ததின்பேரிலும், மேலும் நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மேலாண்மை இயங்கமைப்பையும் கருத்தில்கொண்டு குறுகிய கால அடிப்படையில் பெறப்பட்ட நிதிகள் நீண்டகால நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை என்று அறிக்கை அளிக்கிறோம்.

e. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளை ஒட்டுமொத்தமாக ஆராய்ந்ததில், நிறுவனம் அதன் துணை நிறுவனங்கள், கூட்டாளிகள் அல்லது கூட்டு முயற்சிகளின் காரணமாகவோ அல்லது அவற்றின் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவோ எந்தவொரு நிறுவனம் அல்லது நபரிடமிருந்தும் எந்த நிதியையும் பெறவில்லை என்று நாங்கள் தெரிவிக்கிறோம்.

f. எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள்படியும் மற்றும் எங்களால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை நடைமுறைகள் அடிப்படையிலும் நிறுவனம், நிறுவனத்தின் துணை நிறுவனங்கள், கூட்டுமுறை நிறுவனங்கள் மற்றும் இணைந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் வைத்துள்ள பத்திரங்களை ஈடாக வைத்து இந்த வருடத்தில் எந்த ஒரு கடனையும் பெறவில்லை என்று நாங்கள் அறிக்கை அளிக்கிறோம். எனவே, உத்தரவின் பத்தி 3 (ix) (f)-ன் படி அறிவிக்கப்பட வேண்டியது இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

x. a) . நிறுவனம், நிதி நிறுவனம் என்பதால் அது அதனுடைய உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே வைப்பு நிதிகளை பெறுகிறது. அது இந்த ஆண்டில் ஆரம்பப் பொதுப் பங்கு வெளியீடு, பின்தொடர் பொதுப்பங்கு வெளியீடு (கடன் பத்திரங்கள் உட்பட) போன்றவற்றின் மூலம் எந்த நிதியையும் திரட்டவில்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (x) (a)-ன் படி அறிவிக்கப்பட வேண்டியது இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

b) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள்படி நிறுவனம், இந்த ஆண்டில் முன்னுரிமை பங்குகள் ஒதுக்கீடு அல்லது தனிப்பட்ட முறையில் பங்குகளை வெளியீடுதல் அல்லது மாற்றத்தக்க கடன் பத்திரங்கள் (முழுவதுமாக, பகுதியாக அல்லது விருப்பத்தின்பேரில் மாற்றத்தக்க) வெளியிடுதல் போன்றவைகளை செய்யவில்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (x) (b)-ன் படி அறிவிக்கப்பட வேண்டியது இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

xi. a). மேற்கொண்ட தணிக்கை நடவடிக்கைகள் அடிப்படையிலும் மற்றும் நிர்வாகத்தினரால் அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும் இந்த வருடத்தில் நிறுவனம் மோசடி செய்ததோ அல்லது நிறுவனத்தினரை யாரும் மோசடி செய்ததோ காணப்படவில்லை அல்லது அறிவிக்கப்படவில்லை என்று நாங்கள் அறிக்கை அளிக்கிறோம்.

b). எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படி சட்டத்தின் பிரிவு 143 (12)-ன் படி, நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள் 2014-ன் விதி 13-ன் கீழ் மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் ADT-4-ல் எவ்வித அறிக்கையும் இந்த வருடத்திலும் மற்றும் இந்த அறிக்கை அளிக்கும் தேதி வரையிலும் தாக்கல் செய்யப்படவில்லை.

c). நிர்வாகம் எங்களிடம் எடுத்துரைத்த வகையில் இந்த வருடத்தில் மற்றும் இந்த அறிக்கை அளிக்கும் தேதி வரையிலும் நிர்வாகம் எந்த விதமான ஊதி அழைத்து உட்குறை உரைப்போர் புகாரும் பெறவில்லை.

xii. நிதி விதிகள்

a) நிறுவனம், நிதி விதிகள், 2014-ஐக் கடை பிடித்துள்ளது. நிகர சொந்த நிதிக்கும் வைப்பு நிதிக்கும் உள்ள விகிதம் 1: 9.17 என்று இருந்தது.

b) நிறுவனம், தனது பொறுப்புக்களை தீர்க்க நிதி விதிகள், 2014-ஐ கடைபிடித்துள்ளது. ஈடு வைக்காத காலக்கெடு வங்கி வைப்புத்தொகைகளின் விகிதம் 10.43% ஆக உள்ளது. இந்த அறிக்கையின் குறிப்பு 7(a)- ஐக் காண்க.

c) நிறுவனம், வைப்புத் தொகைகளின் மீதான வட்டி வழங்குவதிலோ அல்லது வைப்புகளை திருப்பி அளிப்பதிலோ எந்தக் காலவட்டத்திலும் எந்தவிதமான தவறுகளும் செய்யவில்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (xii) (c)-ன் படி அறிவிக்கப்பட வேண்டியது இந்நிறுவனத்திற்கு பொருந்தாது.

xiii. தொடர்புடைய பதிவேடுகளை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும், தொடர்புடைய நபர்களுடனான எல்லா பரிவர்த்தனைகளும் சட்டத்தின் பிரிவுகள் 177 மற்றும் 188-க்கு இணங்க உள்ளன. நிறுவனம், பொருத்தமான இந்திய கணக்கியல் தரவுகளுக்கேற்ப, (Ind AS) தொடர்புடைய நபர்களுடனான பரிவர்த்தனை விபரங்களை நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

xiv. a) எங்களது கருத்துப்படியும், எங்களது பரிசீலனையின் அடிப்படையிலும் நிறுவனம், அதனுடைய அளவிற்கும், வணிகத்தின் தன்மைக்கும் ஒப்பிசைவான உள் தணிக்கை அமைப்பு முறையைக் கொண்டுள்ளது.

b) எங்களது தணிக்கையின்போது SA 610 "உள் தணிக்கையாளர்களை பயன்படுத்திக் கொள்ளுதல்" என்ற வழிகாட்டல்படி, உள் தணிக்கையாளர்களால் கொடுக்கப்பட்ட உள் தணிக்கை அறிக்கைகளை கருத்தில் கொண்டோம்.

xv. எங்களது கருத்துப்படி, எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும் மற்றும் நிறுவனத்தின் பதிவேடுகளை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் நிறுவனம், இயக்குநர்களுடனோ அல்லது அவர்களுடன் தொடர்புடையவர்களுடனோ எந்த பணமில்லா பரிவர்த்தனைகளையும் செய்யவில்லை. எனவே, சட்டத்தின் பிரிவு 192-ன் கூறுகள் பொருந்தாது.

xvi. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934-ன் பிரிவு 45-IA-ன் கீழ், நிறுவனம் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (xvi) (b), 3 (xvi) (c) மற்றும் 3 (xvi) (d)-ன் கீழ் அறிக்கை அளிப்பது நிறுவனத்திற்கு பொருந்தாது.

xvii. எங்களது கருத்துப்படி மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள்படி நிறுவனம், இந்த நிதி ஆண்டிலும் மற்றும் இதற்கு உடன் முந்தைய நிதி ஆண்டிலும் பண இழப்புக்கு உட்படுத்தப்படவில்லை. எனவே, உத்தரவின் பத்தி 3 (xvii) அறிவிக்கப்பட்ட கூறுகள் நிறுவனத்திற்கு பொருந்தாது.

xviii. மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில், எந்த சட்டமுறை தணிக்கையாளரும் பணியிலிருந்து விலகவில்லை.

xix. எங்களது கருத்துப்படியும் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும் மற்றும் நிதி விகிதங்களின் அடிப்படையிலும் நிலுவைக்காலங்கள் மற்றும் நிதி சொத்துக்கள் வசூல் ஆக மற்றும் நிதி பொறுப்புகளை பட்டுவாடா செய்ய எதிர்பார்க்கப்படும் தேதிக்குள் மற்றும் Ind AS நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு 33-ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மற்றும் முதிர்வு பகுப்பாய்வுகளை விவரிக்கும் விபரங்களையும் மற்றும் Ind AS நிதி நிலை அறிக்கைகளுடன் இணைந்த மற்ற தகவல்களையும் சேர்த்து மற்றும் இயக்குநரவை மற்றும் நிர்வாகம் வைத்துள்ள திட்டங்களைப் பற்றி நாங்கள் அறிந்த தகவல்களையும் சேர்த்து,

தணிக்கை அறிக்கைத் தேதியன்று பொருட்படுத்தக்கூடிய நிச்சயமற்ற தன்மை ஏதும் இல்லை மற்றும் நிறுவனம் இருப்புநிலைக் குறிப்பு தேதியன்று உள்ள பொறுப்புக்களை இருப்புநிலைக் குறிப்பு தேதியிலிருந்து ஒரு ஆண்டுக்குள் கொடுபடவேண்டிய தேதி வந்தால் அது செலுத்தப்பட வேண்டிய நாளில் செலுத்தக்கூடிய வல்லமை உடையது என்பது எங்களுடைய கருத்தாகும்.

xx. a) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும் மற்றும் நடந்துகொண்டிருக்கும் திட்டங்களைத் தவிர அட்டவணை VII-ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் பிரிவு 135 துணைப் பிரிவு (5)-ன் இரண்டாவது நிபந்தனைக்கு இணங்க நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டிய செலவழிக்காத தொகை ஏதுமில்லை.

b) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும் மற்றும் சட்டத்தின் பிரிவு 135 துணைப் பிரிவு (6)-க்கு இணங்க சிறப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டிய செலவழிக்கப்படாத தொகை ஏதுமில்லை.

xxi. உத்தரவின் பிரிவு 3 (xxi)-ன்படி தனியாக கொடுக்கும் நிதிநிலை அறிக்கைகள் சம்பந்தமாக கொடுக்கப்பட வேண்டிய அறிவிப்பு பொருந்தாது. எனவே அந்த உட்பிரிவு சம்பந்தமாக எந்த கருத்துரையும் இந்த அறிக்கையுடன் இணைக்கப்படவில்லை.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்
FRN : 006655S
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQE4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீனிவாசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.012043S
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 26.08.2025

## இணைப்பு - B

## சுயாதீன தணிக்கையாளர்களின் அறிக்கை

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட சம தேதியிட்ட எங்களது அறிக்கையின் இதர சட்டம் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் மீதான எங்களது அறிக்கையின் பகுதியில் பத்தி (f)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவை.

**நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 143 உட்பிரிவு 3 கூறு (1)-ன் கீழ் நிதிநிலை நிதியின் அறிக்கை அளிப்பதின் மேல் உள் நிதிக்கட்டுப்பாடுகள்**

31.03.2025 அன்று உள்ள நிதி அறிக்கை அளிப்பதின் மேல் உள் நிதிக்கட்டுப்பாடுகளை தணிக்கை செய்ய அந்தத் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளை தணிக்கை செய்யும் போது, தணிக்கை செய்தோம்.

**நிர்வாகத்தின் பொறுப்பு**

முடிவடைந்த நிதிநிலை நிறுவனத்தின் நிதி அறிக்கை அளிப்பதின் மேல் உள் நிதிக்கட்டுப்பாடுகளை தணிக்கை செய்வதில் நிறுவனத்தின் நிதி அறிக்கை அளிப்பதின் மேல் உள் நிதிக்கட்டுப்பாடுகளை தணிக்கை செய்ய இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் வழங்கியுள்ள வழிகாட்டு குறிப்புகளின் கட்டுப்பாடுகளின் இன்றியமையாத கூறுகளை கருத்தில் கொண்டு உருவாக்குவதும், பராமரிப்பதும், நிறுவனத்தின் நிர்வாகத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்புக்கள் முறையாக மற்றும் திறம்பட வணிகத்தை நடத்தி வருவதை உறுதி செய்ய, சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற, நிறுவனத்தின் கொள்கைகளைப் பின்பற்றுதல், சொத்துக்களை பாதுகாத்தல், மோசடி மற்றும் பிழைகளைத் தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல், துல்லியம் மற்றும் முழுமையாக கணக்குப் பதிவேடுகள், நிறுவனங்கள் சட்டம் 2013-ன் படி நம்பகமான நிதித்தகவல்களை சரியான நேரங்களில் தயாரித்தலைப் பிரதிபலிக்கக்கூடிய நிதிநிலை அறிக்கைகள் சம்பந்தமாக போதுமான உள் நிதிக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தலை உள்ளடக்கியதாகும்.

**தணிக்கையாளர்களின் பொறுப்பு**

எங்களது தணிக்கையின் அடிப்படையில், நிதிநிலை அறிக்கைகள் தொடர்பாக நிறுவனத்தின் உள் நிதிக்கட்டுப்பாடுகள் குறித்து ஒரு கருத்து தெரிவிப்பதே எங்களது பொறுப்பாகும். இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் (ICAI) வழங்கியுள்ள தணிக்கை செய்ய கூறியுள்ள அத்தியாவசியமான கூறுகளுக்கு இணங்கியும், நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 143(10) படி பரிந்துரைத்ததாகக் கருதப்படும், ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் தணிக்கைக்கு பொருந்தும் வரை இந்தத் தர நிலைகளும் (வழிமுறைக் குறிப்பு) நாங்கள் நெறிமுறைத் தேவைகளுக்கு இணங்க தணிக்கை செய்தோம் மற்றும் பொறுத்தமான ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் நிறுவப்பட்டு மற்றும் பராமரிக்கப்பட்டதா என்றும் மற்றும் அந்தக் கட்டுப்பாடுகள் எல்லா பொருட்படுத்த வகையிலும் திறனாக செயல்பட்டனவா என்பதைப் பற்றி ஒரு நியாயமான உறுதியை பெறுவதற்கு நாங்கள் எங்களது தணிக்கையைத் திட்டமிட்டு செயல்படுத்துகிறோம்.

எங்களது தணிக்கையானது ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் போதுமானதா என்பது பற்றியும் அவைகளின் செயல்பாட்டுத்திறன் பற்றி தணிக்கை ஆதாரங்கள்களைப் பெறுவதற்காக நடைமுறைகளைச் செயல்படுத்துவதை உள்ளடக்கியது ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் தணிக்கையானது, நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகளை பற்றி ஒரு புரிதலைப் பெறுவது

பொருட்படுத்தத் தக்க தளர்வு இருக்கிறது என்பதின் இடரை மதிப்பிடுவதும், சோதனை செய்வதும் அந்த மதிப்பீடு செய்யப்பட்ட இடரின் அடிப்படையில் ஆகும். மோசடி மற்றும் பிழை ஏற்பட்ட பொருட்படுத்தத்தக்க தேர்ந்தெடுக்கப்படும் நடைமுறைகளை தவறான கூற்றினால் எழும் இடரை மதிப்பீடு செய்வது உட்பட்ட தணிக்கையாளரின் மதிப்பீட்டை சார்ந்ததாகும். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரம் ஒரு நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் அடிப்படையில் எங்களது கருத்துறைகளைத் தெரிவிக்க போதுமானது மற்றும் பொருத்தமானது என்று நம்புகிறோம்.

ஒரு நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் என்பது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் நிதிநிலை அறிக்கைகளை பொதுவாக ஒத்துக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க வெளிக்காரணங்களுக்காக தயாரித்தல் சம்பந்தமாக நியாயமாக உறுதிபடுவதற்காக கட்டமைக்கப்பட்ட ஒரு செயல் முறையாகும்.

**நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் என்பதின் பொருள்**

ஒரு நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் என்பது கீழ்கண்டவைகளை உள்ளடக்கிய அந்தக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

1) நியாயமான விபரங்களுடன் துல்லியமாகவும், நியாயமாகவும் பரிவர்த்தனைகள் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களை கையாளும் முறைகளையும் பிரதிபலிக்கக்கூடிய பதிவேடுகளைப் பராமரித்ததுடன் தொடர்புடையது.

2) பொதுவாக ஒத்துக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின்படி நிதி நிலை அறிக்கைகளைத் தயாரிக்கத் தேவையானபடி பரிவர்த்தனைகள் பதிவு செய்யப்படுகின்றன மற்றும் நிறுவனத்தின் வரவுகளும் செலவுகளும் நிர்வாகம் மற்றும் இயக்குநர்கள் அங்கீகரித்ததற்கு ஏற்பத்தான் நடந்து கொண்டிருக்கின்றது என்ற நியாயமன உறுதியைத் தருதல்.

3) நிதி நிலை அறிக்கைகளின் பொருட்படுத்தத்தக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நிறுவனத்தின் சொத்துக்களை அங்கீகாரமற்ற முறையில் கையகப்படுத்துதல், உபயோகப்படுத்துதல் அல்லது அகற்றுதலைத் தடுக்க அல்லது சரியான நேரத்தில் கண்டிப்பாக நியாயமான உறுதியைத் தருதல்.

**ஒரு நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகளின் உள்ளார்ந்த வரம்புகள்**

கூட்டுச்சதி அல்லது முறையற்ற மேலாண்மை, கட்டுப்பாடுகளை மீறுதல் நிகழலாம் என்பதையும் உள்ளடக்கிய உள்ளார்ந்த வரம்புகள் உள்ளதால், பிழை மற்றும் மோசடியினால் தவறான கூற்றுக்கள் நேரிடலாம் அல்லது கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம். மேலும், ஒரு நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் எதிர்காலத் திட்டத்தின் மதிப்பீடுகள் நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகளின் நியதிகளில் மாற்றங்கள் அல்லது கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் இணங்க நடத்தல் சீர்கெடலாம் என்ற இடருக்கு ஆட்படுவதால் போதுமானதாக இல்லாமல் போகலாம்.

**கருத்து**

நிறுவனம் எங்களது கருத்தின்படியும் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்கள் படியும் நிறுவனம் எல்லா பொருட்படுத்தத்தக்க வகைகளிலும் பொருத்தமான நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் கொண்டுள்ளது மற்றும் நிறுவனத்தின் நிதி நிலை

அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகள் 31.03.2025 அன்று வரை இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் வழங்கிய நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகளின் தணிக்கை வழிகாட்டல் குறிப்பின்படி உள் கட்டுப்பாடுகளின் முக்கிய கூறுகளைக் கருத்தில் கொண்டு நிதி நிலை அறிக்கைகள் தொடர்பான உள் நிதிக்கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் நிறுவிய அளவுகோலின்படி திறம்பட செயல்பட்டுக்கொண்டிருந்தன.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்**
பட்டய கணக்காளர்
FRN : 006655S
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQE4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீநிவாசன் & கோ**
பட்டய கணக்காளர்
FRN.012043S
CA. S.ஸ்ரீநிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 26.08.2025

## 31-03-2025 அன்றுடன் முடிவடைந்த தேதிக்கான இருப்பு நிலை குறிப்பு

(ரூ.லட்சத்தில்)

| விபரங்கள் | குறிப்பு எண் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| **I. சொத்துக்கள்:** | | | |
| **(1) நிதி சொத்துக்கள்** | | | |
| (a) பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | 6 | 25,959.70 | 14,077.35 |
| (b) வங்கியில் இருப்புகள் மேற்கூறிய (a) நீங்கலாக | 7 | 45,291.51 | 42,087.07 |
| (c) கடன்கள் | 8 | 4,50,130.33 | 3,58,175.25 |
| (d) இதர நிதி சொத்துக்கள் | 9 | 23,298.45 | 21,973.67 |
| **(2) நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| (a) ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள் (நிகர) | 10 | 718.01 | 759.00 |
| (b) நிலம்/கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 11 | 7,717.36 | 7,565.26 |
| (c) செயல்பாட்டில் உள்ள மூலதன பணிகள் | 12 | 124.45 | 95.50 |
| (d) பயன்பாட்டு உரிமை சொத்துக்கள் | 13 | 2,380.04 | 2,099.54 |
| (e) அருவச் சொத்துக்கள் | 14 | 19.25 | 46.20 |
| (f) இதர நிதி அல்லாத சொத்துக்கள் | 15 | 949.05 | 1,016.85 |
| **சொத்துக்களின் கூடுதல்** | | **5,56,588.15** | **4,47,895.69** |
| **II. பொறுப்புகள் மற்றும் மூலதனம்** | | | |
| பொறுப்புகள் | | | |
| **(1) நிதி பொறுப்புகள்** | | | |
| (a) வைப்புகள் | 16 | 4,71,748.99 | 3,81,139.55 |
| (b) இதர நிதி பொறுப்புகள் | 17 | 12,062.70 | 4,080.03 |
| **(2) நிதி அல்லாத பொறுப்புகள்** | | | |
| (a) ஒதுக்கீடுகள் | 18 | 4,926.91 | 4,708.15 |
| (b) இதர நிதி அல்லாத பொறுப்புகள் | 19 | 565.89 | 489.47 |
| **(3) பங்குகள்** | | | |
| (a) சம உரிமை பங்கு மூலதனம் | 20 | 3,055.85 | 3,032.63 |
| (b) இதர பங்குதாரர்கள் சம உரிமைச் செல்வங்கள்* | | 64,227.81 | 54,445.86 |
| **பொறுப்புகள் மற்றும் மூலதனத்தின் கூடுதல்** | | **5,56,588.15** | **4,47,895.69** |

பொருட்படுத்தத்தக்க கணக்கியல் விதிமுறைகள் 1-5

நிதி நிலை அறிக்கைகளோடு இணைந்த பின் குறிப்புகள் 6-49

பார்க்க : *பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்டிற்காக,

**S.கல்யாணசுந்தரம்**
தலைவர்
DIN : 00829647

**S.இராமலிங்கம்**
துணைத்தலைவர்
DIN : 00829529

**PR.P.வேலப்பன்**
மேலாண் இயக்குநர்
DIN : 01892661

**G.அன்பழகன்**
இயக்குநர்
DIN : 01469646

**B.பிரகாசம்**
இயக்குநர்
DIN : 00338872

**G.துரைராஜ்**
இயக்குநர்
DIN : 03064193

**E.அம்பிகா**
இயக்குநர்
DIN : 09353335

**M.குரு பிரசாந்த்**
இயக்குநர்
DIN : 09359770

**S.வெங்கடேசன்**
பொது மேலாளர்

**S.சண்முகம்**
பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி

**CS.S.கண்ணன்**
நிறுவன செயலர்

As per our report of even date attached.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்,**
பட்டய கணக்காளர்
FRN : 006655S,
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ,**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா,**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQ4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீனிவாசன் & கோ,**
பட்டய கணக்காளர்
FRN.012043S,
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம் / நாள் : 26.08.2025

## 31-03-2025 அன்று வரை முடிவடைந்த ஆண்டிற்கான லாப நட்ட கணக்கு (ரூ.லட்சத்தில்)

| விபரம் | | குறிப்பு எண் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|---|
| **செயல்பாடுகளிலிருந்து வருமானம்** | | | | |
| (i) | வட்டி வருமானம் | 21 | 61,897.12 | 47,633.00 |
| (ii) | கட்டணம் மற்றும் கமிஷன் வருமானம் | 22 | 22.67 | 26.23 |
| (iii) | நியாயமான மதிப்பு மாற்றத்தினாலான நிகர வருமானம் | 23 | 107.17 | 325.06 |
| **(I)** | செயல்பாடுகளிலிருந்து வருமானத்தின் கூடுதல் | | **62,026.96** | **47,984.29** |
| **(II)** | இதர வருமானம் | **24** | **28.81** | **24.16** |
| **(III)** | வருமானங்களின் கூடுதல் (I+II) | | **62,055.77** | **48,008.45** |
| **செலவுகள்** | | | | |
| (i) | நிதிச் செலவுகள் | 25 | 36,671.36 | 27,135.92 |
| (ii) | நியாயமான மதிப்பு மாற்றங்களினாலான நிகர இழப்பு | 26 | 39.91 | 7.00 |
| (iii) | ஊழியர் நலச்செலவுகள் | 27 | 8,840.27 | 8,272.58 |
| (iv) | தேய்மானம், மதிப்பு நீக்கம் மற்றும் மதிப்பு குறைப்பு | 28 | 730.24 | 708.53 |
| (v) | இதர செலவுகள் | 29 | 1,739.28 | 1,515.30 |
| **(IV)** | செலவுகளின் கூடுதல் **(IV)** | | **48,021.06** | **37,639.33** |
| **(V)** | **இயல்பு கடந்த இனங்கள் மற்றும் வரிகளுக்கு முந்தைய இலாபம் (III-IV)** | | **14,034.71** | **10,369.12** |
| **(VI)** | **இயல்பு கடந்த இனங்கள் ஒதுக்கீடுகள் மற்றும் நிச்சயமற்ற பொறுப்புகள்** | | | 131.03 |
| **(VII)** | **வரிகளுக்கு முந்தைய இலாபம்** (V -VI) | | **14,034.71** | **10,238.09** |
| **(VIII)** | வரிச் செலவுகள்: | | | |
| | (1) தற்போதைய வரி | 30 | 3,622.85 | 2,765.44 |
| | (2) முந்தைய ஆண்டுகளின் அதிக ஒதுக்கீடு | | (64.42) | - |
| | (3) ஒத்திவைக்கப்பட்ட வரி | 10 | 18.00 | (143.42) |
| **(xi)** | **காலவட்டத்திற்கான லாபம் (VII-VIII)** | | **10,458.28** | **7,616.07** |
| **(X)** | **இதர அனைத்தடக்க வருமானங்கள்** | | | |
| | (A) (i) லாபம் அல்லது நட்ட கணக்கில் மறு வகைப்படுத்தக்கூடாத பொருட்கள் (பொருட்கள் மற்றும் தொகையை குறிப்பிடவும்) | | | |
| | (a) நிலம் கட்டிடங்களின் மறு மதிப்பீடுகளில் ஆதாயம் / இழப்பு மதிப்புக்குறைபாடு | | - | (190.33) |
| | (b) ஒத்திவைக்கப்பட்ட ஓய்வுக்குப் பிந்தைய பலன் திட்டங்களின் காப்பீட்டு ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் | | 73.42 | - |
| | (c) திட்ட சொத்துக்களின் மீதான வருமானம், நிகர வரையறுக்கப்பட்ட பலன்களின் பொறுப்பு / சொத்து மீது சேர்க்கப்பட்டுள்ள நிகர வட்டி நீங்கலாக | | 15.99 | - |
| | (d) இலாப நட்ட கணக்குகளில் மறு வகைப்படுத்தக்கூடிய இனங்களின் மீதான கூடுதலாக ஒத்திவைக்கப்பட்டவரி | | (23.00) | - |
| | (i) இலாப நட்ட கணக்குகளில் மறு வகைப்படுத்தக்கூடாத இனங்களின் மீதான வருமான வரி | | - | |
| | (ii) இலாப நட்ட கணக்குகளில் மறு வகைப்படுத்தப்படாத பொருட்களின் மீதான வருமான வரி | | - | |
| | **உப கூடுதல் (A)** | | **66.41** | **(190.33)** |

## 31-03-2025 அன்று வரை முடிவடைந்த ஆண்டிற்கான லாப நட்ட கணக்கு (தொடர்ச்சி) (ரூ.லட்சத்தில்)

| விபரம் | குறிப்பு எண் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (B) (i) இலாபம் மற்றும் நட்ட கணக்கில் மறு வகைப்படுத்தப்படும் பொருட்கள் | | | - |
| (ii) இலாப நட்ட கணக்குகளில் மறு வகைப்படுத்தப்படும் பொருட்களின் மீதான வருமான வரி | | | - |
| கூடுதல் (B) | | | - |
| இதர விரிவான வருமானங்கள் (A + B) | | **66.41** | **(190.33)** |
| **(XI)** ஆண்டிற்கான இதர விரிவான வருமானங்களின் கூடுதல் (IX + X) | | **10,524.69** | **7,425.74** |
| **(XII)** ஒரு பங்கு மூலதனத்திற்கான வருமானம் (தொடர் செயல்பாடுகளின்படி) | | | |
| அடிப்படை (Rs.) | 31 | 34.22 | 25.11 |
| செறிவூட்டப்பட்ட (Rs.) | 31 | 34.37 | 25.19 |
| **(XIII)** ஒரு பங்கு மூலதனத்திற்கான வருமானம் (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான) | | | |
| அடிப்படை (Rs.) | 31 | 34.22 | 25.11 |
| செறிவூட்டப்பட்ட (Rs.) | 31 | 34.37 | 25.19 |

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்டிற்காக,

**S.கல்யாணசுந்தரம்**
தலைவர்
DIN : 00829647

**S.இராமலிங்கம்**
துணைத்தலைவர்
DIN : 00829529

**PR.P.வேலப்பன்**
மேலாண் இயக்குநர்
DIN : 01892661

**G.அன்பழகன்**
இயக்குநர்
DIN : 01469646

**B.பிரகாசம்**
இயக்குநர்
DIN : 00338872

**G.துரைராஜ்**
இயக்குநர்
DIN : 03064193

**E.அம்பிகா**
இயக்குநர்
DIN : 09353335

**M.குரு பிரசாந்த்**
இயக்குநர்
DIN : 09359770

**S.வெங்கடேசன்**
பொது மேலாளர்

**S.சண்முகம்**
பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி

**CS.S.கண்ணன்**
நிறுவன செயலர்

As per our report of even date attached.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்,**
பட்டய கணக்காளர்
FRN : 006655S,
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ,**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா,**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQ4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீனிவாசன் & கோ,**
பட்டய கணக்காளர்
FRN.012043S,
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம்
நாள் : 26.08.2025

## 31-03-2025 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கை

(ரூ.லட்சத்தில்)

| விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| **செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பணப்புழக்கம் :** | | |
| வரி மற்றும் இயல்பு கடந்த பொருட்களுக்கு முந்தைய லாபம் | 14,034.71 | 10,369.12 |
| சீரமைப்பு செய்வதற்காக : | | |
| இயல்பு கடந்த பொருட்கள் | | (131.03) |
| தேய்மானம், மற்றும் மதிப்பு குறைப்பு செலவுகள் | 258.28 | 268.80 |
| அருவச் சொத்துக்கள் மீதான மதிப்புக் குறைப்பு | 29.95 | 46.55 |
| பயன்பாட்டுரிமையுள்ள சொத்துக்கள் மீதான தேய்மானம் | 442.01 | 426.31 |
| நிலையான சொத்துக்கள் விற்பனையில் ஏற்பட்ட லாபம் | (2.62) | 2.77 |
| நியாயமான மதிப்பு மாற்றங்களினால் ஏற்பட்ட ஆதாயம் அல்லது இழப்பு | 79.29 | 203.13 |
| **நடைமுறை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்** | | |
| நிதி சொத்துக்களில் (உயர்வு / குறைவு) | (93,279.88) | (7,340.85) |
| நிதி அல்லாத சொத்துக்களில் (உயர்வு / குறைவு) | 90.79 | 2,756.75 |
| நிதி பொறுப்புகளில் (உயர்வு / குறைவு) | 98,592.11 | 31,798.08 |
| நிதி அல்லாத பொறுப்புகளில் (உயர்வு / குறைவு) | 77.04 | 29.92 |
| ஒதுக்கீடுகளில் (உயர்வு / குறைவு) | 218.77 | 114.42 |
| **நிறுவன செயல்பாட்டு நடவடிக்கைகளில் உருவாகிய/பயன்படுத்திய வரிக்கு முந்தைய நிகர தொகை** | **20,540.45** | **38,543.97** |
| வருமான வரிகள் செலுத்தியது (திரும்ப பெற்றது போக மீதமுள்ள தொகை) | (3,558.43) | (2,765.44) |
| **செயல்பாட்டு நடவடிக்கைகளில் உருவாகிய/பயன்படுத்திய நிகர தொகை** | **16,982.02** | **35,778.51** |
| முதலீட்டு செயல்பாடுகளிலிருந்து பணப்புழக்கம் நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கியது (அருவச் சொத்துக்கள் மற்றும் மேம்பாட்டிலுள்ள அருவச் சொத்துக்கள் உட்பட) | (1,166.92) | (1,341.76) |
| சொத்துக்களை விற்றதன் மூலம் பெற்ற விற்பனைத் தொகை | 4.72 | 7.56 |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் நீங்கலாக வங்கி இருப்புகளில் மாற்றங்கள் | (3,204.44) | (27,179.90) |
| **நிகர நிறுவன முதலீட்டு செயல்பாடுகள் மூலம் உண்டான / பயன்படுத்திய நிகர பணம்** | **(4,366.64)** | **(28,514.10)** |
| நிதியியல் செயல்பாடுகள் மூலம் பணப்புழக்கம் | | |
| பட்டுவாடா செய்யப்பட்ட பங்காதாயம் 2023-24 / 2022-23 | (756.24) | (752.12) |
| பங்கு மூலதன வெளியீடு | 23.22 | 16.31 |
| நிதியியல் செயல்பாடுகளிலிருந்து உருவான நிகர பணம் | (733.02) | (735.81) |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளில் நிகர அதிகரிப்பு | 11,882.36 | 6,528.60 |
| ஆரம்ப நிலையில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | 14,077.35 | 7,548.75 |
| **இறுதி நிலையில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள்** (குறிப்பு : 6-ஐ பார்க்கவும்) | **25,959.70** | **14,077.35** |
| இறுதி நிலையில் உள்ள பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை இருப்பு நிலை குறிப்பில் உள்ளவாறு | 25,959.70 | 14,077.35 |

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்டிற்காக,

**S.கல்யாணசுந்தரம்**
தலைவர்
DIN : 00829647

**S.இராமலிங்கம்**
துணைத்தலைவர்
DIN : 00829529

**PR.P.வேலப்பன்**
மேலாண் இயக்குநர்
DIN : 01892661

**G.அன்பழகன்**
இயக்குநர்
DIN : 01469646

**B.பிரகாசம்**
இயக்குநர்
DIN : 00338872

**G.துரைராஜ்**
இயக்குநர்
DIN : 03064193

**E.அம்பிகா**
இயக்குநர்
DIN : 09353335

**M.குரு பிரசாந்த்**
இயக்குநர்
DIN : 09359770

**S.வெங்கடேசன்**
பொது மேலாளர்

**S.சண்முகம்**
பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி

**CS.S.கண்ணன்**
நிறுவன செயலர்

As per our report of even date attached.

**சண்முகம் & அஸோசியேட்ஸ்,**
பட்டய கணக்காளர்
FRN : 006655S,
CA. S.சண்முகம்
உறுப்பினர் எண்.203423,
UDIN : 25203423BMLHHB5233

**G.நடேசன் & கோ,**
பட்டய கணக்காளர்
FRN.002424S
CA.R.கணேஷ்
உறுப்பினர் எண்.218556
UDIN : 25218556BMIOUZ9110
பங்குதாரர்

**சாஸ்த்ரி & ஷா,**
பட்டய கணக்காளர்
FRN.003643S
CA. S.வெங்கட சுப்ரமணியம்
உறுப்பினர் எண்.247339
UDIN : 25247339BMJFQ4192
பங்குதாரர்

**G.S.ஸ்ரீனிவாசன் & கோ,**
பட்டய கணக்காளர்
FRN.012043S,
CA. S.ஸ்ரீனிவாசன்
உறுப்பினர் எண்.218935
UDIN : 25218935BMICJZ3906
பங்குதாரர்

இடம் : கும்பகோணம் / நாள் : 26.08.2025

## 31.03.2025 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சமபங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை

### A. பங்கு மூலதனம்

**1. அறிக்கைக்கான நடப்பு ஆண்டு** ரூ. லட்சத்தில்

| 01-04-2024 தேதியில் இருப்பு | முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற தவறுகளினால் பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | 01-04-2024 தேதியில் மாற்றியமைக்கப்பட்ட இருப்புகள் | நடப்பு ஆண்டில் பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | 31-03-2025 தேதியில் இருப்பு |
|---|---|---|---|---|
| 3,032.63 | - | 3,032.63 | 23.22 | **3,055.85** |

**2. அறிக்கைக்கான முந்தைய ஆண்டு**

| 01-04-2023 தேதியில் இருப்பு | முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற தவறுகளினால் சம பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | 01-04-2023 தேதியில் மாற்றியமைக்கப்பட்ட இருப்புகள் | இந்த ஆண்டில் சமபங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள | 31-03-2024 தேதி அன்று இருப்பு |
|---|---|---|---|---|
| **3,016.32** | **-** | **3,016.32** | **16.31** | **3,032.63** |

### B. இதர பங்குதாரர்கள் சம உரிமைச் செல்வங்கள்

**1. நடப்பு ஆண்டிற்கான அறிக்கை**

| விபரங்கள் | காப்புத் தொகைகள் மற்றும் உபரிகள் | | அனைத்தடக்க வருமானங்களுக்கான பொருட்கள் | | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பங்கு விண்ணப்பத்தொகைகள் | பொதுக் காப்புத் தொகைகள் | தக்க வைத்துக் கொண்ட வருமானங்கள | மறு மதிப்பீட்டின் உபரிகள் | அனைத்தடக்க வருமானத்தின் இதர பொருட்கள் | |
| 31.03.2024 தேதியில் இருப்பு | **1.46** | **48,500.89** | - | **5,776.28** | **167.25** | **54,445.88** |
| கணக்கியல் விதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் / முந்தைய காலவட்டத்தில் ஏற்பட்ட தவறுகள் | - | - | - | - | - | - |
| மாற்றப்பட்ட இருப்பு 01.04.2024 | **1.46** | **48,500.89** | - | **5,776.28** | **167.25** | **54,445.88** |
| ஆண்டிற்கான வரிக்கு பிந்தைய லாபம் | - | - | **10,458.28** | - | - | **10,458.28** |
| கட்டிடங்களின் நியாயமான மதிப்பில் மாறுதல்கள் | - | - | - | - | - | - |
| ஒத்திவைக்கப்பட்ட பலன் திட்டங்களின் மறு அளவீடு | - | - | - | - | **89.41** | **89.41** |
| OCI மீதான வருமான வரி | - | - | - | - | **(23.00)** | **(23.00)** |
| இந்த கால வட்டத்திற்கான மொத்த அனைத்தடக்க வருமானம் | - | - | **10,458.28** | - | **66.41** | **10,524.69** |
| சென்ற வருட ஒதுக்கீடு திருப்பப்பட்டது | | **12.88** | | | | **12.88** |
| தக்கவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றுதல் | - | **10,458.28** | **(10,458.28)** | - | - | - |
| உரிமையாளருடன் பரிவர்த்தனை (2023-24) | - | **(756.24)** | | - | - | **(756.24)** |
| இந்த வருடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் | **(1.46)** | - | - | - | - | **(1.46)** |
| ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய, நடப்பாண்டில் பெறப்பட்ட பங்கு விண்ணப்பத் தொகைகள் | **2.06** | - | - | - | - | **2.06** |
| 31.03.2025 தேதியன்று இருப்பு | **2.06** | **58,215.82** | - | **5,776.28** | **233.66** | **64,277.81** |

**B. இதர பங்குதாரர்கள் சம உரிமைச் செல்வங்கள்**

**2. முந்தைய ஆண்டிற்கான அறிக்கை**

(ரூ.லட்சத்தில்)

| விபரங்கள் | காப்புத் தொகைகள் மற்றும் உபரிகள் | | அனைத்தடக்க வருமானங்களுக்கான பொருட்கள் | | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய பங்கு விண்ணப்பத்தொகைகள் | பொதுக் காப்புத் தொகைகள் | தக்க வைத்துக் கொண்ட வருமானங்கள | மறு மதிப்பீட்டின் உபரிகள் | அனைத்தடக்க வருமானத்தின் இதர பொருட்கள் | |
| 31.03.2023 தேதியில் இருப்பு | **1.31** | **41,636.94** | - | **5,966.61** | **(35.88)** | **47,568.98** |
| கணக்கியல் விதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் / முந்தைய காலவட்டத்தில் ஏற்பட்ட தவறுகள் | - | - | - | - | - | - |
| மாற்றப்பட்ட இருப்பு 01.04.2023 | **1.31** | **41,636.94** | - | **5,966.61** | **(35.88)** | **47,568.98** |
| ஆண்டிற்கான வரிக்குப் பிந்தைய லாபம் | - | - | **7,616.07** | - | - | **7,616.07** |
| கட்டிடங்களின் நியாயமான மதிப்பில் மாறுதல்கள் | - | - | - | **(190.33)** | - | **(190.33)** |
| ஒத்திவைக்கப்பட்ட பலன் திட்டங்களின் மறு அளவீடு | - | - | - | - | - | - |
| OCI மீதான வருமான வரி | - | - | - | - | **203.13** | **203.13** |
| இந்த கால வட்டத்திற்கான மொத்த அனைத்தடக்க வருமானம் | - | - | **7,616.07** | **(190.33)** | **203.13** | **7,628.87** |
| தக்கவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றுதல் | - | **7,616.07** | **(7,616.07)** | - | - | - |
| உரிமையாளருடன் பரிவர்த்தனை (2022-23) | - | **(752.12)** | | - | - | **(752.12)** |
| இந்த வருடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் | **(1.31)** | - | - | - | - | **(1.31)** |
| ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய, நடப்பாண்டில் பெறப்பட்ட பங்கு விண்ணப்பத் தொகைகள் | **1.46** | - | - | - | - | **1.46** |
| 31.03.2024 தேதியன்று இருப்பு | **1.46** | **48,500.89** | - | **5,776.28** | **167.25** | **54,445.88** |

**குறிப்பு 6 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை**

| வ.எண் | விபரங்கள் | 31.03.2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | பணம் மற்றும் தபால் வில்லைகளின் கையிருப்பு | **1,684.04** | **1,291.13** |
| (b) | வங்கிகளில் உள்ள இருப்புகள் (பணம் மற்றும் பணத்திற்கு சமமான தன்மையுள்ளவைகள்) | | |
| | நடப்பு கணக்குகளில் | **3,075.56** | **1,186.22** |
| | நிலை வைப்புகளில் (மூன்று மாத காலங்களுக்குள் முதிர்ச்சி அடையக்கூடியவைகள்) | **21,200.10** | **11,600.00** |
| | கூடுதல் | **25,959.70** | **14,077.35** |

நிறுவனத்தின் உடனடி பணத்தேவைகளைப் பொறுத்து, ஏழு நாட்கள் முதல் மூன்று மாதங்கள் வரையிலான பல்வேறு காலங்களுக்கு குறுகிய கால வங்கி வைப்புத் தொகைகள் செய்யப்படுகின்றன.

## குறிப்பு 7 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளைத் தவிர வங்கியிருப்புக்கள்

ரூ.லட்சத்தில்

| வ.எண் | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | வங்கிகளில் உள்ள நிரந்தர வைப்புக்கள் (மூன்று மாதங்களுக்கு மேல் ஆனால் பன்னிரெண்டு மாதத்திற்குள் முதிர்ச்சி அடையக்கூடியவைகள்)* | **44,982.43** | **41,799.00** |
| (b) | எஸ்க்ரோ கணக்குகளில் உள்ள இருப்புகள் | | |
| | - பங்கு விண்ணப்பத் தொகைக்காக | **2.06** | **1.46** |
| | - கொடுபடாத பங்காதாயத் தொகைக்காக | **307.01** | **286.61** |
| | கூடுதல் | **45,291.51** | **42,087.07** |

* இது வில்லங்கப்படுத்தக்கூடாத ரூ.47,800 இலட்சங்களை உள்ளடக்கியது.

## குறிப்பு 8 கடன்கள்

மதிப்பு குறைக்கப்பட்ட அடக்கவிலையில் கொண்டு செல்லப்படுகிறது.

| வ.எண் | விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|---|
| | | குறைக்கப்பட்ட செலவுகள் | குறைக்கப்பட்ட செலவுகள் |
| **(A)** | கடன்கள் | | |
| (i) | நகைக் கடன்கள் | 4,45,088.80 | 3,53,956.40 |
| (ii) | மாதாந்திர தொடர் வைப்புகள் மீது கடன்கள் | 153.88 | 204.90 |
| (iii) | காலக்கெடு வைப்புகள் மீது கடன்கள் | 5,166.97 | 4,176.91 |
| (iv) | ஆணையிடப்பட்ட கடன்கள் | - | - |
| (v) | ஊழியர்களுக்கான கடன்கள் | 532.31 | 595.87 |
| (vi) | வழக்கு தொடரப்பட்ட அடமான கடன்கள் | 84.52 | 97.41 |
| | கூடுதல் (A) - மொத்தம் | **4,51,026.48** | **3,59,031.49** |
| | கழிக்க : மதிப்புக் குறைப்பு கொடுப்பனவுகள் | 896.15 | 856.24 |
| | கூடுதல் (A) - நிகரம் | **4,50,130.33** | **3,58,175.25** |

| வ.எண் | விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|---|
| | | குறைக்கப்பட்ட செலவுகள் | குறைக்கப்பட்ட செலவுகள் |
| **(B)** | | | |
| (i) | உருவச் சொத்துக்களின் பிணையங்கள் பேரில் | | |
| | - நகைக் கடன்கள் | 4,45,088.80 | 3,53,956.40 |
| | - வைப்பு நிதிகளின் பேரில் கடன்கள் மற்றும் அடமானக் கடன்கள் | 5,405.37 | 4,479.22 |
| (ii) | பிணையமில்லா கடன்கள் | | |
| | a) ஊழியர்கள் கடன்கள் | 532.31 | 595.87 |
| | b) | | |
| | கூடுதல் (B) - மொத்தம் | **4,51,026.48** | **3,59,031.49** |
| | மதிப்புக் குறைப்பு கொடுப்பனவுகள் | 896.15 | 856.24 |
| | கூடுதல் (A) - நிகரம் | **4,50,130.33** | **3,58,175.25** |

ரூ.லட்சத்தில்

| (C) | விபரங்கள் | **31.03.2025** | **31.03.2024** |
|---|---|---|---|
| (I) | இந்தியாவில் வழங்கப்படும் கடன்கள் | | |
| (i) | பொதுத்துறை | - | - |
| (ii) | சிறிய கடன்கள் | 4,51,026.48 | 3,59,031.49 |
| | கூடுதல் **(C)** - மொத்தம் | **4,51,026.48** | **3,59,031.49** |
| | கழிக்க : மதிப்புக் குறைப்பு கொடுப்பனவுகள் | 896.15 | 856.24 |
| | கூடுதல் **(C) (I)** - நிகரம் | **4,50,130.33** | **3,58,175.25** |
| (II) | இந்தியாவிற்கு வெளியில் வழங்கப்பட்ட கடன்கள் | - | -- |
| | கழிக்க : மதிப்புக் குறைப்பு கொடுப்பனவுகள் | - | -- |
| | கூடுதல் **(C) (II)** - நிகரம் | **-** | **-** |
| | கூடுதல் **(C)** - நிகரம் | **4,50,130.33** | **3,58,175.25** |

## குறிப்பு 9 கடன்கள் இதர நிதி சொத்துக்கள்

ரூ.லட்சத்தில்

| வ.எண் | விபரங்கள் | **31-03-2025** | **31-03-2024** |
|---|---|---|---|
| (a) | கடன் உடமை திரட்டுக்கள் மீது திரண்ட வட்டி (பிணையக்கடன் - வசூலாகக்கூடும் என்று கருதப்படுபவை) | 22,447.83 | 16,311.52 |
| (b) | காலக்கெடு வைப்புகள் மற்றும் முதலீடுகள் மீது திரண்ட வட்டி | 228.91 | 472.92 |
| (c) | வங்கி வைப்புகள் - 12 மாதங்களுக்கு மேல் முதிர்ச்சி அடையக்கூடியவைகள் | - | 4,600.00 |
| (d) | பிணைய வைப்புகள் | 12.62 | 12.30 |
| (e) | ஊழியர்கள் முன்பணம் | 84.33 | 88.37 |
| (f) | வாடகை முன் பணம் | 332.30 | 281.49 |
| g) | முன்கூட்டி செலுத்தப்பட்ட ஊழியர்கள் நலன்கள் | 192.46 | 207.07 |
| | கூடுதல் | **23,298.45** | **21,973.67** |

## குறிப்பு 10 ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள்

| | விபரங்கள் | ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் 31.03.2025 | ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்புகள் 31.03.2025 | வருமான அறிக்கை 2024-25 | **OCI 2024-25** |
|---|---|---|---|---|---|
| (a) | கால வேறுபாடு : நிலம்/கட்டிடங்கள், சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | - | 106.00 | 1.00 | - |
| (b) | நிதி சொத்துக்களில் மதிப்புக் குறைப்பு கொடுப்பனவுகள் | 751.00 | - | (33.00) | - |
| (c) | வரையறுக்கப்பட்ட பலன் திட்டத்தை மறு அளவீடு செய்வதால் வரும் ஆதாயம் / இழப்பு | - | 23.00 | - | (23.00) |
| (d) | மதிப்பு குறைக்கப்பட்ட விலையில் அளவீடு செய்யப்பட்ட கடன் பத்திரங்கள் | - | - | - | - |
| (e) | மதிப்பு குறைக்கப்பட்ட விலையில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் | - | - | - | - |
| (f) | நிலம்/கட்டிடங்கள், மற்றும் உபகரணங்கள் மறுமதிப்பீட்டின் ஆதாயம் | - | - | - | - |
| (g) | பயன்பாட்டுரிமை சொத்துக்கள் | 96.00 | - | 14.00 | - |
| (h) | திரும்ப மாற்றம் செய்யப்பட்ட மற்ற தொகைகள் | | - | - | - |
| | கூடுதல் | **847.00** | **129.00** | **(18.00)** | **(23.00)** |

| | விபரங்கள் | ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் 31.03.2024 | ஒத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்புகள் 31.03.2024 | வருமான அறிக்கை 2023-24 | OCI 2023-24 |
|---|---|---|---|---|---|
| (a) | கால வேறுபாடு : நிலம்/கட்டிடங்கள், சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | - | 107.00 | 60.89 | - |
| (b) | நிதி சொத்துக்களில் மதிப்புக் குறைப்பு கொடுப்பனவுகள் | 784.00 | - | 147.07 | - |
| (c) | வரையறுக்கப்பட்ட பலன் திட்டத்தை மறு அளவீடு செய்வதால் வரும் ஆதாயம் / இழப்பு | - | - | - | - |
| (d) | மதிப்பு குறைக்கப்பட்ட விலையில் அளவீடு செய்யப்பட்ட கடன் பத்திரங்கள் | - | - | - | - |
| (e) | மதிப்பு குறைக்கப்பட்ட விலையில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் | - | - | - | - |
| (f) | நிலம்/கட்டிடங்கள், மற்றும் உபகரணங்கள் மறுமதிப்பீட்டின் ஆதாயம் | - | - | - | - |
| (g) | பயன்பாட்டுரிமை சொத்துக்கள் | 82.00 | - | 12.01 | - |
| (h) | திரும்ப மாற்றம் செய்யப்பட்ட மற்ற தொகைகள் | | - | (76.55) | |
| | கூடுதல் | **866.00** | **107.00** | **143.42** | **-** |

## குறிப்பு 11 நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்:

ரூ.லட்சத்தில்

| விவரம் | நிலம் (பிணையமற்ற) | கட்டிடங்கள் | மரச் சாமான்கள் மற்றும் பொறுத்துதல்கள் | கணினி | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | வாகனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| அடக்கவிலை | | | | | | | |
| 31.03.2024 அன்று | 5,470.00 | 1,364.82 | 1,655.63 | 932.69 | 452.59 | 38.19 | 9,913.92 |
| சேர்த்தல்கள்/ மறுவகைப்படுத்துதல்கள் | - | 40.27 | 260.70 | 27.99 | 83.50 | - | 412.46 |
| கழிக்க : நீக்குதல்கள் | - | - | 7.06 | 4.88 | 7.95 | - | 19.89 |
| நியாயமான மதிப்புகளில் மாற்றம் | | | - | | | | - |
| 31.03.2025 அன்று | **5,470.00** | **1,405.09** | **1,909.27** | **955.80** | **528.14** | **38.19** | **10,306.49** |
| திரண்டுள்ள தேய்மானம்: | | | | | | | |
| 31.03.2024 அன்று | - | 185.90 | 1074.36 | 824.94 | 252.43 | 11.03 | 2,348.66 |
| இந்த ஆண்டிற்கான தேய்மானம் | - | 58.52 | 97.51 | 52.30 | 42.91 | 7.03 | 258.27 |
| மறுவகைப்படுத்தல்கள் | - | - | - | - | - | - | - |
| கழிக்க : நீக்குதல்கள் | - | - | 6.72 | 4.64 | 6.44 | - | 17.80 |
| 31.03.2024 அன்று | **-** | **244.42** | **1,165.15** | **872.60** | **288.90** | **18.06** | **2,589.13** |
| கொண்டு செல்லப்படும் தொகை | | | | | | | |
| 31-03-2024 வரை | 5,470.00 | 1,178.91 | 581.28 | 107.75 | 200.16 | 27.16 | 7,565.26 |
| 31-03-2025 வரை | **5,470.00** | **1,160.67** | **744.12** | **83.20** | **239.24** | **20.13** | **7,717.36** |

நிறுவனத்தின் அசையா சொத்துக்களின் பத்திரங்கள் யாவும் நிறுவனத்தின் பெயரிலேயே உள்ளன.

நிறுவனம் எந்த ஒரு இரவல் பெயரிலும் சொத்துக்களை வைத்திருக்கவில்லை. மேலும், இரவல் பெயரில் சொத்து வைத்திருப்பதாக எந்தவித நடவடிக்கைகளும் தொடங்கப்படவில்லை அல்லது நிலுவையில் இல்லை.

### குறிப்பு 12 நடந்துகொண்டிருக்கிற மூலதன பணிகள்:

| விபரங்கள் | | நடப்பாண்டின் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிற மூலதனத்தின் தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஒரு வருடத்திற்கு குறைவானது | 1 முதல் 2 ஆண்டுகள் வரை | 2 முதல் 3 ஆண்டுகள் வரை | 3 வருடங்களுக்கு மேல் | மொத்தம் |
| (a) | முன்னேற்றத்திலுள்ள திட்டப் பணிகள் | - | - | - | - | - |
| (b) | தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திட்டப் பணிகள் | - | - | - | - | - |
| (c) | மென்பொருள் | 23.60 | 47.20 | - | 35.40 | 106.20 |
| (d) | கட்டிடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 18.25 | - | - | - | 18.25 |
| | கூடுதல் | **41.85** | **47.20** | **-** | **35.40** | **124.45** |

### குறிப்பு 13 பயன்பாட்டு உரிமை உள்ள சொத்துக்கள்

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | ROU கட்டிடங்கள் |
|---|---|
| மொத்த தொகுதி மதிப்பு (அடக்க விலையில்) | |
| 01.04.2024 அன்று | **3,854.94** |
| Ind As-116 கடைபிடிக்கப்பட்டதால் மறு வகை செய்யப்பட்டது. | |
| சேர்த்தல்கள் | 722.51 |
| நீக்குதல்கள | - |
| 31.03.2025 அன்று | **4,577.45** |
| திரண்ட தேய்மானம் | |
| 31.03.2024 அன்று வரை | **1,755.41** |
| சேர்த்தல்கள் | 442.01 |
| கழித்தல்கள் | - |
| 31.03.2025 அன்று வரை | **2,197.41** |
| கொண்டு செல்லப்படும் தொகை | |
| 31-03-2024 அன்று | **2,099.54** |
| 31-03-2025 அன்று | **2,380.04** |

### குறிப்பு 14 அருவச் சொத்துக்கள்

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | கணினி மென்பொருள் |
|---|---|
| மொத்த தொகுதி மதிப்பு, அடக்க விலையில் | |
| 31.03.2024 அன்று | **137.14** |
| சேர்த்தல்கள் | 3.00 |
| நீக்குதல்கள் | - |
| 31.03.2025 அன்று | **140.14** |
| திரண்ட மதிப்பிழப்பு | |
| 31.03.2024 அன்று வரை | **90.94** |
| நடப்பாண்டில் ஏற்பட்ட மாற்றம் | 29.95 |
| நீக்குதல்கள் | - |
| 31.03.2025 அன்று வரை | **120.89** |
| கொண்டு செல்லப்படும் தொகை | |
| 31.03.2024 அன்று | **46.20** |
| 31.03.2025 அன்று | **19.25** |

நடப்பாண்டில், நிறுவனத்தின் அருவச் சொத்துக்கள் மறு மதிப்பீடு செய்யப்படவில்லை.

## குறிப்பு 15 இதர நிதி அல்லா சொத்துக்கள்

ரூ.லட்சத்தில்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | முன்கூட்டியே செலுத்தப்பட்ட குழு காப்பீடு (EDLI) | 42.46 | 31.45 |
| (b) | முன்கூட்டியே செலுத்தப்பட்ட செலவுகள் | 212.44 | 413.15 |
| (c) | ஆட்சேபத்துடன் செலுத்தப்பட்ட வருமான வரி | 425.90 | 425.90 |
| (d) | பல்வேறு வரவேண்டிய தொகைகள் | 94.22 | 102.68 |
| (e) | புத்தகங்கள் மற்றும் படிவங்களின் இருப்பு | 15.48 | 17.75 |
| (f) | இதர முன்பணங்கள் | 158.55 | 25.92 |
| | கூடுதல் | **949.05** | **1,016.85** |

## குறிப்பு 16 வைப்புகள்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| | மதிப்பு குறைக்கப்பட்ட விலையில் | | |
| (a) | மற்றவர்களிடமிருந்து - உறுப்பினர்கள் | 4,71,748.99 | 3,81,139.55 |
| | கூடுதல் | **4,71,748.99** | **3,81,139.55** |

## குறிப்பு 17 இதர நிதி பொறுப்புகள்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | உரிமை கோரப்படாத பங்காதாயம் | 307.01 | 286.62 |
| (b) | வைப்புகள் மீது திரண்ட வட்டி* | 8,344.42 | 830.76 |
| (c) | சட்ட ரீதியாக செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் | 394.40 | 293.53 |
| (d) | கொடுபட வேண்டிய ஏல உபரி | 255.97 | 242.98 |
| (e) | குத்தகை பொறுப்பு | 2,760.90 | 2,426.14 |
| | கூடுதல் | **12,062.70** | **4,080.03** |

*2024-25 -ல் வைப்புத்திட்டங்களின் மாற்றத்தால், வைப்புகளின் மீதான திரள் வட்டியில் கணிசமாக அதிகரிப்பு உள்ளது.

## குறிப்பு 18 ஒதுக்கீடுகள்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | அடமானக் கடன்களுக்கான ஒதுக்கீடு | 84.52 | 97.41 |
| (b) | ஊழியர்கள் நலன்களுக்கான ஒதுக்கீடு | 3150.04 | 2,838.65 |
| (c) | நடப்பாண்டின் வரிக்கான ஒதுக்கீடு | 37.62 | 105.37 |
| (d) | வழக்குகளின் கீழ் உள்ள நகைக் கடன்களுக்கான ஒதுக்கீடு | 1649.46 | 1,649.46 |
| (e) | இதர ஒதுக்கீடுகள் | 5.27 | 17.26 |
| | கூடுதல் | **4926.91** | **4,708.15** |

**இந்த ஆண்டில் பணியாளர்களின் பலன்கள் அல்லாமல் மற்றவைகளுக்கான ஒதுக்கீடுகளில் நிலை மாற்றம்**

| விபரங்கள் | வழக்குகள் | இதர சொத்துக்கள் | கூடுதல் |
|---|---|---|---|
| 31.03.2024 அன்று | **1649.46** | **97.41** | **1746.87** |
| இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டவை / கொடுக்கப்பட்டவை | - | 12.88 | 12.88 |
| நடப்பாண்டிற்கான ஒதுக்கீடு | - | - | - |
| 31.03.2025 அன்று | **1649.46** | **84.52** | **1733.98** |

வழக்குகள்: வழக்குகளுக்கான ஒதுக்கீடுகள் நடப்பு அல்லது சாத்தியமான உரிமை கோரல்கள் அல்லது ஒப்பந்தங்கள் அல்லது சட்டம் அல்லது இதர ஒழுங்குமுறை பொறுப்புக்களை நிறைவேற்றாததால் வந்த வாடிக்கையாளர்கள் அல்லது எதிர் தரப்பினர்கள் அல்லது உரிமையியல் வழக்குகளில் உள்ள மற்ற நபர்களிடமிருந்து விளைந்த அல்லது விளையக்கூடிய உரிமைகோரல்கள் இவைகள் மூலம் எழுகின்றன.

**குறிப்பு 19 இதர நிதி அல்லாத பொறுப்புகள்**

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | இதர பொறுப்புகள் | 295.21 | 188.79 |
| (b) | Ind AS நிலுவையிலுள்ள பொறுப்பு | 270.68 | 300.68 |
| | கூடுதல் | **565.89** | **489.47** |

**குறிப்பு 20 சமபங்கு மூலதனம்** ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| **அங்கீகரிக்கப்பட்டவை** | | |
| 4,00,00,000 மூலதன பங்குகள் Rs.10 வீதம் (4,00,00,000) | 4,000.00 | 4,000.00 |
| | 4,000.00 | 4,000.00 |
| **வெளியிடப்பட்டவை** | | |
| 3,05,58,477 மூலதன பங்குகள் Rs.10 வீதம் முழுமையாக வெளியிடப்பட்டது (3,03,26,322) | 3,055.85 | 3,032.63 |
| **வெளியிடப்பட்ட, ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் முழுமையாக செலுத்தப்பட்டவை** | | |
| 3,05,58,477 சம பங்குகள் Rs.10 வீதம் முழுமையாக செலுத்தப்பட்டது (3,03,26,322) | 3,055.85 | 3,032.63 |
| கூடுதல் | **3,055.85** | **3,032.63** |

a) பங்குகளின் எண்ணிக்கை மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மற்றும் முடிவில் உள்ள நிலுவைத் தொகைகள் இவைகளுக்குண்டான ஒத்திசைவு

| விபரங்கள் | எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 31.03.2020 அன்று வரை | 297.04 | 2970.35 |
| அந்த ஆண்டில் வெளியிடப்பட்டவை | 1.39 | 13.92 |
| 31.03.2021 அன்று வரை | 298.43 | 2,984.27 |
| அந்த ஆண்டில் வெளியிடப்பட்டவை | 1.43 | 14.34 |
| 31.03.2022 அன்று வரை | 299.86 | 2,998.61 |
| அந்த ஆண்டில் வெளியிடப்பட்டவை | 1.77 | 17.71 |
| 31.03.2023 அன்று வரை | 301.63 | 3,016.32 |
| அந்த ஆண்டில் வெளியிடப்பட்டவை | 1.63 | 16.31 |
| 31.03.2024 அன்று வரை | 303.26 | 3,032.63 |
| அந்த ஆண்டில் வெளியிடப்பட்டவை | 2.33 | 23.22 |
| 31.03.2025 அன்று வரை | **305.59** | **3,055.85** |

**b)** நிறுவனத்தில் எந்த பங்குதாரரும் 5% -க்கு மேல் சம உரிமை பங்குகள் வைத்திருக்கவில்லை.

**c)** நடப்பாண்டில் அறிக்கை தேதிக்கு உடனே உள்ள முந்தைய 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பணம் இல்லாமல் மற்ற ஈட்டுப்பயன்மேல் வெளியிடப்பட்ட சம பங்குகள் / போனஸ் பங்குகள் ஏதுமில்லை.

**d)** தோற்றுவிப்பாளர்களின் மூலதன பங்குகள் : ஏதும் இல்லை.

### செயல்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் வருமானம்

### குறிப்பு 21 வட்டி வருமானம்

ரூ.லட்சத்தில்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| | மதிப்பிழப்பு விலையில் அளவிடப்பட்ட சொத்துக்கள் மேல் | | |
| (a) | நகைக்கடன்கள், வைப்புகள் மீதான கடன்கள் மீதான வட்டி | 57,676.10 | 43,920.35 |
| (b) | வங்கி வைப்புகளின் மீதான வட்டி | 4,221.02 | 3,712.65 |
| | கூடுதல் | **61,897.12** | **47,633.00** |

### குறிப்பு 22 கட்டணம் மற்றும் தரகு வருமானம்

ரூ.லட்சத்தில்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | ஆவணங்களுக்கான கட்டணம் | 16.37 | 20.15 |
| (b) | சேவை கட்டணங்கள் | 6.30 | 6.08 |
| | கூடுதல் | **22.67** | **26.23** |

### குறிப்பு 23 நியாயமான மதிப்பு மாற்றங்களால் ஏற்படும் நிகர ஆதாயம்

| விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| மதிப்பிழப்பு விலை மூலம் நிதிக்கருவிகளின் நியாயமான மதிப்பின் நிகர ஆதாயம் | | |
| - மதிப்பிழப்பு செய்யப்பட்ட நிதிக்கருவிகள் மூலம் | 107.17 | 325.06 |
| - மதிப்பு குறைப்புக் கொடுப்பனவுகளில் மாற்றத்தின் மீது | - | - |
| நியாயமான மதிப்பு மாற்றங்களால் ஏற்படும் ஆதாயங்களின் மொத்த நிகர லாபம் (A) | **107.17** | **325.06** |
| நியாயமான மதிப்பு மாற்றங்கள் | | |
| - கிடைக்கப்பெறாதது | 107.17 | 325.06 |
| நியாயமான மதிப்பு மாற்றங்களால் ஏற்படும் ஆதாயங்களின் மொத்த நிகர ஆதாயம் (B) | **107.17** | **325.06** |

### குறிப்பு 24 இதர வருமானம்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | நிலம் / கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நீக்குதல்களால் வரும் நிகர ஆதாயம் / இழப்பு | 2.62 | (2.77) |
| (b) | இனிமேல் தேவையில்லை என்பதால் திருப்பி எழுதப்பட்ட ஒதுக்கீடுகள் | - | - |
| (c) | இதர வருமானம் | 26.19 | 26.93 |
| | கூடுதல் | **28.81** | **24.16** |

### குறிப்பு 25 நிதி செலவுகள்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| | மதிப்பிழப்பு செலவில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிப் பொறுப்புக்களில் | | |
| (a) | வைப்புகளின் மீதான வட்டி | 36,483.37 | 26,969.34 |
| (b) | கடன்களின் மீதான வட்டி | - | |
| (c) | குத்தகைப் பொறுப்பின் மீதான நிதி செலவுகள் | 187.99 | 166.58 |
| | கூடுதல் | **36,671.36** | **27,135.92** |

### குறிப்பு 26 நியாயமான மதிப்பீட்டு மாறுபாடுகளின் மீது நிகர இழப்பு

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| - நிதிக்கருவிகளை மதிப்பிழப்பு விலையில் நீக்கியதால் | 39.91 | 7.00 |
| - மதிப்புக் குறைப்புக் கொடுப்பனவில் மாற்றம் | - | - |
| நியாயமான மதிப்பீடு மாற்றங்களால் ஏற்பட்ட நிகர நட்டம் (A) | **39.91** | **7.00** |
| நியாயமான மதிப்பீடு மாற்றங்கள் | - | - |
| - கிடைக்கப்பெறாதது | 39.91 | 7.00 |
| நியாயமான மதிப்பீடு மாற்றங்களால் ஏற்பட்ட மொத்த நிகர நட்டம் (B) | **39.91** | **7.00** |

### குறிப்பு 27 ஊழியர் நலச்செலவுகள்

ரூ.லட்சத்தில்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | சம்பளம் மற்றும் ஊதியங்கள் | 7,766.10 | 7,094.83 |
| (b) | பணியாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர நிதிகளுக்கு பங்களிப்பு | 930.44 | 1,054.95 |
| (c) | ஊழியர் நலச்செலவுகள் | 143.73 | 122.80 |
| | கூடுதல் | **8,840.27** | **8,272.58** |

### குறிப்பு 28 தேய்மானம், மதிப்பிழப்பு மற்றும் மதிப்பு பாதிப்பு

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | உருவச் சொத்துக்களின் மீது தேய்மானம் | 258.28 | 268.80 |
| (b) | முதலீட்டு சொத்துக்களின் மீது தேய்மானம் | - | - |
| (c) | அருவச் சொத்துக்களுக்கான மதிப்புக் குறைப்பு | 29.95 | 46.55 |
| (d) | பயன்பாட்டுரிமை உள்ள சொத்துக்கள் மீது தேய்மானம் | 442.01 | 393.18 |
| | கூடுதல் | **730.24** | **708.53** |

### குறிப்பு 29 இதர செலவுகள்

| | விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|---|
| (a) | ஆற்றல் செலவு | 142.66 | 134.93 |
| (b) | பழுது மற்றும் பராமரிப்பு | - | - |
| | - வாகனங்கள் | 1.68 | 0.58 |
| | - மற்றவை | 161.77 | 108.83 |
| (c) | சொத்து தொடர்பான வரிகள், மற்றைய வரிகள் | 87.37 | 34.11 |
| (d) | அச்சிடுதல் மற்றும் எழுதுபொருள் | 159.16 | 133.53 |
| (e) | விளம்பரங்கள் மற்றும் வெளிப்படுத்துதல் | 13.88 | 37.11 |
| (f) | இயக்குநர்களின் ஊதியம், இதர பலன்கள் மற்றும் செலவுகள் | 164.94 | 129.78 |
| (g) | தணிக்கையாளர்களின் கட்டணம் மற்றும் செலவுகள் [காண்க குறிப்பு (i)] | 31.50 | 25.00 |
| (h) | தொடர்புகள் சம்பந்தப்பட்ட செலவுகள் | 197.62 | 225.78 |
| (i) | சட்டம் மற்றும் தொழில் முறை செலவுகள் | 84.27 | 57.55 |
| (j) | காப்பீட்டுக் கட்டணங்கள் | 168.30 | 124.50 |
| (k) | வங்கி கட்டணங்கள் | 7.30 | 2.41 |
| (l) | பயண செலவுகள் | 20.02 | 16.16 |
| (m) | உள் தணிக்கைக் கட்டணம் | 160.28 | 134.99 |
| (n) | பெரு நிறுவன சமுதாய பொறுப்பு [காண்க குறிப்பு (ii)] | 191.94 | 179.56 |
| (o) | இதர செலவினங்கள் | 146.58 | 170.48 |
| | கூடுதல் | **1739.27** | **1515.30** |

### குறிப்பு (i) தணிக்கையாளர்களுக்கான கட்டணம் (g)

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| a) சட்டப்படியான தணிக்கை கட்டணங்கள் | 25.00 | 22.00 |
| b) வரிகள் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு | - | - |
| c) நிறுவன சட்ட விடயங்களுக்கு | - | - |
| d) இதர சேவைகளுக்கு | - | - |
| e) செலவுகளை ஈடு செய்வது தொடர்பாக | 6.50 | 3.00 |
| கூடுதல் | **31.50** | **25.00** |

குறிப்பு (ii) நடப்பு **CSR** செலவினங்களுக்கான விபரங்கள் **29 (m)** ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| a) இந்த வருடத்தில் நிறுவனம் செலவழிக்க வேண்டிய மொத்த தொகை | 189.92 | 171.77 |
| b) நடப்பாண்டில் செலவு செய்யப்பட்ட தொகை | 191.94 | 179.56 |
| i) கட்டுமானம் செய்தல் / சொத்தைக் கையகப்படுத்துதல் | - | - |
| - ரொக்கமாக | - | - |
| - ரொக்கமாக மேலும் கொடுபட வேண்டியது | - | - |
| ii) மேலே (i)-ல் சொல்லப்பட்ட காரணம் இல்லாமல் | - | - |
| - ரொக்கமாக | 191.94 | 179.56 |
| - ரொக்கமாக மேலும் கொடுபட வேண்டியது | - | - |
| கூடுதல் | **191.94** | **179.56** |

குறிப்பு 30 வருமானவரி ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| நடப்பாண்டிற்கான வரி | 3,622.85 | 2,765.44 |
| நடப்பாண்டிற்கான வருமான வரியில் முந்தைய ஆண்டின் சரிகட்டல்கள் | (64.42) | - |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட வரியில் ஆரம்பத்தில் மற்றும் திருப்பி அளிக்கப்பட்டதில் உள்ள வேறுபாடு | 18.00 | (143.42) |
| நிறுவன இலாபம் / நட்ட கணக்கில் காட்டப்பட்ட வருமான வரிச்செலவு | **3,576.43** | **2,622.02** |
| இதர அனைத்தடக்க வருமானங்களின் (OCI) மீதான கணக்கிடப்பட்ட வருமான வரி | **-** | **-** |
| இந்த வருடத்தின் அனைத்தடக்க வருமானமாக கணக்கிடப்பட்ட வருமானங்களின் மீதான ஒத்தி வைக்கப்பட்ட வரி | **-** | **-** |
| வரையறுக்கப்பட்ட பலன் திட்டங்கள் மறு அளவீடு செய்தல் | (23.00) | - |
| OCI மீதான வருமான வரி | (23.00) | |
| நடப்பு வரி | - | - |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | (23.00) | - |
| **IND AS -** ன்படி வரிக்கு முந்தைய லாபம் | **14,034.71** | **10,238.09** |
| Ind AS சீரமைப்புகள் | 105.00 | - |
| வரிக்கு முந்தைய லாபத்தின் கணக்கீடு | **14,139.71** | **10,238.09** |
| இதர சிறப்பு பலன்கள்/அனுமதிக்கப்படாத இதர சிறப்பு பலன்கள் (நிகரம்) | 203.16 | 572.26 |
| வருமான வரிக்காக சீராய்வு செய்யப்பட்ட லாபம் | **14,342.87** | **10,810.36** |
| நடப்பாண்டிற்கான வரிகள், பதிவேடுகளின்படி (விளைவுறு விகிதம் 25.17%) | 3,622.85 | 2,727.05 |
| முந்தைய ஆண்டிற்கான வரிகளின் சீராய்வுகள் | (64.42) | 38.39 |
| **பதிவேடுகளின்படி மொத்த வரிகள்** | **3,558.43** | **2,765.44** |

## குறிப்பு 31 ஒரு பங்கிற்கான வருவாய்

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் கணக்கிடத் தேவையான நிகர லாபம் (ரூபாய் லட்சத்தில்) | 10,458.28 | 7,616.07 |
| ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் கணக்கிடத் தேவையான எடையிட்ட சராசரி சம பங்குகள் (எண்ணிக்கைகளில்) | 3,05,58,757 | 3,03,26,322 |
| புதிய பங்குகள் வெளியீட்டால் ஏற்படும் நீர்த்த விளைவு (ரூ.) | 1,26,741 | 87,615 |
| ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் கணக்கிடத் தேவையான எடையிட்ட சராசரி சம பங்குகள் (எண்ணிக்கைகள்) | 3,04,32,016 | 3,02,38,707 |
| ஒரு பங்கின் அடிப்படை வருவாய் (INR) | **34.22** | **25.11** |
| ஒரு பங்கின் நீர்த்த வருவாய் (INR) | **34.37** | **25.19** |

## குறிப்பு 32 ஓய்வூதிய நலத்திட்டங்கள்

**வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டம்**

தகுதி பெற்ற ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகிய ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர்கள் மாநில காப்பீடு திட்டங்களில் நிறுவனம் பங்களிப்பு செய்கிறது. இந்த திட்டங்களின் கீழ் செலவுகளில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை பங்களிப்பாக செய்ய வேண்டியிருக்கிறது. நிறுவன நடப்பாண்டில் தனது இலாப / நட்ட கணக்கில் ரூ.173.04 லட்சங்களை (31.03.2024 ரூ.175.48 லட்சங்கள்) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ரூ.2.77 லட்சங்களை (31.03.2024 ரூ.3.10 லட்சங்களை) ஊழியர்கள் மாநில காப்பீடு திட்டத்திற்கும் பங்களிப்புகளாக கணக்கிட்டுள்ளது. இந்த திட்டங்களுக்காக கொடுபட வேண்டிய பங்களிப்புகள் அந்தத் திட்டத்தின் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களின் அடிப்படையிலேயே உள்ளன.

**வரையறுக்கப்பட்ட பலன் திட்டம்**

நிறுவனம் வரையறுக்கப்பட்ட நலன் திட்டமாக பணிக்கொடை திட்டத்தை வைத்துள்ளது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியரும் நிறுவனத்தை விட்டு விலகும் போது, ஒவ்வொரு பணி முடித்த ஆண்டிற்கும் கடைசியில் பெற்ற ஊதியத்தில் 15 நாட்கள் ஊதியம் வீதம் பணிக்கொடையாக பெறுகிறார். நிறுவனம் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால் (LIC) நிர்வாகம் மற்றும் மேலாண்மை செய்யப்படும் பணிக்கொடை நிதிக்கு ஆண்டுக்கு ஒருமுறை பங்களிப்பு செய்கிறது. முன் கணிக்கப்பட்ட அலகு கடன் முறையைப் பயன்படுத்தி நிதியிடர் கணக்கியல் நிபுணரால் இருப்புநிலைக் குறிப்பன்று ஒரு சுயாதீன நிதி இடர் நிபுணரால் தீர்மானிக்கப்பட்ட தொகையை நிறுவனம் பொறுப்பாகக் கணக்கிடுகிறது.

கீழ்க்கண்ட அட்டவணை இலாப மற்றும் நட்ட அறிக்கையில் கணக்கிடப்பட்டுள்ள நிகர நலன் செலவின் கூறுகளையும் மற்றும் பணிக்கொடை திட்டத்திற்காக இருப்பு நிலைக் குறிப்பில் கணக்கிட்ட நிதியத்தின் பங்களிக்கப்பட்ட இருப்பு நிலை தொகைகளையும் சுருக்கமாகக் கூறுகிறது.

(ரூபாய்களில்)

| பணி அமர்த்தும் நிறுவனத்தின் செலவின் கூறுகள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| நடப்பு சேவை செலவுகள் | 1,18,18,200 | 1,88,29,643 |
| முந்தைய ஆண்டின் சேவை செலவு | | - |
| வரையறுக்கப்பட்ட பலன் பொறுப்பு / (சொத்து) மீதான நிகர வட்டி | 19,06,793 | 9,50,297 |
| பணி அமர்த்தும் நிறுவனத்தின் செலவுகளின் கூடுதல் | **1,37,24,993** | **1,97,79,940** |

### இதர அனைத்தடக்க வருவாயில் கணக்கிடப்பட்ட நிகர ஊழியர்கள் நல செலவு

ரூபாய்களில்

| இதர அனைத்தடக்க வருவாயின் (OCI) நிலை மாறுதல்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| நிதி அனுமானங்களால் நிதி இடர் கணிப்பியல் (இழப்பு)/ஆதாயம் | 20,14,083 | 52,21,413 |
| கடந்த வருட அனுபவங்களிலிருந்து நிதி இடர் கணிப்பியல் (இழப்பு)/ஆதாயம் | (93,55,881) | 2,58,95,127 |
| மக்கள் தொகை சார்ந்த அனுமானங்களிலிருந்து நிதி இடர் கணிப்பியல் (இழப்பு)/ஆதாயம் | - | 3,89,756 |
| திட்ட சொத்துக்களின் மீதான வருமானம் நிகர வரையறுக்கப்பட்ட பலன் பொறுப்பு / சொத்தில் சேர்க்கப்பட்டுள்ள வட்டி நீங்கலாக | (15,98,786) | (21,11,628) |
| ஆண்டு இறுதியில் இருப்பு இழப்பு/ (ஆதாயம்) | **(89,40,584)** | **2,93,94,668** |

### வரையறுக்கப்பட்ட நல பொறுப்புகளின் தற்போதைய மதிப்பின் மாறுதல்கள் பின்வருமாறு

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| ஆரம்பத்தில் வரையறுக்கப்பட்ட நல பொறுப்புகள் | **39,74,72,535** | **35,65,99,751** |
| உள்ளே/வெளியே மாற்றம் செய்தது | - | - |
| வட்டி செலவு | 2,55,20,402 | 2,36,99,291 |
| நடப்பு சேவைச் செலவு | 1,18,18,200 | 1,88,29,643 |
| பட்டுவாடா செய்யப்பட்ட நலன்கள் | (6,26,52,322) | (3,31,62,446) |
| முந்தைய சேவை செலவு | - | - |
| நிதியில் அனுமானங்களில் ஏற்பட்ட மாற்றங்களினால் ஏற்பட்ட நிதி இடர் கணிப்பியல் இழப்பு/(ஆதாயம்) | 20,14,083 | 52,21,413 |
| முந்தைய ஆண்டு அனுபவங்களால் ஏற்பட்ட நிதி இடர் கணிப்பியல் இழப்பு/(ஆதாயம்) | (93,55,881) | 2,58,95,127 |
| மக்கள்தொகை சார்ந்த அனுமானங்களில் ஏற்பட்ட மாற்றங்களினால் ஏற்பட்ட நிதி இடர் கணிப்பியல் (இழப்பு)/ஆதாயம் | - | 3,89,756 |
| இறுதியில் வரையறுக்கப்பட்ட நல பொறுப்பு | **36,48,17,017** | **39,74,72,535** |

### திட்ட சொத்துக்களில் நியாயமான மதிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| ஆரம்பத்தில் திட்ட சொத்துக்கள் மீதான நியாயமான மதிப்பு | **35,41,60,893** | **32,63,84,417** |
| உள்ளே/ வெளியே மாற்றம் செய்தது | - | - |
| எதிர்பார்த்த வருவாய் | 2,36,13,610 | 2,27,48,994 |
| பணி கொடுப்பவரின் பங்களிப்பு | 3,19,09,005 | 3,60,78,300 |
| பட்டுவாடா செய்யப்பட்ட நலன்கள் | (6,26,52,322) | (3,31,62,446) |
| நிதி இடர் கணிப்பியல் ஆதாயம் / (இழப்புகள்) | 15,98,786 | 21,11,628 |
| இறுதியில் திட்ட சொத்துக்களின் நியாயமான மதிப்பு | **34,86,29,971** | **35,41,60,893** |
| இருப்பு நிலை குறிப்பில் கணக்கிடப்பட்ட பொறுப்புகளின் இறுதி இருப்பு (நிகரம்) | **(1,61,87,046)** | **(4,33,11,642)** |

நிறுவனத்தின் திட்டங்களுக்கு பணிக்கொடை பொறுப்புக்களைத் தீர்மானிக்கும் முதன்மையான அனுமானங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| தள்ளுபடி விகிதம் | 6.88% | 6.97% |
| ஊதிய உயர்வு விகிதம் | 7.86% | 13.18% |
| ஊழியர்கள் விலகல் விகிதம் | 1.00% | 1.00% |
| சொத்துக்களின் மீது எதிர்பார்க்கப்படும் வருமான விகிதம்* | 6.88% | 6.97% |

மொத்த திட்ட சொத்துக்களின் சதவிகிதக் கூறுகள் ரூபாய்களில்

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| காப்பீடு நிறுவனத்தில் முதலீட்டு நிதி | - | - |
| - இதில் அலகு இணைக்கப்பட்டுள்ளது | 35,41,60,893 | 32,63,84,417 |
| - இதில் மரபு வழி / அலகு இணைக்கப்படாதது | - | - |
| பணம் மற்றும் பண மதிப்பிற்கு சமமானவைகள் | - | - |
| கூடுதல் | **35,41,60,893** | **32,63,84,417** |

| அனுமானங்கள் | 31.03.2025 | | | | 31.03.2024 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தள்ளுபடி விகிதம் | | எதிர்கால ஊதிய உயர்வு | | தள்ளுபடி விகிதம் | | எதிர்கால ஊதிய உயர்வு | |
| உணர்திறன் நிலைகள் | 1% உயர்வு | 1% குறைவு | 1% உயர்வு | 1% குறைவு | 1% உயர்வு | 1% குறைவு | 1% உயர்வு | 1% குறைவு |
| வரையறுக்கப்பட்ட பலன் பொறுப்புகளின் மீது விளைவுகள் [(உயர்வு) / (குறைவு)] | (2,10,77,647) | (2,41,53,744) | (2,25,91,279) | (2,08,12,670) | (1,16,57,869) | 1,24,36,916 | 1,19,79,822 | (1,15,34,653) |

பலன் செலவுகள் பட்டுவாடாக்களில் முதிர்வு காலங்களின் பகுப்பாய்வு

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| முதல் மறு ஆண்டு | 2,76,08,487 | 5,59,33,578 |
| 2-வது மறு ஆண்டு | 7,26,20,254 | 6,03,72,506 |
| 3-வது மறு ஆண்டு | 5,51,14,151 | 6,86,54,586 |
| 4-வது மறு ஆண்டு | 5,57,34,225 | 5,61,77,804 |
| 5-வது மறு ஆண்டு | 4,48,75,503 | 6,71,24,525 |
| 6 முதல் 10 வரை உள்ள வருடங்களின் கூடுதல் | 12,04,79,880 | 12,53,15,680 |

31.03.2025 அன்று வரையறுக்கப்பட்ட நலப் பொறுப்புகளின் எடையிட்ட சராசரி கால அளவு 12 வருடங்கள் (2024 : 12 வருடங்கள்)

* சொத்துக்களின் மீது ஒட்டுமொத்தமாக எதிர்பார்க்கப்படும் வருவாய் விகிதம், பொறுப்புக்கள் தீர்க்கப்பட வேண்டிய காலவட்டத்திற்குப் பொருந்தும் அந்த தேதியில் நிலவும் சந்தை விலைகளில் தீர்மானிக்கப்படுகிறது.

நிதி இடர் கணக்கியல் மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்பட்ட எதிர்கால ஊதிய உயர்வு, உத்தேச மதிப்பீடுகள், பண வீக்கம், பணிமூப்பு, பதவி உயர்வு மற்றும் வேலை வாய்ப்புச் சந்தையில் உள்ள வழங்கல் மற்றும் தேவை போன்ற தொடர்புடைய காரணிகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

காப்பீட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்படும், திட்ட சொத்துக்கள் பற்றிய விரிவான தகவல்கள் இல்லாத நிலையில், ஒவ்வொரு பெருவாரியான திட்டச் சொத்துக்களின் தொகுப்புகளின் உட்கூறுகள், ஒவ்வொரு வகைக்கும் திட்டச் சொத்துக்களின் நியாயமான மதிப்பிற்கும் உள்ள சதவிகிதம் அல்லது தொகை மற்றும் திட்டங்களால் உபயோகப்படுத்தப்பட்ட சொத்து, பொறுப்பு ஒப்பிடக்கூடிய உத்திகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

### குறிப்பு 33 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்வு பகுப்பாய்வு:

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் எப்பொழுது மீட்கப்படும் அல்லது தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதை பொறுத்து பகுப்பாய்வு செய்யப்படும் என்பதை கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது. வழித்தோன்றல்கள் 12 மாதங்களுக்குள் முதிர்வடையும் அல்லது திருப்பிச் செலுத்தப்படும் என்ற வகையில் வகைப்படுத்தப்படுகின்றன. நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு கடன்கள் / அட்வான்ஸ் பொறுத்தவரை EIR-ஐ மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் எதிர்பார்க்கப்படும் திருப்பி செலுத்தும் நடத்தையின் அதே அடிப்படையை நிறுவனம் பயன்படுத்துகிறது. வழங்கப்பட்ட உள் ஒப்பந்தம் செய்யப்பட்ட பத்திரத்தின் முகமதிப்பின் மீது உள்ள மதிப்பிழப்புக்களை பிரதிபலிக்கிறது.

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31-03-2025 | | | 31-03-2024 | | |
|---|---|---|---|---|---|---|
| | 12 மாதங்களுக்கு | 12 மாதங்களுக்குப் பிறகு | கூடுதல் | 12 மாதங்களுக்கு | 12 மாதங்களுக்குப் பிறகு | கூடுதல் |
| **சொத்துக்கள்** | | | | | | |
| **நிதி சொத்துக்கள்** | | | | | | |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | 25,959.70 | | 25,959.70 | 14,077.35 | | 14,077.35 |
| வங்கி கையிருப்பு - மேற்கூறியவை அல்லாமல் | 45,291.51 | | 45,291.51 | 42,087.07 | | 42,087.07 |
| கடன்கள் | 4,40,990.01 | 9,140.32 | 4,50,130.33 | 3,49,403.94 | 8,771.31 | 3,58,175.25 |
| இதர நிதி சொத்துக்கள் | 22,814.95 | 483.50 | 23,298.45 | 16,879.44 | 5,094.24 | 21,973.68 |
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | | | | |
| நடப்பாண்டிற்கான வரி சொத்துக்கள் (நிகரம்) | - | - | - | - | - | - |
| ஒத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்கள் (நிகரம்) | - | 718.01 | 718.01 | - | 759.00 | 759.00 |
| நிலம்/கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | - | 7,717.36 | 7,717.36 | | 7,565.26 | 7,565.26 |
| முன்னேற்ற நிலையில் உள்ள மூலதனப்பணிகள் | 18.25 | 106.20 | 124.45 | - | - | - |
| பயன்பாட்டுரிமை உள்ள சொத்துக்கள் | 23.76 | 2,356.27 | 2,380.03 | 16.77 | 2,082.77 | 2,099.54 |
| இதர அருவச் சொத்துக்கள் | | 19.25 | 19.25 | | 46.20 | 46.20 |
| இதர நிதி அல்லாத சொத்துக்கள் | 349.12 | 599.92 | 949.04 | 356.91 | 659.94 | 1,016.85 |
| **சொத்துக்களின் கூடுதல் (A)** | **5,35,447.30** | **21,140.83** | **5,56,588.13** | **4,22,821.48** | **24,978.72** | **4,47,800.20** |
| பொறுப்புகள் | | | | | | |
| **நிதி பொறுப்புகள்** | | | | | | |
| வைப்புகள் | 4,70,812.27 | 936.72 | 4,71,748.99 | 3,80,240.25 | 899.30 | 3,81,139.55 |
| இதர நிதி பொறுப்புகள் | 9,213.43 | 2,849.27 | 12062.70 | 1,767.17 | 2,288.07 | 4,055.24 |
| **நிதி அல்லாத பொறுப்புகள்** | | | | | | |
| **ஒதுக்கீடுகள்** | 4,926.91 | - | 4,926.91 | 4,732.95 | - | 4,732.95 |
| இதர நிதி அல்லாத பொறுப்புகள் | 295.21 | 270.68 | 565.89 | 188.78 | 300.68 | 489.46 |
| **பொறுப்புகளின் கூடுதல் (B)** | **4,85,247.82** | **4,056.67** | **4,89,304.49** | **3,86,929.15** | **3,488.05** | **3,90,417.20** |
| **நிகரம் (A-B)** | **50,199.48** | **17,084.16** | **67,283.64** | **35,892.33** | **21,490.67** | **57,383.00** |

### குறிப்பு 34 நிதியளித்தல் நடவடிக்கைகள் மூலம் பொறுப்புகளில் ஏற்படும் மாற்றங்கள்

நிறுவனம் எவ்வித கடனும் வாங்கவில்லை. எனவே நிதிச் செயல்பாடுகளிலிருந்து எழும் பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏதுவுமில்லை.

## குறிப்பு 35 நிச்சயமற்ற பொறுப்புகள், ஏற்றுக்கொண்ட பொறுப்புகள் மற்றும் குத்தகை ஏற்பாடுகள்

**(A) நிச்சயமற்ற பொறுப்புக்கள்**

கடந்தகால நிகழ்வுகளால் உருவான எதிர்காலத்தில் நிகழும் அல்லது நிகழாமல் இருக்கக்கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட, நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளால் உறுதி செய்யப்பட்ட சாத்தியமான பொறுப்பு, நிச்சயமற்ற எதிர்கால பொறுப்பு ஆகும். நிச்சயமற்ற பொறுப்பு என்பது ஒரு பொறுப்பைத் தீர்க்க ஆதாரங்கள் தேவைப்படும் என்பது நிச்சயமில்லாததால் கணக்கிடப்படாத தற்போதைய பொறுப்பை உள்ளடக்கியது. ஒரு பொறுப்பை நம்பகமாக அளவீடு செய்ய இயலாதபோதும் நிச்சயமற்ற பொறுப்பு உருவாகிறது. நிறுவனம் நிச்சயமற்ற பொறுப்பை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால், அதனுடைய இருப்பை நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடுகிறது. நிறுவனம் இந்தப் பொருள்கள் சம்பந்தமாக சட்டக்கருத்துக்களை பெற்று, அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் சாதகமான பலன் கிடைக்கும் என்று நம்புகிறது.

ரூ.லட்சத்தில்

| | கொடுபட வேண்டியவைகளின் தன்மை | தொகை |
|---|---|---|
| A. | நிச்சயமற்ற எதிர்கால பொறுப்புக்கள்: நிறுவனம் கொடுபடவேண்டும் என்று ஒப்புக்கொள்ளாத நிறுவனத்திற்கு எதிரான உரிமை கோரிக்கை | |
| | வருமான வரி கோருதல்கள் | ரூ. 97.00 |

**(B) குத்தகை பற்றி வெளிப்படுத்துதல் - கிளைக் கட்டிடங்களின் குத்தகை**

(i) அனைத்து குத்தகை ஒப்பந்தங்களுக்கும் தர நிலைகளின் கீழ் உள்ள Ind AS 116-ன்படி "குத்தகைகள் தரநிலை" அனுசரிக்கப்படுகிறது. அதிகரிப்போடு இணைந்த கடன் பெறும் வட்டி விகிதத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட குத்தகைப் பட்டுவாடாக்களின் தற்போதைய மதிப்பை நிறுவனம் குத்தகைப் பொறுப்பாக பதிவு செய்கிறது. பயன்பாட்டுரிமையுள்ள சொத்தை குத்தகை பொறுப்பின் ஆரம்ப அளவீட்டில் உள்ள மதிப்பில் அளவீடு செய்கிறது.

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ளவை ஆரம்பப் பயன்பாட்டின்போது தேர்வு செய்யப்பட்ட நடைமுறை தரமுறைகளின் தொகுப்பு ஆகும்.

1. ஒத்த முடிவு தேதி பெற்ற, ஒத்த பொருளாதார சூழ்நிலையில் உள்ள ஒத்த குத்தகைச் சொத்துக்களின் தொகுப்பின் மீது ஒற்றைத் தள்ளுபடி விகிதம் பயன்படுத்தப்பட்டது. ஒத்த காலக்கெடு உள்ள கடன்களின், அதிகரிப்போடு இணைந்த கடன் பெறும் விகிதம் தள்ளுபடி விகிதமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.
2. Ind AS-க்கு மாறுகை செய்யும் தேதியன்று பயன்பாட்டுரிமை உள்ள சொத்தின் அளவீடுகளிலிருந்து, ஆரம்ப நேரடி அடக்கவிலை விலக்கப்பட்டது.

(iii) நிறுவனம் கிளை வளாகங்களைக் குத்தகைக்கு எடுக்கிறது. கீழே கொடுக்கப்பட்டவைகள், கொண்டு செல்லும் மதிப்பில், இந்த ஆண்டின்போது ஏற்பட்டுள்ள, மாற்றங்கள் ஆகும்.

**பயன்பாட்டுரிமையுள்ள சொத்துக்கள்** (ரூபாய்களில்)

| விபரங்கள் | தொகை |
|---|---|
| 31.03.2024 அன்று இருப்பு | 20,99,54,121 |
| சேர்த்தல்கள் | 7,85,59,226 |
| நீக்கல்கள் | (63,08,287) |
| பயன்பாட்டுரிமையுள்ள சொத்துக்களின் பண மதிப்பிழப்பு | (4,42,01,144) |
| 31.03.2025 அன்று இருப்பு | 23,80,03,916 |

**குத்தகைப் பொறுப்புகள்**

| விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| தொடக்க இருப்பு | 24,26,13,829 | **22,17,84,284** |
| சேர்த்தல்கள் | 7,22,50,939 | 5,52,93,889 |
| குத்தகைப் பொறுப்புகள் பட்டுவாடா | (5,75,74,287) | (5,14,36,145) |
| இந்த கால வட்டத்தில் திரண்ட நிதிச் செலவு | 1,87,99,182 | 1,69,71,801 |
| இறுதி இருப்பு | **27,60,89,663** | **24,26,13,829** |

**இலாப மற்றும் நட்ட அறிக்கையில் கணக்கிடப்பட்ட தொகைகள்**

| விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| பயன்பாட்டு உரிமையுள்ள சொத்துக்கள் மீதான தேய்மானச் செலவுகள் | 4,42,01,144 | 3,93,17,977 |
| குத்தகை பொறுப்புகளின் மீதான வட்டிச் செலவுகள் | 1,87,99,182 | 1,66,57,737 |

குத்தகைகளில் மொத்தமாக வெளியே சென்ற தொகை ரூ.575.74 லட்சம் (31.03.2024 ரூ.514.36 லட்சம்)

**குத்தகை பொறுப்புகளின் முதிர்ச்சி நிலை பகுப்பாய்வு**

| விபரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேல் இல்லாதவை | 4,10,80,019 | 14,37,793 |
| ஒரு வருடத்திற்கு மேல் ஆனால் 4 வருடங்களுக்கு மேல் இல்லாதவை | 12,29,80,845 | 3,52,39,667 |
| 4 வருடங்களுக்கு மேல் உள்ளவை | 11,20,28,800 | 20,59,36,370 |

நிறுவனம் குத்தகைப் பொறுப்புகளை எதிர்கொள்ள பொருட்படத்தக்க நிதிபோக்கு இடர் எதையும் சந்திப்பதில்லை. குத்தகைப் பொறுப்புகள் நிர்வாகத்தின் நிதி குழுவால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றன.

**குறிப்பு 36 பெரு நிறுவன சமூக பொறுப்பு**

(ரூபாய்களில்)

| விவரங்கள் | 31.03.2025 | 31.03.2024 |
|---|---|---|
| இந்த ஆண்டின் போது நிறுவனத்தால் செலவிடப்பட வேண்டிய தொகை | 1,89,92,000 | 1,71,76,733 |
| செலவு செய்யப்பட்ட தொகை | 1,91,94,237 | 1,79,55,904 |
| ஆண்டு இறுதியில், குறைத்து செலவிடப்பட்டது/கூடுதல் செலவிடப்பட்டது | (2,02,237) | (7,79,171) |
| முந்தைய வருடங்களில் குறைத்து செலவிடப்பட்ட தொகைகளின் கூடுதல் | - | - |
| குறைத்து செலவிடப்பட்டதற்கான காரணங்கள், தொடர்புடையோர்களுடன் பரிவர்த்தனைகளின் பொறுப்பாகி பட்டுவாடா செய்ய ஒதுக்கீடு | - | - |
| ஒப்பந்தம் செய்யப்பாட்டுகளின் கால ஏற்பட்டுள்ள பொறுப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா | - | - |

CSR நடவடிக்கைகளின் தன்மை

வறுமை, பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளைக் குறைத்தல், வராமல் தடுக்கும் சுகாதார பராமரிப்பு உட்பட சுகாதார நலன் காத்தலை மேம்படுத்துதல், சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல், துப்புறவு வசதிகளை மேம்படுத்துதல், கிராமப்புறங்களில் விளையாட்டை மேம்படுத்துதல், கல்வியை மேம்படுத்துதல் மற்றும் வகுப்பறைகளை புனரமைத்தல்.

## குறிப்பு 37 நிறுவனத்திற்கு தொடர்புடைய நபர்கள் அவர்கள் தொடர்புடைய பரிவர்த்தனைகள்

ரூ.லட்சத்தில்

| வ. எண் | தொடர்புடைய நபர்களின் பெயர்கள் | தொடர்புடைய நபர்களின் தன்மை | 31 மார்ச் 2025 | | | | 31 மார்ச் 2024 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கூட்டத்தில் பங்கேற்றதற்கான கட்டணம் | ஊதியம் | செலுத்திய வட்டி | செலுத்திய பங்காதாயம் | கூட்டத்தில் பங்கேற்றதற்கான கட்டணம் | ஊதியம் | செலுத்திய வட்டி | செலுத்திய பங்காதாயம் |
| 1. | திரு.S.கல்யாணசுந்தரம் | தலைவர் | 3.50 | 20.05 | Nil | 0.22 | 3.80 | 13.64 | Nil | 0.22 |
| 2. | திரு.S.இராமலிங்கம் | துணைத்தலைவர் | 3.60 | 20.05 | Nil | 0.43 | 3.70 | 13.64 | 0.24 | 0.43 |
| 3. | திரு.PR.P.வேலப்பன் | மேலாண் இயக்குநர் | Nil | Nil | Nil | 0.13 | Nil | Nil | Nil | 0.13 |
| 4. | திரு.G.அன்பழகன் | இயக்குநர் | 3.60 | 20.05 | 3.65 | 1.25 | 3.10 | 13.64 | Nil | 1.25 |
| 5. | திரு.B.பிரகாசம் | இயக்குநர் | 3.20 | 20.05 | 0.14 | 1.66 | 3.60 | 13.64 | 0.18 | 1.66 |
| 6. | திரு. G.துரைராஜ் | இயக்குநர் | 3.50 | 20.05 | Nil | 0.15 | 3.80 | 13.64 | Nil | 0.15 |
| 7. | திருமதி. E.அம்பிகா | இயக்குநர் | 3.60 | 20.05 | Nil | 0.01 | 3.80 | 13.64 | Nil | 0.01 |
| 8. | திரு. M.குரு பிரசாந்த் | இயக்குநர் | 3.60 | 20.05 | Nil | 0.01 | 3.80 | 13.64 | Nil | 0.01 |
| 9. | திரு. S.ஹரிஹரன் | இயக்குநர் | Nil | Nil | Nil | 0.01 | 1.80 | 6.89 | 0.15 | 0.01 |

| வரிசை எண் | தொடர்புடைய நபர்களின் பெயர்கள் | 01.04.2024 முதல் 31.03.2025 வரை பெற்ற டெபாசிட்டுகளின் விபரம் | 31.03.2025 தேதியில் நிலுவையில் உள்ள டெபாசிட்டுகளின் விபரம் |
|---|---|---|---|
| 1. | திரு.**G.**அன்பழகன், இயக்குநர் | 150.00 | 150.00 |
| 2. | திரு.**B.**பிரகாசம், இயக்குநர் | 0.81 | 0.81 |
| | கூடுதல் | **150.81** | **150.81** |

### அளிக்கப்பட்ட ஊதியம்

| விபரங்கள் | தொடர்புடைய நபர்களின் தன்மை | 31 மார்ச் 2025 | 31 மார்ச் 2024 |
|---|---|---|---|
| திரு.PR.P.வேலப்பன் | மேலாண் இயக்குனர் | 36.00 | 36.00 |
| திரு.S.சண்முகம் | பொது மேலாளர் & தலைமை நிதி அதிகாரி | 21.52 | 15.26 |
| திரு.V.விஜயக்குமார் | நிறுவன செயலர் | - | 2.80 |
| திருமதி.ஸ்வீட்டி ஜுன்ஜுன்வாலா | நிறுவன செயலர் | 0.08 | - |
| திரு.S.கண்ணன் | நிறுவன செயலர் | 4.44 | - |

குறிப்புகள் :

a) நிர்வாகம் பெற்ற அறிக்கை மற்றும் இதர பதிவேடுகளின் அடிப்படையில் நிறுவனத்திற்கு தொடர்புடைய நபர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

b) நிர்வாகத்தின் முக்கிய நிர்வாகப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தில் பணிக்கொடை மற்றும் விடுமுறை பலன்கள் ஆகியவைகளுக்கான ஒதுக்கீடுகள், நிறுவனம் முழுவதற்குமான நிதி இடர் கணிப்பியல் மதிப்பீட்டின்படி தீர்மானிக்கப்படுவதால், கணக்கில் கொள்ளப்படவில்லை.

**முக்கிய நிர்வாகப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியங்கள்:**

முக்கிய நிர்வாகப்பணியாளர் என்பவர் திட்டமிடல் மற்றும் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிறுவனத்தின் செயல்பாடுகளையும் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் மற்றும் பொறுப்பும் உடைய தனி மனிதர்கள் ஆவார்கள். Ind AS 24 தொடர்புடையவர்கள் பற்றிய விபரங்களைக் காண்பிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக, நிறுவனம் சுயாதீன இயக்குநர்கள் மற்றும் இணை குழுக்களின் இயக்குனர்கள் உட்பட இயக்குநரவையின் உறுப்பினர்களை முக்கிய நிர்வாக அதிகாரிகளாக கருதுகிறது.

| விபரங்கள் | **31.03.2025** | **31.03.2024** |
|---|---|---|
| ஊழியர்களின் குறுகிய கால பலன்கள் | 36.00 | 36.00 |
| மொத்தம் | **36.00** | 36.00 |

**குறிப்பு 38 மூலதன மேலாண்மை :**

வணிகச் செயல்பாடுகள், மூலோபாய முதலீடுகள் செய்தல் மற்றும் சட்டப்படி நிறைவேற்ற வேண்டியவைகளுக்கான தேவைகள் மற்றும் பங்குதாரர்களுக்கு நியாயமான வருமானம் ஈட்டி கொடுத்தல் போன்றவற்றை உறுதி செய்வதே நிறுவனத்தின் மூலதன மேலாண்மை அறிவுசார் மூலோபயமாகும். சம உரிமை பங்கு மூலதனம் மற்றும் இதர பங்குதாரர்கள் சம உரிமைச் செல்வங்கள் (Other equities) மூலதன மேலாண்மைக்காக கருத்தில் கொள்ளப்படுகின்றன. நிதிகளுக்காக பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம், நிறுவனம் குறிப்பிட்ட நிகர சொந்த நிதி (NOF) விகிதத்தையும், மற்றும் பாரதீனப்படுத்தப்பட முடியாத நிதிகளையும் நிறுவனம் கண்காணிக்கிறது. நடைமுறையில் உள்ள விதிகளின்படி நிறுவனம் 1:20 என்ற அளவில் விகிதத்தைத் தொடர்ந்து நிகர சொந்த நிதி (NOF) பராமரித்து வரவேண்டும் மற்றும் ஒரு மாதத்தின் கடைசி வேலை நாளன்று முந்தைய இரண்டாவது மாதத்தின் கடைசி வேலை நாளன்று நிலுவையில் உள்ள வைப்புத் தொகையில் 10%-க்கும் குறையாமல் வங்கிகளில் வைப்புத் தொகைகளாக வைத்து வரவேண்டும். இந்த வரைநிலைகளை நிறுவனம் கீழ்கண்டவாறு கடைபிடிக்கிறது.

| விபரங்கள் | **31.03.2025** | **31.03.2024** |
|---|---|---|
| நிகர சொந்த நிதி விகிதம் | 1:9.17 | 1:7.40 |
| வில்லங்கப் படுத்தப்படக்கூடாத வைப்புகளின் விகிதம் | 10.43% | 10.68% |

**குறிப்பு 39 நிதி கருவிகளின் நியாயமான மதிப்பு அளவீடு :**

**39.1 இலாப மற்றும் நட்டக் கணக்கு வழியாக அளவீடு செய்யப்படும் சொத்துக்கள் / பொறுப்புகளின் நியாயமான மதிப்பு**

நிறுவனம் இலாப மற்றும் நட்டக் கணக்கு வழியாக அளவீடு செய்யப்படும் நிதிக் கருவிகள் எதையும் வைத்திருக்கவில்லை.

**39.2 இதர அனைத்தடக்க வருமானம் வழியாக அளவீடு செய்யப்படும் சொத்துக்கள் / பொறுப்புகளின் நியாயமான மதிப்பு (FVTOCI)**

நிறுவனம் அனைத்தடக்க வருமானம் வழியாக அளவீடு (FVTOCI) செய்யப்படும் நிதிக்கருவிகள் எதையும் வைத்திருக்கவில்லை.

39.3 கீழ்வரும் அட்டவணை தொடர்ந்து கொண்டு செல்லப்படும் தொகைகள் மற்றும் நியாயமான மதிப்பு படிநிலைகளை உள்ளடக்கிய மதிப்பிழப்பு விலையில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் / நிதிப்பொறுப்புகள் ஆகியவற்றின் நியாயமான மதிப்பீடுகள்.

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | படிநிலை | தொடரப்படும் மதிப்பு | | நியாயமான மதிப்பு | |
|---|---|---|---|---|---|
| | | 31 மார்ச் 2025 | 31 மார்ச் 2024 | 31 மார்ச் 2025 | 31 மார்ச் 2024 |
| **நிதிச்சொத்துக்கள்** | | | | | |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | படிநிலை 1 | 25,959.70 | 14,077.35 | 25,959.70 | 14,077.35 |
| வங்கியிருப்பு, மேற்கூறியவை அல்லாமல் | படிநிலை 1 | 45,291.51 | 42,087.07 | 45,291.51 | 42,087.07 |
| **கடன்கள்** | படிநிலை 3 | 4,50,130.33 | 3,58,175.25 | 4,50,130.33 | 3,58,175.25 |
| இதர நிதிச் சொத்துக்கள் | படிநிலை 3 | 23,405.62 | 22,070.46 | 23,298.45 | 21,973.67 |
| நிதி சொத்துக்களின் கூடுதல் | | **5,44,787.16** | **4,36,410.13** | **5,44,679.99** | **4,36,313.34** |
| நிதிப் பொறுப்புகள் | | | | | |
| வைப்புகள் | படிநிலை 3 | 4,71,718.99 | 3,81,440.23 | 4,71,748.99 | 3,81,139.55 |
| இதர நிதிப் பொறுப்புகள் | படிநிலை 3 | 11,874.71 | 4,027.50 | 12,062.70 | 4,055.22 |
| நிதிப் பொறுப்புகளின் கூடுதல் | | **4,83,593.70** | **3,85,467.73** | **4,83,811.69** | **3,85,194.77** |

பணம், மற்றும் பணத்திற்கு சமமானவைகள், வங்கி இருப்புக்கள், கடன்கள், இதர நிதிப் பொறுப்புகள் மற்றும் சில குறிப்பிட்ட வைப்புகளின் கொண்டு செல்லும் தொகைகளின் மதிப்பீடுகள் அந்தக் கருவிகள் பெரும்பாலும் குறுகிய காலங்களில் முதிர்ச்சியடைகின்றன என்பதால் கொண்டு செல்லப்படும் தொகைகளை ஏறத்தாழ நெருங்கியிருக்கின்றது என்று நிர்வாகம் மதிப்பீடு செய்தது.

**நியாயமான அளவீடு முறை அல்லாமல் நிதியியல் கருவிகளை மதிப்பீடு செய்யப்படும் முறைகள்**

நிதி அறிக்கைகளில் நியாயமான முறையில் பதிவிடவோ அல்லது அளவீடோ செய்யப்படாத மேற்கண்ட நிதிக்கருவிகளின் நியாயமான மதிப்பீடுகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தும் வழிமுறைகளும், அனுமானங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நியாயமான மதிப்பீடுகள், வெளிப்படுத்தும் காரணங்களுக்காக மட்டுமே கணக்கீடு செய்யப்பட்டன.

(a) **குறுகிய கால நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள்**

குறுகிய கால முதிர்ச்சி (12 மாதங்களுக்கு குறைவாக உள்ள) நிதிச் சொத்துக்களுக்காவும் மற்றும் நிதிப் பொறுப்புகளுக்காகவும் பாதிப்பு போக நிகரமாக கொண்டு செல்லப்படும் தொகை ஏற்றுக்கொள்ளத்தக்க ஏறத்தாழ சரியான நியாயமான மதிப்பு ஆகும். அத்தகைய கருவிகள் பணம் மற்றும் பணத்திற்கு சமமாக கருதப்பட்டவைகள், பணம் மற்றும் பணத்திற்கு சமமாக கருதப்பட்டவைகள் தவிர உள்ள இருப்புக்கள், கடன்கள், குறிப்பிட்ட முதிர்ச்சி காலம் இல்லாத இதர நிதிப் பொறுப்புகள் மற்றும் ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்ச்சியுடைய சில குறிப்பிட்ட வைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இருப்புநிலைக் குறிப்பில் நிலுவைகளில் எந்த சீரமைப்பும் செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் 3 படிநிலை ஆக அந்தத் தொகைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(b) **பங்குதாரர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் மற்றும் முன்பணங்கள்**

கடன் இடர்கள், கடன் தவறல் வாய்ப்புகள் மற்றும் அவ்வாறு கடன் தவறலால் ஏற்படும் இழப்பு போன்ற அனுமானங்களை ஒருங்கிணைத்த தள்ளுபடி பணப்புழக்க மாதிரி மூலம் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் நியாயமான மதிப்பீடுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. ஒப்பீடு செய்து பார்க்கக்கூடிய தரவுகள் கிடைக்காததால், கடந்தகால அனுபவங்கள், நிர்வாகத்தினரின் கருத்துக்கள் மற்றும் இதர திரண்ட மதிப்பிழப்பு மாதிரிகளில் உபயோகப்படுத்தப்பட்ட தகவல்கள் போன்றவைகளைப் பயன்படுத்தி கடன் இடர் வரையறுக்கப்படுகின்றது. கூடுமானவரை கடன்களை ஒத்த பண்புகள் உதாரணமாக கடன் வகை உள்ள ஓரினமான தொகுப்புகளாக வகைப்பாடு செய்து உடைமைப்பட்டியல் அடிப்படையிலான அணுகுமுறையை உபயோகப்படுத்தி உடைமைப்பட்டியலின் நியாயமான மதிப்பீடுகள் கணக்கிடப்படுகின்றன. பின் நிறுவனம் அதை முழு உடைமைப் பட்டியலிற்கும் விளைவுறு வட்டி விகித

முறையைப் பயன்படுத்தி கடன்களின் எல்லா முக்கிய பண்புகளையும் கருத்தில்கொண்டு நீட்டல் கணிப்பு செய்யப்படுகிறது. கடன்தவறல் வாய்ப்புகள் மற்றும் கடன் தவறல்களால் ஏற்படும் இழப்பு இவைகளை இணைத்துக் கொண்டுள்ள கூட்டு மதிப்பிழப்பு மாதிரியை அடிப்படையாகக் கொண்டு மேல்பக்க சீராய்வாக கடன் இடர் பயன்படுத்தப்படுகின்றது.

**குறிப்பு 40 இடர் மேலாண்மை**

நிறுவனத்தின் வணிகத்துடன் கடன் இடர் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும் மற்றும் தரமான இடர் மேலாண்மை நிறுவனத்தின் வெற்றிக்கு திறனாய்வு சார்ந்த அம்சமாகும்.

முக்கியமாக கடன் வழங்குதல், விரைவாகப் பணமாக்கும் தன்மை மற்றும் சந்தை இடர்கள் தொடர்புடையவைகளை உள்ளடக்கிய கடன் கொடுப்பதில் உள்ள இடர்கள் மற்றும் அது செயல்படும் சூழ்நிலைகளுக்குள் உள்ள இடர்களுக்கு நிறுவனம் ஆட்படுகிறது. நிறுவனம், நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளோடு தொடர்புடைய இடர்களை உள்ளடக்கிய இடர் மேலாண்மைக் கொள்கையை வைத்துள்ளது.

திறனுடைய திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஒப்புதல் அளித்து, நிறுவனத்தின் இயக்குனரவை இடர் மேலாண்மை உத்திகளுக்குரிய ஒட்டுமொத்த இடர் மேலாண்மை அணுகுமுறைக்குப் பொறுப்பானவர்கள். நிறுவனம் நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய எல்லா இடர்களையும் உள்ளடக்கிய இடர் மேலாண்மை கொள்கையை வைத்துள்ளது.

நிறுவனம் முழுவதும் உள்ள இடர்களை மதிப்பிட, கண்காணிக்க மற்றும் மேலாண்மை செய்ய நிறுவனம் விரிவான கொள்கைகளையும் மற்றும் செயல்பாட்டு முறைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இடர் மேலாண்மை செயல்முறைகள் தொடர்ச்சியாக சீராய்வு செய்யப்பட்டு, மேம்படுத்தப்பட்டு மற்றும் மாறிவரும் இடர் சூழ்நிலைகளுக்கேற்ப தகவமைத்துக் கொள்ளப்படுகிறது மற்றும் இடர் மேலாண்மை செயல்முறைகளின் விரைவுத்தன்மை கண்காணிக்கப்பட்டு, மாறிவரும் இடர் சூழ்நிலைகளில் பொருத்தமாக இருப்பதற்காக சீராய்வு செய்யப்படுகிறது. இடர்களை தொடர் மதிப்பாய்வு செய்யும் செயல்முறை, நிகழ்வு சார்ந்த அடிப்படையில் இடர் சூழ்நிலைகளின் நிலைமைகள் மதிப்பீடு செய்வதை உள்ளடக்கியது.

நிறுவனம் ஒரு விரிவான இடர் மேலாண்மை செயல்முறையைக் கொண்டுள்ளது. முக்கியமான வணிகம் மற்றும் செயல்பாடுகளால் அடையாளம் காணப்பட்ட முக்கியமான இடர்கள் திட்டமிட்டு கவனிக்கப்பட்டு தொடர்ச்சியான பிரச்சினையைத் தணிக்கும் நடவடிக்கைகள் மூலம் தீர்வு காணப்படுகின்றன.

**40.1 கடன் இடர்**

ஒரு கடன்தாரர் ஒப்புக்கொண்ட கடமைப்பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் நிறுவனத்திற்கு ஏற்படும் நிதி இழப்பு கடன் இடர் ஆகும். இது முக்கியமாக நிறுவனம் கொடுத்த கடன்களை திரும்பிப் பெற வேண்டியவைகளிலிருந்தே உருவாகிறது.

நிறுவனத்தின் கடன் இடர் மேலாண்மைக் கொள்கை, கீழ்கண்ட அடையாளம் காணப்பட வேண்டிய, மதிப்பீடு செய்யப்பட வேண்டிய, கண்காணிக்கப்பட வேண்டிய, சரியான நேரத்தில் சிறப்பான முறையில் அறிவிக்கப்பட வேண்டிய, சட்ட திட்டங்களுக்கு இணங்கிய கீழ்கண்ட கட்டுப்பாடுகளையும் மற்றும் முக்கிய அளவீடுகளையும் கொள்ள நாட்டம் கொண்டுள்ளது.

a) புதிய இடர்களை அடையாளப்படுத்த வேண்டிய நடைமுறைகளையும் மற்றும் இந்த இடர்களை பொருத்தமான முறையில் கட்டுப்படுத்தத் தேவையான வடிவமைத்தலையும் தரப்படுத்துதல்.

b) பொருத்தமான கடன் நிர்வாகம் மற்றும் கடன் சீராய்தல் முறையை பராமரித்தல் மற்றும் உடைமைத் திரட்டுகளைக் கண்காணிக்க அளவீடுகளை நிறுவுதல்.

c) கடன் தவறல் அல்லது கடன்தாரர்களால் காலந்தவறி செலுத்தப்பட்ட தொகைகள் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைத்தல்.

d) பொருத்தமான கடன் இடர்பாடுகளை தணிக்கும் உத்திகளை வடிவமைத்தல்.

நிறுவனத்தின் முதன்மையான நோக்கம் வாடிக்கையாளர்களை தக்க வைத்துக்கொள்வதும் மற்றும் இதன் மூலம் நல்ல பல்வகைப்பட்ட இடர் மேலாண்மை உடைமைத் திரட்டுகளை உருவாக்குதலும் ஆகும். நீண்டகாலமாக நிரூபிக்கப்பட்ட கண்காணிப்பு மற்றும் மீட்பு வழிமுறை சரியான நேரங்களில் தவணைகளை திரும்பப் பெறுவதையும் மற்றும் தேவையென்றால் நிறுவனமானது அடகு வைக்கப்பட்ட தங்கநகைகளை விற்று முழு நிலுவைத் தொகையையும்

திரும்பப்பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்கிறது. இறுதியாக உளதாந்தமையையும் மற்றும் நிறுவனம் வணிகம் செய்யும் சந்தைகளைப் பற்றிய ஆழமான அறிவாற்றலையும் கொண்டு எதிர்வரும் இடர்பாடுகளை முன்னமேயே அடையாளம் காணப்படுதலையும், அதன் மூலம் உடனடி தீர்வளிக்கும் நடவடிக்கைகளை எடுக்க வசதி செய்தல் அல்லது தேவையான தொகையை ஒதுக்கீடு செய்தல் போன்றவைகளையும் சாத்தியமாக்குகிறது.

**a) மதிப்பிழப்பு - எதிர்பார்க்கும் கடன் இழப்புக்கள் (ECL)**

Ind AS 109-ஐ பயன்படுத்துதல் எதிர்பார்க்கப்படும் கடன் தவறலால் வரும் இடர் (இடர்களுக்கான ஒதுக்கீடு செய்தல்) கணக்கிடுதலில் அடிப்படையான மாற்றங்களை அவசியமாக்கியுள்ளது. குறிப்பாக, இழப்பு ஏற்பட்ட மாதிரியானது எதிர்பாக்கப்படும் கடன் இழப்பு மாதிரியாக (ECL) மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றத்தின் விளைவாக நிதிக்கருவிகளில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் மூன்றுபடி நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

படிநிலை 1 : தொடக்கத்தில் ஒவ்வொரு நிதிச்சொத்தும் நிலை-1 என்று வகைப்படுத்தப்படுகிறது. கூடுதலாக, நிலை-1-ல் அனைத்து பரிவர்த்தனைகளும் வரையறுக்கப்பட்ட கடன் தவறல் இடர் உடையதாகும்.

படிநிலை 2 : ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் தவறல் இடர் கணிசமாக உயர்ந்த மற்றும் வரையறுக்கப்பட்ட கடன் தவறல் இடர் உள்ளவைகளாக வகைப்படுத்தாத நிதிச் சொத்துக்கள்.

படிநிலை 3 : அறிக்கை தேதியன்று வெளிப்படையாக தெரியும்படி பாதிப்புள்ள நிதிச்சொத்துக்கள்.

அதன்படி கடன் சொத்துக்கள் மூன்று வேறுபட்ட நிலைகளில் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

படிநிலை 1 : தவணைகள் நடப்பில் உள்ளவைகள் மற்றும் 1-30 நாட்கள் தவணை கடந்தவைகள்.

படிநிலை 2 : 31-90 நாட்கள் தவணை கடந்தவைகள்.

படிநிலை 3 : 90 நாட்களுக்கு மேல் தவணை கடந்தவைகள்.

நிறுவனம் படிநிலை-1 சொத்துக்களுக்கு 12 மாத எதிர் பார்க்கப்படும் கடன் இழப்புகளும் (12 மாத ECL) மற்றும் படிநிலை-2 மற்றும் படிநிலை-3 சொத்துக்களுக்கு கடன் காலம் முழுவதும் (LECL) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளும் ஒதுக்கீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது. 12 மாத ECL என்பது அறிக்கை தேதிக்கு பிறகு 12 மாதங்களுக்குள்ளாக நிகழும் கடன் தவறலால் உண்டாகும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பாகும். LECL என்பது நிதிச்சொத்தின் எதிர்பார்க்கப்படும் கடன் காலம் முழுவதிலும் நிகழும் கடன் தவறலால் ஏற்படும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு ஆகும்.

**b) கடன் தவறல் சாத்தியக்கூறுகள் (PD)**

அனைத்து முக்கிய சொத்து வகைகளுக்குமாக, புள்ளியியல் மற்றும் ஊடாடும் அணுகுமுறையை உபயோகப்படுத்தி PD மாதிரி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரியின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் என்பது வலுவான மற்றும் நேரடி தொடர்புள்ள பலதரப்பட்ட கடன் அளவுறுக்கள் மற்றும் மாறிகளை அடையாளப்படுத்துவதை உள்ளடக்கியது. கடன் தவறல் போக்குடன் தொடர்புடைய கடன் வாங்குவோரின் உள்ளாந்த கடன் பண்புகள் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் மீதமுள்ள காலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, PD மாதிரி கடன் தவறல் நிகழ்தகவுகளைப் பிரதிபலிக்கிறது. அது கடந்தகாலத் தகவல்கள் மற்றும் நடப்பு பொருளாதார சூழ்நிலைகளை மட்டுமே சார்ந்திராமல், பெருமப் பொருளாதாரத்தில் எதிர்காலத்தில் உண்டாகும் இடர்கள் உட்பட, முன்கணிப்புகள் போன்ற முன்னோக்கு பார்வைகளையும் கருத்தில் கொள்கிறது. படிநிலை 3 ஒப்பந்தத்தின் PD 100%-ஆக கருதப்படுகிறது. ஒரு கடன்தாரர் படிநிலை-3-ல் ஒரு ஒப்பந்தமும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் படிநிலை-1/ படிநிலை-2 வைத்திருந்தால், அனைத்து ஒப்பங்களுக்குமான PD 100%-ஆகக் கருதப்படும்.

| விபரங்கள் | 31.03.2025 | | | 31.03.2024 | | |
|---|---|---|---|---|---|---|
| | வகை I | வகை II | வகை III | வகை I | வகை II | வகை III |
| நகைக்கடன் | 1.07% | 1.04% | 0.08% | 1.31% | 1.55% | 0.10% |

c) கடன் தவறலால் ஏற்படும் இழப்பு (LGD)

LGD என்பது க்யூர் (cure) விகிதத்திற்கு சீர்செய்யப்பட்ட கடன் தவறல் காலங்களில் உள்ள இருப்புகளின் ஓர் சதவிகிதமாக உள்ள பொருளாதார இழப்பு ஆகும்.

பொருளாதார இழப்பு என்பது கடன் தவறலினால், பெறப்படவேண்டிய தொகையில் ஏற்படும் மதிப்பீடு செய்யப்பட்ட குறைவாகப் பெறப்படும் தொகைகள் ஆகும். ஒப்பந்தப்படி செயல்படாத ஒப்பந்தங்கள் முழுமையான இழப்பை ஏற்படுத்தும் என்று அவசியமில்லை. ஏனெனில், பல ஒப்பந்தங்கள் சரி செய்யும் நடவடிக்கைகள் மூலம் தீர்க்கப்படுகின்றன. க்யூர் விகிதம் என்பது ஒரு வருடத்தில் செயல்படாத ஒப்பந்தம் (அதாவது கடன் தவறியது) திருப்பிச் செயல்படும் ஒப்பந்தமாக மீண்டும் பழைய நிலைக்குத் (அதாவது கடன் தவறில்லாதது) திரும்பும் நிகழ்தகவு ஆகும்.

கடன் திரும்பப் பெறப்படாத படிநிலைக்கு மாறியபின் அவைகளை பல கால கட்டங்களில் திரும்பப் பெறும் போக்குகளைப் பகுப்பாய்ந்து, நிறுவனம் திரும்ப பெறப்படும் விகிதத்தை தீர்மானம் செய்கிறது. கடந்தகால போக்குகளைப் பகுப்பாய்வு செய்வதின் அடிப்படையில், கடன் தவறல் ஏற்பட்ட வருடத்திலேயே கணிசமான திருப்பிச் செலுத்துதல்கள் நிகழ்கின்றன என்று நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது. LGD-ஐ மதிப்பீடு செய்வதில் நிறுவனம் பெருமப் பொருளாதாரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அம்சங்களை சீராய்வு செய்கிறது.

| விபரங்கள் | **31.03.2025** | **31.03.2024** |
|---|---|---|
| தங்க நகைக்கடன்கள்- சாதாரண இடர் | 0.94% | 5.27% |

### 40.2 பணமாக மாற்றக்கூடிய எளிமை / விரைவுக்கான இடர்

பணமாக மாற்றக்கூடிய எளிமை / விரைவுக்கான இடர் என்பது நிறுவனம் அதனுடைய நிதிப் பொறுப்புக் கடமைகளை தீர்க்க இயலாமல் போகலாம் என்பதை குறிக்கிறது. பணமாக மாற்றக்கூடிய எளிமை / விரைவுக்கான இடர் என்பது தேவையான நிதிகள் பொருத்தமான அடக்கவிலையிலேயோ அல்லது கால அளவிற்கோ கிடைக்காமலிருப்பதால் எழுகிறது. பணமாக மாற்றக்கூடிய எளிமை / விரைவுக்கான இடர் மேலாண்மையின் குறிக்கோள் போதுமான நிதிப்புழக்கத்தை பராமரித்தலையும் மற்றும் தேவைக்கேற்ப நிதிகள் கிடைக்கப் பெறுதலையும் உறுதி செய்தல் என்பவைகளாகும்.

நிறுவனம் நிதிப்பொறுப்புக் கடமைகளை கொடுக்கப்பட வேண்டிய நேரத்தில் தீர்ப்பதற்காக நடைமுறை மற்றும் நிதி நடவடிக்கைகள் மூலம் தேவையான பணப்புழக்கங்களை சீராக உருவாக்குகிறது. கீழ்கண்ட அட்டவணை முக்கியமான நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒப்பந்தப்படியான முதிர்வு காலங்கள் பற்றிய விவரங்களை வழங்குகிறது.

**31-03-2025 அன்று உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்ச்சிப் பாங்கு** ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 1 மாதம் வரை | 1 மாதம் முதல் 3 மாதங்கள் வரை | 3 மாதங்கள் முதல் 1 வருடம் வரை | 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரை | 5 வருடங்களுக்கு மேலாக | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| நிதிச் சொத்துக்கள் | | | | | | |
| பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள் | 4,759.61 | 21,200.10 | - | - | - | 25,959.71 |
| வங்கி இருப்புகள் மேற்கூறியவை அல்லாமல் | 309.07 | - | 44,982.43 | - | - | 45,291.50 |
| **கடன்கள்** | 87,329.53 | 21,652.04 | 3,32,008.44 | 9,055.80 | 84.52 | 4,50,130.33 |
| இதர நிதிச் சொத்துக்கள் | 7,109.23 | 9,742.36 | 5,963.37 | 138.58 | 344.92 | 23,298.46 |
| நிதிச் சொத்துக்களின் கூடுதல் | **99,507.44** | **52,594.50** | **3,82,954.24** | **9,194.38** | **429.44** | **5,44,680.00** |
| **நிதிப் பொறுப்புகள்** | | | | | | |
| வைப்புகள் | 79,819.93 | 59,298.85 | 3,31,693.49 | 936.72 | - | 4,71,748.99 |
| இதர நிதிப் பொறுப்புகள் | 2,024.43 | 6,614.39 | 574.62 | 2,167.58 | 681.69 | 12,062.71 |
| மொத்த நிதிப் பொறுப்புகள் | **81,844.36** | **65,913.24** | **3,32,268.11** | **3,104.30** | **681.69** | **4,83,811.70** |

**31-03-2024 அன்று உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் முதிர்ச்சிப் பாங்கு** ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 1 மாதம் வரை | 1 மாதம் முதல் 3 மாதங்கள் வரை | 3 மாதங்கள் முதல் 1 வருடம் வரை | 1 வருடம் முதல் 5 வருடங்கள் வரை | 5 வருடங்களுக்கு மேலாக | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| **நிதிச் சொத்துக்கள்** | | | | | | |
| பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள் | 2,477.35 | 11,600.00 | - | - | - | 14,077.35 |
| வங்கி இருப்புகள் மேற்கூறியவை அல்லாமல் | 288.07 | - | 41,799.00 | - | - | 42,087.07 |
| **கடன்கள்** | 64,572.46 | 10,085.45 | 2,74,745.95 | 8,625.49 | 145.90 | 3,58,175.25 |
| இதர நிதிச் சொத்துக்கள் | 4,883.99 | 6,838.63 | 5,156.81 | 4,800.45 | 293.79 | 21,973.67 |
| நிதிச் சொத்துக்களின் கூடுதல் | **72,221.87** | **28,524.08** | **3,21,701.76** | **13,425.94** | **439.69** | **4,36,313.34** |
| **நிதிப் பொறுப்புகள்** | | | | | | |
| வைப்புகள் | 77,141.66 | 49,210.37 | 2,53,888.22 | 899.30 | - | 3,81,139.55 |
| இதர நிதிப் பொறுப்புகள் | 1,352.54 | 103.66 | 310.97 | 1,538.88 | 749.19 | 4,055.24 |
| **மொத்த நிதிப் பொறுப்புகள்** | **78,494.20** | **49,314.03** | **2,54,199.19** | **2,438.18** | **749.19** | **3,85,194.79** |

**சந்தை இடர்**

சந்தை இடர் என்பது சந்தைக் காரணிகளின் மாற்றங்களால் நிதிக்கருவியின் நியாயமான மதிப்பில் அல்லது எதிர்கால பணப்புழக்கங்களில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகளினால் ஏற்படும் இடர். நிதிக்கருவிகளின் மதிப்புகளில் ஏற்படும் அத்தகைய மாற்றங்கள் வட்டி விகிதங்கள், கடன் பணமாக மாற்றும் எளிமை / விரைவுத் தன்மை மற்றும் இதர சந்தை மாற்றங்களினால் ஏற்படலாம். நிறுவனம் கீழ்கண்டவாறு இரண்டு விதமான சந்தை இடர்களுக்கு ஆட்படுத்தப்படுகிறது.

**வட்டி விகித இடர்**

சந்தை மாற்றங்களால் நிதிக்கருவிகளின் எதிர்கால பணப்புழக்கங்களில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் விளைவாக உண்டாகும் இடர் வட்டி விகித இடர் ஆகும். நிறுவனம் வாங்கும் கடன்கள் ஒரு நிலையான வட்டி விகிதத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களால் தொடர்ந்து கொண்டு செல்லப்படும் தொகைகளோ அல்லது எதிர்கால பணப்புழக்கங்களோ ஏற்ற இறக்கங்களைச் சந்திக்காது என்ற காரணத்தினால் நிதி வாங்கும் கடன்கள் வட்டி விகித இடர் படி அளவீடு செய்யப்படாமல் மதிப்பிழப்பு செய்யப்பட்ட விலையில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

**விலை இடர்**

விலை இடருக்கு நிறுவனம் ஆட்படுத்தப்படுவது பொருட்படுத்தக்கூடிய அளவில் இல்லை.

**நடைமுறை மற்றும் வணிக இடர்பாடு**

நடைமுறை கட்டமைப்புகளின் பாதிப்புகள், மனிதத் தவறு, மோசடி அல்லது வெளி நிகழ்வுகளின் மூலம் ஏற்படும் இடர் நடைமுறை இடர் ஆகும். கட்டுப்பாடுகள் திறம்பட செயல்பட தவறும் போது நடைமுறை இடர்பாடுகள் நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தலாம் அல்லது சட்ட அல்லது ஒழுங்குமுறைத் தாக்கங்களை ஏற்படுத்தலாம் அல்லது நிதி இழப்புக்கு இட்டுச் செல்லலாம்.

நிறுவனம் எல்லா நடைமுறை இடர்களையும் நீக்க முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு மற்றும் நிகழ வாய்ப்புள்ள இடர்பாடுகளை கண்காணித்தும் மற்றும் எதிர்வினையாற்றியும் நிறுவனம் பெருமுயற்சி மேற்கொள்கிறது. கட்டுப்பாடுகள் என்பது திறன்மிக்க முறையில் பணிகளைப் பகிர்ந்தளித்தல், அணுகும் உரிமைகள், அங்கீகாரம் அளித்தல் மற்றும் சமரசப்படுத்தும் நடைமுறைகள், ஊழியர்களின் கல்வி மற்றும் உள்தணிக்கை உள்ளிட்ட மதிப்பீட்டு முறைகள் போன்றவைகளை உள்ளடக்கியது.

**குறிப்பு 41 அந்நிய செலாவணி நாணயங்களின் செலவினங்கள்**

நிறுவனம் இந்த ஆண்டில் அந்நிய நாணயத்தில் செலவினங்கள் செய்யவில்லை அல்லது வருமானம் ஈட்டவில்லை.

**குறிப்பு-42 மோசடி**

இந்த ஆண்டில், அலுவலர்கள் மற்றும் ஊழியர்களால் நிறுவனத்தின் மீது எந்த மோசடி நிகழ்வும் இல்லை.

**குறிப்பு-43 பிரிவு படி அறிக்கைகள் அறிவித்தல்**

நிறுவனம் ஒரே செயல்பாட்டு பிரிவை கொண்டுள்ளது. எனவே, Ind AS 108-ன்படி நிறுவனம் விபரங்களை சமர்ப்பிக்கவில்லை. மேலும் Ind AS 108-ன்படி முழு நிறுவனத்திற்கான வெளிப்பாடுகள் கீழே உள்ளவாறு உள்ளன.

**a) சரக்குகள் மற்றும் சேவைகளின் அடிப்படையலான அறிக்கை**

நிறுவனத்தின் முக்கியமாக ஒரே ஒருவகை சேவையைக் கொண்டுள்ளது. தங்க நகைகள் மற்றும் நிறுவனத்தினுடைய உறுப்பினர்களால் செய்யப்பட்ட அவர்களுடைய சொந்த வைப்புகளின் மீது கடன்கள் வழங்குதல். நிறுவனத்தில் கிடைக்கப்பட்ட வருமானம், பெரும்பான்மையாக, இந்த குறிப்பிட்ட சேவையின் மூலமாகவே, கீழ்கண்டவாறு உள்ளது.

ரூ.லட்சத்தில்

| விபரங்கள் | 31-03-2025 | 31-03-2024 |
|---|---|---|
| தங்க நகைகள் மற்றும் சொந்த வைப்புகள் மீதான கடன்களுக்கான வட்டி வருவாய் | 57,676.10 | 43,920.35 |

**b) புவியியல் வகைபாடுகள**

நிறுவனம் இந்தியாவில் மட்டுமே செயல்படுகிறது. அதன்படி, இந்நிறுவனத்தில் உருவாகும் முழு வருமானமும் இந்தியாவில் இருந்தே வருகிறது. எனவே, இந்த தரநிலையின் கீழ் தேவைகள் எழவில்லை.

**c) முக்கியமான வாடிக்கையாளர்**

வணிக நடவடிக்கையின் தன்மையை கருத்தில்கொண்டு, நிறுவனம், நிறுவனத்தின் மொத்த வருவாயில் 10%-க்கும் மேல் அளிக்கும் எந்த ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளரும் இல்லை.

**குறிப்பு-44 MSMED சட்டம் 2006 ன் படி பணப்பட்டுவாடா செய்தல்**

கொள்முதல் அல்லது சேவைகளுக்கான வணிகர்களுக்கு பொருள் வழங்கிய அல்லது சேவை செய்த காலத்திற்குப் பிறகு குறுகிய காலத்தில் தொகைகள் அவ்வப்போது பட்டுவாடா செய்யப்படுகின்றன. எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டுச் சட்டம், 2016 (MSMED) பிரிவு 15-க்கு பொருத்தமான எந்தவித நிலுவைகளும் இல்லை.

**குறிப்பு-45 சம உரிமைபங்குகளின் கடன் மதிப்பீடு**

மதிப்பாய்வுக்குட்ட ஆண்டில் சம உரிமை பங்குகளுக்கு கடன் மதிப்பீட்டைப் (Credit Rating) பெற வேண்டிய அவசியம் எழவில்லை.

**குறிப்பு-46 வர்த்தக வரவேண்டியவைகள் / வர்த்தக செலுத்த வேண்டியவைகள் (Trade receivables / Trade Payables)**

நிறுவனம் நிதி நிறுவனம் என்பதால், வர்த்தக வரவேண்டியவைகள் / வர்த்தக செலுத்த வேண்டியவைகள் எதுவும் இல்லை. எனவே, கால வட்டப்படியான முதிர்ச்சிகள் அட்டவணை தேவை எழவில்லை.

**குறிப்பு-47 வருமானத் திருப்பம் மற்றும் செயல்படாத சொத்துக்களுக்கான ஒதுக்கீடு**

செயல்படுத்தப்படாத சொத்துக்கள் மற்றும் வருமானத்தை திருப்பி மாற்றியமைத்தலுக்கான ஒதுக்கீடு தற்போதுள்ள நிதியின் விதிகளின்படி நிறுவனம் அதனுடைய நகைக்கடனுக்கான திரும்ப செலுத்துதலின் நிலுவை தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் அக்கடன்களுக்கான தொகையை மீட்க அல்லது அக்கடன்களை புதுப்பிக்க வேண்டும். இதன்படி நிறுவனம் எல்லா கடன்களையும் மேற்கூறிய காலக்கெடுவிற்குள் திரும்ப பெறுகிறது. அதன்படி, செயல்படாத சொத்துகளுக்கு நிறுவனம் இதற்கான எந்த ஒதுக்கீடும் செய்யவில்லை.

மேலும் தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி மேற்கூறிய காலக்கெடுவிற்குப் பின் எவ்வித வருமானமும் கணக்கில் கொள்ளப்படாது. ஏதாவது வருமானம் கணக்கிடப்பட்டிருந்தால், அவை திரும்ப பெறப்பட வேண்டும். மேற்கூறிய விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நிறுவனம் கடன்களை திருப்பி செலுத்தப்பட வேண்டிய முதிர்வுத் தேதிக்கு 15 மாதங்களுக்கு மேற்பட்ட கடனிலிருந்து எந்த வருமானத்தையும் கணக்கிடவில்லை. எனவே, நிறுவனம் வருமானம் திருப்புதலுக்காக எவ்வித ஒதுக்கீடையும் உருவாக்கவில்லை.

இருப்பினும் Ind AS விதிகளின்படி, எதிர்பார்க்கும் கடன் இழப்பு (ECL) மாதிரியின் கீழ் நிறுவனம் ஒதுக்கீடுகளை கணக்கிடுகிறது. ECL கணக்கிடும் விபரங்களும், முறையும் இந்த நிதி அறிக்கைகளில் பொருத்தமான இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு-48 விதிவிலக்கான பொருட்கள்:**

நிறுவனத்தின் முந்தைய மேலாண்மை நிர்வாகத்தில் (FY 2017 – 2019) ஒரு மோசடி நிகழ்ந்துள்ளது. அந்த மோசடியை தற்போதுள்ள மேலாண்மை நிர்வாகம் கண்டுபிடித்து அந்த மோசடியின் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட நபர்களின் மேலான விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தது. அதில் ஏப்ரல், 2019 அன்று நீதிமன்றத்தால் திவாலானவர் என உத்தரவிடப்பட்ட நபர் மற்றும் அந்த நபரின் கூட்டாளிகளுடன் நிறுவனத்தின் முந்தைய மேலாண்மை நிர்வாகத்திலிருந்தவர்கள் கூட்டுவைத்துக்கொண்டு மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டது தெரிய வந்தது. அந்த மோசடி நடவடிக்கையானது நிறுவன விதிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிராகவும் அவற்றை மீறியும் குறிப்பாக நகைக்கடன்களின் அடிப்படை கொள்கையான அடையாள ஆவணங்களின் பொருட்டு பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் (KYC Compliance) மற்றும் அவற்றை ஏலம் விடுவதற்கான ஏல அறிவிப்புக்களை வெளியிடுதல், நகைகளின் மீதான கடன்கள் வழங்குவதற்கான உச்ச வரம்பு மற்றும் நகைகளை திருப்பி அளிப்பது தொடர்பான விதிமுறைகளை முறையாக கடைபிடிக்காமல் விதிமுறைகளை மீறி வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேண்டுமென்றே செய்யப்பட்ட மோசடி நடவடிக்கையினால் மேற்கூறிய நபரின் திவால் நிலையை ரத்து செய்யக்கோரி நிறுவனத்தின் தற்போதுள்ள நிர்வாகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரராக ஆஜராகி வழக்கு தொடுத்துள்ளது. இந்த வழக்கானது சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மாண்பமை நீதிமன்றம் இந்த மோசடி தொடர்பாக தமிழ்நாடு பொருளாதார குற்றப்பிரிவின் கீழ் விசாரணையை மேற்கொண்டு உண்மை நிலையை அறிய இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது. தற்போதுள்ள நிர்வாகம் இந்த உத்தரவை ஏற்று தமிழ்நாடு பொருளாதார குற்றப்பிரிவின் விசாரணை அதிகாரிகள் மற்றும் அதன் தொடர்புடையவர்களுக்கு முழு ஒத்துழைப்பை நல்கியுள்ளது. தற்போதுள்ள நிர்வாகம் Ind AS -ன் "அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகள்"-ன் விதிமுறைகளின்படி இந்த மோசடி தொடர்பாக மதிப்பாய்வுக்குட்பட்ட நிதியாண்டு 2023-24-ல் ரூ.131.03 இலட்சம் (2022-23ல் ரூ.1262.00 இலட்சம்) லாபத்தில் ஒதுக்கீடுகளாக செய்து, இது தொடர்பாக மொத்த ஒதுக்கீடாக ரூ.1393.03 இலட்சமாக கணக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீடானது 2023-24-ல் இலாப நட்ட கணக்கின் அசாதாரண உருப்படிகள் குறிப்பாக பின் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் நடப்பு நிதியாண்டில் (2024-25) இது தொடர்பாக எந்தவிதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.

**குறிப்பு-49 முந்தைய ஆண்டின் தொகைகளை மறு வகைப்படுத்துதல்**

நடப்பாண்டு வகைபாடுகளுடன் ஒத்துப்போவதற்காக முந்தைய ஆண்டின் தொகைகள், மறு தொகுதிகளாகவோ, மறு வகைபாடுகளாகவோ தேவையான இடங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

**தமிழில் உள்ள இந்த ஆண்டறிக்கையில் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் நிதியின் www.kmbf.co என்ற இணையதளத்தில் Investor Relations பகுதியில் உள்ள ஆங்கிலத்தில் உள்ள ஆண்டறிக்கையினை பார்த்து நிவர்த்தி செய்துகொள்ளலாம்.**

## 31-மார்ச் 2025 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைகளின் ஒரு பகுதியான குறிப்புகள்:

### 1. பெருநிறுவனத் தகவல்கள்

கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் (நிறுவனம்) (CIN U65991TN1903PLN001246) இந்தியாவில் நிறுவனங்கள் சட்டம் 1882-ன்படி, 1903-ம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் ஆகும். இந்திய நிறுவனச்சட்டம் 1956-ன் பிரிவு 620 A-ன்படி நிதி நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. நிறுவனங்கள் சட்டம் 2013-ன்படி, NDH4 நிலை அறிவிக்கப்பட்டது.

நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தின் முகவரி, எண் 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் - 612 001, தமிழ்நாடு.

இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உறுப்பினர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பு பழக்கங்களை உருவாக்குதல் மற்றும் வளர்த்தல் மற்றும் உறுப்பினர்களுக்கு நிறுவனங்கள் சட்டம், 2013-ன் பிரிவு 406 மற்றும் நிதி விதிகள், 2014-க்கு உட்பட்டு மாதாந்திர, நிலையான வைப்புகள் மற்றும் இதர வைப்புகளை, உறுப்பினர்களிடமிருந்து பெறுதல் மற்றும் வைப்புகள், ரசீதுகள், தங்கம், வெள்ளி தேசிய சேமிப்புப் பத்திரம், காப்பீட்டு ஆவணங்கள், அரசு பத்திரங்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட மற்ற பத்திரங்களிற்கு ஈடாக உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல் என்பவைகள் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். நிதி விதிகள், 2014 மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தால் அவ்வப்போது கொடுக்கப்படும் அறிவிக்கைகளின் படியும் நிறுவனம் ஆளுமை செய்யப்படுகிறது.

### 2. நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகளை தயார் செய்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான அடிப்படைகள்

#### 2.1 விதிமுறைகளுக்கு இணக்கமாக நடக்கிறது என்ற அறிக்கை

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 133-கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட, அதனுடன் படிக்கப்பட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2014-ன் விதி 3 மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) வெளியிட்ட நிறுவனங்கள் (இந்திய கணக்கியல் தரநிலைகள்) விதிகள், 2016-ன் படியும் திருத்தங்கள் படியும் உள்ள இந்திய கணக்கு தரவு (Ind AS) கணக்கிற்கேற்ப நிறுவனம் தொடர்ந்து இயங்கும் என்ற வகையில் நிதிநிலை அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, இந்திய பட்டய கணக்காளர்கள் கழகம் (ICAI) வெளியிட்டுள்ள வழிகாட்டி குறிப்புக்களும் மற்றும் அறிவிப்புகளும், மற்ற சட்டக்கூறுகளின்படி, வேறு விதமாக கணக்கிடப்பட வேண்டிய கட்டுப்பாடுகளுக்கு இணங்க கட்டுப்பட வேண்டியதைத் தவிர, பயன்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.2 கணக்கியல் மரபு

நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கைகள் தயாரிப்பில் சில இக்கட்டான கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் மற்றும் காண்பிக்கப்பட்ட, நிச்சயமற்ற பொறுப்புகளின் தொகைகளைப் பாதிக்கக் கூடிய அனுமானங்களையும் பயன்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மேம்பட்ட மதிப்பீடு செய்ய வேண்டிய அல்லது சிக்கல் நிறைந்த அல்லது பொருட்படுத்தத்தக்க வகையில் உள்ள அனுமானங்கள் எல்லாம் குறிப்பு-3 குறிப்பிடத்தக்க கணக்கியல் மதிப்பீடுகள், உத்தேச மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்ற பகுதியில் விவாதிக்கப்பட்டுள்ளன.

#### 2.3 அளவீட்டின் அடிப்படை

ஒவ்வொரு அறிக்கையின் முடிவுத் தேதியன்று உள்ள நியாயமான மதிப்பீடுகளின்படி அளவீடு செய்யப்படும் சில நிதிக்கருவிகள் மற்றும் நிலையானை சொத்துக்கள் தவிர, நிதிநிலை அறிக்கைகள் ஏட்டு அடக்கவிலை மரபு முறையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளன.

#### 2.4 நிநி நிலை அறிக்கைகளை சமர்ப்பித்தல்

பெறுநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) அறிவித்துள்ள நிறுவனச்சட்டம், 2013-ன்படி அட்டவணை III- (பிரிவு III)-ன்படி வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்குப் (NBFCs) பொருந்தக்கூடிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. நிபந்தனையற்ற, சட்டப்படி அமலாக்கக்கூடிய எதிர்கால நிகழ்வில் உறுதியில்லாத

அங்கீகரிக்கப்பட்ட தொகையுடன் ஈடுசெய்யக்கூடிய அல்லது சம்மந்தப்பட்ட நபர்கள் நிகரப்படுத்தி சீர் செய்யும் சூழ்நிலைகள் தவிர, கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் பொதுவாக மொத்த அடிப்படையில் அறிவிக்கப்படுகின்றன.

2.4.1 வணிகத்தின் இயல்பான போக்கு

2.4.2 கடன் தவறல் நிகழ்வு

2.4.3 நிறுவனம் மற்றும் / அல்லது எதிர்தரப்பினரின் நொடிப்பு நிலை அல்லது திவால் நிலை நிகழ்வு.

**2.5 செயல்பாட்டு மற்றும் சமர்ப்பித்தலுக்கான நாணயம்**

நிதி நிலை அறிக்கைகள் இந்திய ரூபாய் (INR) மதிப்பில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அது செயல்பாட்டிலுள்ள நாணயமும் கூட இதனுடைய மதிப்புகள் வேறு விதமாக குறிக்கப்பட்ட சூழ்நிலைகள் தவிர, எல்லா மதிப்பீடுகளும் இலட்சங்களுக்கு அண்மையாக முழுமையாக்கப்படுகின்றன.

**3. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்**

**3.1 செயல்பாடுகளிலிருந்து வருவாய்**

**3.1.1 வட்டி வருமானம்**

கடன் மதிப்புக் குறைக்கப்பட சொத்துக்கள் மற்றும் FVTPL ஆக அளவீடு செய்வதாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களைத் தவிர உள்ள மொத்தம் கொண்டு செல்லும் நிதி சொத்துக்களின் தொகை மீது விளைவுறு வட்டியை (EIR) பயன்படுத்தி வட்டி வருமானம் கணக்கிடப்படுகிறது.

**நிதிச் சொத்தின் EIR கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது**

a) நிதிச் சொத்தின் எதிர்பார்க்கப்படும் காலம் மூலம், எதிர்காலத்தில் உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட பண வரவுகளை நிதிச்சொத்துக்களின் மொத்தமாகக் கொண்டு செல்லப்படும் தொகைக்கு மிகத்துல்லியமாகத் தள்ளுபடி செய்யும் விகிதமாக

b) பணப்புழக்கங்களை உத்தேச மதிப்பீடு செய்வதில், பணக்கருவிகளின் அனைத்து ஒப்பந்த நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டும்.

c) ஒப்பந்தத்தில் உள்ள நபர்களுக்கிடையே பட்டுவாடா செய்யப்படும் விளைவுறு வட்டி விகிதம், பரிவர்த்தனை செலவுகள் மற்றும் எல்லா ப்ரீமியம் அல்லது தள்ளுபடிகள் ஆகியவைகள் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் அனைத்துக் கட்டணங்களையும் உள்ளடக்கி

எதிர்கால பணப்புழக்கங்களில் பின்னர் ஏற்படும் எந்த மாற்றங்களும் வட்டி வருமானத்தில் கணக்கில் கொண்டு வரப்பட்டு அதற்குத் தகுந்தபடி சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் சீரமைப்பு செய்யப்படும்.

**3.1.2 கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்**

கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் என்பது நிறுவனம் தனது செயல்பாட்டு பொறுப்புகளை பெறப்பட்ட அல்லது பெற வேண்டிய ஈட்டுபயனின் நியாயமான மதிப்பில் தீர்க்கும்போது கீழே கொடுத்துள்ள ஐந்து படிநிலை மாதிரிகளின்படி (விளைவுறு வட்டி கணக்கீட்டில் சேர்க்காத வரை).

படி-1 உறுப்பினருடனான ஒப்பந்தத்தை / ஒப்பந்தங்களை அடையாளம் காணுதல் : ஒப்பந்தம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையேயான செயல்படுத்தத் தக்க உரிமைகளையும் கடமைகளையும் கொண்டுள்ள உடன்படிக்கையாகும். அது, அந்த ஒப்பந்ததின்படி நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டிய அளவுகோல்களை வெளிப்படுத்துகிறது.

படி-2 ஒப்பந்தத்தின் உள்ள செயல்பட வேண்டிய பொறுப்பு கடமைகளை அடையாளம் காணுதல் : ஒப்பந்தத்தின் செயல்பாட்டு பொறுப்பு என்பது ஒப்பந்ததில் உள்ள ஒரு உறுப்பினர் ஒரு பொருளையோ அல்லது சேவையையோ அந்த உறுப்பினருக்கு மாற்றவேண்டிய வாக்குறுதியாகும்.

படி-3 பரிவர்த்தனையின் விலையை நிர்ணயம் செய்தல் : பரிவர்த்தனை விலை என்பது வாக்களித்த பொருளை அல்லது சேவையை ஒரு உறுப்பினருக்கு மாற்றம் செய்வதற்காக நிறுவனம் உரிமை கொண்டாடி எதிர்பார்க்கும் ஈட்டுப்பயன் தொகை ஆகும். (மூன்றாவது நபர்களுக்காக வசூல் செய்த தொகைகளை நீங்கலாக)

படி-4 ஒப்பந்தத்தில் உள்ள செயல்பாட்டு பொறுப்புகளுக்காக பரிவர்த்தனை விலைகளை ஒதுக்கீடு செய்தல்: ஒரு ஒப்பந்தத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட செயல்பாட்டு பொறுப்புகள் இருந்தால் அவற்றின் அளவீடுகளுக்கு ஏற்றவாறு நிறுவனம் ஒவ்வொரு செயல்பாட்டு கட்டமைப்பையும் நிறைவேற்றுவதற்கு ஈடாக நிறுவனம் எதிர்பார்க்கும் தொகையைச் சித்தரிக்கும் பரிவர்த்தனை விலையை ஒவ்வொரு ஒப்பந்த பொறுப்புக்கும் ஒதுக்கீடு செய்கிறது.

படி-5 கடமைப் பொறுப்பை தீர்க்கும் நேரத்திலோ (அல்லது தீர்க்கும் போதோ) வருமானத்தை கணக்கில் கொண்டுவருதல்:

பங்குதாரருக்கு வாக்களித்த சேவைகளின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்யும் போது அந்த பங்குதாரருடன் உள்ள ஒப்பந்தப்படி நிறுவனம் பெற எதிர்பார்க்கக்கூடிய ஈட்டு விலை வருவாயாக கணக்கிடப்படும். ஒவ்வொர தனிப்பட்ட சேவை வருமானத்துடன் தொடர்புடைய பொறுப்புக்கும், நிறுவனம் வருவாய் கணக்கிடும் நியதியை பயன்படுத்துகிறது. தனித்து இருக்கும் விற்பனை விலையின் அடிப்படையில், ஒவ்வொரு செயல்பாட்டு பொறுப்புக் கடமைக்கும், பரிவர்த்தனை விலை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

### 3.1.3 நியானமான மதிப்பீட்டின் மாற்றங்களினால் ஏற்படும் நிகர ஆதாயம்

இலாப நட்டக்கணக்கின் மூலமாக நியாயமான மதிப்பீடாக வகைப்படுத்தப்பட்ட நிதி நிலை அறிக்கைத் தேதியன்று நிறுவனம் வைத்துள்ள நிதிச்சொத்துக்களின் நியாயமான மதிப்புகளின் வித்தியாசங்கள், பெறப்படாத ஆதாயம் / இழப்பாக கணக்கிடப்படுகிறது. மொத்தத்தில் நிகர ஆதாயமாக இருந்தால் செயல்பாடுகளிலிருந்து வருமானம் என்ற தலைப்பின்கீழ் "நியாயமான மதிப்பு மாறுதல்களால் நிகர லாபம்" என்று கணக்கிடப்படுகிறது. இழப்பு ஏற்பட்டால், அது இலாப நட்டக் கணக்கில் செலவுகளின் கீழ் காட்டப்படுகிறது.

அதே போல், FVTPL-ல் அளவீடு செய்யப்படும் நிதிக்கருவிகளை விற்றதால் ஏற்பட்ட ஆதாயம் அல்லது இழப்பு, மற்றும் FVOCI-ல் அளவிடப்படும் கடன் கருவிகளை விற்றதால் ஏற்படும் ஆதாயம் அல்லது இழப்பு நியாயமான மதிப்பு மாற்றங்களின் நிகர ஆதாயம் / இழப்பு என்று கணக்கிடப்படும். அறிக்கைத் தேதியன்று, FVTPL-ல் அளவீடு செய்ய வேண்டிய நிதிக்கருவிகளோ அல்லது FVOCI-ல் அளவீடு செய்யப்பட வேண்டிய கடன் பத்திரங்களோ இல்லை. இருப்பினும், நிதிக்கருவிகளை விற்பதால் ஏற்படும் நிகர ஆதாயம் / இழப்பு, மதிப்பிழப்பு விலை என்று வகைப்படுத்தப்பட்டு இலாப நட்ட அறிக்கையில் தொடர்புடைய தலைப்பின்கீழ் தனியாகக் காண்பிக்கப்படும்.

### 3.1.4 வருவாய் தகவல்களைப் பிரித்தல்

நிறுவனத்தின் வருவாய் மீது Ind AS 115-ஐ பயன்படுத்தும் தேவை குறிப்பிடத்தக்க வகையில் இல்லாததால் வருமானத்தின் தன்மை, தொகை, கால நேரம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை பிரித்தல் தேவையற்றது என்று நிறுவனம் நம்புகிறது.

## 3.2 செலவுகள்

### 3.2.1 நிதிச் செலவுகள்

நிதிச் செலவுகள் என்பது FVTPL-என்று வகைப்படுத்தப்பட்டவைகள் தவிர மற்ற நிதிப் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் மொத்த தொகை மீது விளைவுறு வட்டி விகிதத்தை (EIR) பயன்படுத்தும்போது வரும் வட்டி செலவுகளைக் குறிக்கும். நிதிப்பொறுப்புக்களுக்கான EIR கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

a) நிதிப்பொறுப்பின் எதிர்பார்க்கப்படும் காலம், உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட பணப்பட்டுவாடாக்களை நிதிப்பொறுப்புக்களின் மொத்தமாகக் கொண்டு செல்லப்படும் தொகைக்கு மிகத் துல்லியமாக தள்ளுபடி செய்யும் விகிதமாக

b) பணப்புழக்கங்களை உத்தேச மதிப்பீடு செய்வதில், பணக்கருவிகளின் அனைத்து ஒப்பந்த நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டும்

c) ஒப்பந்தத்தில் உள்ள நபர்களுக்கிடையே பட்டுவாடா செய்யப்படும் விளைவுறு வட்டி விகிதம், பரிவர்த்தனை செலவுகள் மற்றும் எல்லா ப்ரீமியம் அல்லது தள்ளுபடிகள் ஆகியவைகள் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் அனைத்துக் கட்டணங்களையும் உள்ளடக்கி

எதிர்கால பணப்புழக்கங்களில் பின்னர் ஏற்படும் எந்த மாற்றங்களும் வட்டி வருமானத்தில் கணக்கில் கொண்டு வரப்பட்டு அதற்கேற்றார்போல் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் சீரமைப்பு செய்யப்படும்.

முதிர்வடைந்த மற்றும் கோரப்படாத வைப்புகளுக்கு வட்டி ஒதுக்கீடு செய்யப்படவில்லை மற்றும் திரளவில்லை.

**3.2.2 பணி ஓய்வு மற்றும் பணியாளர்களின் இதர நலன்கள் :**

**குறுகியகால பணியாளர் நலன்கள்:**

பணி செய்த பன்னிரண்டு மாதங்களுக்குள் முழுமையாக பட்டுவாடா செய்யப்பட வேண்டிய அனைத்து பணியாளர் நலன்களும் குறுகிய கால பணியாளர் நலன்கள் என்று வகைப்படுத்தப்படும். இந்த பலன்கள் ஊதியத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு போன்ற பணிக்கு வராமலிருக்கும் போது ஈடு செய்யப்படும் குறுகிய கால பலன்களை உள்ளடக்கியதாகும். பணிபுரிந்தமைக்கு மாற்றாக ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட எதிர்பார்க்கும் தள்ளுபடி செய்யப்படாத குறுகிய கால ஊழியர் நலன்கள் தொகைகள் பட்டுவாடா செய்யப்படும் கால வட்டத்திலேயே செலவாக கணக்கிடப்படும். சம்பளம், ஊதியங்கள் போன்றவை மற்றும் எதிர்பார்க்கும் மிகை ஊதியம் / கருணைத்தொகை போன்றவற்றின் அடக்கச் செலவுகள் ஒரு ஊழியர் தொடர்புடைய பணி செய்த அந்த காலவட்டத்தில் கணக்கிடப்படும்.

**பணிக்காலத்திற்கு பிந்தைய பணியாளர் நலன்கள்**

a) **வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்**

நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும், ஊழியர் மற்றும் நிர்வாகம் என்ற இருவரும் ஒரு நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் மாதாமாதம் பங்களிப்பு செய்யும் வருங்கால வைப்புநிதி, தொழிலாளர் மாநில காப்பீட்டு திட்டம், வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் கீழ் நலன்களைப் பெற உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். நிறுவனத்தின் வருடாந்திர பங்களிப்பைத் தவிர, நிறுவனத்திற்கு எதிர்கால நலன்கள் சம்பந்தமாக எந்தவித பொறுப்பும் கிடையாது. மற்றும் அந்த பங்களிப்புகளை ஊழியர் சம்மந்தப்பட்ட பணி செய்த அந்த கால வட்டத்திலேயே ஒரு செலவாக கணக்கீடு செய்யப்படுகிறது. இருப்புநிலைக் குறிப்பு தேதிக்கு முந்தைய காலத்தில் செய்யப்பட்ட பணிகளுக்காக கொடுபட வேண்டிய பங்களிப்புகள் ஏற்கனவே செலுத்தப்பட்ட பங்களிப்புகளை விட மிகையாக இருக்கும்போது, அந்தத் திட்டத்திற்கு கொடுபட வேண்டிய பற்றாக்குறை, பொறுப்பாக ஏற்கனவே செலுத்தப்பட்ட பங்களிப்புகளைக் கழித்துக்கொண்டு கணக்கிடப்படுகிறது. இருப்பு நிலைக் குறிப்புத் தேதிக்கு முன் செய்யப்பட்ட பணிக்காக கொடுபட வேண்டிய பங்களிப்புகள் முன்பே செலுத்தப்பட்ட பங்களிப்புகளைவிட மிகையாக இருக்கும்போது, அந்த அதிகப்படி பங்களிப்பானது எதிர்காலத்தில் பட்டுவாடா செய்ய வேண்டிய தொகை உதாரணமாக குறைக்கப்படுதல் அல்லது பணமாக திரும்பப்பெறுதல் என்ற ஒரு நிலைக்குச் செல்லும்போது அந்த தொகை வரை அது ஒரு சொத்தாக கணக்கிடப்படுகிறது.

b) **வரையறுக்கப்பட்ட பலன்களின் திட்டங்கள்**

நிறுவனம், வரையறுக்கப்பட்ட பணி ஓய்வு பலன் திட்டமாகிய பணிக்கொடையை அனைத்து பணியாளர்களுக்கும் வழங்குகிறது. பணியாளர்கள் தங்களது பணிக்காலத்தின்போது இறந்தால் அல்லது பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972-ல் குறிப்பிடப்பட்ட ஆண்டுகளுக்குப் பிறகு பணி முறிவு ஏற்பட்டால், அந்த திட்டம் அவர்களுக்கு மொத்த தொகையை பட்டுவாடா செய்ய வழிவகை செய்கிறது.

இந்தப் பொறுப்பு உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால பணப்புழக்கங்களின் நடப்பு மதிப்பில் அளவிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பலன் திட்டத்தின் எதிர்கால பொறுப்பின் தற்போதைய மதிப்பு, தீர்மானம் செய்ய உபயோகிக்கும் தள்ளுபடி விகிதம், இருப்புநிலைக் குறிப்புத் தேதியன்று உள்ள அரசுப் பத்திரங்களில் சந்தை வருவாயை அடிப்படையாகக் கொண்டது.

வரையறுக்கப்பட்ட பலன்களுக்கான பொறுப்புக்கும் நிகர வரையறுக்கப்பட்ட நலனுக்கான பொறுப்பு அல்லது சொத்தை அளவீடு செய்யும் தள்ளுபடி விகிதத்தை உபயோகித்து நிகர வட்டி செலவு கணக்கிடப்படுகிறது.

தள்ளுபடி வீதத்தை விட அதிகமான அல்லது குறைவான திட்டச் சொத்துக்களின் உண்மையான வருமானம் இதர அனைத்தடக்க வருமானம் மூலம் கணக்கிடப்படும் நிகர வரையறுக்கப்பட்ட பொறுப்பு அல்லது சொத்தின் ஒரு பகுதியாக கணக்கிடப்படுகிறது.

நிதி இடர் கணிப்பியல் என்பது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உண்மையான நிகழ்வுகளுடன் மாறுபடக்கூடிய பலதரப்பட்ட ஊகங்களுக்குட்பட்டதாகும். அவைகள் தள்ளுபடி விகிதம், ஊழியர்கள் விலகல் விகிதம், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் மரண விகிதம் இவைகளைத் தீர்மானித்தலை உள்ளடக்கியது. அவைகளை மதிப்பீடு செய்வதில் உள்ள சிக்கல்கள் மற்றும் அதனுடைய நீண்டகாலத் தன்மை இவற்றின் காரணங்களினால் இவைகள் ஊகங்களின் மாறுபாடுகளுக்கு மிகுந்த வயப்பட்டுள்ளன. எல்லா ஊகங்களும் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

நிறுவனம் Trust Bank கணக்கின் வழியாக அல்லாமல் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு (LIC) உறுதி செய்யப்பட்ட அனைத்து பொறுப்புகளையும் முழுவதுமாக பங்களிப்பு செய்கிறது. அறக்கட்டளைகளுக்கு வழங்கப்பட்ட எல்லா பங்களிப்புகளையும் அறங்காவலர்கள் நிர்வகிக்கிறார்கள். பங்களிப்புகளால் எல்லாம் IRDA அங்கீகாரம் பெற்ற காப்பீடு நிறுவனங்களில் உள்ள ஒரு காப்பீட்டுத்திட்டத்தில் முதலீடு செய்யப்படுகின்றன.

மறு அளவீடானது நிதி இடர் கணிப்பியல் ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் மற்றும் திட்டச்சொத்துக்களின் மீதான வருமானங்களை (மறு வரையறுக்கப்பட்ட நல பொறுப்புகளின் மீதான நிகர வட்டி நீங்கலாக) உள்ளடக்கிய மறு அளவீடு அது நிகழ்ந்த காலத்திலேயே இருப்புநிலைக் குறிப்பில் ஒத்திசைவான பற்று அல்லது வரவு செய்யப்பட்டு உடனே கணக்கிடப்படுகிறது. தக்கவைக்கப்பட்ட வருவாய்களுக்கு அனைத்தடக்க வருவாய் மூலம் மறு அளவீடுகள் பின்னர் உள்ள கால வட்டத்தின் இலாபம் மற்றும் நட்டத்தில் வகைப்படுத்தப்படுகிறது.

c) **இதர நீண்டகால பணியாளர் நலன்கள் :**

நிறுவனத்தின் கடந்த கால நிகழ்ச்சிக்கோவைகள் அடிப்படையில் ஊகங்களின் மாறுபாடுகளால் ஏற்பட்ட விளைவுகளை கருத்தில்கொண்டு, ஊழியர்கள் பணிக்கு வராமலிருத்தலை ஈடு செய்யும் விதமாக நிறுவனத்தின் பொறுப்புகள் திரள்கின்றன. மற்றும் அவைகள் உடனே நிறுவனத்தின் இலாப நட்ட அறிக்கையில் கணக்கிடப்படுகிறது. ஊழியர்கள் பணிக்கு வராமலிருத்தலை ஈடு செய்வதற்கான ஒதுக்கீடுகள், நிறுவனம், இருப்புநிலைக் குறிப்பில் ஒதுக்கீடுகள் என்ற தலைப்பில் காண்பிக்கிறது.

**3.2.3 வாடகை செலவு:**

**குத்தகையை அடையாளம் காணுதல்**

ஒரு ஏற்பாடு குத்தகையா அல்லது குத்தகைக்கான தன்மைகளை கொண்டுள்ளதா என்பதை தீர்மானித்தல் அந்த ஏற்பாட்டின் சாராம்சம் அடிப்படையிலேயே அமைகிறது. அவ்வாறு தீர்மானித்தல் அந்த ஒரு ஏற்பாட்டை நிறைவேற்றுதல் ஒரு குறிப்பிட்ட சொத்தினை அல்லது சொத்துக்களை பயன்படுத்துதல் அல்லது சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை அளிக்கப்பட்டுள்ளதா என்பதை சார்ந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

**குத்தகை தொகை பட்டுவாடாவை அங்கீகரித்தல்:**

இயக்கக் குத்தகைத் தொகை பட்டுவாடாக்களை குறிக்கும் வாடகை செலவுகள் இலாப நட்ட அறிக்கையில் குத்தகை காலத்தில் நேர்கோட்டு முறை அடிப்படையில், அந்த அதிகரிப்பு எதிர்பார்க்கும் பொதுவான பணவீக்கத்தின்படி இல்லாத வரையில், செலவுகளாக கணக்கீடு செய்யப்படும். அத்தகைய சூழ்நிலையில் குத்தகை பட்டுவாடாக்கள் ஒப்பந்த விதிமுறைகளின் அடிப்படையில் கணக்கிடப்படும். உடைமைக்குத் தொடர்புடைய எல்லா இடர்களையும், பலன்களையும் கணிசமாக மாற்றம் செய்யப்படாத குத்தகைகள், இயக்கக் குத்தகைகள் ஆகும்.

**3.2.4 இதர வரவு மற்றும் செலவுகள்**

மற்ற இதர வரவு மற்றும் செலவுகள் அவை நிகழும் அந்த காலவட்டத்தில் கணக்கிடப்படுகின்றன.

**3.2.5 நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்புக் குறைபாடு:**

உள் அல்லது வெளி காரணிகளின் அடிப்படையால் குறைபாடுகள் ஏதேனும் இருப்பதற்கான அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகை ஒவ்வொரு இருப்புநிலைக் குறிப்பு தேதியன்று சீராய்வு செய்யப்படும். ஒரு சொத்தின் கொண்டு செல்லப்படும் மதிப்பு அதை மீட்கக்கூடிய தொகையை விட கூடுதலாக இருந்தால், குறைமதிப்பீடு இழப்பாக கணக்கிடப்படும். மீட்கக்கூடிய தொகை என்பது சொத்தில் நிகர விற்பனை விலை மற்றும் உபயோகத்தில் உள்ள மதிப்பு, இவற்றில் எது அதிகமோ அது பயன்பாட்டு மதிப்பை மதிப்பீடு செய்ய, மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால பணப்புழக்கங்கள் அதனுடைய தற்கால மதிப்பிற்கு பணத்தின் காலமதிப்பு மற்றும் அந்த சொத்திற்குரிய குறிப்பிட்ட இடர் இவைகளைப் பிரதிபலிக்கக்கூடிய வரிக்கு முந்தைய தள்ளுபடி விகிதத்தை உபயோகித்து தற்போதைய மதிப்பிற்கு தள்ளுபடி செய்யப்படும்.

நிகர விற்பனை விலையைத் தீர்மானிக்க, சமீபத்திய சந்தைப் பரிவர்த்தனைகள் (இருந்தால்) கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுகின்றன. அத்தகைய பரிவர்த்தனைகள் அடையாளம் காணப்படவில்லை எனில் பொருத்தமான மதிப்பீடு மாதிரி உபயோகப்படுத்தப்படும். மதிப்புக் குறைப்பிற்குப் பிறகு, சொத்தின் திருத்தப்பட்ட கொண்டு செல்லும் மதிப்பின் மேல் மீதமுள்ள பயனுடைய காலத்திற்கான தேய்மானம் கணக்கிடப்படும்.

**3.2.6 வரிகள்**

a) **நடப்பு வரி**

நடப்பாண்டு மற்றும் முந்தைய ஆண்டுகளின் நடப்பு வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நடவடிக்கைகளினால் வரித்துறையிலிருந்து பெற வேண்டிய தொகை அல்லது வரித்துறைக்கு கொடுக்க வேண்டிய தொகையால் அளவீடு செய்யப்படுகிறது.

வரித் தொகையை கணக்கிட உபயோகப்படுத்தப்படும் வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள், அறிக்கைத் தேதிக்குள் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்டவைகளாகும்.

இலாபம் அல்லது நட்டம் இவைகளுக்கு வெளியே கணக்கிடப்பட்ட நடப்பு வருமானவரி, இலாபம் அல்லது நட்டத்திற்கு வெளியே (அனைத்தடக்க வருமானத்தில் அல்லது சமபங்கு செல்வத்தில்) கணக்கிடப்படுகிறது. நடப்பு வரிக்கூறுகள் அனைத்தடக்க வருமானத்திலேயோ (OCI) அல்லது நேராக சமபங்கு செல்வத்திலேயோ (Other equities) தொடர்புடைய அடிநிலையான பரிவர்த்தனைகள்படி கணக்கிடப்படுகின்றன. நிர்வாகம், வருமானவரிப் படிவங்களில் உள்ள நிலைபாடுகளை அவ்வப்போது சூழல்கள்படி பொருத்தமான வரி விதிமுறைகளில் உள்ள உட்பொருளை வெளிப்படுத்தலுக்கு ஆட்பட்டு மதிப்பீடு செய்கிறது மற்றும் பொருத்தம் என்றால் ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்துகிறது.

b) **ஒதுக்கி வைக்கப்பட்ட வரி**

ஒதுக்கி வைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகளுக்கும் அவைகளுடைய கொண்டு செல்லும் தொகைகளுக்கும் உள்ள தற்காலிக வேறுபாடுகளுக்காக கணக்கீடு செய்யப்படுகின்றது. அறிக்கை தேதிக்கு முன் உள்ள வரிவிகிதங்கள் வரிச்சட்டங்கள் இயற்றப்பட்ட அல்லது பொருண்மை அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டங்களை உபயோகப்படுத்தி

தீர்மானிக்கப்படுகிறது மற்றும் சம்மந்தப்பட்ட ஒத்திவைக்கப்பட்ட வருமானவரி சொத்து கைவரப்பெறும் போதோ அல்லது ஒத்தி வைக்கப்பட்ட வருமான வரி பொறுப்பைத் தீர்க்கும்போதோ பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒதுக்கீட்டு வரி சொத்துக்கள் தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தாத வரி நட்டங்கள் மற்றும் பயன்படுத்தாத, பெற வேண்டிய வரி, எதிர்காலத்தில் வரி விதிக்கத் தக்க தொகைகள் இந்த தற்காலிக வேறுபாடுகள் மற்றும் நட்டங்கள் எதிர்காலத்தில் உபயோகிக்கும் சாத்தியங்கள் எழும் என்பது மட்டுமே கணக்கில் கொள்ளப்படும். ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கை தேதியன்றும் சீராய்வு செய்யப்பட்டு, எந்த அளவிற்கு சம்மந்தப்பட்ட வரிப்பலனை பெறுவதற்கு சாத்தியம் இல்லையோ அந்த அளவிற்கு குறைக்கப்படுகிறது.

சட்டப்படி செயல்படுத்தக்கூடிய நடப்பு வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஈடுசெய்ய உரிமை இருக்கிறதோ மற்றும் அவைகள் அதே வரித்துறையால் அதே நிறுவனத்தின் மீது அல்லது வேறு நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வருமான வரிகளுக்கு சம்பந்தப்பட்டிருக்கிறதோ அப்போது ஒத்திவைக்கப்பட்ட வரிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடு செய்யப்படுகின்றன. ஆனால், அவர்கள் நடப்பு வரி பொறுப்புக்களையும் சொத்துக்களையும் நிகரப்படுத்தும் நோக்கோடு தீர்க்கப்படும் போது அல்லது அவர்களது வரிச்சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒரே நேரத்தில் கைவரப்பெறும் போது சீர் செய்யப்படுகின்றன.

**c) குறைந்தபட்ச மாற்று வரி (MAT)**

நிறுவனம் வருமான வரிச்சட்டம் **1961**-ன் பிரிவு **115 BAA**-ன்படி குறைக்கப்பட்ட வரி விகிதங்களை ஏற்றுக் கொண்டதால் குறைந்தபட்ச மாற்று வரிக்கான கூறுகள் இந்நிறுவனத்திற்கு பொருந்தாது. மேலும் இந்த சட்டப்படி, **MAT** வரவு **(Credit)** இருப்பு ஏதேனும் இருந்தால் அதை உபயோகப்படுத்திக்கொள்ள நிறுவனத்திற்கு தகுதியில்லை. எனவே, நிறுவனம் அதன் கணக்கு பதிவுகளில் நிலுவையிலிருக்கும் **MAT** வரவு **(Credit)** எதுவும் இல்லை.

**d) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியானது சொத்துக்களை வாங்கும்போதும் அல்லது செலவு செய்யும்போதும் செலுத்தப்படுகிறது. கீழ்கண்ட சூழ்நிலைகளைத் தவிர செலவுகளும் மற்றும் சொத்துக்களும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செலுத்தப்பட்டபின் உள்ள நிகரத்தொகையாக கணக்கிடப்படும்.

1. ஒரு சொத்து அல்லது சேவையை வாங்கும்போது அல்லது அதன் மேல் ஏற்படும் வரியை வரிவிதிக்கும் துறையிடமிருந்து திரும்பப்பெற இயலாதபோது சொத்தை வாங்கியதற்கான செலவின் ஒரு பகுதியாக அல்லது செலவின பகுதியாக கணக்கிடப்படும்.

2. பெறப்படவேண்டியவைகளும், கொடுபடவேண்டியவைகளும் வரித் தொகையுடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டால், வரித்துறையிலிருந்து திரும்ப பெற வேண்டிய அல்லது வரித்துறைக்கு கொடுக்க வேண்டிய நிகர வரி, அவைகள் பெற வேண்டியவைகளின் அல்லது கொடுபடவேண்டியவைகளின் ஒரு பகுதியாக இருப்பு நிலைக்குறிப்பில் காண்பிக்கப்படும்.

### 3.3 நிதிக் கருவிகள்

### 3.3.1 நிதிக்கருவிகளின் வகைபாடுகள்

நிறுவனம் தனது நிதிக்கருவிகளை கீழ்வரும் அளவீட்டு வகைகளால் வகைப்படுத்துகிறது.

1. மதிப்பு இழப்பின் மூலம் அளவீடு செய்யப்படும் நிதி சொத்துக்கள்
2. அனைத்தடக்க வருமானம் வழியாக நியாயமான மதிப்பீட்டின் மூலம் அளவீடு செய்யப்படும் நிதி சொத்துக்கள்.
3. இலாப அல்லது நட்ட கணக்கின் வழியாக நியாயமான மதிப்பீட்டின் மூலம் அளவீடு செய்யப்படும் நிதி சொத்துக்கள்.

இந்த வகைபாடானது நிதி சொத்துக்களின் ஒப்பந்த விதிமுறைகள், பணப்புழக்கங்கள் மற்றும் நிதிச் சொத்துக்களை நிர்வகிக்கும் வணிக மாதிரிகளைச் சார்ந்துள்ளது. நிறுவனம் வணிகக் குறிக்கோள்களை அடைய

நிதிச்சொத்துக்களின் தொகுப்புகளை எப்படி நிர்வாகம் செய்கிறது என்பதை பிரதிபலிக்கும் வணிக மாதிரிகள் படிநிலையை நிறுவனம் தீர்மானிக்கிறது. காணக்கூடிய காரணிகளின் உடைமை திரட்டுத் தொகுப்புகளை வணிக மாதிரிகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அந்த காரணிகள் கீழ்கண்டவைகளை உள்ளடக்கியுள்ளன.

- நிதி சொத்துக்களின் செயலாக்கம் பற்றி நிறுவனத்தின் முக்கிய மேலாண்மை அதிகாரிகள் சீராய்வு செய்த அறிக்கைகள்.
- வணிக மாதிரியின் செயல்பாடுகளில் தாக்கங்கள் ஏற்படுத்தும் இடர்பாடுகள் (மற்றும் அந்த வணிக மாதிரிக்குள் இருக்கும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் அவைகளை மேலாண்மை செய்தல்.
- வணிகங்களின் எதிர்பார்க்கப்படும் கால எண்ணிக்கை (Frequency) மதிப்பு மற்றும் வணிகக் காலவட்டங்கள்.

வணிக மாதிரி மதிப்பீடு என்பது மிக மோசமான நிலைமை அல்லது நெருக்கடியான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் நியாயமாக எதிர்பார்க்கும் சூழல்களை மதிப்பீட்டு அடிப்படையாக கொண்டிருக்கிறது.

அசலைத் திருப்பிக்கொடுத்தல் மற்றும் நிலுவையிலுள்ள முதலின் மீதான வட்டியை கொடுத்தல் என்பதற்கு மாத்திரமே என்ற வகையில் ஒப்பந்தம் சார்ந்த பணப்புழக்க பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனம் தனது நிதிச்சொத்துக்களை மதிப்பீடு செய்கிறது. அசல் என்பது நிதிச்சொத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட நியாயமான மதிப்பு என்று விவரிக்கப்படுகிறது. மற்றும் நிதிச்சொத்தின் ஆயுட்காலத்தில் மாறுதல் ஏற்படலாம். (உதாரணம்: அசலை திருப்பி செலுத்துதல் அல்லது முனைமம் (Premium) மதிப்பிழத்தல்/தள்ளுபடி) இந்த மதிப்பீடு செய்ய ஒப்பந்தம் சார்ந்த பணப்புழக்கங்கள் கடன் ஒப்பந்தத்துடன் ஒத்திருக்கிறதா என்பதை நிறுவனம் கருத்தில்கொள்கிறது. அதாவது வட்டி என்பது பணத்தின் கால மதிப்புக்கான, ஈட்டுப்பயன் மட்டும், கடன் இடர், இதர அடிப்படையான கடன் இடர்கள் மற்றும் அடிப்படை கடன் ஏற்பாட்டோடு ஒத்துப் போகும் இலாப வரம்பு ஒப்பந்த நிபந்தனைகள் கடன் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாத அல்லது நிலையற்றதன்மைக்கு ஆட்படுத்தினால் சம்பந்தப்பட்ட நிதி சொத்து இலாப/நட்ட கணக்கு மூலம் நியாயமான மதிப்பில் அளவீடு செய்யப்பட்டு வகை செய்யப்படும்.

### 3.3.2 மதிப்பிழப்பு விலையில் அளவிடப்பட்ட நிதிச்சொத்துக்கள்

இந்த நிதிச்சொத்துக்கள் வங்கி இருப்புக்கள், கடன்கள், முதலீடுகள் மற்றும் இதர நிதிச் சொத்துக்களை உள்ளடக்கியிருக்கும்.

ஒப்பந்தங்களின்படி ஒரு குறிப்பிட்ட நாட்களில் பணப்புழக்கங்களைத் தரும் மற்றும் அசலைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் நிலுவையில் உள்ள அசல் தொகை மீது வட்டியை பட்டுவாடா செய்வதை மட்டுமே குறிக்கும் மற்றும் ஒப்பந்தப்படி பணப்புழக்கத்தை வசூல் செய்யும் நோக்கத்துடன் ஒரு வணிக மாதிரிக்குள் உள்ள நிதிச் சொத்துக்கள் மதிப்பிழப்பு விலையினால் அளவீடு செய்யப்படும்.

இந்த நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பீடு மற்றும் அதனுடன் பரிவர்த்தனைக்குரிய செலவுகளைக் கூட்டி கணக்கிடப்படும். பின்னர் மதிப்பிழப்பு விலையில் அளவிடப்படும் பரிவர்த்தனை செலவுகள் என்பது ஒரு நிதிச் சொத்தையோ அல்லது நிதிப் பொறுப்பையோ கைப்பற்றுதல், வெளியிடுதல் அல்லது விற்றல் இவைகளுக்கு நேரடியாக உரித்தான அதிகப்படியான செலவுகள் ஆகும்.

### 3.3.3 நிறுவனம் AS 109 க்கு இணங்க இதர அனைத்தடக்க வருமானம் வழியாக நியாயமான மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள்

நிறுவனம் AS 109 க்கு இணங்க இதர அனைத்தடக்க வருமானம் வழியாக நியாயமான மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் எதையும் வைத்திருக்கவில்லை.

### 3.3.4 இலாப நட்டக் கணக்கின் வழியாக நியாயமான மதிப்பீட்டில் அளவிடப்படும் உருப்படிகள்:

- வர்த்தகத்திற்காக வைத்துள்ள முதலீடுகள் (சம பங்குகள் உட்பட)

- இலாப நட்டக் கணக்கின் வழியாக நியாயமான மதிப்பீடு செய்வதற்காக ஆரம்பக் கணக்கிடலின் போது குறிப்பாக கூறப்பட்ட உருப்படிகள்
- அசல் மற்றும் வட்டியைப் பட்டுவாடா செய்வதற்கு மட்டுமே என்றில்லாத ஒப்பந்த நியதிகள் உள்ள கடன் கருவிகள்

இலாபநட்டக் கணக்கு மூலம் நியாயமான மதிப்பில் வைத்திருக்கும் நிதிக்கருவிகள், ஆரம்பத்தில் நியாயமான மதிப்பில் கணக்கிடப்படும் இலாப நட்டக் கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்படும் பரிவர்த்தனை செலவுகள், அதற்குப்பிறகு அவைகள் நியாயமான மதிப்பில் அளவீடு செய்யப்படும் மற்றும் ஆதாயம் அல்லது இழப்பு இலாப நட்ட கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்படும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கும் நிதிக் கருவிகள் ஒரு நிதிக்கருவி, குறுகிய காலத்தில் முக்கியமாக விற்பனை அல்லது மறு கொள்முதல் செய்வதற்காக வாங்கப்பட்டாலோ அல்லது செலவழிக்கப்பட்டாலோ, அல்லது ஒன்றாக நிர்வகிக்கப்படும் நிதிக்கருவிகளின் ஒரு போர்ட்ஃபோலியோவின் ஒரு பகுதியாக இருந்தாலோ, அதற்காக குறுகிய கால லாபம் ஈட்டுவதற்கான சான்றுகள் இருந்தாலோ, அல்லது அது தகுதிவாய்ந்த ஹெட்ஜ் உறவில் குறிப்பிடப்படாத ஒரு வழித்தோன்றலாக இருந்தாலோ, அது வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டதாக வகைப்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் நிறுவனத்திடம் அத்தகைய கருவிகள் எதுவும் இல்லை.

### 3.3.5 கடன் பத்திரங்கள் மற்றும் பிற கடன் பெற்ற நிதிகள்

ஆரம்ப அளவீட்டிற்குப் பிறகு, வழங்கப்பட்ட கடன் மற்றும் பிற கடன்பெற்ற நிதிகள் பின்னர் பணமதிப்பிழப்பு செய்யப்பட செலவில் அளவிடப்படுகின்றன. வழங்கப்பட்ட நிதிகளில் ஏதேனும் தள்ளுபடி அல்லது பிரீமியத்தையும், பயனள்ள வட்டி விகிதத்தின் (EIR) ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் பரிவர்த்தனை செலவுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பணமதிப்பிழப்பு செய்யப்பட செலவு கணக்கிடப்படுகிறது. நடப்பு ஆண்டில் நிறுவனத்திடம் அத்தகைய எந்த கருவிகளும் இல்லை.

### 3.3.6 நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிப்பை நீக்குதல்:

ஒரு நிதி சொத்து அல்லது நிதி பொறுப்பு, நிறுவனம் பொதுவாக வர்த்தக தேதியில் இருக்கும் கருவியின் ஒப்பந்த விதிகளுக்கு ஒரு தரப்பினராக மாறும்போது இருப்புநிலைக் குறிப்பில் அங்கீகரிக்கப்படுகிறது. கடன் வாங்குபவர்களுக்கு ரொக்கம் முன்பணம் (அல்லது தீர்வு) செய்யப்படும்போது கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அனைத்து நிதி சொத்துக்களும் ஆரம்பத்தில் நியாயமான மதிப்பு மற்றும் நேரடியாகக் கூறப்படும் பரிவர்த்தனை செலவுகளில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஒரு சொத்திலிருந்து ஒப்பந்த பணப்புழக்கங்கள் காலாவதியாகும் போது அல்லது உரிமையின் அனைத்து இடர்களும் வெகுமதிகளும் கணிசமாக மாற்றப்படும் ஒரு பரிவர்த்தனையில் நிதிச் சொத்தில் ஒப்பந்த பணப்புழக்கங்களைப் பெறுவதற்கான அதன் உரிமைகளை மாற்றும் போது நிறுவனம் ஒரு நிதிச் சொத்தை அங்கீகரிப்பதில்லை. நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட அல்லது தக்கவைக்கப்பட்ட மாற்றப்பட்ட நிதிச் சொத்துக்களில் உள்ள எந்தவொரு வட்டியும் ஒரு தனி சொத்து அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது. நிறுவனம் அதன் கடமையை நிறைவேற்றும்போது அல்லது ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்போது அல்லது காலாவதியாகும் போது ஒரு நிதிப் பொறுப்பு இருப்புநிலைக் குறிப்பிலிருந்து அங்கீகரிக்கப்படுவதில்லை.

### 3.3.7 குறை மதிப்பீட்டான நிதி சொத்துக்கள் - எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் (ECL) :

Ind AS 109-ஐ பயன்படுத்துதல் எதிர்பார்க்கப்படும் கடன் தவறலால் வரும் இடர் (இடர்களுக்கான ஒதுக்கீடு) கணக்கிடுதலில் அடிப்படையான மாற்றங்களை அவசியமாக்கியுள்ளது. குறிப்பாக, இழப்பு ஏற்பட்ட மாதிரியானது எதிர்பாக்கப்படும் கடன் இழப்பு மாதிரியாக (ECL) மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றத்தின் விளைவாக நிதிக்கருவிகளில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் மூன்று படிநிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் கணக்கிட்டதிலிருந்து மாறுதல் அடைந்த கடன் இடர் அடிப்படையில், நிதிச்சொத்துக்கள், கீழ்கண்ட மூன்று படிநிலைகளில் இடம் பெயர்கின்றன.

**படிநிலை 1 : 12 மாதங்கள் ECL :**

ஆரம்ப கணக்கீட்டிலிருந்து கடன் இடரில் கணிசமான அதிகரிப்பு இல்லாத மற்றும் ஆரம்பத்திலிருந்து அடுத்த 12 மாதங்களுக்குள் கடன் மதிப்பு இழப்பு இல்லாத கடன் நிலுவைகளாக கடன் தவறல் நிகழ்வுகள் நடக்கக்கூடிய வாய்ப்புகளுடன் தொடர்புடைய காலம் முழுவதற்கான ECL-ல் இருந்து ஒரு பகுதி கணக்கிடப்படுகிறது.

**படிநிலை 2 : கடன் காலம் முழுவதற்கும் ECL கடன் குறைவு இல்லாதது :**

கணிசமான ஆரம்ப கணக்கீட்டிலிருந்த கடன் மதிப்பு இழப்பு இல்லாத கடன் நிலுவைகளுக்கு கடன் கால ECL (அதாவது நிதிச்சொத்தின் மீதமுள்ள கடன் காலத்தைப் பிரதிபலிக்கக்கூடிய) கணக்கிடப்படுகிறது.

**படிநிலை 3 : கடன் கால முழுவதும் ECL-கடன் மதிப்பு இழந்தது**

ஒரு சொத்தின் எதிர்கால பணப்புழக்கங்களில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் நடந்தால், அந்த கடன் இருப்புகள் கடன் மதிப்பு இழந்ததாக மதிப்பீடு செய்யப்படும்.

கடன் மதிப்பு குறைக்கப்பட்ட கடன் நிலுவைகளுக்கு கடன் கால ECL கணக்கிடப்படுகிறது மற்றும் மொத்த கொண்டு செல்லும் தொகைக்கு பதிலாக விளைவுறு வட்டி விகிதத்தை பயன்படுத்தி வட்டி வருவாய் கணக்கிடப்படுகிறது.

ஒவ்வொரு அறிக்கைத் தேதியன்றும் நிறுவனம், ஆரம்ப கணக்கிடலிலிருந்து கடன் இடரில் ஏதாவது கணிசமான அதிகரிப்பு உள்ளதா என்பதை எதிர்பார்க்கப்படும் கடன் காலத்தில் கடன் தவறலால் ஏற்படும் இடரை ஆரம்பத்தில் கணக்கிட்ட தேதியன்று உள்ளதோடு ஒப்பீடு செய்து மதிப்பீடு செய்கிறது. இந்த காரணத்திற்காக நிறுவனம் தேவைக்கதிகமான செலவு அல்லது முயற்சி தேவைப்படாத நியாயமான மற்றும் ஆதரவாக உள்ள தகவல்களை கருத்தில் கொள்கிறது. இது எண்ணிக்கையிலான மற்றும் தரமுடைய தகவல்களை மற்றும் கூடுதலாக முன்னோக்கி பார்க்கும் பகுப்பாய்வுகளையும் உள்ளடக்கியது.

நிதிச்சொத்தின் தரம் குறைகின்றபோது, இருப்புகள், ECL படிநிலைகள் மூலம் இடம் பெயரும். பின்வரும் கால வட்டத்தில் சொத்தின் தரம் மேம்பட்டால் மற்றும் ஆரம்பத்திலிருந்து இருந்த கடன் இடரில் கணிசமாக அதிகரிப்பை திருப்பும் போதும் கடன் கணக்கு காலத்தின் ECL லிருந்து முந்தைய 12 மாத ECL-க்கு மாறுகிறது.

இந்த நிதிச்சொத்துக்களுக்கான இழப்பு கொடுப்பனவுகள், 12 மாதங்கள் ECL அடிப்படையில் அமைந்துள்ளன. ஒரு சொத்து வசூல் செய்ய முடியாததாக இருந்தால், அது தொடர்புடைய கொடுப்பனவுக்கு எதிராக செலவாக கணக்கிடப்படுகிறது. அவைகளை வசூல் செய்ய எல்லா தேவையான நடவடிக்கைகள் எடுத்து முடித்தபின்பு, இழப்புத் தொகையை தீர்மானித்தபின், அத்தகைய சொத்துக்கள் செலவாக எழுதப்படுகின்றன. அவ்வாறு செலவு எழுதப்பட்டவைகளிலிருந்து பின்னால் திரும்பப் பெறும் தொகையானவை, இலாப நட்ட அறிக்கையில் கொடுப்பனவுகளின் தொகையைக் குறைக்கும்.

கணக்கியல் தரநிலை Ind As 109 ECL-ஐக் கணக்கிடுவதற்கு எந்த முறையையும் குறிப்பாக பரிந்துரைக்கவில்லை. இருப்பினும், ECL கணக்கிட, நிதி நிறுவனத்தின் அளவு, சிக்கல்கள் மற்றும் இடர் சுயவிபரங்கள் ஆகியவைகளுக்கு ஏற்ப நல்ல, சந்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளை நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய தேவையுள்ளது.

நிறுவனம் ECL-ஐக் கணக்கிட மூன்று முக்கிய கூறுகளை பயன்படுத்துகிறது. அவைகளான:

இடர் உள்ள நிலுவைகள் (EAR), கடன் தவறல் நிகழ்தகவுகள் (PD), இழப்பு கொடுக்கும் கடன் தவறல் (LGD).

இடர் உள்ள நிலுவைகள் (EAR) என்பது அறிக்கைத் தேதியன்று உள்ள கடன் நிலுவைத்தொகை மற்றும் திரண்ட வட்டி இவைகளின் கூடுதல் என்று வரையறுக்கப்படுகிறது.

PD என்பது கடன்தாரர்கள் தங்களது ஒப்புக்கொண்ட பொறுப்புகளிலிருந்து தவறும் நிகழ்தகவுகள் என்று வரையறுக்கப்படுகிறது.

LGD கடன் தவறல் நேரத்தில் உள்ள க்யூர் (Cure) விகிதத்திற்கு சீரமைக்கப்பட்ட நிலுவைகளைக் குறிக்கிறது. தனிக்கடன் அடிப்படையில் அல்லது கூட்டாக எல்லா கடன்களின் அடிப்படையில் நிறுவனம், நிலுவைகளின் மீதான கடன் இடர் கணிசமாக உயர்ந்திருக்கிறதா என்று மதிப்பீடு செய்கிறது.

குறைபாடுகளின் கூட்டான மதிப்பீடுகளுக்காக நிதிக்கருவிகள், நிதிக்கருவிகளின் வகை, கடன் இடர் விகிதம், ஆரம்ப கணக்கீட்டுத் தேதி, முதிர்ச்சிக்கு மீதமுள்ள காலம், தொழில்துறை, கடன்தாரர் இருக்கும் புவியியல் இடம் மற்றும் இதர தொடர்புடைய காரணிகளை கணக்கில்கொண்டு பகிரப்பட்ட கடன் இடர் பண்புகளின் அடிப்படையில் நிதிக் கருவிகள் வகைப்படுத்தப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் பாரபட்சமற்ற மற்றும் நிகழ்தகவு எடையிட்ட எதிர்பார்க்கப்படும் இழப்புகளுக்கான மதிப்பீடுகளிலிருந்து ECL-களின் அளவீடுகளிலிருந்து பெறப்படுகின்றன மற்றும் கீழ்கண்டவாறு அளவீடு செய்யப்படுகின்றன.

அறிக்கை தேதியன்று கடன் குறைபாடு இல்லாத நிதிச்சொத்துக்கள்: நிதிச்சொத்தின் எதிர்பார்க்கப்படும் கடன் காலத்தில் ஏற்படும் பணப்பற்றாக்குறை என்று.

நிறுவனம் திரும்பப்பெறுதலின் மூலமோ அல்லது ஏலம் மூலமோ அடுத்த 12 மாதங்களுக்கும் பணம் உள்வருகிறது என்று நம்புகிறது. எனவே, தள்ளுபடி செய்தல் என்பது பொருந்தாது.

பணப்பற்றாக்குறை என்பது நிறுவனத்திற்கு ஒப்பந்தப்படி நிறுவனத்திற்கு வரவேண்டியப பண வரவுகளுக்கும், நிறுவனம் எதிர்பார்க்கும் பெற வேண்டிய பண வரவுகளுக்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

நிறுவனம் பலதரப்பட்ட நிதிச் சொத்துக்களை ஒத்த இடர் பண்புகள் உள்ள கடன்கள் கொண்ட ஒருங்கிணைப்பாக வகைப்படுத்துகிறது. ஒரு ஒருங்கிணைப்பில் கடன் தவறல் நிகழ்தகவுகள் எதிர்நோக்கும் காரணிகளால் சீரமைக்கப்பட்ட கடந்தகால போக்குகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. அதைப்போல நிறுவனம், கடன் வசூலாகும் வீதத்தில் இழப்பு கொடுக்கும் கடன்களை கணக்கிடுகிறது.

**அறிக்கைத் தேதியன்று கடன் குறைபாடு உள்ள நிதிச் சொத்துக்கள்:**

மொத்த கொண்டு செல்லும் தொகைக்கும், மதிப்பீடு செய்யப்பட்ட விளைவுறு விகிதத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட எதிர்கால பணப்புழக்கங்களின் தற்போதைய மதிப்புக்கும் உள்ள வித்தியாசமாக.

**நியாய மதிப்பின் மூலம் அளவிடப்படும் கடன் பத்திரங்களுக்கான ECL.**

FVOCI-ல் அளவிடப்படும் கடன் பத்திரங்களுக்கான ECL-கள், இருப்புநிலைக் குறிப்பில் இந்த நிதிச் சொத்துக்களின் எடுத்துச் செல்லும் தொகையைக் குறைக்காது, அது நியாய மதிப்பில் உள்ளது. அதற்குப் பதிலாக, சொத்துக்கள் கடனாகக் குறைக்கப்பட்ட செலவில் அளவிடப்பட்டால் ஏற்படும் கொடுப்பனவுக்குச் சமமான தொகை, OCI-ல் திரட்டப்பட்ட குறைபாடுத் தொகையாக அங்கீகரிக்கப்படுகிறது. இலாபம் அல்லது இழப்புக்கு தொடர்புடைய கட்டணத்துடன் OCI-ல் அங்கீகரிக்கப்பட்ட திரட்டப்பட்ட இழப்பு, சொத்துக்களின் அங்கீகாரத்தை ரத்து செய்தவுடன் இலாபம் மற்றும் இழப்புக்கு மறுசுழற்சி செய்யப்படுகிறது. அறிக்கையிடல் தேதியின்படி, OCI மூலம் நியாய மதிப்பில் அளவிடப்படும் எந்த கடன் பத்திரங்களும் நிறுவனத்திடம் இல்லை.

**பிணையங்களை மதிப்பீடு செய்தல்**

நிதிச்சொத்துக்களின் கடன் இடர்பாடுகளைத் தணிக்க நிறுவனம் எப்போதும், பிணையம் பெறுவதில் நாட்டம் கொண்டுள்ளது. நிறுவனத்தால் பிணையமாகப் பெறபடுபவைகள் முக்கியமாகவும், கணிசமாகவும், தங்க நகைகளாகவே அமைகிறது. இருப்பினும், பிணையங்களின் நியாயமான மதிப்பு ECL கணக்கிடுவதை முடிந்தவரையிலும், பிணையமாக வைத்துள்ள நிதிச்சொத்துக்களை மதிப்பீடு செய்ய அவ்வப்போது செயல்பாட்டிலுள்ள சந்தை தகவல்களை உபயோகிக்கிறது.

நிறுவனம், அதனிடம் வைப்பு நிதி வைத்துள்ளவரின் வைப்புகளுக்கு எதிராகவும் கடன் கொடுக்கிறது.

**மீளக்கைப்பற்றப்பட்ட பிணையங்கள்**

நடைமுறை வணிக செயல்பாடுகளின்படி ஏதேனும் தவறல் நடந்தால், நிறுவனம் அடமானம் வைக்கப்பட்ட நகைகளை கைப்பற்றி ஏலம் விடுவதன் மூலம் தனது நிலுவையிலுள்ள கடன்களை உளவடைத்துக்கொள்கிறது.. இதில் ஏற்படும் உபரியானது உறுப்பினர் / உரிமைகோருபவரிடம் அளிக்கப்படுகிறது.

மேற்கூறியவை தவிர, நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு நிலை வைப்புகள் அல்லது தொடர் வைப்புகளுக்கு எதிராக கடன்களை வழங்குகிறது. இந்த பிணையங்கள் மதிப்பு இழப்பு ஏற்படுபவையாக கருதப்படுவதில்லை. இதனால் நட்டங்கள் ஏதும் உருவாவதில்லை.

**வாராத்தொகையை செலவு எழுதுதல்**

ஒரு நிதிச்சொத்தை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ மீட்க நியாயமான எதிர்பார்ப்புகள் இல்லாத நிலையில், நிறுவனம், நிதிச்சொத்தின் மொத்த கொண்டு செல்லும் தொகையைக் குறைக்கிறது. நிறுவனமானது வாரத்தொகையாகக் கருதி செலவு எழுதுவதற்கு உட்பட்ட கடனை திருப்பிச் செலுத்த கடன்தாரரிடமிருந்து போதுமான பணப்புழக்கங்கள், சொத்து அல்லது வருமானம் தரக்கூடிய வழிவகைகள் இல்லை என்று நிறுவனம் தீர்மானம் செய்யும்போது இது பொதுவான நடைமுறையாகும். அத்தகைய கடன்களுக்காக, பின் பெறப்படும் எந்த மீட்புத் தொகையும் இலாப நட்ட கணக்கில் வரவு வைக்கப்படும்.

**நியாயமான மதிப்பை தீர்மானிப்பது**

சந்தையில் பங்கேற்பவர்களிடேயே ஒழுங்கான பரிவர்த்தனைகளில் அளவீடு செய்யும் தேதியன்று நியாயமான மதிப்பு என்பது அந்த விலை நேரடியாக கண்டுபிடிக்கப்படுகிறதோ அல்லது வேறு மதிப்பீடு செய்யும் தொழில்நுட்பம் மூலம் யூக மதிப்பீடு செய்யப்படுகிறது என்பவைகளைப் பொருட்படுத்தாமல் ஒரு சொத்தை விற்பதற்காக பெறும் விலை அல்லது ஒரு பொறுப்பை மாற்றுவதற்காக கொடுக்கப்படும் தொகை, ஒரு சொத்து அல்லது பொறுப்பின் நியாயமான மதிப்பை யூகமதிப்பீடு செய்ய நிறுவனம் அந்த சொத்து அல்லது பொறுப்பிலுள்ள பண்புகளை சந்தை பங்கேற்பாளர்கள் அளவீடு செய்யும் தேதியன்று அவர்களுடைய சொத்து அல்லது பொறுப்பின் விலை நிர்ணயம் செய்யும்போது அத்தகைய பண்புகளை கருத்தில் கொள்கிறது.

நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஏறுவரிசையில் அவைகளை ரொக்கமாக மாற்றும் வேகத்தன்மையின்படி வரிசையின்படி சமர்ப்பிக்கப்படுகின்றன.

Ind AS 102-ன் வரையரைக்குள் வரும் பங்குகள் அடிப்படையான பட்டுவாடா பரிவர்த்தனைகள், Ind AS 116-ன் வரையறைக்குள் வரும் இத்தகைப் பரிவர்த்தனைகள் மற்றும் Ind AS 36-ல் உள்ள பழக்கத்தில் உள்ள மதிப்பு போன்ற நியாயமான மதிப்பு அல்லாத ஆனால் நியாயமான மதிப்புடன் சில ஒற்றுமைகள் உள்ளன போன்றவைகளைத் தவிர அளவீடுகளுக்கு மற்றும் / அல்லது நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தும் காரணங்களுக்காக நியாயமான மதிப்பு நிர்ணயிக்கப்படுகின்றது. நிதி அல்லாச் சொத்தின் நியாயமான மதிப்பின் அளவீடு சந்தைப் பங்கேற்பாளர்களின் ஒரு சொத்தின் மிக உயர்ந்த மற்றும் சிறந்த பண்பாடு செய்து அல்லது மற்றொரு சந்தை பங்கேற்பாளருக்கு மாற்றி சொத்தை மிக உயர்ந்த மற்றும் சிறந்த முறையில் அந்த சொத்தை உபயோகப்படுத்தி அதிகமான பொருளாதாரப் பலன்கைள உண்டாக்கக்கூடிய சந்தை பொறுப்பாளர்களின் திறமையை கணக்கிலெடுத்துக் கொள்கிறது.

நிலம் / கட்டிடம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மதிப்பீடு செய்ய வெளி மதிப்பீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். கூடுதலாக நிதி அறிக்கை காரணங்களுக்காக, நியாயமான மதிப்பு அளவீடுகள் நிலை 1, 2 அல்லது 3 என்று நியாயமான மதிப்பு அளவீடுகளுக்காக எந்த அளவிற்கு உள்ளீடுகள் நோக்கப்படுகின்றன என்பதையும் மற்றும் நிறுவனத்தில் உள்ளீடுகளின் நியாயமான மதிப்பீடு எவ்வளவு முக்கியமானது என்பதையும் பொருத்து வகைப்படுத்தப்படுகின்றன.

படி 1 : அளவீட்டு தேதியன்று நிறுவனம் அணுகக்கூடிய, ஒரே மாதிரியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ள செயலாக்க சந்தைகளில் உள்ள, சீர் செய்யப்படாத குறிக்கப்பட்ட விலைகள்.

படி 2 : உள்ளீடுகள் என்பது நிலை-1க்குள் சேர்க்கப்பட்டவைகளைத்தவிர சொத்து மற்றும் பொறுப்புக்காக நேரடியாகவோ, மறைமுகமாகவோ / நோக்கக்கூடிய உள்ளீடுகள்

படி 3 : சொத்து அல்லது பொறுப்புக்காக நோக்க முடியாத உள்ளீடுகள்

நிறுவனம் நியாயமான மதிப்புப்படி நிதிகளில் நிலைகளுக்கிடையே மாற்றம் செய்வதை அறிக்கை தேதியன்று கணக்கிடுகிறது. அறிக்கை அளிக்கும் கால இறுதியில் நியாயமான மதிப்பு படிநிலைகளில் நிலைகளுக்கிடையே மாற்றம் ஏற்பட்டதற்கான எவ்வித நிகழ்வும் பதிவு செய்யப்படவில்லை.

**ஆரம்ப அங்கீகாரத்தில் பரிவர்த்தனை விலைக்கும் நியாய மதிப்புக்கும் உள்ள வேறுபாடு.**

ஆரம்ப அங்கீகாரத்தில் நிதிக் கருவியின் நியாய மதிப்பிற்கு சிறந்த சான்று பரிவர்த்தனை விலையாகும். (அதாவது, கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட ஈட்டுப்பயனின் நியாயமான மதிப்பு) அந்த கருவியின் நியாய மதிப்பு அதே கருவியல் உள்ள பிற காணக்கூடிய தற்போதைய சந்தை பரிவர்த்தனைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் (அதாவது, மாற்றம் அல்லது மறு தொகுப்பு இல்லாமல்) அல்லது மாறிகள் காணக்கூடிய சந்தைகளிலிருந்து தரவை மட்டுமே உள்ளடக்கிய ஒரு மதிப்பீட்டு நுட்பத்தின் அடிப்படையில் நிரூபிக்கப்படாவிட்டால், அத்தகைய சான்றுகள் இருக்கும்போது, நிறுவனம் பரிவர்த்தனை விலைக்கும் ஆரம்ப அங்கீகாரத்தில் இலாபம் அல்லது இழப்பில் நியாய மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்கிறது (அதாவது முதல் நாளில்).

கருவியின் பரிவர்த்தனை விலை தோற்றத்தில் நியாய மதிப்பிலிருந்து வேறுபடும் போது மற்றும் நியாயமான மதிப்பு சந்தை பரிவர்த்தனைகளில் காணக்கூடிய உள்ளீடுகளை மட்டுமே பயன்படுத்தி ஒரு மதிப்பீட்டு நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டால், நிறுவனம் பரிவர்த்தனை விலைக்கும் நியாய மதிப்பு மாற்றங்களில் நிகர ஆதாயத்தில் நியாயமான மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்கிறது. சில உள்ளீடுகள் கவனிக்க முடியாத மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு நியாயமான மதிப்பு நிர்ணயிக்கப்படும் சந்தர்ப்பங்களில், பரிவர்த்தனை விலைக்கும் நியாயமான மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு ஒத்திவைக்கப்படுகிறது. மேலும் உள்ளீடுகள் கவனிக்கத்தக்கதாக மாறும்போது அல்லது கருவி அங்கீகரிக்கப்படாதபோது மட்டுமே இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகிறது.

**3.4 பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள்**

பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் குறுகிய கால, வேகமாக எளிதில் தெரிந்த தொகைக்கு, விரைவில் பணமாக்கக்கூடிய முதலீடுகள், மூன்று மாதங்கள் அல்லது அதற்கு குறைவாக ஆரம்பத்திலிருந்தே இருக்கும் குறுகிய கால வைப்புகள் மற்றும் மதிப்பு மாற்றத்தில் பொருட்படுத்தக்கூடிய இடருக்கு ஆட்படாதவைகள், கையிலுள்ள காசோலைகள் மற்றும் வங்கியிலுள்ள இருப்புக்களை உள்ளடக்கியவை. அவைகள் குறுகிய கால ஒப்பந்தங்களை நிறைவேற்ற, முதலீடுகள் அல்லது மற்ற காரணங்களுக்கு மாறாக வைத்துக் கொள்ளப்படுகின்றன. பணப்புழக்கங்கள் அறிக்கைக்காக, பணம் மற்றும் பணத்துக்கு சமமானவைகள் என்பது ரொக்கம் மற்றும் மேலே விவரித்தபடி குறுகிய கால வைப்புகளை உள்ளடக்கியுள்ளன.

**3.5. நிலம் / கட்டிடம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள்** (PPE):

நிலம் / கட்டிடம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அடக்கவிலையிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட மதிப்புகுறைவைக் (ஏதேனுமிருப்பின்) கழித்து கணக்கிடப்படுகிறது. சொத்துக்களின் மொத்த அடக்கவிலை என்பது வாங்கியவிலை, சரக்குக் கட்டணம், சுங்கவரிகள், வரிகள் மற்றும் சொத்தை அதனுடைய இடத்திற்கு கொண்டுவருவதற்காகவும், மற்றும் நிர்வாகம் நினைக்கும் வகையில் அந்த சொத்தை இயக்கத்திற்கு கொண்டுவருவதற்கு தேவையான செலவுகளை உள்ளடக்கியது.

எதிர்பார்க்கும் பயனுள்ள காலத்தில் மாறுதல்கள் பொருத்தமாக உள்ள மதிப்பிழப்பு காலம் அல்லது வழிமுறையை மாற்றி கணக்கிடப்படுகிறது மற்றும் மதிப்பீடுகளில் மாற்றங்களாக கணக்கிடப்படுகிறது. உருவச்சொத்துக்கள் தொடர்பாக பின்னர் செய்யப்படும் செலவுகள் சொத்துக்களின் எதிர்கால பயன்களை முன்னமே மதிப்பீடு செய்யப்பட்ட செயல்பாடுகளை விட அதிகமாக இருக்கும் மற்றும் நம்பத்தகுந்த முறையில் செலவுகள் அளவீடு செய்யப்படும் என்றால் மட்டுமே அதனுடைய மொத்த மதிப்போடு சேர்க்கப்படும்.

இதர மராமத்து மற்றும் பராமரிப்பு தொகைகள் எல்லாம் எப்போது செலவு செய்யப்படுகிறதோ அப்போதே செலவுகளாக எழுதப்படும்.

எழுதப்பட்ட குறைந்த மதிப்பு முறையை பயன்படுத்தி, இயந்திரம் மற்றும் உபகரணங்களின் அடக்கவிலையை, அதனுடைய பயனுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட காலங்களின் மீதியிருக்கும் மதிப்புக்கு கொண்டுவர தேய்மானம் கணக்கிடப்படுகிறது. நிலத்திற்கு தேய்மானம் இல்லை.

சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டுக் காலங்கள் கீழேகண்டவாறு இருக்கும்.

| விபரங்கள் | நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டுக் காலம் |
|---|---|
| கணினி | |
| - இறுதி பயனர் உபகரணங்கள் | 3 வருடங்கள் |
| - வழங்கி (Server) | 6 வருடங்கள் |
| அறைகலன் மற்றும் பொருத்துதல் | |
| - பாதுகாப்பு பெட்டக அறைகள் * | 60 வருடங்கள் |
| - மற்றவைகள் | 10 வருடங்கள் |
| கட்டிடங்கள் | 60 வருடங்கள் |
| வாகனங்கள் | 10 வருடங்கள் |
| இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் | 15 வருடங்கள் |

* நிறுவனம் இதனுடைய பயன்பாட்டுக்காலங்களை நிர்வாகத்தால் பெறப்பட்ட தொழில்நுட்ப அறிவுரைகளின் அடிப்படையில் அட்டவணை II-ல் உள்ளதற்கு மாற்றாக மதிப்பீடு செய்துள்ளது.

மீதியுள்ள மதிப்புகள் பயன்படும் காலங்கள் மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீது தேய்மானம் கணக்கிடும் முறைகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் சீராய்வு செய்கிறது மற்றும் தேவையென்றால் எதிர்காலத்தேவைப்படி சீரமைப்பு செய்கிறது.

நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை விற்கும்போது அல்லது அதனுடைய பயன்பாட்டால் எந்தவித எதிர்கால பொருளாதார பயனையும் எதிர்பார்க்கவில்லை என்றால் அவ்வாறான நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சொத்தை விற்பதால் வரும் நிகர பணங்களுக்கும் கொண்டு செல்லப்படும் தொகைக்கும் உள்ள வித்தியாசம் ஆதாயம் அல்லது இழப்பாக கணக்கிடபட்டு அவ்வாறு விற்ற வருடத்தில் இலாப நட்டக்கணக்கில் இதர வருமானம் / செலவு என்று கணக்கீடு செய்யப்படுகிறது. ஒரு நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை விற்ற தேதி என்பது எப்பொழுது ஒரு செயல்பாட்டு பொறுப்பு தீர்க்கப்படுகிறது என்பதற்கு Ind AS 115 உள்ள தேவைகளின் படி அதைப் பெற்றவர்கள் அந்த உருப்படி மீது கட்டுப்பாட்டைப் பெற்ற நாள்.

### 3.6 அருவச் சொத்துக்கள்

ஒரு அருவச் சொத்தானது அதனுடைய அடக்கவிலையை நம்பகமாக அளவீடு செய்ய மற்றும் அதனுடைய எதிர்பார்க்கும் பொருளாதாரப்பலன்கள் நிறுவனத்துக்குக் கிடைக்கும் என்ற நிகழ்தகவு இருந்தால் மட்டுமே கணக்கில் கொள்ளப்படுகிறது.

தனியாக வாங்கப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்பக்கணக்கீட்டின் அடக்கவிலையிலேயே அளவீடு செய்யப்படுகிறது. ஒரு அருவச்சொத்தின் அடக்கவிலை அதனுடைய வாங்கியவிலை மற்றும் அந்த சொத்து அதனுடைய திட்டமிட்ட பயன்பாட்டுக்கு தயார் செய்ய தேவையான செலவுகள் மற்றும் வணிகத் தள்ளுபடி மற்றும் தொகை கழிப்பின் (Rebate) நிகரம் இவைகளை உள்ளடக்கியது.

ஆரம்பக் கணக்கீட்டைத் தொடர்ந்து, அருவச்சொத்துக்கள் அடக்கவிலையிலிருந்த திரண்ட பணமதிப்பு குறைவு மற்றும் திரண்ட குறைபாடு இழப்புக்களை கழித்தபின் உள்ள மதிப்பில் கொண்டு செல்லப்படுகிறது.

அருவச்சொத்துக்களின் பயன்பாட்டுக்காலங்கள் வரையறுக்கப்படவேண்டியதா அல்லது நிச்சியமற்றதா என்ற வகையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுக்காலம் உடைய அருவச் சொத்துக்கு மதிப்பிழப்பு காலம் மற்றும் மதிப்பிழப்பு முறை, குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலாவது சீராய்வு செய்யப்படுகிறது.

ஒரு சொத்தில் அடங்கியுள்ள எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலங்களில் மாறுதல்கள் அல்லது எதிர்கால பொருளாதார பயன்களில் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறை பொருத்தமான மதிப்பிழப்பு காலம் அல்லது முறையை மாற்றி கணக்கிடப்படுகிறது. பின் அவைகள் கணக்கியல் மதிப்பீடுகளின் மாற்றங்களாக கையாளப்படும்.

வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுக்காலங்கள் உடைய அருவச் சொத்துக்களின் மதிப்பிழப்பு செலவு இலாப நட்ட அறிக்கையில் ஒரு தனி வரி உருப்படியாக காண்பிக்கப்படும்.

ஒரு வருடத்தில் வாங்கிய அல்லது விற்ற சொத்துக்களின், ஏதாவது இருந்தால், அவைகளின் மதிப்பிழப்பு, வாங்கிய / விற்ற தேதியிலிருந்து / தேதிவரை விகிதாச்சார அடிப்படையில் இலாப நட்டக் கணக்கில் கணக்கிடப்படும்.

அருவச்சொத்துக்களின் அடக்கவிலையை அவைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டுக் காலங்களில் எஞ்சிய மதிப்பிற்கு குறைத்து எழுத குறைந்த மதிப்பு தேய்மான முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும்.

மென்பொருள் அடங்கிய அருவச் சொத்துக்கள் அவைகளை தனியாக பயன்படுத்த முடியாது என்ற காரணத்தினால் அதனுடைய தொடர்புடைய கணினிகளைப் போல் மூன்று வருட காலங்களில் மதிப்பிழப்பு செய்யப்படுகிறது. நிறுவனத்தின் அருவச் சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுக்காலம் உடைய கணினி மென்பொருளை உள்ளடக்கியது. கணக்கிலிருந்து நீக்கப்படும் அருவச் சொத்துக்களின் ஆதாயம் அல்லது இழப்பு என்பது மேற்படி சொத்தை அகற்றும்போது நிகர அகற்றல் வருமானம் மற்றும் கொண்டு செல்லப்படும் தொகைகளுக்கிடையே உள்ள வித்தியாசமாக இலாப நட்டக் கணக்கில் கணக்கிடப்படுகிறது.

### 3.7 ஒதுக்கீடுகள்

ஒரு நிறுவனம் முன்னர் நடந்த நிகழ்வுளால் தற்போதைய பொறுப்புக்களைப் (சட்டப்பூர்வமாக அல்லது ஆக்க பூர்வமாக) பெற்றுள்ளபோதும் மற்றும் அந்த பொறுப்பைத் தீர்க்க பொருளாதார பலன்களை உள்ளடக்கிய ஆதாரங்கள் செலவிடப்பட வேண்டிய நிகழ்தகவு உள்ளபோதும் மற்றும் அந்தப் பொறுப்புக்கான நம்பகமான மதிப்பீடு செய்ய முடியும் என்றபோதும் ஒதுக்கீடுகள் கணக்கிடப்படுகின்றன. பணத்தின் நேர மதிப்பின் விளைவு பொருட்படுத்தக்கூடியது என்றால், நிறுவனம், எதிர்பார்க்கும் பணப்புழக்கங்களை, அந்த பொறுப்புக்குரித்தான நடப்பு விகிதங்களை பிரதிபலிக்கும் வரிக்கு முந்தைய விகிதத்தில் தள்ளுபடி செய்து ஒதுக்கீடுகளின் அளவைத் தீர்மானிக்கிறது. செலவிற்குத் தொடர்புடைய எந்த ஒதுக்கீடும் செலவு ஈடுசெய்தபின் உள்ள நிகரமாக இலாப நட்ட அறிக்கையில் காண்பிக்கப்படும்.

### 3.8 எதிர்பார்க்கப்படும் பொறுப்புகள்

கடந்தகால நிகழ்வுகளால் உருவான எதிர்காலத்தில் நிகழும் அல்லது நிகழாமலே இருக்கக்கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட, நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளால் உறுதிசெய்யப்பட்ட சாத்தியமான பொறுப்பு, நிச்சயமற்ற பொறுப்பு ஆகும். நிச்சயமற்ற பொறுப்பு என்பது ஒரு பொறுப்பைத் தீர்க்க ஆதாரங்கள் தேவைப்படும் என்பது நிச்சயமில்லாததால் கணக்கிடப்படாத தற்போதைய பொறுப்பை உள்ளடக்கியது. ஒரு பொறுப்பை நம்பகமாக அளவீடு செய்ய இயலாத போதும் நிச்சயமற்ற பொறுப்பு உருவாகிறது. நிறுவனம் நிச்சயமற்ற பொறுப்பை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால், அதனுடைய இருப்பை நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடுகிறது.

### 3.9 ஒரு பங்கின் வருவாய்

ஒரு பங்கின் வருவாயைப் பற்றிக் குறிக்கும் Ind As 33-க்கு ஏற்ப நிறுவனம் ஒரு பங்கின் அடிப்படை மற்ற நீர்த்த வருவாய்களை அறிவிக்கிறது. அந்த வருடத்தில் சம பங்கு உறுப்பினர்களுக்குரிய (வரிகளுக்கு பிந்தைய) நிகர லாபம் அல்லது நட்டத்தை அந்த வருடத்தில் நிலுவையிலுள்ள எடையிட்ட சராசரி சம பங்கு எண்ணிக்கைகளால் வகுத்து அடிப்படை EPS-ஐ கணக்கிடுகிறது.

### 3.10 பிரிவு அறிக்கைகள்

செயல்பாட்டிலுள்ள ஒரு பிரிவு என்பது வருவாய் ஈட்டக்கூடிய அல்லது செலவுகள் ஏற்படக்கூடிய வியாபார நடவடிக்கைகள் ஈடுபடுத்திகொள்ளும் நிறுவனத்தின் ஒரு கூறு ஆகும். நிறுவனம் ஒரே ஒரு செயல்பாட்டு பிரிவைக் கொண்டுள்ளது. அதாவது வைப்பு நிதிகளைப் பெறுதல் மற்றும் தங்க நகைகள் மற்றும் தங்களது

வைப்புக்களின் மீதே கடன் கொடுத்தல். எனவே, Ind AS 108-ன் கீழ் தேவையான பிரிவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. எனினும், AS 108-ன் படி தேவையுள்ள நிறுவனம் வாரியான வெளிப்படுத்தல்களை நிறுவனம் சமர்ப்பித்துள்ளது.

### 3.11 பணப்புழக்க அறிக்கை

வரிக்குப் பிந்தைய நிகர இலாபம், பணத் தேவையில்லாத பரிவர்த்தனைகள், வரி மற்றும் ஒத்திவைக்கப்பட்டவைகள் அல்லது திரண்டவைகள் அல்லது எதிர்கால பண வரவுகள் மற்றும் பட்டுவாடாக்கள் விளைவுகளுக்காக சீர் செய்யப்பட்டு மறைமுக வழியைப் பயன்படுத்தி பணப்புழக்கங்கள் அறிவிக்கப்படுகின்றன. நிறுவனத்தின் செயல்பாடு, முதலீடு மற்றும் நிதி நடவடிக்கைகளுக்காகப் பணப் பழக்கங்கள் தயார் செய்யப்படுகின்றன.

### 4 குறிப்பிடத்தக்க கணக்கு முடிவுகள், உத்தேச மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

Ind AS உடன் ஒத்துப்போகின்ற நிதி நிலை அறிக்கைகள் தயார் செய்ய நிர்வாகம் குறிப்பிடத்தக்க கருத்து முடிவுகள், வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், ஆகியவற்றை பாதிக்கும் உத்தேச மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் மற்றும் அறிக்கைக்குரிய காலத்தின் கடைசி நாளன்றுள்ள இணைத்துள்ள வெளிப்படுத்தல்கள் மற்றும் நிச்சயமற்ற பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் ஆகியவற்றை செய்யத் தேவையாக்குகிறது. உத்தேச மதிப்பீடுகளும் மற்றும் அதற்குரிய அனுமானங்களும் தொடர்ச்சியாக சீராய்வு செய்யப்படுகின்றன.

கணக்கீட்டு மதிப்பீட்டுக்கு எந்த கால வட்டத்தில் பாதிப்பு ஏற்படுத்துகிறதோ அந்த கால வட்டத்திலேயே திருத்தங்கள், கணக்கீடு செய்யப்படுகின்றன. அல்லது திருத்தங்கள் நடப்பு மற்றும் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படுத்தினால் அவ்வாறு திருத்தங்கள் செய்யப்பட காலவட்டத்தில் மற்றும் எதிர்கால காலவட்டங்களில் கணக்கீடு செய்யப்படுகின்றன.

இந்த உத்தேச மதிப்பீடுகள் நடப்பு நிகழ்வுகள் மற்றும் செயல்களின் மீது நிர்வாகம் சிறப்பாக அறிந்திருத்தலின் அடிப்படையில் இருந்த போதிலும், இந்த அனுமானங்கள் மற்றும் உத்தேச மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மை, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் எதிர்காலங்களில் கொண்டு செல்லும் தொகைகளில், பொருட்படுத்தக்கூடிய சீராய்வுகள் செய்ய வேண்டிய விளைவுகளில் முடியலாம்.

குறிப்பாக, நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க உத்தேச மதிப்பீடு செய்யப்பட்ட பகுதிகளைப் பற்றிய தகவல்கள், நிச்சயமற்றதாக நிதிநிலை அறிக்கைகளில் கணக்கிடப்பட்ட தொகைகளில் மிக்க தாக்கம் உண்டாக்கக்கூடிய மதிப்பீடுகளை கணக்குக் கொள்கைகளில் பயன்படுத்துவது கீழ்கண்ட குறிப்புகளில் உள்ளடக்கியன.

### 4.1 வணிக முறை மதிப்பீடு

நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவீடு செய்தல் SPPI (அசல் மற்றும் வட்டி பட்டுவாடக்காக மட்டுமே) மற்றும் வணிக மாதிரிச் சோதனைகளில் முடிவுகளைப் பொறுத்தது.

நிதிச் சொத்துக்களின் தொகுப்புகள் மொத்தமாக ஒரு குறிப்பிட்ட வணிக குறிக்கோளை அடைய எவ்வாறு மேலாண்மை செய்யப்படுகிறது என்பதை பிரதிபலிக்கும் நிலையை நிறுவனம் தீர்மானிக்கிறது.

இந்த மதிப்பீடானது எவ்வாறு சொத்துக்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன மற்றும் அதனுடைய செயல்பாடுகள் அளவீடு செய்யப்படுகின்றன, சொத்துக்களின் செயல்பாடுகளை பாதிக்கும் இடர்கள் மற்றும் அவைகள் எவ்வாறு மேலாண்மை செய்யப்படுகின்றன மற்றும் சொத்துக்களை நிர்வகிக்கும் மேலாளர்கள் எவ்வாறு ஈடு செய்யப்படுகிறார்கள் என்பதை உள்ளடக்கியது ஆகும்.

மதிப்பிழப்பு மூலம் அல்லது இதர அனைத்தடக்க வருமானம் மூலமாக நியாயமான அளவீடு செய்யப்படும் நிதிச்சொத்துக்களை மதிப்பீடு மூலமாக நிறுவனம் அதை நீக்கலுடைய காரணத்தையும் அந்தக் காரணங்கள் அந்த சொத்தை வைத்திருக்கும் நோக்கத்தோடு ஒத்துப்போகிறதா என்பதை தெரிந்து கொள்ளவும். கண்காணிப்பு என்பது நிறுவனத்தின் தொடர்ச்சியான மதிப்பீடுகளின் ஒரு அங்கமாகும். வணிக மாதிரிகள் வைத்துள்ள

மீதமுள்ள நிதிச் சொத்துக்களை பொருத்தமானவையா என்பதை மதிப்பீடு செய்கிறது. அது பொருத்தமானதாக இல்லை என்றால் அந்த வணிக மாதிரியால் ஏதாவது மாறுதல் ஏற்பட்டுள்ளது மற்றும் அதனால் சொத்துக்களின் வகைப்படுத்துதலில் ஒரு முன்னோக்கு மாற்றம் தேவையா என்பதையும் உள்ளடக்கியது.

### 4.2 வரையறுக்கப்பட்ட ஊழியர் நல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

நிதி இடர் கணக்கியல் மதிப்பீடுகளை உபயோகப்படுத்தி வரையறுக்கப்பட்ட நலன் பணிக்கொடைத் திட்டத்தில் செலவும் மற்றும் பணிக்கொடைப் பொறுப்புக்களின் தற்போதைய மதிப்பும் தீர்மானிக்கப்படுகின்றன.

நிதி இடர் கணக்கியல் என்பது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உண்மையான நிகழ்வுகளுடன் மாறுபடக்கூடிய பலதரப்பட்ட ஊகங்களுக்குட்பட்டதாகும். அவைகள் தள்ளுபடி விகிதம், ஊழியர்கள் விலகல் விகிதம், எதிர்கால சம்பள உயர்வுகள் மற்றும் மரண விகிதம் இவைகளைத் தீர்மானித்தலை உள்ளடக்கியது. அவைகளை மதிப்பீடு செய்வதில் உள்ள சிக்கல்கள் மற்றும் அதனுடைய நீண்டகாலத் தன்மை இவற்றின் காரணங்களினால் இவைகள் ஊகங்களின் மாறுபாடுகளுக்கு மிகுந்த வயப்பட்டுள்ளன. எல்லா ஊகங்களும் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### 4.3 நியாயமான மதிப்பு அளவீடு

இருப்பு நிலை அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயமான மதிப்பீடுகளை செயல்பாடுகள் நிறைந்த சந்தைகளில் மேற்கோள் காட்டப்பட்ட விலைகள் அளவீடு செய்ய முடியாத போது, அதனுடைய நியாயமான மதிப்பீடுகள் பலதரப்பட்ட மதிப்பீடு முறைகளை உபயோகப்படுத்தி அளவீடு செய்யப்பட்டுகின்றன. இந்த மாதிரிகளுக்குத் தேவையான உள்ளீடுகள், முடிந்த வரையில் கவனிக்கத் தக்க சந்தைகளிலிருந்து எடுக்கப்படுகிறது. ஆனால், அது சாத்தியமில்லாத போது, அதனுடைய நியாயமான மதிப்பீடுகளை நிலைநாட்ட ஒரு மதிப்பீட்டுத் திறன் தேவைப்படுகிறது. அந்த மதிப்பீட்டு திறன் என்பது பணப்போக்கு இடர், கடன் இடர் மற்றும் நிலையற்ற தன்மையைக் கருத்தில் கொள்வதை உள்ளடக்கியது. இந்தக் காரணிகளைப் பற்றிய ஊகங்களில் ஏற்படும் மாற்றங்கள் நிதிக்கருவிகளின் அறிவிக்கப்பட்ட நியாயமான மதிப்புகளில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

### 4.4 கடன் உடைமைத் திரட்டில் மதிப்புக் குறைபாடு

எல்லா வகைகளான நிதிச் சொத்துக்களின் மதிப்புக்குறைபாடு இழப்புகளை அளவீடு செய்வது மதிப்புக்குறைப்பு இழப்புக்களைத் தீர்மானிக்கும் போதும் மற்றும் கடன் இடர்களின் பொருட்படுத்தத்தக்க அதிகரிப்பை மதிப்பீடு செய்யும்போதும் குறிப்பாக தொகையை மதிப்பீடு செய்வதும் மற்றும் எதிர்கால பணப்புழகத்தின் நேரம் மற்றும் பிணையத்தின் மதிப்புகள் அளவீடு செய்வது மதிப்பீடு தேவைப்படுகிறது. இந்த மதிப்பீடுகள் எல்லாம் அவற்றின் மாறுதல்கள் வேறுபட்ட படிநிலைகளிலான கொடுப்பனவுகளில் முடியும் பல காரணிகளால் உந்தப்படுகின்றன.

உண்மையான இழப்பு அனுபவங்களின் சூழலில், நிறுவனம் தனது மாதிரிகளை தொடர்ந்து சீராய்வு செய்வதும் மற்றும் தேவைப்பட்டால் சரி செய்வதும் நிறுவனத்தின் கொள்கையாக இருந்து வருகிறது.

கடன்கள் மற்றும் முன்பணங்களின் மதிப்பிழப்பு, மேலும் விபரமாக 3.3.7 குறை மதிப்பீட்டான நிதி சொத்துக்கள் - எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் (ECL) -ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 4.5 கடன் உடமை மதிப்புக் குறைபாட்டைத் தவிர நிச்சயமற்ற பொறுப்புக்கள் மற்றும் மற்ற ஒதுக்கீடுகள்

அதனுடைய செயல்பாடுகளில் இயற்கையாகவே உட்பொதிந்த வழக்கத்துக்கு ஆட்படும் இடர்களுக்கு உயர்த்தப்பட்ட ஒரு விதிமுறை மற்றும் சட்டச் சூழல்களில நிறுவனம் செயல்படுகிறது. விளைவாக சாதாரண வணிக நடைமுறைகளில், பலதரப்பட்ட சச்சரவுகள், நடுவர் தீர்ப்புகளில் ஈடுபடுகிறது.

நிறுவனம் நம்பகமான முறையில் ஒரு வழக்குடன் தொடர்புடைய, வெளியேறும் பொருளாதார நலன்களை அளவீடு செய்யும்போது மற்றும் அந்த வெளியேற்றங்களை நிகழ்தகவாகக் கருதும்போதும், நிறுவனம் அந்த வழக்குக்கு எதிராக ஒரு ஒதுக்கீட்டை பதிவு செய்கிறது. வெளியேறுதலின் நிகழ்தகவு தொலைவில் இருக்கும்போது அல்லது சாத்தியமாகும் போது, ஆனால் நம்பத்தகுந்த மதிப்பீடு செய்ய இயலாதபோது, நிச்சயமற்ற பொறுப்பாகக் காண்பிக்கப்படுகிறது. சாத்தியக்கூறுகள் மற்றும் இழப்பின் தொகையை தீர்மானம் செய்ய அகநிலை மற்றும் நிச்சயமற்ற தன்மைகளின் சம நிலைகளில் நிறுவனம் சட்டக்கருத்து, வழக்கின் நிலை

மற்றும் இதற்கிணையான சம்பவங்களில் முற்கால ஆதாரங்கள் உட்பட்ட நிறைய காரணங்களைக் கணக்கில் கொள்கிறது. இந்த மதிப்பீடுகளின் மீது முடிவெடுக்க குறிப்பிடத்தக்க திறன்கள் தேவைப்படுகின்றன.

**4.6 விளைவுறு வட்டி**

நிறுவனத்தின் EIR முறை, கொடுத்த / பெற்ற கடனின் எதிர்பார்க்கும் கடன்கால நடத்தையை விட பெருத்த வருவாய் விகிதத்தைக் குறிக்கும் ஒரு வருவாய் விகிதத்தை உபயோகப்படுத்தி வட்டி வரவு / செலவு அங்கீகரிக்கப்படுகிறது. பல படிநிலைகளிலுள்ள, சாத்தியமான வேறுபட்ட வட்டி விகிதங்களில் தேர்வு செய்யப்பட்ட வட்டி மற்றும் விகிதம் பொருளின் வாழ்க்கை சக்கரத்திலுள்ள (முன்னம் செலுத்துதல், அபராத வட்டி மற்றும் கட்டணங்களை உள்ளடக்கியது) பண்புகளை அங்கீகரிக்கிறது.

இயற்கையாகவே, இந்த மதிப்பீடு, எதிர்பார்க்கும் நடத்தை மற்றும், கருவிகளின் காலச்சக்கரம், பிணையின் மதிப்பில் உள்ள சாத்தியமான ஏற்ற இறக்கங்கள் அதோடு ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படும் வட்டி விகிதம் மற்றும் கட்டண வரவு / செலவுகளில் எதிர்பார்க்கப்படும் மாறுதல்கள் பற்றிய மதிப்பீடு தேவை.

**4.7 இதர மதிப்பீடுகள்**

இவைகள் நிச்சயமற்ற பொறுப்புகள், உருவ மற்றும் அருவச் சொத்துக்களின் பயன்பாட்டிலிருக்கும் காலம், போன்றவற்றை உள்ளடக்கியது.

**5 காப்புத்தொகையின் தன்மை மற்றும் அதன் நோக்கம்**

**5.1 பொதுக் காப்புத் தொகை**

தற்போது உள்ள சட்டங்கள்படி, நிகர லாபத்திலிருந்து பொதுக் காப்புத் தொகைக்கு, மாற்றம் செய்ய வேண்டிய தேவை இல்லை. அந்தத் தொகைகள் B. மற்ற சம பங்குகள் கீழ் பொதுக் காப்புத் தொகை என்ற தலைப்பில் வகைபடுத்தப்பட்டுள்ளது. முன்னர் இருந்த நிறுவனங்கள் சட்டம், 1956 மற்றும் பொருத்தமான விதிகளின் கீழ் வருடாந்திர லாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பொதுக் காப்புத் தொகைக்கு மாற்றப்பட்டது. அந்த ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட பங்காதாயத்தின் சதவிகிதம் மொத்தம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் 10%-க்கு மேல் இருப்பின், மொத்தம் கொடுக்கப்பட வேண்டிய பங்காதாயம் அந்த வருடத்தின் பகிர்ந்தளிக்க வேண்டிய தொகைகளை விட குறைவாக இருந்தால் நிறுவனங்கள் சட்டம், 2013 அறிமுகப்படுத்தியதன் விளைவாக நிறுவனத்தின் நிகர லாபத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை பொதுக்காப்புத் தொகைக்கு மாற்றம் செய்யப்படுவது திரும்ப பெறப்பட்டது. நிறுவனங்கள் சட்டம், 2013-ன்படி முந்தைய ஆண்டுகளில் மாற்றம் செய்யப்பட்ட பொது காப்புத்தொகை சட்ட விதிகளின்படி குறிப்பிட்ட தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்றும், முன்னர் காப்புத் தொகைக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகைகள், நிறுவனங்கள் சட்டம், 2013-ல் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு மட்டுமே உபயோகப் படுத்திக்கொள்ள முடியும்.

**5.2 தக்கவைத்துக்கொண்ட வருவாய்கள்:**

இந்த தக்க வைத்துக்கொண்ட வருவாய் என்பது பொதுவான இயல்புடைய காப்புத் தொகைகள் மற்றும் உபரித்தொகைகள் இலாப நட்டக் கணக்கிலுள்ள பற்று அல்லது வரவு நிலுவைகள், போன்றவைகளை குறிக்கிறது. இந்த காப்புத் தொகைகளை நிறுவனங்கள் சட்டம், 2013-ன் கூறுகளுக்கேற்ப பயன்படுத்த முடியும்.

**5.3 மறுமதிப்பீட்டு மிகுதி**

நிறுவனத்தின் சொத்துக்களையோ அல்லது நிகர சொத்துக்களையோ மறு மதிப்பீடு செய்யும்போது ஏற்படும் மதிப்பீடு செய்த மாற்றீட்டுச் செலவில் உபரி அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட சந்தை மதிப்பீடுகள், மறு மதிப்பீட்டு மிகுதியாகும். வியத்தகு மதிப்புகளை விட கூடுதலாக வரும் அனுமானிக்கப்படும் மாற்றிட்டு விலை அல்லது உருவாக்கக்கூடிய காப்புத் தொகையாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லப்படும் மதிப்பு, மறு மதிப்பீட்டின் விளைவாக அதிகமாகும்போது அந்த அதிகமானது கணக்கிடப்பட்டு, மறு மதிப்பீட்டு உபரி என்ற தலைப்பில் சம உரிமைச் செல்வத்தில் (Other Equities) திரட்டிச் சேர்க்கப்படுகிறது. அதே போல, மறு மதிப்பீட்டின் விளைவால் உண்டாகும் குறைவு, மறு மதிப்பீடு மிகுதி என்ற தலைப்பில் அந்த சொத்து தொடர்பாக திரளாக உள்ள தொகையிலிருந்து அந்த சொத்து சம்பந்தமாக உள்ள வரவு இருப்புகளில் தொகை உள்ளவரை குறைக்கப்பட்டு கணக்கிடப்படுகிறது. உரிமைச் செல்வம் என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ள மறு மதிப்பீட்டு மிகை, அந்த நிலம் / கட்டிடங்கள் / இயந்திரம் / உபகரணத்தை கணக்கிலிருந்து விலக்கும் போது நேரடியாக தக்க வைத்துக்கொண்ட வருவாயில் சேர்க்கப்படலாம்.

**5.4 இதர அனைத்தடக்க வருமானத்தின் இதர பொருட்கள்:**

இதர அனைத்தடக்க வருமானத்தின் இதர பொருட்கள் என்பது ஒத்திசைந்த வரியை உள்ளடக்கிய நிகர வரையறுக்கப்பட்ட பலன்களின் பொறுப்பு சொத்து

**நிறுவனச்சட்டம் 2013 ஷெட்யூல் III Division III - ன் கீழ் தேவைப்படும் கூடுதலான ஒழுங்குமுறை தகவல்கள்**

| வ. எண் | மாற்றியமைக்கப்பட்ட அட்டவணை III-ன் படி வெளிப்படுத்தல்கள | வெளிப்படுத்தாதின் காரணங்கள் (ஏதாவது இருப்பின்) |
|---|---|---|
| 1 | நிறுவனத்தின் பெயரில் இல்லாத அசையா சொத்துக்களின் மீதான உரிமை பத்திரங்கள் | அசையா சொத்துக்களின் மீதான உரிமை பத்திரங்கள் நிறுவனத்தின் பெயரில் இல்லாமல் இருத்தல் போன்ற எந்த சொத்துக்களும் இல்லை. |
| 2 | நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்களின் மற்றும் உபகரணங்களின் மறு மதிப்பீடு | நிறுவனம் நிலம் / கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மறு மதிப்பீடு செய்யவில்லை. |
| 3 | அருவச் சொத்துக்களின் மறு மதிப்பீடு | நிறுவனம் அருவச்சொத்துக்களை மறு மதிப்பீடு செய்யவில்லை. |
| 4 | நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள், இயக்குநர்கள், KMPs மற்றும் இதர தொடர்புடைய நபர்களுக்கு கடன் வடிவிலாக ஏதாவது கடன்கள் அல்லது அட்வான்ஸ்கள் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா | இல்லை |
| 5 | மூலதன சொத்து தொடர்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள் | உண்டு. ரூ.124.45 இலட்சங்கள் (மென்பொருள் (ரூ.106.20 இலட்சங்கள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் பொருத்துதல்கள ரூ.18.25 இலட்சங்கள்) |
| 6 | அருவச் சொத்துக்கள் தொடர்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள் | உண்டு. ரூ. 130 இலட்சங்கள் (மென்பொருள் உருவாக்கம்) |
| 7 | உண்மையான பயனாளி அல்லாத இரவல் பெயரில் உள்ள சொத்துக்கள் (பினாமி) | நிறுவனத்திற்கு உண்மையான பயனாளி அல்லாத இரவல் சொத்துக்கள் ஏதுமில்லை |
| 8 | நடப்பு சொத்துக்களை பிணையமாக வைத்து வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ள கடன்கள் | நிறுவனம் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து நடப்பு சொத்துக்களை பிணையமாக வைத்து கடன்கள் எதுவும் பெறவில்லை. |
| 9 | வேண்டுமென்றே கடனை செலுத்த தவறியவர் | வேண்டுமென்றே கடனை செலுத்த தவறியவர் என எந்த வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது இதர கடனாளர்களால் அறிவிக்கப்படவில்லை. |
| 10 | பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட நிறுவனங்களுடன் உறவு | நிறுவனம், பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்ட நிறுவனங்களுடன் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. |
| 11 | நிறுவனங்களின் பதிவாளர்களிடம் நிதியின் சொத்துக்களின் மீது உண்டாக்கப்பட்ட அல்லது தீர்க்கப்பட்ட சொத்து | இல்லை |
| 12 | நிறுவனத்தின் படிநிலைகள் தொடர்பான சட்டங்களுக்கு இணங்க இருத்தல் | நிறுவனம், எந்த உப நிறுவனங்கள் / கூட்டாண்மைகள் அல்லது கூட்டு முயற்சிகளையும் கொண்டிருக்கவில்லை |
| 13 | பகுப்பாய்வு விகிதங்கள் | பொருந்தாது |

| வ. எண் | ஷெட்யூல் III-ன் படி மாற்றியமைக்கப்பட்ட பின் இணைப்புகள் | பின் இணைக்கப்படாமையின் விளக்கங்கள் (ஏதாவது இருப்பின்) |
|---|---|---|
| 14 | அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பான சட்டங்களுக்கு கீழ்படிதல் | நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவுகள் 230 முதல் 237 படி நிறுவனம் எந்த ஒரு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிப்பதற்காக நிலுவையில் உள்ள ஒருங்கிணைப்புகளுக்கான திட்டங்களின் ஈடுபடவில்லை. |
| 15 | கடனாக பெறப்பட்ட நிதிகள் மற்றும் பங்கு முனைமத்தின் பயன்பாடு | a. நிறுவனத்தின் எந்த நிதிகளும் (தனிப்பட்ட நபர்களுக்கோ அல்லது கூட்டாகவோ) அட்வான்ஸ் ஆக அல்லது கடன்களாக அல்லது கடன் நிதிகளின் முதலீடுகளாகவோ அல்லது பங்கு பிரீமியம் அல்லது இதர ஆதாரங்களாகவோ அல்லது இதர நிதி ஆதாரங்களாகவோ - நிறுவனமோ அல்லது இதர நபர்களாலோ அல்லது கூட்டாண்மையாலேயோ வெளிநாட்டு கூட்டாண்மையாலேயோ (இடைத்தரகர்கள்) - உடன் அவர்களுடன் எழுத்து வடிவிலான அல்லது இதர வடிவிலான உடன்படிக்கை நேரடியாகவோ அல்லது மறைமுகவோ கடனாக அல்லது முதலீட்டாக இதர நபர்கள் அல்லது கூட்டாண்மையின் எந்த வடிவிலும், எதுவாக இருந்தாலும் நிறுவனத்தாலேயோ அல்லது நிறுவனத்திற்கு பதிலாகவோ (இறுதி பயனாளிகள்) அல்லது எந்த உத்திரவாதத்தையும், பத்திரங்களாகவோ அல்லது இதைப்போல எதுவும் இறுதி பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை. |
| 16 | கணக்கில் காட்டப்படாத வருமானம் | இல்லை |
| 17 | பெரு நிறுவன சமுதாய பொறுப்பு (CSR) | Note -36 ஐ பார்க்கவும் |
| 18 | கிரிப்டோ நாணயம் அல்லது மெய்நிகர் நாணயம் தொடர்பான தகவல்கள் | நிறுவனம் இந்த வணிகங்களில் ஈடுபடவில்லை. |

## கிளை தொலைபேசி எண்கள்


| | | |
|---|---|---|
| 01. | ஆடுதுறை | 0435-2472205 |
| 02. | அம்பத்தூர் | 044-26584899 |
| 03. | அம்மாபேட்டை | 04374-232636 |
| 04. | அண்ணாநகர் – மதுரை | 0452-2532114 |
| 05. | அண்ணாநகர்-சென்னை | 044-26545119 |
| 06. | அறந்தாங்கி | 04371-223116 |
| 07. | ஆரணி | 04173-226865 |
| 08. | அரியலூர் | 04329-220990 |
| 09. | அசோக்நகர் | 044-24899584 |
| 10. | ஆத்தூர் | 04282-250102 |
| 11. | ஆவடி | 044-26554899 |
| 12. | அய்யம்பேட்டை | 04374-242132 |
| 13. | வத்தலகுண்டு | 04543-262369 |
| 14. | செங்கல்பட்டு | 044-27429510 |
| 15. | செய்யாறு | 04182-223107 |
| 16. | சிதம்பரம் | 04144-223009 |
| 17. | சின்மையா நகர் | 044-24791217 |
| 18. | சின்னமனூர் | 04554-248149 |
| 19. | சிந்தாதிரிப்பேட்டை | 044-28456700 |
| 20. | குரோம்பேட்டை | 044-22655767 |
| 21. | கோயம்புத்தூர் | 0422-2599944 |
| 22. | கடலூர் | 04142-236753 |
| 23. | தர்மபுரி | 04342-265005 |
| 24. | திண்டுக்கல் | 0451-2433206 |
| 25. | கிழக்குதாம்பரம் | 044-22273055 |
| 26. | ஈரோடு | 0424-2264290 |
| 27. | கந்தர்வக்கோட்டை | 04322-275337 |
| 28. | கூடுவாஞ்சேரி | 044-27462001 |
| 29. | ஓசூர் | 04344-242137 |
| 30. | ஜெயங்கொண்டம் | 04331-250211 |
| 31. | K.புதூர், மதுரை | 0452-2564666 |
| 32. | கள்ளக்குறிச்சி | 04151-223875 |
| 33. | காஞ்சிபுரம் | 044-27233104 |
| 34. | காங்கேயம் | 04257-220113 |
| 35. | காரைக்கால் | 04368-223294 |
| 36. | காரைக்குடி | 04565-234277 |
| 37. | கறம்பக்குடி | 04322-255134 |
| 38. | கரூர் | 04324-264138 |
| 39. | காட்டுமன்னார்கோவில் | 04144-291125 |
| 40. | கீரனூர் | 04339-263122 |
| 41. | கூத்தாநல்லூர் | 04367-232737 |
| 42. | குடவாசல் | 04366-260120 |
| 43. | கிருஷ்ணகிரி | 04343-237005 |
| 44. | குளித்தலை | 04323-222390 |
| 45. | குத்தாலம் | 04364-230115 |
| 46. | கும்பகோணம் பஜார் | 0435-2420790 |
| 47. | கும்பகோணம் பெசன்ட்ரோடு | 0435-2421041 |
| 48. | கும்பகோணம் | 0435-2431648 |
| 49. | லால்குடி | 0431-2544133 |
| 50. | மடிப்பாக்கம் | 044-22423130 |
| 51. | மதுக்கூர் | 04373-260252 |
| 52. | மதுரை | 0452-2344187 |
| 53. | மங்களபுரம் – தஞ்சாவூர் | 04362-246100 |
| 54. | மண்ணச்சநல்லூர் | 0431-2560879 |
| 55. | மணப்பாறை | 04332-260402 |
| 56. | மன்னார்குடி | 04367-252237 |
| 57. | மயிலாடுதுறை | 04364-223067 |
| 58. | மேட்டுப்பாளையம் | 04254-220130 |
| 59. | மேலூர் | 0452-2417194 |
| 60. | மயிலாப்பூர் | 044-24981439 |
| 61. | முசிறி | 04326-260131 |
| 62. | முத்துப்பேட்டை | 0436-260136 |
| 63. | நாச்சியார்கோவில் | 0435-2466622 |
| 64. | நாகப்பட்டினம் | 04365-240776 |
| 65. | நாகர்கோவில் | 04652-220677 |
| 66. | நாமக்கல் | 04286-223129 |
| 67. | நங்கநல்லூர் | 044-22242749 |
| 68. | நன்னிலம் | 04366-230111 |
| 69. | நீடாமங்கலம் | 04367-260202 |
| 70. | நெய்வேலி | 04142-263444 |

## கிளை தொலைபேசி எண்கள் (தொடர்ச்சி...)


| | | |
|---|---|---|
| 71. | ஒரத்தநாடு | 04372-232446 |
| 72. | ஒட்டன்சத்திரம் | 04553-242129 |
| 73. | பழனி | 04545-243148 |
| 74. | பல்லாவரம் | 044-22641332 |
| 75. | பண்ருட்டி | 04142-242077 |
| 76. | பாபநாசம் | 04374-222854 |
| 77. | பந்தநல்லூர் | 0435-2940121 |
| 78. | பட்டுக்கோட்டை | 04373-252348 |
| 79. | பேரளம் | 04366-238579 |
| 80. | பெரம்பலூர் | 04328-276548 |
| 81. | பெரம்பூர் | 044-25510490 |
| 82. | பேராவூரணி | 04373 - 235135 |
| 83. | பெரியகுளம் | 04546-231821 |
| 84. | பொள்ளாச்சி | 04259-229426 |
| 85. | பொன்னேரி | 044-27973103 |
| 86. | பூவிருந்தவல்லி | 044-26495583 |
| 87. | போரூர் | 044-24769124 |
| 88. | புதுக்கோட்டை | 04322-222154 |
| 89. | இராஜபாளையம் | 04563-220525 |
| 90. | இராமநாதபுரம் | 04567-222101 |
| 91. | செங்குன்றம் | 044-26310117 |
| 92. | சைதாப்பேட்டை | 044-24340484 |
| 93. | சேலம் | 0427-2210203 |
| 94. | சங்கரன்கோவில் | 04636-222269 |
| 95. | செம்பனார்கோவில் | 04364 - 282123 |
| 96. | சேத்தியாதோப்பு | 04144-295128 |
| 97. | சிங்காநல்லூர் | 0422-2233127 |
| 98. | சீர்காழி | 04364-270985 |
| 99. | ஸ்ரீரங்கம் | 0431-2433158 |
| 100. | சோழிங்கநல்லூர் | 044-24502118 |
| 101. | தி.நகர் | 044-28141334 |
| 102. | தா.பழூர் | 04331-247124 |
| 103. | தாம்பரம் | 044-22266043 |
| 104. | தென்காசி | 04633-224112 |

| | | |
|---|---|---|
| 105. | தஞ்சாவூர் | 04362-231641 |
| 106. | தேனி | 04546-254472 |
| 107. | திருக்கோவிலூர் | 04153-253110 |
| 108. | திருக்காட்டுப்பள்ளி | 04362-280545 |
| 109. | திருமங்கலம் | 04549-280284 |
| 110. | திருப்பனந்தாள் | 0435-2456020 |
| 111. | திருப்புறம்பியம் | 0435-2455472 |
| 112. | திருத்துறைப்பூண்டி | 04369-222851 |
| 113. | திருவையாறு | 04362-260551 |
| 114. | திருவள்ளூர் | 044-27662664 |
| 115. | திருவான்மியூர் | 044-24421789 |
| 116. | திருவாரூர் | 04366-222367 |
| 117. | திருவெறும்பூர் | 0431-2510197 |
| 118. | திருவொற்றியூர் | 044-25737701 |
| 119. | தூத்துக்குடி | 0461-2323548 |
| 120. | துறையூர் | 04327-256109 |
| 121. | திண்டிவனம் | 04147-222074 |
| 122. | திருச்சிராப்பள்ளி | 0431-2419856 |
| 123. | திருநெல்வேலி | 0462-2333548 |
| 124. | திருப்பத்தூர் | 04179-221006 |
| 125. | திருப்பூர் | 0421-2203150 |
| 126. | திருவண்ணாமலை | 04175-223182 |
| 127. | திருவல்லிக்கேணி | 044-28480609 |
| 128. | உடுமலைப்பேட்டை | 04252-224033 |
| 129. | வடுவூர் | 04367-267138 |
| 130. | வலங்கைமான் | 04374-264455 |
| 131. | வல்லம் | 04362-260126 |
| 132. | வந்தவாசி | 04183-226106 |
| 133. | வேளச்சேரி | 044-22431109 |
| 134. | வேலூர் | 0416-2222201 |
| 135. | வில்லிவாக்கம் | 044-26171108 |
| 136. | விழுப்புரம் | 04146-222956 |
| 137. | விருத்தாச்சலம் | 04143-230337 |
| 138. | விருதுநகர் | 04562-246093 |


செலுத்தப்பட்ட மூலதனம் (₹ கோடிகளில்)





நிதியின் சொந்த இருப்பு நிதி (₹ கோடிகளில்)





வைப்புகள் (₹ கோடிகளில்)





கடன்கள் (₹ கோடிகளில்)




இலாபம் (₹ கோடிகளில்)




பங்காதாயம்




## சீர்மிகு வளர்ச்சியில்...

(₹ கோடிகளில்)

| வருடம் | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 | 2024-25* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | 29.11 | 29.20 | 29.29 | 29.43 | 29.54 | 29.70 | 29.84 | 29.99 | 30.16 | 30.33 | 30.56 |
| நிதியின் சொந்த இருப்பு நிதி | 109.37 | 123.69 | 140.56 | 167.55 | 203.92 | 239.11 | 294.30 | 357.61 | 416.37 | 485.00 | 582.16 |
| சட்டப்பூர்வ வங்கி வைப்புகள் | 157.21 | 171.50 | 181.00 | 192.00 | 221.10 | 236.05 | 274.15 | 312.38 | 355.85 | 385.00 | 478.00 |
| வைப்புகள் | 1570.74 | 1664.55 | 1806.63 | 1916.36 | 2206.88 | 2356.46 | 2737.74 | 3119.72 | 3500.46 | 3811.40 | 4717.49 |
| கடன்கள் | 1424.77 | 1384.52 | 1620.83 | 1739.16 | 1966.16 | 2200.70 | 2608.91 | 2889.87 | 3198.84 | 3581.75 | 4501.30 |
| இலாபம் | 37.67 | 35.69 | 37.37 | 49.59 | 60.39 | 63.63 | 75.15 | 93.27 | 101.84 | 103.69 | 140.35 |
| பங்காதயம் | 22% | 22% | 22% | 22% | 22% | 22% | 22% | 25% | 25% | 25% | 25% |
| கிளைகள் எண்ணிக்கை | 103 | 107 | 107 | 108 | 109 | 112 | 113 | 114 | 116 | 120 | 130 |

* Subject to Approval of shareholders at its ensuing Annual General Meeting

# கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம்-612 001.
CIN : U65991TN1903PLN001246 Ph : 0435 - 2401548

**படிவம் எண் - MGT - 11**

## பதிலாள் படிவம் (PROXY FORM)

(நிறுவனச் சட்டம் 2013 - 105 (6) பிரிவின் படியும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-ன் விதி 19(3) - க்கு இணங்க)

### 121-வது வருடாந்திர பேரவை கூட்டம் - 27 செப்டம்பர் 2025

| | |
|---|---|
| உறுப்பினர்(களின்) பெயர் | |
| பதிவு முகவரி | |
| | |
| மின்னஞ்சல் | |
| ஃபோலியோ எண். | |

**நான் / நாங்கள் மேற்கூறிய நிறுவனத்தில் உறுப்பினர்(கள்)-ஆக..................... பங்குகள் வைத்துள்ளேன்/ளோம். இதனால் நான்/நாங்கள் நியமிக்கும்**

1. பெயர்.......................................................................................................................................
முகவரி.......................................................................................................................................
மின்னஞ்சல் : ....................................................... கையொப்பம் ........................................................... அல்லது
அவரை
2. பெயர்.......................................................................................................................................
முகவரி.......................................................................................................................................
மின்னஞ்சல் : ....................................................... கையொப்பம் ........................................................... அல்லது
அவரை
3. பெயர்.......................................................................................................................................
முகவரி.......................................................................................................................................
மின்னஞ்சல் : ....................................................... கையொப்பம் ...........................................................

எனக்கு/ எங்களுக்கு பதிலாக நிறுவனத்தின் **27 செப்டம்பர் 2025, சனிக்கிழமை அன்று எண்.73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம் - 612 001 என்ற முகவரியில் உள்ள ராயா மஹாலில்** காலை 10.35 மணியளவில் நடைபெறவிருக்கின்ற **121-வது ஆண்டு பேரவை கூட்டத்தில்** எனது/எங்களது பதிலியாக **(Proxy)** கலந்துகொண்டு எனக்கு/எங்களுக்கு பதிலாக வாக்களிக்கவும் (வாக்கெடுப்பில்) மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இத்தகைய தீர்மானங்கள், அவற்றின் ஒத்திவைப்பு ஆகியவற்றில் பங்கேற்க நியமிக்கின்றேன்/றோம்.

| தீர்மானம் எண் | தீர்மானங்கள் |
|---|---|
| | **சாதாரண அலுவல்கள்** |
| 1 | மார்ச் 31, 2025 அன்று நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதியின் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகளையும், அதன் மேல் இயக்குநரவை மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகளையும், மற்றும் தேவையான இணைப்புகளையும் சேர்த்துப் பெறுதல், பரிசீலித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல். |
| 2 | மார்ச் 31, 2025 அன்று நிறைவடைந்த நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையை அறிவித்தல். |
| 3 | சுழற்சி முறையில் ஓய்வு பெறும் திரு.M.குரு பிரசாந்த் (DIN 009359770) அவர்களின் இடத்திற்கு ஒரு இயக்குநரை நியமித்தல். இவர் மீண்டும் தேர்வு பெற தகுதியுடையவர். இவர் மீண்டும் போட்டியிட தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். |

........................... நாளில் ............................................., 2025-ல் கையொப்பமிட்டுள்ளேன்/ளோம்.

Affix Revenue Stamp Re.1/-

பங்குதாரர் / களின் கையொப்பம்...............................................................................

பதிலி / பதிலிகளின் கையொப்பம்...............................................................................

குறிப்பு : இந்த பதிலி படிவமானது முற்றிலும் பூர்த்தி செய்யப்பட்டு, ரூ.1 வருவாய் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு மற்றும் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கூட்டம் நடப்பதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பாக அளிக்கப்பட்டால் மட்டுமே செல்லுபடியாகும்.

# கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம்-612 001.

CIN : U65991TN1903PLN001246. Ph : 0435-2401548

வலைதளம் : www.kmbf.co மின்னஞ்சல் : kmbf@kmbf.co

## வருகை சீட்டு

இந்த வருகை சீட்டில் கையொப்பமிட்டு கூட்டம் நடக்கும் இடத்தின் நுழைவு வாயிலில் ஒப்படைக்கவும்.

| உறுப்பினரின் பெயர் | பதிலியின் பெயர் |
|---|---|
| திரு./திருமதி. | திரு./திருமதி. |
| பங்கு சான்றிதழ் எண் : | பதிலி ஒப்புகை எண் : |
| பங்குகளின் எண்ணிக்கை : | பங்குகளின் எண்ணிக்கை : |

நான், 73, காந்தியடிகள் சாலை, கும்பகோணம் - 612 001-ல் அமைந்துள்ள ராயா மஹாலில் 27 செப்டம்பர், 2025 சனிக்கிழமை அன்று காலை 10.35 மணி அளவில் நடைபெறும் நிறுவனத்தின் 121-வது வருடாந்திர பேரவை கூட்டத்திற்கு எனது வருகையை பதிவு செய்கிறேன்.

உறுப்பினர் அல்லது பதிலியின் கையொப்பம்

## பேராவூரணி புதிய கிளை திறப்பு விழா



## முத்துப்பேட்டை புதிய கிளை திறப்பு விழா



## ஓசூர் புதிய கிளை திறப்பு விழா



## வடுவூர் புதிய கிளை திறப்பு விழா



## தேப்பெருமாநல்லூர் அரசு நடுநிலைப்பள்ளிக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்குதல்



## 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் எடுத்த ஊழியர்களின் குழந்தைகளை பாராட்டி கௌரவித்தல்



## திருப்பனந்தாள் SKSDS பள்ளிக்கு 4 வகுப்பறைகள் கட்டி கொடுக்கப்பட்டது.



## திருவாவடுதுறை ஆதீனம் பள்ளிக்கு 50 Stainless Steel பெஞ்சுகள் மற்றும் டெஸ்குகள் வழங்கப்பட்டது.



KMBF NIDHI LIMITED

## பாபநாசம் அரசு மருத்துவமனைக்கு Semi Auto Analyzer & Cell Counter வழங்கப்பட்டது.







## காரைக்குடி, அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளிக்கு கழிப்பறைகள் கட்டி கொடுக்கப்பட்டது.



CSR திட்டத்தில் தஞ்சாவூர், அரசர் மேல்நிலைப்பள்ளிக்கு 200 செட் டெஸ்க் மற்றும் பெஞ்சுகள் மாவட்ட ஆட்சியர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.






நூல்-அஞ்சல்
அச்சிடப்பட்ட புத்தகம்

பெறுநர் :




பதிவு அலுவலகம் : 23 & 24, Dr.பெசன்ட் ரோடு, கும்பகோணம்.



பட்டுவாடா செய்யப்படவில்லை எனில், தயவு செய்து திருப்பி அனுப்புக


# கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம் : 23 & 24, Dr. பெசன்ட் ரோடு, கும்பகோணம் - 612 001.
CIN : U65991TN1903PLN001246. Ph : 0435 - 2401548
Website : www.kmbf.co e-mail : kmbf@kmbf.co


**இந்தியாவில் NDH-4 அங்கீகாரம் பெற்ற முதல் நிதி நிறுவனம்**


நாடார் பிரஸ்.குடந்தை. 0435-2423112